T. 1612

கழக வெளியீடு—சகக

முத்தொள்ளாயிரம்



திருநெல்வேலி,
மதுரைத் திரவியந் தாயுமானவர் இந்து கலாசாலை,
தலைமைத் தமிழாசிரியர்
வித்துவான், ந. சேதுரகுநாதன் அவர்கள்
எழுதிய

விளக்க வுரையுடன்



திருநெல்வேலி, தென்னிந்திய
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
திருநெல்வேலி & சென்னை.

All Rights Reserved

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
:: PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., ::
TIRUNELVELI & MADRAS.

April 1946

Printed at The Jupiter Press, Ltd., Madras.
for S. I. S. S. W. P. S, Tinnevell, Ltd.-Q.H. M.S. 95 B-720

முன்னுரை

தொல்லாசிரியர் நெறி

உலகியல்நெறி நின்று பருப்பொருளின் வெளித்தோற்றத்தை மேலநோக்காகக் கண்டு வாழும் இயல்பு பெரிதுமுள்ள மக்கட்கு அவற்றின் இயல்பினையும் நுண்பொருளின் அறியலாகா நுட்பங்களையும், பனனெடுங்காலம் அழுந்தியறிந்த கூர்த்த நூலறிவினாலும், இயற்கைப் பேரறிவினாலும், தெள்ளிதின் விளக்கி இன்புறுத்தும் பெருந்தகைமை பண்டை நல்லிசைப் புலவர்பால் பெரிதும் மலிந்து விளங்கிற்று. அவர்கள், தாம் கூறப்புகுந்த பொருளின் இயல்பினை நன்கு உணர்ந்து, கூறுந்திறத்தின் பேரெல்லையில் நின்று மாட்சிமை பொருந்திய இனிய தெளிதமிழ் நடையில் உலகப் பேரறிஞர் எவரும் கொண்டாடும்படியாகவும், இனிய உவமைகளுடன் ஒப்பித்தும், மன உருக்கத்திற்கு இடனுடையதாகவும், ஓவிய இயலபு நிறைந்திலங்குந தன்மையதாகவும, இயற்கைச் செந்நெறி வழுவாமலும், பொய்ப்புனைவுகள் இன்றியும, தம நூலை நன்கு பயின்றார்க்கு நுண்ணறிவுபெருகும் வகையாகவும, எக்காலத்தினரும் போற்றுமபடியாகவும், சுருங்கச் சொல்லல், விளங்கவைத்தல் முதலிய நலங்களுடன் நூல் இயற்றி நம் தமிழ்ப் பேருலகத்தினைப் பேரறிவுப் பெருநாடாக ஆக்கினார்கள். அவர்கள் உண்மைப் பாடலின் இயல்பினைத் தெள்ளிதின் உணர்நது உலகுக்கு நன்மை விளைத்தனர்.

போலிப் புலவர் செயல்

பிற்காலப் புலவர் பலர் அவ்வியல்பு உணருந் திட்பமில்லாதவராய்ப் பொய்பபுனைவு நூல் பலவற்றின் திறத்தால மயங்கி நல்லிசைப் பெரும் புலமையின் இயல்பினை உணராது போலி நூல்கள் பல யாத்து அறிவினை மயக்கித் தமிழின் இயல்பு தெரியாமல் மக்கள திகைக்கும்படி செய்து போயினர். இங்ஙனம் போலிப் புலமை விளைத்த பெருந்தீங்கினால் பண்டை நல்லிசைப புலமைச் சான்றோரியற்றிய முத்திறத் தொகை நூல்களின் பயிற்சியும், சிலப்பதிகாரம்

மணிமேகலை முதலிய நற்றமிழ் நூல்களின் பயிற்சியும் குன்றின.

இந்நூலை மக்கள் மறந்தமை

அவ்வாறு குன்றவே, பண்டைத் தொகை நூல்கட்குப் பின்னர் இயற்றப்பட்ட முத்தொள்ளாயிரம் என்னுஞ் சிறுமை கெழுமிய இந்தமிழ்ப் பனுவலையும் மறந்தனர். இவ்வாறு மறந்த நிலையிலுள்ள மக்கள வாழ்ந்த காலத்திலே முத்தொள்ளாயிர மென்னும் நம் அருமைத் தமிழ்த் திரு நூல் பேணப்படாது போயிற்று. இங்ஙனம் போயினமை தமிழன் ஒவ்வொருவனுக்கும் தமிழ் மகள் ஒவ்வொருத்திக்கும் கிடைக்கும்படியாக இருந்த எடுக்கக் குறையாத் தொள்ளாயிரங்கோடி செம்பொற குவியல்களை இழந்தாற் போன்று வருந்துதற்கு உரியது.

இச்செய்யுட்கள் கிடைத்த பெருமை

எனினும் இற்றைக்கு ஐந்நூறியாண்டுகட்கு முன்னர் புறத்திரட்டு என்னுந் தொகைநூல் தொகுத்த சான்றோர், அந்நூலின்கண் இடையிடையே மிளிரவைத்துப் போந்த நூற்றெட்டு முத்தொள்ளாயிரச் செய்யுட்களைப் பெற்று, அவற்றைப் பயின்று இன்பந் துய்த்துத் தன்னை மறந்து உவகை எய்தும் பேறும் கிடைத்துளது.

மேலும் இருபத்திரண்டு பாடல்கள்

கிடைக்கப்பெற்ற பாடல்களின் விழுமிய சுவையானது தூண்ட இனி மேலும் இத்தகைய பாடல்கள் கிடைக்குங்கொல்லோ என ஆராய்ந்து செல்வுழிப் பழைய உரைகளினிடையே பயின்று கிடந்தனவாய இருபத்திரண்டு பாடல்கள் இவற்றோடு ஒத்த இயல்பினவாய்க் காணப்பட்டமையின் அவையும் இவற்றோடு சேர்த்து உரை எழுதி வெளியிடப் பெறுவன வாயின.

இந்நூலின் இனிமை

ஆகவே இந்நூலின்கண் ணமைந்து உரையொடு வருவனவாகிய நூற்றுமுப்பது பாடல்களும் பயில்பவர்க்கு இனிய சுவை பயப்பனவாகும். நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும்,

"கோமமிகு காதலன்தன் கலவியினைக் கருதுகின்ற
ஏமமிகு கற்புடை யாள்" தது இனபத்தினும் மிகுவதாய

ஒரு பாடலின் சிறப்பு

இன்பத்தினைத் திருவாசகம் நல்குவதுபோன்று இந் நூலும் நல்குமென்று கூறுவது மிகையாகாது. அதனை ஒரு பாடலின வாயிலாய் உணர்ந்துகொடலுமே நலமாகலின் அதனையும நோக்குவாம். கூடல்மாநகரில் நிகழும் ஓர் இனிய நிகழ்ச்சியை இந்தூலாசிரியர் எங்ஙனம் இனிய தாகப் பாடலில் அமைத்து உதவியுள்ளார் என்பது பயின்று உணரத் தகுவதாகும். எவ்வாற்றானும் விழுமிய நலனிறைந்த நங்கை ஒருத்தி கூடல்மாநகரில் உள்ள ஒரு வீட்டிலிருந்து, வெளியே நெடுந்தொலையில் இனிய மங்கல முழக்கம் முழங்குவதைக் கேளவியுற்று வரது வாயிலின் கண்ணுள்ள நிலையை ஒருகையாற் பற்றிக்கொண்டு இசைவரும் திசையை நோக்கித் தன்னையும் மறந்துநின்று பார்த்துச் சிறிது பொழுது கழித்து ஆங்கு விசும்பினை அளாவி வருகின்ற கொடி ஒன்றினைக் காண்பாளாயினள்; கண்டு மேலும் அதனையே கண்ணுற்று நின்று அக்கொடி தன்னை நோக்கி வருவதைப் பார்த்துப் பின்னுஞ் சிறிதுகாலந் தாழ்ந்தவுடன் தேர் ஒன்று வருதலையும் அறிந்து நிற்ப, அதுவும் இனனும் தன்னையே நோக்கிவர அதனேரினுள். இருக்கும் மன்னர் பெருந்தகையையும் அவனது திருமுடியையும், அவனது மார்பின்கட் கிடந்து புரளும் பூந்தாரினையும், முத்துமாலையினையும் பருகுவதுபோன்ற அருகா நோக்குடன் நோக்கி நின்றனளாக அதற்குள் தேரும் அவளைக்கடந்து அப்பாற் சென்றதாக, சென்றவுடன் அவளை ஈன்ற தாய் கண்டு "அம்ம! நீ இல்லினுட்சென்று இருத்தி; இங்ஙனம் வீதியிற் செல்லுந் திருக்கோலங் காணவருதற்கு நீ உரியையல்லை" என்று கூறிவிடுப்ப, அவளுஞ்சென்று தான்கண்ட காட்சியை மறவாது நினைந்து உருகி நைந்துகொண்டு இருப்பாளாயினள. இங்ஙனமாகப் பன்னாட் கழிந்தன. அவளது வாடிய தோற்றங்கண்ட நற்றாய் கடுங்காவல் புரிந்து மகளைவிட்டு நீங்காளாக, அதுகாலை அண்மையிலுள்ள இல்லின்கண் ணிருக்கும் நங்கையொருத்தி தன் காதற் கொழுநனைப்பற்றித் திருப்பாடல்கள் பல இசைத்துப் பொற்சுண்ணம் இடிக்கும் தொழிலை மேற்கொண்டாளாக, அதனை யுணர்ந்த

இந்நங்கை, யானும் மன்னர் பெருந்தகையாகிய என் காத லனைப்பற்றி விழுமிய பாடல்களைப் பாடித் தொடியுலகை யைத் தொடிக்கையாற் பற்றிப் பொறுகண்ண மிடிகும் பேறுபெறுவேனோ? என்றும், கம்மனை மன்னவது அரண்மனை போன்று பெரிதாக இருந்தால் அன்னை யாதேனும ஒரு பக்கம போயிலபொழுது பாடிக் குறறுதல் இயலுப; அதற் கும் வழியில்லையே இருதக் கைபமனையில் அந்தப் பேறும் நமக்குக் கிட்டவில்லையே என்றும, நமமைப்பற்றிக குற்றமே ஆராய்கின்ற அன்னையின் காவலிலேயே இருகின்றேனே என்றும நினைந்து நினைநது அந்தபபுரத்திலிருந்து உருகுவா ளாயினள். 'இஙஙனம் உருகிகொணடு இருக்கும் அவளது நினைவினையும் உணர்ச்சியையும் தெள்ளிதின் உணர்தலும், பிறர்க்கு உணர்த்தலும் எளிதி லியலுவதென்றன்று. அகத்து நிகழும் நிகழ்ச்சியை உள்ளவாறே உணர்பவா தெய் வத்துடன் ஒத்த பெருந்தகையும் நுட்ப உணர்வும உடை யாரென்பது,

"ஐயப் படாது அகத்தது உணர்வானைத்
தெயவத்தோடு ஒப்பக கொளல்"

என்ற தெய்வப் புலவரது திருமொழியானும் உணரக் கிடகின்றதன்றே? இத்தகைய நுணமாண நுழைபுலம் வாய்நத இருநூலாசிரியர் மேற்கூறிய நஙகையினது உணர்ச் சியை ஓவியபபடுததி இசைத்திருகுஙு தனமையை,

"கொடிபாடித் தேர்பாடிக் கொய்தண்டார் மாறன்
முடிபாடி முத்தாரம பாடித்—தொடியுலக்கை
கைம்மனையுள் ஓசசப் பெறுவெனோ? யானும ஓர்
அமமனைக் காவல் உளேன்"

என்ற வெண்பாவினையுணர்க. இப்பாடலானது ஒனறற்கு எளிதாய் இனியதாயச சுவை தருவதுடன் பயில்பவருடைய அறிவை நுணுகச்செய்து நுணபொருள் காணும இயல்பளித் துப் பொருளாழமுடையதாக இலங்குவது காணக. அந்நங் கை தலைநாளையிற் கண்ட காதற காட்சியின் முறை சிறிதும் பிறழாது, முதற்கண் கண்ட கொடியை முதலி லமைத்துப் பினனர் நோக்கியவற்றையும் முறைப்படி பின்னர் அமைத் துப் பாடித் தன் மனையினது சிறுமையையும் தான் சென்று சாரக்கருதும் அரண்மனையின் பெருமையையும கருதும் அவ

னது கருத்துப்படி "கைம்மீன்" என்றும் அமைத்து, அன்னை வீட்டிலுள்ள நங்கையர் பாடுதலும் உலக்கை யோசசுதலு மாகிய செயல் அவளது உளைச்சலையைத் தூண்டியது என் பதை உணர்த்த "யானும்" எனறு இறந்தது தழுவிய எச்சவுமமை கொடுத்து அமைத்து அவளுடைய நற்குயும் அவளைப்பற்றி ஆயகின்றவளாக இருக்கின்றாள் என்பதை உணர்த்த "ஓர் அமமீன்" என்றும அமைத்து மிகவும் இனிமையாக இயற்றியுள்ளனர். இத்தகைய சிறப்புடன் கூடிய பாடல்கள திருவாதவூரடிகளருளிய திருவாசகத்திற் பலவுள. அவற்றுள ஒன்று,

"தேனக மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச் சடைமேல்
வானக மாமதிப் பிளவு பாடி
மால்விடை பாடி வலககை யேந்தும்
ஊனக மாபமுச் சூலம் பாடி
உம்பரும இமபரும் உய்ய அன்று
போனத மாகநஞ் சுண்டல் பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே"

என்பதாகும். இப்பாடலும் முன்னியதைப் போன்று ஓவிய இயல்பமைந்து விளங்குதல் காண்க. இன்னுஞ் சுவை காண விரும்புவோர் இந்நூலின்கண ணுள்ள, "உகுவாய் நிலத்தது" "புகுவார்க் கிடங்கொடா" "செங்கால் மட நாராய்" "பன்மாடக்கூடல்" "கோட்டெங்கு சூழ்கூடல்" "ஊடலெலாம் ஒன்று" "நாணெரு பால் வாங்க" "கடும் பனித் திங்கள்" "உழுத உழுத்தஞ செய்" என்ற மூதற் குறிப்புடனே தோன்றுஞ் செய்யுட்களையும் பிறவற்றையும் பயின்று உணர்தல் நலந்தருவதாகும். இனி இத்தகைய நூலை இயற்றிய ஆசிரியரைபபற்றியும், காலத்தைப்பற்றி யும், நூற்பெயரைப்பற்றியுந் தெரிந்து கொள்ளுதல் வேண் டும்.

இவ்வருமைத் திருநூலை எழுதிய பெருந்தகையாரது திருப்பெயர் இன்னதென்று அறிய முடியவில்லை என்பர். ஆயினும் அவர் யாவர் என்பதைப்பற்றியும் பின்னர்க் காண்க. அந்தோ! எத்துணை அருமையான நூல்கள் இங் ஙனம் அழிந்துபட்டனவோ! ஆராய்வார் அவற்றின் அரு

மையை! நிற்க இவரது காலமும் துணிவாக வரைத்தற்கு வழி இல்லை எனினும், ஒரு வகையாக இன்ன காலத்தின ராதல் கூடும் என்று கருதுதலியலும். இந்நூலியற்றிய பெருந்தகையார் பண்டை முதற்றிறத் தொகை நூல்களையும் நன்கு பயின்று உணர்ந்த விழுமிய தமிழ்ப் புலவர். அத் தொகை நூலின்கண் ஞுள்ள சாயல் இந்நூலிற் பல இடங் களில் அமைந்து இலங்குவதாலும் அஃது உணரப்படும். தொகை நூல்களுள் ஒன்றாகிய பழமொழி என்னும் நூல் மூன்றுறை யரையனரா லியற்றப்பட்டதாகும். அந்நூலுள்,

"காடுறை வாழ்க்கைக் கருவினை மாக்களை
நாடுறைய நல்கினும் நன்கொழுகார்—நாடொறுங்
கையுள தாகி விடினுங் குறும்பூழ்க்குச்
செய்யுள தாகும் மனம்"

என்று வரும் பாடலும், இந்நூலுள், "கூட்டே, குறும்பூழ் பறபபித்த வேட்டுவன்போல் அன்னை, வெறுங்கூடு காவல் கொண் டாள்" என்று வரும் அடிகளும், அந்நூலுள்,

முறை தெரிந்து செல்வார்க்கும் நல்கூர்ந்தவர்க்கும்
இறைநிரியான் நேரொக்கல் வேண்டும்—முறைதிரிந்து
நேரொழுகா னுயின் அதுவாம் ஒருபக்கம்
நீரொழுகப் பாலொழுகா வாறு

என்று வரும் பாடலும், இந்நூலுள்,

"மன்னுயிர் காவல் தனதான அவ்வுயிருள்
என்னுயிரும் எண்ணப் படுமாயின்—என்னுயிர்க்கே
சிரொழுகு செங்கோற் செழியற்கே தக்கதோ
நீரொழுகப் பாலொழுகா வாறு"

என்று வரும்பாடலும், அந்நூலுள்.

"மெய்யா உணரின் பிறர்பிறர்க்குச் செய்வதென்
மையார் இருங்கூந்தற் பைந்தொடி—எக்காலும்
செய்யா ரெனினுந் தமர்செய்வர் பெய்யுமாம்
பெய்யா தெனினும் மழை"

என்று வரும் பாடலும் இந்நூலுள்,

"செய்யார் எனினுந் தமர்செய்வர் என்னுஞ் சொல்
மெய்யாதல் கண்டேன் விளங்கிழாய்—கையார்

வரிவளை நின்றன வையையார் கோமான்
புரிவளை போந்தியம்பக் கேட்டு"

என்று வரும் பாடலும் அந்நூலுள்,

"தாமேயுந் தம்மைப் புறந்தர ஆற்றுகார்
வாமான்தேர் மன்னரைக் காய்வ தெவன்கொலோ
ஆமா உகளும் அணிவரை வெற்ப! கேள்
ஏமரார் கோங்கேறி னுர்"

என்று வரும் பாடலும்,

இந்நூலுள்,

"ஆமா வுகளு மணிவரை யினப்புறம்"

என்றும்

"வாமான் தேர்க்கோதை"

என்றும் வரும் அடிகளும் ஒத்த சாயலுடையனவாய்க் காணப் படுதலாலும், அந்நூலாசிரியரைப்போல் பழமொழியை இறுதியி லமைத்துக் கூறியிருக்கும் இயல்பினாலும் பிறவற்றி லும் அவர்க்கு இவர் காலத்தால் பிற்பட்டவர் என்று கருது தல் கூடும். அதுவுமன்றி முற்கால இயல் முறையில் படர்க்கையிலேயே வழங்கப்பட்ட "அன்" விகுதி, பிற்கால இயல் முறைப்படி தன்மை யிடத்தைச் சுட்டி இந்நூலுள் "புலவி புறக் கொடுப்பன் புல்லிடினுணீற்பன்" என்றும், "நின்கால் மேல்வைப்பன் என்கை யிரணடும்" என்றும் வருதலாலும் "தாமேல் தனிக்குடைக் காவலனுல்" "சுர்ந் தண்டார் மாறன் அளியானேல்" என்பவற்றில், முற்கால இயல் முறைப்படி வராது "ஏல்" எனற சொல்வருத லாலும், தொகை நூல்களின் காலத்திற்குப் பிற்பட்டதென லாகும். இவையே யன்றிப் பண்டை நூல்கட்குப் பின்னர் எழுகிய நூல்களுள் வருவனவாகிய ஞ்சுவர், ஏமம், பூமி, பரிசயம், வீசயன், சீலேகம், சேலேகம், பாடலம், உபாயம், கனவட்டம், சங்கு, ஆகம், உதிரம், திலகம், வீதி என்னுஞ் சொற்கள இந்நூலுள் வருதலாலும், இவற்றுள் வரும் கனவட்டம் என்னுஞ் சொல் பிற்காலத்து அரசனண்ட பாணடிய மன்னனது குதிரையின் பெயராக விருத்தலாலும் பாடலம் என்பதும் அவ்வாறே பிற்காலத்துச் சோழனது

குதிரையின் பெயராக இருத்தலாலும் இந்நூலாசிரியர் காலம கி. பி. ஐந்தாம் நூற்றாண்டுகளுப் பின்னர் எனக் கருதுதலியலும். இந்நூலாசிரியரைப்பற்றித் தங்கள் உரையிற் குறிப்பிடும் யாப்பருங்கலக்காரிகை உரையாசிரியராகிய குணசாகரர், தொல்காப்பிய உரையாசிரியராகிய பேராசிரியர், நச்சினர்க்கினியர் ஆகிய இவர்கள், காலத்திற்கும், இந்நூற் பாடல்களுக்குத் தம் உரையில் மேற்கோளாக எழுதியிருக்கும் இளம்பூரண அடிகள் காலத்திற்கும், இந்நூலின் சொற்றொடரை எடுத்து அமைத்துப் பாடியுள்ள பெரியாழ்வார், ஆண்டாள், திருத்தக்கதேவர் முதலிய சான்றோர் காலத்திற்கும் இவர் முற்பட்டவர் என்பதும் முத்திறத் தொகை நூல்களும், சிலப்பதிகாரம், மணிமேகலையாகிய இவ்விரண்டு நூல்களும் தோன்றிய காலத்துக்குப் பிற்பட்டவர் என்பதும் ஒருவாறு பொருந்தும் எனலாம்.

நமக்கு இதுபோழ்து கிடைத்துள்ள பாடல்களினுலறியப்படும் முடியுடை மூவேந்தர் பெயரும் பெரும்பாலும் பொதுப் பெயர்களாக வள்ளனவாய்ப் பாண்டிய மன்னரைக் குறிக்குங்கால தென்னன். பாண்டியன், பஞ்சவன், மாறன், வையையார் கோமான், வழுதி, தமிழ்நர் பெருமான், அம்பொதியிற் கோமான் கூடலார் கோமான், எனவும் சோழ மன்னரைக் குறிக்குங்கால், சோழன், கோக்கிள்ளி, செம்பியன், உறந்தையார்கோ, புனல்நாடன், காவிரிநீர் நாடன், நலங்கிள்ளி எனவும் சேர மன்னரைக் குறிக்குங்கால், சேரன, கோச்கோதை, கோதை. முசிறியார் கோமான், வானவன் மாந்தைக்கோன் எனவும் வருதலால் இந்நூலாசிரியர் காலத்தில் வாழ்ந்த மன்னர் பெருந்தகையினர் இவர் தாம் என அறுதியிட்டுக் கூறுவதற்கும் வழியில்லை.

இந்நூலின் பெயர்ப் பொருள்

நிற்க, இனி நூலினது பெயர்ப் பொருள் ஆய்தற்கு உரியது. மூன்று என்ற சொல்லும் தொள்ளாயிரம் என்ற சொல்லும் சேருங்கால் "மூன்றும் ஆறும் ஒடு மூதல் குறுகும்....." "மூன்றனெற்றே வந்த தொக்கும்" என்ற தொல்காப்பிய இயல்நூலின் முறைப்படி முதல், ஈடில் குறுகி வருமொழியிலுள்ள தகரத்திற்கு இயைந்த நகரவொற்றும் பெற்று முத்தொள்ளாயிரம என்றியைந்

தன. மூன்று வகையினதாகிய தொள்ளாயிரம் பாடல்களை உடைய நூல் என்பது பொருள். மூன்று வகையாவது சோன், சோழன், பாண்டியன் என்ற மூவேந்தரைப்பற்றிய மூன்று பகுபடு இவ்வாறு கொள்ளாது மூவேந்தரைப்பற்றிய மூன்று தொள்ளாயிரம் பாடல்களை உடையது என்று பொருள விரித்து இரண்டாயிரத்து எழுநூறு பாடல்களையுடைத்தாகிய நூல் என்று உரைத்தல் பொருந்தாதோவெனின், அதுவும் பொருந்துமாயினும் இலக்கண விளக்க நூலுடையார் தாம் எழுதிப் போந்த பாட்டியலினகத்து எண் செய்யுளாமாறு உணர்த்துவா னெடுத்துக் கொண்டு,

"ஊரையும் பெயரையும் உவந்தெண்ணேலே
சீரிதிற் பாடலெண் செய்யுளாகும்"

என்று நூற்பா நுவன்று, "பாட்டுடைத் தலைவன் ஊரினையும் பெயரினையும உவந்து எண்ணேலே பத்து முதல் ஆயிர மளவும் பொருட் சிறப்பினுலே பாடுதல் அவ்வவ்வெண்ணுற் பெயர் பெற்று நடக்கும் எண் செய்யுளாம். அவை முத்தொள்ளாயிரம், அரும்பைத் தொள்ளாயிரம் முதலியன" என்று உரையும் வரைந்துள்ளனராதலால் அதனைப் பின்பற்றித் தொள்ளாயிரம் பாடல்களே இந்நூலில் அமைந்திருத்தல் கூடும என்று கருதுவதற்கு இடனுளதாயிற்று.

இந்நூலாசிரியர் மேற்கொண்ட கடவுணிலை.

எல்லாப் பொருள்களையுந் தோற்றுவிக்குந் தலைவனுகவும், என்றும் பிறவாயாக்கைப் பெரியோனுகவும், என்றும் உள்ளவனுகவும் இலங்குகின்ற முழு முதற் கடவுளாகிய சிவபெருமானை "முன்னம் படைத்த முதல்வன்" என்று கூறி, இங்ஙனஞ் சிறந்த முதல்வனை ஆதிரை நாளிற் பிறந்தவன் கொலலோ என்று கருதும்படியாக இவ்வுலக ஆதிரையான் என்று பலகாலோதி அயர்வுறுகின்றதே! இஃதொன்றே இருந்தவாறென்னே? யென்று உணர்நலந் தோன்றக் கருதிய ஆசிரியர் தமது அருமைத் திருமொழிகளால்

"மன்னிய நாண்மீன் மதிகனலி என்றிவற்றை
முன்னம் படைத்த முதல்வனைப் – பின்னரும்
ஆகிரையான் ஆதிரையான் என்றென் றயருமால்
ஊர்திரைநீர் வேலி உலகு"

என்று அமிழ்தமுந் தேனுமளாவிய சுவையினுஞ் சுவை விஞ்சும்படி. இயற்றியருளினமையானும்

"மடங்கா மயிலூர்தி மைந்தனே நாளுங்
கடம்பப்பூக் கொண்டேத்தி யற்றுல்—தொடங்கமருள்
நின்றிலங்கு வென்றி நிரைகதிர்வேல் மாறனே
இன்றமிழால் யாம்பாடும் பாட்டு"

என்று திருமுருகக் கடவுளின்பால் தாம் வைத்த பேரன்பின் பெருக்கினை உணர்த்துதலாலும் இவர் சிவநெறியாகிய பெருநெறி பற்றி யொழுகிய விழுமிய தண்ணளி மிகுந்த சான்றோர் என்பதும் உணரலாகும். அதுவுமன்றி இவர் நாடோறுங் கடம்பினது நறுமலர் தூவித் திருமுருகக் கடவுளை வழிபடுந் தொழிலிற் சிறந்தவரென்பதும் கருதலாகும். இன்னும் இதனுல் கடம்பினது நறுமலர் மற்றை யோர்க்கும் ஏற்புடையது எனினும் திருமுருகனுக்கே சிறப் புடைத்தாயினுற்போல யாம் பாடிய தமிழ்த் திருப்பாட்டு மற்றை யரசருகும் ஏற்புடையன எனினுந் தமிழ் வளர்த்த தண்ணளிமிக்க வழுதியர்கடகே சிறந்தன என்பதும் குறிப் பித்தனரெனலாம். இவையுமன்றி இத்திருப்பாடலால் தாம் இயற்றிய சுவை கெழுமிய விழுமிய பாடலின் இயல்பும் ஒருவகையாகக் குறிப்பித்தனரெனலாம். அதுவுமன்றி இனிய தமிழால் யாம்பாடும் பாடல், நறுமணமுந் தீந்தேனும் நல்லியல்பும் உடையதாய்த் தெய்வமும விரும்பிப் பேணி முடிமேற் கொள்ளுங் கடம்பினது திருமலர் போன்று மிகவும் சிறப்புடையதாய்த் திருமுருகக் கடவுளும் முடிமேற் கொள்ளுந் தகுதி வாய்ந்தது என்றுங் குறிப்பாய் உணர வைத்தருளினர். தமிழ்க் கடவுளாக இலங்குஞ் செவ்வேட் பெருமானையுந் தமிழ் வளர்த்த வழுதியர் பெருமானையும், உவமையும் பொருளுமாக வைத்துத் தமிழ்க் கடவுளைக் கடம்பின் செழுமலர் தூவி வழிபடுதல்போன்று தமிழ்க் காவலனுகிய வழுதியைச் செழுந்தமிழ்ப் பாடல் கூறி ஏத்துவன் என்று அருளிய திறமும் பாராட்டற் பாலதாகும்.

இந்நூலினது யாப்பு முறை.

புதுவதாகப் புனைந்து செய்யும் நூலினை "விருந்து" என்று வழங்குவது தொல்லாசிரியர் மரபு என்பது, "விருந்தே தானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" (தொல்-செய்-

உஉகூ) என்ற தொல்காப்பிய நூற்பாவினை லுணரப்படும். இந்நூலாசிரியர் தமிழினது சுவையினையும், தமிழ் மக்களின் சிறந்த நல்லொழுக்கத்தினையும், தமிழ் மன்னரது பெருந் தகையினையும் நன்கு உணர்ந்து விமலமுற்று ஒரு நூல் செய்வான் றொடங்கி இனிய வெண்பாக்களினால் மூவேந்த ரையும்பற்றி இவ்வருமைத் திருநூலை எழுதி உலகுக்கு நலந் தந்தருளினர். இந்நூல் யாப்பு, விருந்து எனும் முறையினைப் பின்பற்றியதாகும். பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் புதுவதாகத் தொடுக்கப்படுந் தொடர்நிலை மேலதாகிய விருந்து என்பதற்கு இந்நூலை எடுத்துக் காட்டுதலானும் அது நன்கு உரைப்படும். "நெடுவெண் பாட்டே மூங் கோலடித்தே" குறுவெண் பாட்டினளவெழு சீரே" (தொல்-செய்-கருஅ) என்ற தொல்காப்பிய நூற்பாவி னுரையில் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும், "பதினெண் கீழ்க் கணக்கினுள்ளும் முத்தொள்ளாயிரத்தும் ஆறடியினேரு மற் செய்யுள் செய்தார் பிற சான்றோரு மெனக் கொள்க" எனவும், "இக்கருத்தானே நான்கடியும் ஈரடியுமே மிக வந்தவாறும் முத்தொள்ளாயிரத்து நான்கடியே மிகவந்த வாறுங் காண்க" எனவும் கூறியவாற்றான், இந்நூல் வெண்பாக்கள் பெரும்பான்மை நான்கடியானும் சிறு பான்மை ஐந்து ஆறு அடிகளானும் வந்தன என்பதும் உணரக் கிடத்தலால் யாப்பருங்கலக்காரிகையி னுரையில் மேற்கோளாக வந்துள்ள, "பன்மாடக் கூடல்" என்ற ஆறடிச் செய்யுளையும் இந்நூற் செய்யுளாக விருத்தல் கூடு மென்று கருதி இதனகத்துச் சேர்த்து உரை எழுதி வெளி யிடுவதற்கு வாய்ப்பு உளதாயிற்று. "அங்கதப் பாட் டவற் றளவோ டொகுகும்" (தொல்-செய்-கருகூ) என்பத னுரையில் 'கைக்கிளைச் செய்யுள் முத்தொள்ளாயிரத்துட் பலவாயினும்' எனக் கூறுதலான் இந்நூலில்கட் சுட்டி யொருவர் பெயர் கொண்ட பாடாண் திணைப் புறப்புறக் கைக்கிளைச் செய்யுள் பலவா மென்பதும் அறியப்படும்.

கைக்கிளையைப்பற்றிய ஓர் குறிப்பு

ஏங்கும் நிறைந்த தோன்றுத் துணைவனுகிய இறைவ னிடத்துத தாங் கொள்ளும் அன்பினை வளர்த்தற்பொருட்டு அவனைத் தலைவனுகவும், தம்மைத் தலைவியாகவும் படைத் துக்கொண்டு,

"தானே உலகாள்வான் தான்கண்ட வாவழக்கம்
ஆனால்மற் றாரிதனை அன்றென்பார்—வானோர்
கனைகண்தா னாயநின்ற காளத்தி ஆள்வார
வளைகெரண்டார் மால்தந்தார் வந்து."

என்று பாடி மகிழ்ந்ததுபோலத் தோன்றாத் துணையாகப் பெரும்பாலும் உளனாகிய இறைவனுக்கும், தோன்றுந் துணைவனாகவே பெரும்பாலும் உளனாகிய உலக மன்னனாகிய இறைவனுக்கும் ஒரு சிறிது ஒப்புமை கருதி மன்னனைத் தலைவனாகவும் மன்னுயிரைத் தலைவியாகவும் படைத்துக் கொண்டு,

தளையவிழும் பூங்கோதைத் தாயரே ஆவி
களையினுமென் கைதிறந்து காட்டேன்—வளைகொடு
[போம
வன்கண்ணன் வாணமாறன் மால்யானை தன்னுடன்வந்
தென்கண் புகுந்தான் இரா."

என்று பாடி யருளினர். இவ்வியல்பினையும் புனைந்துரை வகையாகப் பாடல் சான்ற புலனெறி வழக்கினையும் நன்கு உணர்க.

செந்தமிழ் வேந்தரும், செந்தமிழ் நாட்டு நங்கையரும் ஊழி பெயரினுந் தாம் பெயராச் சான்றாண்மை மிக்க நல்லொழுக்கினர் என்பது என்றும் உளதாகிய நல்லியல்பு ஆதலால் அவ்வியல்பின் உயர்ச்சியினையும் நன்கு உணர்ந்து பேணிக் கொள்க. இவ்வாறன்றி ஒன்றிரண்டு திருப்பாடல்களை ஓதிய அளவானே, ஆராய்வான் தொடங்கி இடர்க்கடலுள் வீழ்தல் இகழ்தற் பாலதாகு மென்பதுவுந் தெற்றெனத் தெளிக. கைக்கிளைச் செய்யுளின் இயல்பு உணர்ந்து உலகியல் நெறியில் வைத்து எழுதிய உரையி னியல்பும் உணர்ந்து பிறர்க்கு உரைத்தலே நலம் தருவதாகுமெனத் தெளிக. கைக்கிளை என்பது ஒரு மருங்கு உளதாகிய கேண்மை. அஃதாவது தலைவன் தலைவி என்று நூலாசிரியரால் புனைந்துரை வகையாற் படைத்துக்கொள்ளப்பட்ட இருபாலாருள் ஒருவரிடத்தே மட்டும் தோன்றிய மனத்தின் அன்பு நெகிழ்ச்சி. இம்முறைப்படி பெண்பாற் கைக்கிளைச் செய்யுட்களே வந்துள்ள இந்நூலினகத்து, "யானூடத் தானுணர்த்த யானுணரா விட்டதற்பின், தானூட யானுணர்த்

தத் தானுணரான்" என்று வரும் பாடலின் அழகிய புனைந் துரை வகையின் திறம்பம, இதுபோல் வரும் பிற செய்யுட் களின் இயலபும நன்கு உணர்ந்து புலவரது படைப்பின் திறத்தைப் பேணி மகிழ்க.

முத்தொள்ளாயிர நூலுக்காக முன்னர் உழைத்த சான்றோர்க்கு நன்றி.

முத்தொள்ளாயிரத்தைச் செந்தமிழின் வாயிலாக முதற்கண் வெளியிடும பெருமை பேறு பெறறவருமம, சேது பதி மன்னரவைப் புலமை தாங்கியவருமாகிய உயர்திரு, ரா இராகவையங்காரவர்கட்குமம, புறத திரட்டினை வெளி யிடுஞ் செயலை மேற்கொணடு முத்தொள்ளாயிரத்தின் நலம் பேணியவரும சென்னைப் பல்கலைக் கழகத தமிழாராய்ச்சித் துறைத் தலைவரும, வழக்கறிஞருமாகிய ராவ்சாகிப். ச. வையாபுரிப் பிள்ளையவர்கட்குமம, கைம்மாறு வேணடாக் கடபபாடு மேற்கொணடு தமிழ் உலகில் யாங்கணுஞ் சென்று முத்தொள்ளாயிரதின பொருமையைப் பரபபி இதறகு முன்னர் தமது பதிபபின வெளிப்பட்ட தமிழ்த்திரு. டி. கே. சிதம்பரநாத முதலியாரவாகட்குமம எனது மன மாநத நனறி உரிதது. தமிழுலகமும் இவர்கட்கு நன்றி செலுத்துங் கடபபாடுடையது.

இந்நூலாசிரியரைப்பற்றிய கருத்துக்கள்

இந்நூலாசிரியர் சோழ நாட்டிற் பிறந்தவர் என்பதும், பாண்டிய நாட்டில் மதுரை மாநகரில் வாழ்ந்தவர் என்பதும், இவரிடம் கல்வி பயின்று சிறப்பு எய்திய சிறநத மாணவர் பாண்டி நாட்டிற் பிறந்த நக்கீர முனிவர் என்பதும், இவர் பெயர் நக்கீரதேவ நாயனார் என்பதும் எம் முன்னோர் ஒருவ ரால் எமக்கு அறிவிக்கப்பட்ட செய்திகள். இவ்வாறு அறி விக்கப்பட்ட செய்திகளை வைத்துக்கொண்டு நக்கீரதேவ நாயனரியற்றிய நூல்களின் இயல்புக்கும முத்தொள்ளாயிர நூலின் இயல்புக்கும உளள ஒறறுமைப் பகுதியை நோக்கி னேன். நோக்கின அளவில் புலனுக்குஞ் செய்திகள் அறிஞர் களுக்கு நலம் தருவனவாகும்.

"முடங்கா மயிலூரி" "மன்னிய நாள் மீன்" என்ற முத்தொள்ளாயிரப் பாடல்களினால் அந்நூல் இயற்றிய ஆசிரியர் சிவநெறி பற்றி யொழுகியவர் என அறியலாகும்

என்பது முன்னரும் எழுதப்பட்டுளது. நக்கீரதேவ நாயனார் சிவநெறி பற்றியவர் எனபது அவர் எழுதிய பதினொராந் திருமுறையில் சேர்க்கப்பெறறுள்ள நூல்களால் அறியலாகும்.

"செங்கண் நெடியான்மேல் தேர்விசயன் ஏற்றியபூப்
பைங்கண்வெள் ளேற்றுருன்பால் கண்டற்றுல—எங்கும்
முடிமன்னர் சூடியபூ மொய்ம்மலர்த்தார் மாறன்
அடிமிசையே காணப்படும்"

என்ற முத்தொள்ளாயிரப் பாடலின் போக்கும்,

"கதையிலே கேளீர்! கயிலாய நோக்கிப்
புதையிருட்கண் மாலொடும் போகிச—சிதையாச்சீர்த்
தீர்த்தன்பாற் பாசுபதம் பெற்றுச் செருக்களத்திற்
பார்த்தன்போர் வென்றிலனே பண்டு" என்றும்

"வரமான்தேர் வல்ல வயப்போர் விசயனைப்போல்
தாமார் உலகில் தவம்உடையார்"

என்றும் கைலாபாதி காளத்திபாதி அந்தாதியிற் கூறப்படும் போக்கும் ஒத்த இயல்பினவாதல் அறியலாகும். சோழனது இரேவதித் திருநாளினை முன்னிட்டுச் சுவர்களுக்கு வெண் சுதை தீற்றுங்கால் சிலந்திப் பூச்சியின் கூடுகள் சிதைந்து போயின தன்மை கண்டு மனம் உளைந்து உருகிய ஆசிரியர்

"அந்தணர் ஆவொடு பொன்பெற்றூர் நாவலர்
மந்தரம்போல் மாண்ட களிறூர்ந்தார்—எந்தை
இலங்கிலைவேல் கிள்ளி இரேவதிநாள் என்னே?
சிலம்பிதன் கூடிழந்த வாறு"

என்று பாடி யருளினர். இது ஆசிரியரது பேரருள் இரக்கத்தினை உணர்த்துகின்றது. நிற்க, சிலந்திப் பூச்சி பெற்ற சிறப்பினை விளக்கும் தன்மையுடையதாய்,

".....கேளீர் கொல்!.....
நலந்திகழ லாமனத்தும் காளத்தி நாதர்
சிலந்திக்குச் செய்த சிறப்பு"

என்ற பாடலும் ஓர் ஆசிரியரின் உள்ளக் கிடக்கையைத் தெள்ளிதின் உணர்த்துதல் காண்க.

இவையுமன்றி,

"வழுவிலென் வீதியுள் மாறன் வருங்கால்
தொழுதேனைத் தோணலமும் கொண்டான்—இமிழ்
[திரைக்
கார்க்கடற் கொற்கையார் காவலனுந் தானேயால்
யார்க்கிடுகோ பூசல் இனி" (முத்)

என்ற பாடலிலுள்ள முன்னிரண்டு அடிகளும்

"தொழுவாள் பெருளேதன் தோள்வலியுந் தோற்றுள்
மழுவாளன் காளத்தி வாழ்த்தி—எழுவாள்
நறுமா மலர்க்கொன்றை நம்முன்னே நாளைப்
பெறுமாறு காணீரென் பெண்" (கைலை)

என்ற பாடலிலுள்ள முன்னிரண்டு அடிகளும், ஒத்திருக்கும் தன்மையையும், இவ்விரு பாடல்களும் ஒரு தாயின்ற மக்களாக இலங்கும் இயல்பினையும்

"களியானைத் தென்னன் இளங்கோவென் றெள்ளிப்
பணியாரே தம்பார் இழக்க—அணியாகம்
கைதொழு தேனும் இழக்கோ நறுமாவின்
கொய்தளி ரன்ன நிறம்"

என்ற முத்தொள்ளாயிரப் பாடலின் பின்னிரண்டு அடிகளையும் காண்க. இன்னும்

"வாமான்தேர்க் கோதை" (முத்) என்ற அமைப்பும்
"வாமான்தேர் வல்ல வயப்போர் விசயன்" (கைலை)

என்ற அமைப்பும் ஒத்திருத்தல் காண்க.

மேலும்,

"துடியடித் தோற்செவித் தூங்குகைங் நால்வாய்ப்
பிடியேயான் நின்னை இரப்பல்—கடிகமழ்தார்ச்
சேலேக ணெண்ணெடு சேரி புகுதலுமெஞ்
சாலேகஞ் சார நட"

என்ற பாடலில், தலைவி பிடியானையை நோக்கி, "நீ எம் சேரியின் வழி வருங்கால் எமது இல்லத்தின் பலகணிக்கு அணித்தாக நட" என்று இரந்து வேண்டிக்கொள்ளுவதாக வரும் உருக்கமான கருத்தும்,

"செய்ய சடைமுடியென் செல்வனீ யான் கண்டெனது
கையறவும் உண்மெலிவும் யான்காட்டப்—பையவே
காரேறு பூஞ்சோலைக் காளத்தி ஆள்வார்த்தம்
போரேறே இத்தெருவே போது"

என்ற பாடலில், காளையை நோக்கிப், "போரேறே! யான் செஞ்சடைப் பெருமானுகிய எம் செல்வனைக் கண்டு எனது செயலறவு, மன மெலிவு இவற்றைக் காட்டும்படியாக எமது தெரு வழியாக மெதுவாக வா!" என்று கூறும் கனிவான கருத்தும் எவ்வளவு பொருந்தி யிருக்கின்றன என் பதையும் நோக்குங்கள்.

இன்னமும்,

"யானூடத் தானுண்ர்த்த யானுணரா விட்டதற்பின்
தானூட யானுணர்த்தத் தானுணரான்—தேனூறு
கொய்தார் வழுதி குளிர்சாந் தணியகலம்
எய்தாது இராக்கழிந்த வாறு"

என்ற அருமையான பாடலின் முன்னிரண்டு அடிகளும்,

"யானென்றுந் தானென் றிரண்டில்லை என்பதனை
யானென்றுங் கொண்டிருப்பன் ஆனாலும்—தேனுண்டு
அளிகடாம் பாடும் அகன்கயிலை மேயான்
தெளிகொடான் மாயங்கள் செய்து" (கைலை)

என்ற அருமைத் திருப்பாடலின் முன்னிரண்டு அடிகளும் ஒத்த இயல்பினவாக இருத்தலுடன், "தேனூறு" "தேனுண்டு" என்று வரும் தனிச் சீர்களும் ஒத்திலங்கும் இயல்பும் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு உருக்கும் அளப் பரிய சுவை நலம் பயக்குந் தன்மையும் ஒத்திலங்குதல் காண்க.

இவையுமன்றி,

"தானேல் தனிக்குடைக் காவலனுல் ஆள்வதுவும்
வானேற்ற வையகம் எல்லாமால்—யானேல்
எளியேனுர் பெண்பாலேன் ஈர்ந்தண்தார் மாறன்
அளியானேல் அன்றென்பார் ஆர்." (முத்)

என்ற பாடலில் 'அரசனுகிய மாறனென்றாலோ அவன் ஒரு குடைக் கீழ் வானம் வளைந்த மாவட்ட மெல்லாம் காவல்

செய்கின்றன். யானே எளியேன்; அதுவுமன்றி ஓர் பெண் பால்; அவனுக இரங்கி அருளானெனில் அவனே "நீ செய்வது முறையன்று" என்று கூறுபவர் யாவர்? ஒருவரு மில்லையே' எண்று தலைவி கூறி உருகுவதாக வந்துள்ள பொருள் நயமும்,

"தானே உலகாள்வான் தான்கண்ட வாவுழக்கம்
ஆனல்மற் றுரிதனே அன்றென்பார்—வானேர்
கோகண்டா னுய்கின்ற காளத்தி ஆள்வார்
வேகொண்டார் மால்தந்தார் வந்து."

என்ற பாடலின் பொருள்நய நோக்கும் உணர்ச்சி நலமும் ஒத்திருத்தலுடன் இவ்விரு பாடல்களும் ஒரு தாய் பெற்ற பேரெழில் மிக்க இரு குழந்தைகளாக விளங்குதலுங் காண்க.

இவையுமன்றி, இறைவன், மேல் வான வெளியிலும், கீழ் வான வெளியிலும், மற்றை நான்கு திசை வெளியிலும் விரிந்து பரந்து ஆழ்ந்து ஓங்கி அப்பாலுக்கு அப்பாலாய்ச் சொல்லிறந்து நின்ற தொன்மையாய்ப், பொருள் முடிவாய், உரையின் வரையும், பொருளின் அளவுமாகிய இருவகைப் பட்ட எல்லையையுங் கடந்து அவனது பெரு வடிவினை நோக்க அண்டங்களெல்லாம் அணுவளவினவே என்று கூறுமாறு அவ்வளவு பெரியோனுக விரிந்தும், அணுக்களெல் லாம் அவனது சிறு வடிவினை நோக்கப் பெரிய அண்டங் களே யாகும் என்று கூறுமாறு அவ்வளவு நுணுகியும் எல்லா இடத்திலும் என்றும் நிறைந்து திருக்கூத்தாடி உல கத்தை இயக்கி உய்விக்குந் தன்மையைக் கூறத் தொடங்கித்,

"தாளொன்றல் பாதாளம் ஊடுருவத் தண்விசும்பில்
தாளொன்றல் அண்டங் கடந்துருவித்-தோளொன்றல்
திக்கனைத்தும் போர்க்குந் திறற்காளி காளத்தி
நக்கனைத்தான் கண்ட நடம்." (கைலை)

என்று பாடியருளிய அருமைத் திருப்பாடலின் திறமும்,

"கச்சி ஒருகால் மிதியா ஒருகாலால்
தத்துநீர்த் தண்உஞ்சை தான்மிதியாப்—பிற்றையும்
ஈழம் ஒருகால் மிதியா வருமேநங்
கோழியர்கோன் கிள்ளி களிறு." (முத்)

என்று யானையைச் சிறப்பித்துப் பாடும் பாடலின் திறமும் ஒத்தியங்குவதுடன், தாளொன்றால் என்று தொடங்கி இறைவனின் இரண்டு திருவடிகளைப் பற்றிக் கூறிய முறையும், ஒரு காலால் கச்சியையும், ஒரு காலால் உச்சயினியையும் மிதித்து என்று தொடங்கி நான்கு கால்களின் தொழில் களையும் பற்றிக் கூறிய முறையும் பொருந்தி யிருத்தல் நோக்குக.

இவையுமன்றிக்,

"கூடற் பெருமானைக் கூடலார் கோமானைக்
கூடப் பெறுவெனேற் கூடென்று—கூடல்
இழைப்பாள்போற் காட்டி இழையா திருக்கும்
பிழைப்பிற் பிழைபாக் கறிந்து."

என்ற பாடலும்,

"இசையுந்தன் கோலத்தை யான்காண வேண்டி
வசையில்சீர்க் காளத்தி மன்னன்—அசைவின்றிக்
காட்டுமேற் காட்டிக் கலந்தென்னைத் தன்னொடுங்
கூட்டுமேற் கூடலே கூடு."

என்ற பாடலும் கூடலிழைக்கும் தலைவியின் மன உணர்ச்சி யையும் மயக்கத்தினையும் நன்கு விளக்கி ஒத்த இயல்பினவாதலுங் காண்க.

இவையுமன்றி,

"செங்கண்மாக் கோதை சினவெங் களியானை
திங்கண்மேல் நீட்டுந்தன் கை"

என்ற அடிகளும்,

"வான மதிதடவ லுற்ற இளமந்தி
கானமுதுவேயின் கண்ணேறித்—தானங்
கிருந்துயரக் கைநீட்டும் ஈங்கோயே நம்மேல்
வருந்துயரந் தீர்ப்பான் மலை."

என்ற அருமைத் திருப்பாடலும்.

"கரி பெரிதுங், கையெடுத்து நீட்டிக் கதஞ் சிறக்கும் ஈங்கோயே" என்ற பகுதியும் ஒத்திருத்தலை நோக்குக. இவையுமன்றி மலையின்மேல் வானளாவ ஓங்கிப் பரவிய

கிளைகளுடன் விளங்குகின்ற இலவ மரத்தின்கண்ணுள்ள ஒளியுள்ள பூக்களைத், தொங்கிக்கொண்டு எரிகின்ற கொள்ளி என்று நினைத்து ஆண் குரங்கு அச்சுற்று மயங்கி அந்நெருப்பினை அவிக்கக் கருதி மூங்கிலிலுள்ள தழையை ஒடித்துக் கொண்டு அதனால் அடித்தடித்து வீசும்படியான அவ்வளவு வளம் நிறைந்ததாகும்; காதிலே குழையைத் தொங்கவிட்டிருக்கும் எம்பெருமானது ஈங்கோய் மலை, என்ற கருத்து அமைய ;

> "ஓங்கிப் பரந்தெழுந்த ஒள்ளிலவத் தண்போதைத்
> தூங்குவதோர் கொள்ளி எனக்கடுவன்—மூங்கில்
> தழையிறுத்துக் கொண்டோச்சும் ஈங்கோயே சங்கக்
> குழையிறுத்த காதுடையான் குன்று." (ஈங்)

என்று பாடப்பட்டுள்ள அருமைத் திருப்பாட்டுக் கடுவனுகிய ஆண் குரங்கின் செயலை நன்கு விளக்குகின்றது. இதுவு மன்றி மாலைப்பொழுதில் யாங்கணும் மலர்ந்து விளங்குகின்ற வழவழப்பான மெல்லிய காந்தட் பூவின் பரப்பில் வண்டு சென்றிருப்ப அதனைக் கண்ணுற்ற மந்தி, வண்டு தீயில் மூழ்கியதென்று அஞ்சி எழுந்து எழுந்து கையை நெரிக்கும், அவ்வளவு வளம் உடையது திங்கட் கொழுந்து வளரும் திருமுடியுடைய. சிவபெருமானது ஈங்கோய் மலை, என்ற கருத்து அமைய ;

> "வழகிதழ்க் காந்தள்மேல் வண்டிருப்ப ஒண்தீ
> முழுகியதென் றஞ்சிமுது மந்தி—பழகி
> எழுந்தெழுந்து கைநெரிக்கும் ஈங்கோயே திங்கட்
> கொழுந்தெழுந்த செஞ்சடையான் குன்று."

என்று பாடப் பெற்றுள்ளது. இது மந்தியினுடைய செயலை நன்கு விளக்குகின்றது. இவ்விரண்டு அருமைத் திருப்பாடல்களும் மலை வளத்தினை விளக்கும் குறிப்புடன் குறிஞ்சி நிலத்திலுள்ள பொருள்களை அமைத்துப் பாடப்பெற்றிருக்கின்றன. இவ்வருமையான முறையை மருத நில வருணனையிலமைத்து மாலைப் பொழுதில் நீர்ப்பொய்கையில் செவ்வாம்பல் மலர்கள் விரிய அவற்றை நோக்கிய நீர் வாழ் பறவையினங்கள் தண்ணீரில் தீப்பற்றி விட்டதென அஞ்சித் தம் குஞ்சுகளைச் சிறகாகிய கைகளினால் அணைத்துக்கொண்டு ஆரவாரிக்கும் தன்மையான வளம் மிகுதியாகவுள்ளது,

கோதையாகிய சேரனது திருநாட்டில் என்ற கருத்துக்கள் அமைய

"அள்ளற் பழனத்(து) அரக்காம்பல் வாயவிழ
வெள்ளந்தீப் பட்ட(து) எனவெரீஇப்—புள்ளினந்தங்
கைச்சிறகால் பார்ப்பொடுக்குங் கவ்வை உடைத்தரோ
நச்சிலேலூல் கோக்கோதை நாடு" (முத்)

என்று பாடியருளிய இனிய தமிழ்த் திருப்பாட்டு அவற்றுடன் ஒத்திலங்குந்தன்மையையுங் காண்க. இவையுமன்றி இன்னும் இரண்டு பாடல் இப்பாட்டினுடன் ஒத்தனவாக இலங்குதல் காண்க.

ஈங்கோய் மலையில் அடர்ந்த மரங்கள் மிகுதியாக இலங்குகின்றன. மர நெருக்கம் இல்லாத சில இடங்களில் கிழங்குகள் விளைந்திருக்கின்றன. அவற்றைப் பெயர்த்துத் தின்னக் கருதி அந்த மலையில் வாழும் பன்றிகள் கொம்புகளால் உழுது கிளைத்தன. அவ்வாறு கிளைக்கப்பட்ட புழுதியில் பவழத் துண்டங்களும் மாணிக்கக் கற்களும் பெயர்ந்து ஒளி பரப்பிக்கொண்டு கிடந்தனவாக, மாலைப்பொழுதில் அவ்வழியாக வந்த யானைக் கூட்டங்கள் ஆங்குச் செங்கானல்போல எரி பரப்பிக்கொண்டு கிடக்கின்ற அந்த மணிக்கற்களைக் கண்டு அவற்றைத் தீயின்கனல் என்று கருதி அஞ்சி நடுங்கி நாலு பக்கங்களிலும் விலகி விலகி ஓடின. அது போழ்து ஆங்கு அண்மையில் மலர்ந்து விளங்கும் முல்லைக் கொடிகள், அறிவில்லாத இந்த யானைக் கூட்டங்கள் மணிக் கற்களைத் தீ என்று கருதி ஓடுகின்றனவே, இது என்னே! என்று எள்ளி நகையாடின; இவ்வாறு இலங்குகின்றது நம் தீவினையை விலகி ஓடும்படி செய்து அழித்த சிவபெருமானது ஈங்கோய் மலை என்ற கருத்து அமைய,

"ஏனங் கிளைத்த இனப்பவழ மாமணிகள்
கானல் எரிபரப்பக் கண்டஞ்சி—யானை
இனமிரிய முல்லைநகும் ஈங்கோயே நம்மேல்
வினையிரியச் செற்றுகந்தான் வெற்பு"

என்ற அருமையான திருப்பாட்டினையும் உணர்க. அவ்வாறு மணிகள் கானல் எரி பரப்புகின்ற இடத்தில் கானவர் மக்கள்

வந்து அம்மணிக் கற்கனீத் தீக்கனல் என்று கருதி இறுக்கங் கதிர்களை (சோளக் கதிர்களை) அவற்றின் மேல் புரட்டிப் புரட்டி வைத்து வெதுப்பும்படியான மிக்க வளம் உடையது நம் மனக் கிறுகிறுப்பினைத் தீர்த்த பெருமானது திரு ஈங்கோய் மலை என்ற கருத்து அமைய,

"ஏனம் உழுத புழுதி இனமணியைக்
கானவர்தம் மக்கள் கனலென்னக்—கூனல்
இறுக்கங் கதிர்வெதுப்பும் ஈங்கோயே நம்மேல்
மறுக்கங்கள் தீர்ப்பான் மலை"

என்று பாடியருளிய பாடலின் இனிமையையும் நோக்குக. இவைபோல்வன இன்னும் பல உள. நிற்க; இதுகாறுங் காட்டியவற்றுல் முத்தொள்ளாயிர நூலுக்கும் கைலை பாதி காளத்தி பாதி அந்தாதி, ஈங்கோய் மலை எழுபது ஆகிய இவ்விரு நூல்களுக்கும் உள்ள பல ஒற்றுமைகளும் பாடலின் சுவைப் போக்கும் நன்குக விளங்கும. ஓர் ஆசிரியர் நன்கு ஆராய்ந்து தெளிந்து உறுதிப் பாடாக வைத்துக் கொண்டுள்ள கருத்துக்களை முதலில் எழுதும் சுருக்கமான நூல்களில் அமைத்தலும் பின்னர் விரிநூல் செய்யுங்கால் அக்கருத்துக்களை யெல்லாம் சேர்த்துச் செய்யுள் செய்தலும் வழக்கம். அது மொழிப் புலவோரது இயல்புமாகும். நக்கீரதேவ நாயனரும் தாம் முதற்கண் எழுதிய நூல்களிலுள்ள இனியனவும் அரியனவும் பெரியனவும் ஆகிய கருத்துக்களை விரிநூலாகிய முத்தொள்ளாயிரம் இயற்றுங்கால் அவற்றிலும் அமைத்துப் பாடியருளினர் என்க. இத்தகைய அருமைத் திருப்பாடல்களை எழுதியுதவிய பெரும்புலவராகிய நக்கீரதேவ நாயனரது திருவுளப் பாங்கும் புலமை நலமும் தமிழ் மக்கள் நல்லுளத்தில் வளர்வனவாகுக.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் முத்தொள்ளாயிரப் பாடல்களின் அளப்பரிய சுவை நலத்தில் ஈடுபாடு கொண்டு பயின்று மகிழ்வெய்தி வருங்கால் ஒரு நாள் சைவ சித்தாந்தக் கழகத்திற்குச் சென்று, அக்கழகத்து அமைச்சராயிருந்து காலஞ் சென்ற உயர் திரு. வ. திருவரங்கம் பிள்ளையவர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தேன். அது போழ்து அவர்கள் முத்தொள்ளாயிரச் செய்யுட்களைப்பற்றிப் பேசத் தொடங்க, யானும் அதன் பெருமையைப் பாராட்

டினேனுக. உடனே இத்தகைய அருமைத் திருநூலுக்கு உரையில்லா திருத்தலால் அதனைப் பயில்பவருக்குப் பொருள் உணர்தல் அருமைப்பாடாக இருக்கின்றது; ஆதலால் ஓர் உரை எழுதித் தருதல் வேண்டுமென, அதற்கு உரையில்லையே என்று முன்னமே கருதிக்கொண்டிருந்த யான் அதற்கு இயைந்து எழுதத் தொடங்கி என் கடமையைச் செய்து முறைவேற்றினேன். இந்த வகையில் என்னைப் பலமுறை வற்புறுத்தித் தூண்டி, எழுதும் போழ்து பல முறை பார்த்து மகிழ்வெய்தி ஊக்கமூட்டிய உயர்திரு பிள்ளையவர்களுக்கு யான் என்றென்றும் நன்றி பாராட்டுதற்கு உரியேன். இவ்வுரையின் நலத்தால் உலகம் அடையும் மகிழ்ச்சியினால் உளதாகும் நன்றியும் அவர்களுக்கே உரியது.

உரை எழுதிய முறை

கிடைத்துள்ள முத்தொள்ளாயிரப் பாடல்களுள் ஒவ்வொன்றும் இன்னின்ன துறைபற்றிப் பாடப்பட்டன என்று அறிதற்கேற்ற பழைய குறிப்பு ஒன்றும் இல்லை. ஆதலால் ஒவ்வொரு பாடலுக்கும் ஏற்ற துறைக் கருத்து அமையும்படி பாடலுக்கு அடியில் குறிப்பு என்று அமைத்து எழுதியுள்ளேன். அக்குறிப்புத் துறையை விளக்குவதுடன் இன்னநேரத்தில் இன்னவராற் கூறப்பட்டது என்ற கருத்தினையும் புலப்படுத்தும் முறையில் பெரும்பான்மை அமைந்துளது. எட்டுத் தொகை நூலுள் ஒன்றாகிய பதிற்றுப்பத்தினுள், ஒவ்வொரு பாடலிலும் உள்ள சிறந்த சொல், சொற்றொடர் இவற்றால் அவ்வப் பாடல்களுக்குப் பெயர் அமைத்துள்ளனர். அந்த முறைபற்றி இந்நூலில் ஒவ்வொரு பாடல்களிலும் உள்ள சிறந்த சொல்லை அல்லது சொற்றொடரை எடுத்து ஒவ்வொரு பாடலுக்குந் தலைப்புப்போல் அமைத்துள்ளேன். முதலிற் பாடலின் மேல் தலைப்பும், பாடலின் கீழ் துறையை விளக்குங் குறிப்பும், பின்னர் பொழிப்புரை போன்ற உரையும், அதன் பின்னர் விளக்கமும், அருஞ்சொற் பொருளும், வேண்டிய இடத்திற்கு இலக்கணக் குறிப்பும் எழுதியுள்ளேன். இவையுமன்றி, இந்நூற் பாடல்களின் கருத்தினைத் தன்னகத்தே கொண்டு ஒத்த இயல்பினவாக விளங்கும் பிற நூல்களிலுள்ள பாடல்களையும் பாடற் பகுதிகளையும் ஆங்காங்கு வேண்டிய இடங்களில் எழுதியுள்ளேன்.

இதுவுமன்றிப் பல இடங்களில் விளக்க வுரையில் பாடல்களின் நயமும் எழுதப் பெற்றுள்ளன. இவைகளெல் லாம் இந்நூலை நன்கு பயிலும் மாணவர்களுக்குப் பயன் தர வல்லன. ஆதலின் பலமுறை பயின்று தமிழ் நலம் பெற்று இன்புறுவாராக.

இந்நூலினை உரையுடன் பதிப்பித்து மூலகுக்கு உதவிய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்து ஆட்சிப் பொறுப் பாளர் (Managing Director) உயர்திரு. வ. சுப்பையா பிள்ளையவர்களுக்கு எனது நன்றி என்றென்றும் உரியது.

அளவுபடாத பெருமையுள்ள இப்பெரு நூலுக்கு உரையெழுதி வெளியிடும் பேற்றினை யருளிய இறைவன் திருவடித் தாமரை மலர்களை நினைந்து உருகுவதே எனது கடனுகின்றது.

இங்ஙனம்,

வித்துவான், ந. சேதுரகுநாதன்

தலைமைத் தமிழாசிரியர்

மதுரைத் திரவியந் தாயுமானவர் இந்து கலாசாலை

திருநெல்வேலி.

பொருளடக்கம்

1.	பாண்டியன்	புகழ்	3
2.	,,	நாடு	12
3.	,,	நகர்	14
4.	,,	திறை	15
5.	,,	எயில் கோடல் ...	18
6.	,,	குதிரை மறம் ...	20
7.	,,	யானை மறம் ...	22
8.	,,	களம்	27
9.	,,	பகைப்புலம் பழித்தல் ...	30
10.	,,	வென்றி	33
11.	,,	கைக்கிளை	36
12.	சோழன்	புகழ்	103
13.	,,	நாடு	106
14.	,,	நகர்	108
15.	,,	திறை	109
16.	,,	குதிரை மறம் ...	111
17.	,,	யானை மறம் ...	112
18.	,,	,, ...	115
19.	,,	களம்	120
20.	,,	ஊமன் பாராட்டல் ...	122
21.	,,	வென்றி	123
22.	,,	கொடை	126
23.	,,	கைக்கிளை	130
24.	சேரன்	புகழ்	167
25.	,,	நாடு	170
26.	,,	பகைப்புலம் பழித்தல் ...	179
27.	,,	கைக்கிளை	181



திருநெல்வேலி,

மதுரைத் திரவியத் தாயுமானவர்

இந்து கலாசாலைத் தலைமைத் தமிழாசிரியர்

வித்துவான். ந. சேதுரகுநாதன் அவர்கள்

ஓம்

முத்தொள்ளாயிரம்

கடவுள் வாழ்த்து

முன்னம் படைத்த முதல்வன்

க. மன்னிய நாண்மீன் மதிகனலி யென்றிவற்றை
முன்னம் படைத்த முதல்வனைப்—பின்னரும்
ஆதிரையா னாதிரையான் என்றென் றயருமால்*
ஊர்திரைநீர் வேலி யுலகு.

(குறிப்பு) பாடாண் திணையைச் சார்ந்த கடவுள் வாழ்த்து.

(இதன் பொருள்) விசும்பில் நிலைபெற்றிருக்கின்ற நாள் மீன்களும் திங்களும் ஞாயிறும் ஆகிய இவற்றை இவையின்றி வறிதாக இருந்த முற்காலத்திலேயே படைத்தருளிய முதல்வனுகிய சிவபெருமானை, அவற்றைப் படைத்த பிற்காலத்தில் அதனை யுணர்ந்தபின் புங்கூட, (இருபத்தேழு நாள் மீன்களுள் ஒன்றுகிய ஆதிரைமீன் ஒன்றையுந்தான் படைத்தானே அல்லது ஆதிரை நாளிலே தான் பிறந்தானே என்று கருதும்படி) தவழ்கின்ற அலையையுடைய கடலை வேலியாகக் கொண்ட உலகம் எல்லாம் "ஆதிரையான் ஆதிரையான்" என்று சொல்லிச் சொல்லி மயங்குகின்றது; இஃதென்ன வியப்பு என்றவாறு.

(விளக்கம்) ஆசிரியர் கருதுகின்றூர்; இறைவன் எனறும் உள்ளவன்; அவனுக்கு முதலும் நடுவும் இறுதியு

---

* பாடவேற்றுமை:—"என்றென் றயர் வுறுமே": "என்றே யறையுமால்".

மில்லை ; பிறப்பு இளமை மூப்பு இவையும் இல்லை ; அவன் தானே ஞாயிறு திங்கள் முதலியவற்றையும் அசுபதி முதலியவற்றையும் படைத்தான் ; அவனே இந்தக் கடல் சூழ்ந்த உலகம் முழுதும் "ஆதிரையான் ஆதிரையான்" என்று சொல்லுகின்றதே ; இஃது எவ்வாறு பொருந்தும் ? ஆதிரை நாள் மீனும் அவனுற் படைக்கப்பட்ட நாண்மீன்களுள் ஒன்றுதானே ; ஆதிரையை மட்டும் படைத்தானு ? அல்லது ஆதிரை நாளிற் பிறந்தானு ? அதுவுமில்லையே ; அவன் பிறவா யாக்கைப் பெரியோனல்லவா ? ஆதிரை மீன் சிவனேப்போன்று எப்பொழுதும் ஆடிக் கொண்டிருத்தலாலும், சிவப்புநிறம் உடைமையாலும், மார்கழித் திங்களில் பிறைநிலா தன்னை அணுகுங்கால் அரன் போன்று தோன்றுதலாலும் இறைவனுக்கு உவமை கூறுதற்குப் பொருந்தும், ஆதலால் அந்த மீனின் பெயரையே இறைவனுக்குச் சூட்டிவிட்டன ரென்றுல் அஃது எவ்வாறு பொருந்தும் ? அவன் உவமனில்லி யல்லனே ? அவனுற் படைக்கப்பட்ட மீனிலும் அவன் உயர்ந்தவனல்லவா ? இவ்வாறு கூறுவது இறைவனுடைய முழுமுதற் றன்மைக்குக் குறைவல்லவா ? அப்படியிருந்தும் இவ்வாறு சொல்லிச் சொல்லி மயங்குவது அறியாமை அன்றே ? என்று பிறரை—ஏன் உலகத்தையே—கடல் சூழ்ந்த உலகம் எல்லாவற்றையுமே—எள்ளி நகையாடுகின்றுர் ; இவ்வளவு அறியாமையா ? என்று வியக்கின்றுர்.

உலகத்தில் உத்திராட நாளிற் பிறந்தானை "உத்திராடத்தான்" என்றும், இரேவதியிற் பிறந்தானை "இரேவதியான்" என்றும், திருவோணத்திற் பிறந்தானைத் "திருவோணத்தான்" என்றும், விசாகத்திற் பிறந்தானை "விசாகன்" என்றும் கூறுவது வழக்கம் : அது பொருத்தம் உடையதுதான் ; ஆனுல் ஆதிரையிற் பிறவாதவனை, என்றுமே பிறவாயாக்கையுடைய பெரியோனை, ஆதிரையான் எனல் எவ்வாறு பொருந்தும் ?

இவ்வாறு கூறுவதனுல், "இறைவனுடைய முழுமுதற் றன்மையை மறவாதீர்" என்பதைப் பெற வைத்தார் ; அவன் முதன்மையை யறிந்து வழிபட்டாலன்றி உய்வில்லை ; அவன் தன்மைக்குக் குறைபாடுடையவற்றைக் கூறுதல் வேண்டாம் என்பது கருத்து.

ஓர் உருவமும் ஒரு பெயரும் இல்லாத இறைவனுக்கு ஆயிரம் திருவுருவும் திருப்பெயரும் கற்பித்தல் மக்கள் வழிபட்டு உய்வதற்குத் தான்; ஆனால் பெயர் பற்றி முதன்மையை மறத்தல் சாலாது என்பது குறிப்பு.

முதன்மை வாய்ந்த இறைவனை ஆதிரையின் ஒளி உலகிற் பரவுங் காலத்து வழிபடுதல் அருள் பெறுதற்கு நன்று என்று கண்டு வழிபட்டு ஆதிரை விழாவும் நடாத்துகின்றனர்; ஆதலால் ஆதிரையான் என்றல் வழக்காயிற்று.

இறைவன்பால் மட்டற்ற அன்பை வளர்ப்பதாகவும், நகை, வியப்பு ஆகிய சுவையினைப் பயப்பதாகவும் இலங்குகின்றது இப்பாடல்.

நாண்மீன் - நட்சத்திரம்; நாளும் மீனும் என்று பிரித்து, மதி, கனலி எனப் பின் வருவதால் அவை இரண்டு மன்றி மற்றச் செவ்வாய் முதலிய கோள்களும், நட்சத்திரங்களும் எனினும் ஆம்.

மதி - திங்கள் (சந்திரன்); கனலி - ஞாயிறு (சூரியன்); கனலுதலைச் செய்வது கனலி; இது, ஞாயிற்றிற்குக் காரணப் பெயர்.

பாண்டியன்
புகழ்

இன்றமிழால் யாம் பாடும் பாட்டு

உ. மடங்கா மயிஞர்தி மைந்தனை நாளுங்
கடம்பம்பூக் கொண்டேத்தி யற்ருல்—தொடங்கமருள்
நின்றிலங்கு வென்றி நிறைகதிர்வேல் மாறனை
இன்றமிழால் யாம்பாடும் பாட்டு.

(கு - பு.) முருகக் கடவுளுக்குக் கடப்பம்பூ உரித்தாவது போல எம் தமிழ்ப் பாடல் மாறனுக்கு உரித்து என்று ஆசிரியர் அகமகிழ்ந்து கூறுகின்ருர்.

(இ - ள்.) தொடங்குகின்ற போரின்கண் நிலைபெற்று நிலங்குகின்ற வென்றியினைப் பெறும் நிறைந்த ஒளியினையுடைய வேற்கை மாறனை இனிய தமிழால் யாம் பாடுகின்ற

பாட்டு, பின்னிடாத, மயிலூர்தியையுடைய, வலிமைக்கு நிலைக்களனாகிய, முருகக் கடவுளை நாள்தோறும் கடப்பம்பூ வினைக் கொண்டு ஏத்தினாற்போன்றதாம் எ - று.

(வி - ம்.) ஆசிரியர் நாள்தோறும் முருகக் கடவுளை வழிபடுகின்றவர்; கடவுளுக்குக் கடப்பம்பூ மாலைதானே சிறந்தது; அதனைத் தொடுத்து அணிவார்; எப்பொழுதும் முருகா! முருகா!! என்று உருகா நிற்பர்; பார்க்கின்ற பொருள்களெல்லாம் அவருக்கு முருகன் வடிவமாகவே காட்சியளிக்கும்; நீலக்கடலில் தோன்றுகின்ற செஞ்ஞாயிறறைப் பார்க்கின்றார்; அது முருகனை நினைப்பூட்டுகின்றது; கடல் மயில் போன்றும் பரிதி முருகன் போன்றும் தோன்றுகின்றன; பரிதி இருளோட்டுகின்றான்; இறைவன் இடரோட்டுகின்றான்; காலைப் பருதி இளஞ்சேய் போன்று தோன்றுகின்றது. மாலையில் பரிதியின் தொடர்பு கொண்டு தோன்றும் செவ்வானத்தை அண்மி வரிசையாகப் பறக்கின்ற கொக்கினம் முருகன் மார்பில் மணிமுத்தாரமாகத் தோன்றுதலால் அவ்வந்தி நெடுவேள் போன்று காட்சியளிக்கின்றது. இவ்வாறு அருளில் மூழ்கியிருக்கின்ற ஆசிரியர், பகைவரைத் தொலைத்து வாகை வன மாலை சூடி, வெற்றி வேலைக் கையிற் பிடித்துக் கொண்டிருக்கும் பாண்டியனைப் பார்க்கின்றார்; வேற்கைத் தென்னன் வேற்கை முருகனாகத் தோன்றுகின்றான். சிறிது தெளிந்து, ஆம்; தோற்றத்திற் குற்றமில்லை; கந்தனுக்குக் கடப்பமாலை சூட்டுகின்றோம்; தார்மாறனுக்குத் தமிழ் மாலை சூட்டுவோம்; என்று நினைக்கின்றார்; நினைத்து இவ்வாறு பாடி விட்டார்; ஆசிரியர் விம்மித மடைந்து செவ்வேளையும், தென்னனையும், செந்தமிழையும் ஒரே காலத்தில் எண்ணிப் பாராட்டுகின்றார்; இனிய தமிழ்ப் பாடலையும் கடப்ப மாலைபோன்ற நறுமணமும நல்லியல்பும் வாய்ந்த செய்யுளியற்றும தமது ஆற்றலையும் நினைந்து கல்வியாற் பெருமிதங் கொண்டு, "இனறமிழால் யாம் பாடும் பாட்டு" என்று மகிழ்கின்றார்; அதனைச் சொல்லும் போதே நம் உள்ளத்திலும் பேருவகை பூக்கின்றது; ஒப்பற்ற பெருமிதச் சுவையும் பததிச் சுவையும், தமிழ்ச் சுவையும், அரசன்பால் வைத்த அன்பின் சுவையும் தத்தும்புகின்றது இப்பாட்டில்.

முருகக் கடவுள் யாம் தொடுத்து அணிகின்ற கடப்பம் பூமாலையை மகிழ்ந்து ஏற்றுக்கொண்டு எமது ஏத்துதலுக்கும் உரியனாக இருப்பதுபோல, பாண்டியன் யான் தொடுத்தணியும் பாமாலையையும், ஏத்துதலையும் மகிழ்ந்து ஏற்றுக் கொள்வான் என்கின்றார்; கடப்பம் பூமாலை முருகக் கடவுளுக்கே சிறந்தாற்போல எம் தமிழ்ப் பாமாலையும் பாண்டியர்க்கே சாலச் சிறந்தது என்று, தமிழ் வளர்த்த பாண்டியரைத் தம் வழிபடு கடவுளைப் போல நினைத்துப் பாராட்டுகின்றார்.

சூடிய பூ

௩. செங்க ணெடியான்மேற் றேர்விசைய னேற்றியபூப்
பைங்கண்வெள் ளேற்றான்பாற் கண்டற்றால்—எங்கு
முடிமன்னர் சூடியபூ மொய்ம்மலர்த்தார் மாறன்
அடிமிசையே காணப் படும்.

(கு - பு.) மற்ற மன்னர் முடிமிசைச் சூடிய பூக்கள் செங்கோன் தென்னன் அடிமிசையே காணப்படும் என்று அவன்றன் உயர்நிலை உரைத்தல்.

(இ - ள்.) செங்கண்ணினையுடைய திருமாலின் திருமுடியின்கண் தேர்வீரனாகிய விசயன் ஏற்றிய பூக்களைப் பசிய கண்களையுடைய வெள்ளேற்றூர்தியானாகிய சிவபெருமான் திருவடியின்மேல் அவ்விசயன் கண்டாற் போன்று, எல்லா இடத்திலுமுள்ள முடிசூடிய மன்னர்தம் தலைமிசைச் சூடிய பூக்கள் வண்டு மொய்க்கின்ற மலர்த்தாரணிந்த மாறனுடைய திருவடியினிடத்தே காணப்படும் எ-று.

(வி - ம்.) ஐவர்க்கும் நூற்றுவர்க்கும் கடும்போர் நிகழ்கின்றது; பல படைகள் படுகின்றன; இப்படிப் பலநாட்கள் கழிந்தன; அருச்சுனன் மகன் அபிமன்னன் ஆற்றல் வாய்ந்த அடலன்; மாற்றாரை மடிக்கின்றான்; இவ்வாறு பதின்மூன்று நாட்களாகப் படுகொலை செய்கின்றான் பார்த்தனர் பகைவர்: பதின்மூன்றாவது நாளில் அருச்சுனன் வேறிடத்தில் போர் புரியும்போது, கன்னன், துரோணன், சயத்திரதன் முதலிய பலகோடிக் கணக்கானவர் அபிமன்னனை வளைத்

துக்கொண்டு அடாததும், மூறைகேடானதுமான போர் செய்து வீரஞ்சிய அபிடன்னனீன அந்தோ ! மாய்த்துவிட்டார் கள்; வேறிடத்திற் போர்செய்து மீண்டுவந்த அருச்சுனன் அதனை அறிந்தான்; அடியற்ற நெடுமரம்போல் தேரிலிருந்து அவனிமேல் அயர்ந்து வீழ்ந்தான்; அரற்றினனன்; கல்லும் புல்லுங் கரையும்படி கரைந்தான்; உண்ணுமல் உயங்கினனன்; மாற்ருரை மறுநாளில் மடித்தல் ஒன்று, அன்றேல் தீயில் வீழ்ந்து மாய்தல் ஒன்று இவ்விரண்டிலொன்று செய்வேன் என்று சூளுரைத்தான்; இப்படிச் சூளுரைத்து உண்ணல் செய்யாமல்வாடிய அருச்சுனனைக் கண்ணன் கனியுண்ணும் படி தூண்டினனன்; ஆனல் வீரவிசயன் "யான் எம்பெரு மானீன - இறைவனீன - ஏற்றார்தியானைப் பூசனீன செய்யவில் லேயே இன்னும்; எங்ஙனம் உண்டேன்" என்றுகூற, உடனே கண்ணன் என் முடிமேல் பூக்களைப் போட்டு வணங்கிவிடு அவை இறைவன் அடிகளிற் போய்ச் சேர்ந்துவிடும் என் ருன்; உடனே விசயன் கண்ணன் திருமுடிமேல் கவினுர்ந்த மலர்தூவி ஈசனீன - இமையா முக்கண இறைவனீன, இருமைக் கேற்ற பூசனீன, முறையிற் புரிந்தான்; அன்றிரவே கண்ண னுடன் கைலைக்குப் போய்க் கண்ணுதலைப் பணியுங்போது, தான் கண்ணன் முடியிலேற்றிய பூக்கள் இறைவனடியிற் கிடத்தலைக் கண்டு விம்மித முற்ருன்; பின்பு இறைவனிடத் தில் பல்வேறு படைக்கலம் பெற்றுவந்து பகை தொலைத் தான். இது வரலாறு;

கண்ணன் முடியிற் சூடிய பூக்கள் கண்ணுதற் பெரு மான் கழலடியிற் காணப்பட்டாற்போல, உலகமெங்கும் உள்ள முடிமன்னர் தம்முடிமிசைத் சூடிய பூக்கள் செங் கோற்றென்னவர் திருவடி மிசையே காணப்படும் என் று பாண்டியர்தம் பண்பினைப் பாராட்டுகின்ருர்.

பொதுவகையால் எங்கும் நிறைந்திருக்கின்ற இறைவ னது திருவடி சிறப்புவகையால் தன் முடிமிசைத் தங்கியிருக் கின்றதென்று கண்ணன் கருதினமையால் அருச்சுனன் தூவிய மலர்கள் அவ்விறைவன் திருவடிக்கே யாயின என்ப. பகைவர் வணங்கும்போது அவர்கள் அணிந்திருக் கும் மலர்கள் மாறன் அடியில் வீழும் ஆதலால் இவ்வாறு கூறினர். இது, பெருமிதச்சுவையமைந்த பாடல்.

யாங்கு ஒளித்தாய்?

ச. கூந்தன்மா கொன்று குடமாடிக் கோவலனுய்ப்
பூந்தொடியைப் புல்லிய ஞான்றுண்டால்—
[யாங்கொளித்தாய்
தென்னவனே தேர்வேந்தே தேறுநீர்க் கூடலார்
மன்னவனே மார்பின் மறு.

(கு - பு.) மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பிற் குவா வீழுப்புகழ்ப் பூவை நிலை, அஃதாவது செங்கோற்றென்னனைத் திருமாலாகவே கூறுதல்.

(இ - ள்.) தென்னவனே! தேர்ப்படை மன்னவனே! தெளிந்த நீர்மையையுடைய கூடலார்தம் புரவலனே! நின் மார்பில் ஒரு மறு, நீ, பிடரி மயிரினையுடைய குதிரையினைக் கொன்று, குடமெனப் பெயரிய கூத்தினையாடிக், கோவலனுய்ப் பூந்தொடியணிந்த நப்பின்னையைத் தழுவிய காலத்தில் இருந்தது; இப்பொழுது அதனை எவ்விடத்தில் மறைத்து வைத்தாய்? என்று வினவுகின்றார்.

(வி - ம்.) செங்கோற் றென்னன் வீற்றிருக்கின்றான்; பார்க்கின்றார் புலவர்: "திருவுடை மன்னரைக் காணில் திரு மாலைக் கண்டேனே" என்று கூறுதல் பெரியோர் மரபு அல்லவா? இதைத்தானே தொல்காப்பியர், "மாயோன் மேய மன் பெருஞ் சிறப்பிற், குவா வீழுப்புகழ்ப் பூவை நிலை" என்று பலஅடைமொழி சேர்த்துப் புகழ்கின்றார்; தென்னனைத் திரு மாலாகவே கருதிவிட்டார்; ஆம்; திருமால்தான்; நாம் கண்டு பிடித்துவிடுவோமென்று இவ்வாறு வேறுவடிவுடன் காத்தற் கடவுள் வந்திருக்கின்றான்; நாம்தாம் கண்டுகொண்டோமே; இவன் காவலே இவனைத் திருமாலென்று உணர்த்துகின்றதே என்று நினைக்கின்றார்; நினைத்துவிட்டு ஆமாம், திருமாலுக்கு மார்பில் ஒரு மறு உண்டே; அவன் குதிரை வடிவாய் வந்த வஞ்சகனை, வாயைக் கிழித்த காலத்திலும், குடக்கூத்தாடின காலத்திலும், ஆனேறு ஏழு தழுவி நப்பின்னையை மணந்த காலத்திலும் இருந்ததே; அதை எங்கே மறைத்தான்? மறைத்தாலென்ன? நமக்குத் தெரியாமலா போய்விடும்? நான்தான் இவன் யாரென்று கண்டுபிடித்து விட்டேனே! தென்னவனே! அந்த மறுவை எங்கே

ஒளித்து வைத்திருக்கின்றாய் ? சொல்லு ; விடமாட்டேன் ; என்னிடத்தில் உன் மாயத்திருட்டுப் பலிக்காது என்கின்றார்.

பெருமிதச் சுவை நிறைந்த பாடல்: பெரிதாக ஒன்றைக் கண்டுபிடித்துவிட்டதாகக் கொண்டு, யாங்கு ஒளித்தாய் ? என்று வீரத்துடன் பேசுகின்றார்.

கூந்தல் மா கொன்ற வரலாறு :—கஞ்சனால் ஏவப்பட்ட அரக்கருள் ஒருவன் குதிரை வடிவு கொண்டு கண்ணனைக் கொல்ல வந்தான் ; உடனே கண்ணன் அதன் வாயைப் பிடித்து இரண்டாகக் கிழித்து வீசிவிட்டான் ;

குடக்கூத்து ஆடிய வரலாறு :—வாணன் தன் மகள் உழையின் பொருட்டாகக் காமன்மகன் அநிருத்தனைச் சிறை வைத்துவிட்டான் ; அவனை மீட்கச் சென்ற கண்ணன் மண்ணுலும் உலோகத்தாலும் இயற்றிய குடங்களைக் கொண்டு கூத்தாடினன். ' இது, வினைத் கூத்து ஆறனுள் ஒன்று.

> "வாணன் பேரூர் மறுகிடை நடந்து
> நீணிலம் அளந்தோன் ஆடிய குடமும்"

என்பது சிலப்பதிகாரம், (கடலாடு, காதை. 193)

> "குடத்தாடல் குன்றெடுத்தோன் ஆடல் அதனுக்கு
> அடைக்குப ஐந்துரப்பு ஆய்ந்து"

"கோலால் நிரைமேய்த்து ஆயனுய்க் குடந்தைக் கிடந்த குடமாடி" (ஆண்டாள் - நாச்சியார் திருமொழி).

> "பாரோர்க ளெல்லாம் மகிழப் பறைகறங்கச்
> சீரார் குடமிரண் டேந்திச் செழுந்தெருவே
> ஆரார் எனச்சொல்லி ஆடும் அதுகண்டு"

என்பது நாலாயிரம், (சிறிய திருமடல்)

> "கொட்டாய் பல்லிக்குட்டி, குடம்ஆடி உலகளந்த
> மட்டார் பூங்குழல் மாதவனே வரக்
> கொட்டாய் பல்லிக்குட்டி"

என்பது நாலாயிரம் பெரிய திருமொழி, 60 : 5.

கோவலனுய் :—ஆனினங்களைக் காப்பவனுக.

பூந்தொடியைப் புல்லிய வரலாறு:—இது நப்பின்னையைக் குறித்தது; ஏழு கொல்லேற்றினைத் தழுவியடக்கினவனன்றி நப்பின்னையை வேறு எவனும் மணக்க முடியாது என்னும் கட்டுப்பாடு இருந்தது; அவ்வாறு கண்ணனே கொல்லேறு ஏழினையும் தழுவி அவளை மணந்தான்.

திருமாலின் மார்பில் திருவும் மறுவும் உள என்பது உணரத்தகுந்தது.

வெண் சங்கும் நித்திலமும்.

செ. பார்படுப செம்பொன் பதிபடுப முத்தமிழ்நூல்
நீர்படுப வெண்சங்கும் நித்திலமும்—சாரல்
மலைபடுப யானை வயமாறன் கூர்வேற்
றலைபடுப தார்வேந்தர் மார்பு.

(கு - பு.) வயமாறனுடைய வளனும் வீரமும் புகழுங் கூறல்.

(இ - ள்.) வலிய மாறனது நிலத்தின்கண் உண்டாவன செம்பொன்; ஊரின்கட் டோன்றுவன முத்தமிழ் நூல்: கடலின்கண் மிகுவன வெண்சங்குகளும் முத்துக்களும்; மலைச்சாரலின்கண் பல்குவன மதயானைகள்; கூர்வேலின் நுனியிலே படுவன தார்வேந்தர்தம் மார்புகள் எ - று.

(வி - ம்.) மாறனுடைய ஆட்சி நிகழ்கின்றது; பலவளமும் பல்கின; நிலத்திலே செம்பொன் விளைகின்றன; வெட்டி எடுத்துக்கொள்ளலாம்; ஊரிலே முத்தமிழ் நூல் வளர்கின்றன; கடலிலேயோவென்றால் கைவளைகளுக்குச் சங்குகளும், ஆரத்துக்கு முத்துக்களும் அளவுக்கு மேலேயே கிடைக்கின்றன; மலையிலோ வெனறால் மதயானைக் கூட்டங்கள் பல்கி வளர்கின்றன; இத்தகைய வளத்துக்கு ஆசைப்பட்டுப் பகைவர் படையெடுத்து வந்தால் அவர்களுடைய மார்புகளைப் பிளந்துவிடும் பாண்டியனுடைய வேல். இப்படியிருக்கும் போது பகைவர் அஞ்சாமல் என்செய்ய வல்லர்? என்கின்றார்.

இதனால், நிலவளமும், தமிழ் வளமும், கடல் வளமும், மலைவளமும், வேல்வளமும் கூறினர்.

இது, பெருமிதச் சுவை வாய்ந்த பாடல். பாண்டிய நாட்டின் பெருவளத்தை நன்கு உணர்த்துகின்றது. சொற் பொருட்பின் வருநிலையணி அணிசெய்கின்றது.

ஐந்தலை ஆடரவம்

சு. அருமணி யைந்தலை யாடரவம் வானத்
தருமேற்றை யஞ்சி யொளிக்கும் — செருமிகுதோட்
செங்கண்மா மாறன் சினவேல் கனவுமே
அங்கண்மா ஞாலத் தரசு.

(கு - பு.) மாறனுடைய பகைவரின் நிலை பகர்தல்.

(இ - ள்.) அருமையான மணிகளையும் ஐந்து தலை யினையும் உடைய ஆடரவம் வானத்தே முழங்குகின்ற இடி யேற்றுக்கு அஞ்சி ஒளித்துக் கொள்ளும்; அதுபோல, போரின்கண்ணே மேம்பட்ட தோளினையும் செங்கண் ணினையும் வெற்றித் திருவினையும் கொண்டுள்ள மாறனது சினத்தையுடைய வேலுக்கு அஞ்சி அங்கண்மா ஞாலத்து அரசு அதனைக் கனவின் கண்ணும் காணுகிற்கும் எ - று.

(வி - ம்.) பாம்பின் தலையில் மணி உண்டாதல் இயல்பு; பாம்பினிடத்தில் ஒருவகை மின்சார சத்தி உண்டு; ஆதலால், மின்னும் போதாவது, இடி முழங்கும் போதாவது அது வெளியே வந்தால் மின்னல் அதன்மேல் ஒழுகிவிடும்; அல் லது இடி விழுந்து விடும்; அவ்வியல்பு பாம்புக்கு நன்கு தெரியும்; ஆதலால் அது புற்றினுள்ளே மாரிக் காலத்தில் நன்றாய் ஒளிந்து கொள்ளும்; இது நம் முன்னோர் கண்ட உண்மை.

உரு மேற்றுக்கு அஞ்சிய ஆடரவம் அளையினுள் ஒளித் துக் கொண்டு அவ் இடி முழக்கத்தை நினைத்து நினைத்து நடுங்கிக்கொண் டிருக்கும்; மாறனுக்குப் பகைஞராய மாற்றரசு, அவன் வேலுக்கு அஞ்சி ஒளிந்துகொண்டு உறங்கிய இடத்தில் அவன் வேலைக் கனவின்கண்ணும் கண்டு, அஞ்சா நிற்கும்.

ஆடரவம் - ஆடுகின்ற பாம்பு. அங்கண்மா ஞாலம் - நல்ல நிலத்தையுடைய பேருலகம். எடுத்துக் காட்டுவமை யணி.

கனவிலும் அஞ்சுமென அச்சச் சுவையை நன்முக அமைத்துக் கூறியிருக்கின்றார்.

திரு உத்திராடத் திருநாள்

எ. கண்ணுர் கதவந் திறமின் களிறுடுதேர்
பண்ணுர் நடைப்புரவி பண்விடுமின்—நண்ணுதீர்*
தேர்வேந்தன் றென்னன் திருவுத்தி ராடநாட்
போர்வேந்தன் பூச லிலன்.

(கு - பு.) தென்னன் பிறந்த திரு வுத்திராடத் திருநாளிற் போரொழிந்து மகிழ்வு கொண்டாடல்.

(இ - ள்.) "பகைவர்காள்! தேர்க் காவலனும் போர் மன்னனுமாகிய தென்னன் தான் பிறந்த திரு உத்திராடத் திருநாளில் நும்மொடு பூசல் செய்தல் இலன்; ஆதலால், நும் களிற்றினையும், தேரினையும், இசைக்கு ஒத்த நடையினையுடைய புரவியினையும் பண் கழ்ந்து விடுமின்; நும் அரண்மனை வாயிலில் உள்ள கண் கவர் வனப்பு மிக்க கதவுகளைத் திறந்திடுமின்" என்று தென்னன் திறல் வீரன் செப்புகின்றன் எ - று.

(வி - ம்.) மாற்றூர்தம் மதிலை வளைத்து வழுதியின் படைகள் போர் தொடங்குகின்றன; பகைவர்கள் உள்ளே அடைத்துக்கொண்டு இருக்கின்றனர்; சிலர் தேர், யானை, குதிரை, இப்படைகளைப் போருக்கு ஏற்பப் பண் அமைத்து நிறுத்தியிருக்கின்றார்கள்; அப்பொழுது, ஒளிநூல் வல்லான் வந்து "போர்வேந்தே! இன்று, திரு உத்திராடத் திருநாள்" என்று கூறிவிட்டான்; உடனே போரை நிறுத்தக் கட்டளை பிறந்துவிட்டது; உடனே தென்னனுடைய திறல் வீரன் கூறுகின்றன்; "பகைவர்காள்! போர் இல்லை; கதவுகளைத் திறமின்; யானை, தேர், குதிரை இவற்றின்மேல் அமைத்த இருக்கைப் பண்களைக் களைமின்; அஞ்சாதீர்கள்; இன்று திரு உத்திராடத் திருநாள் காணீர்!" என்று இயம்புகின்றன்.

---

* பாடம் - நண்ணுர்தம்.

இனி, "நண்ணுர்தம்" என்ற பாடத்திற்கு இசைய, தென்னனுடைய ஏவலன், போர்ப் படைத் தலைவரிடம் கூறுவதாகக் கொண்டு, வீரர்காள்! இன்று மன்னன் பிறந்த நாள்; பகைவர்மேல் படையெழுச்சி வேண்டா; யானை, தேர், குதிரைகளைப் பண்ணுகளுமின்; பகைவரைச் சிறைக் கோட்டத்திலிருந்து விடுதலை செய்து அவருடைய அழகிய அரண்மனைக் கதவுகளைத் திறந்து கொடுமின்; அவர்களும் இனிதே வாழ்வாராக; என்று கூறியதாகக் கொள்க.

திருவிழா மகிழ்ச்சியினால் ஒன்னரையும் உவந்தார் ஆக்கினமை கூறினர்.

பூசல் - போர். நண்ணுதிர் - பகைவர்காள். கண்ணுர் கதவம் - கண் கவர் வனப்பு மிக்க கதவு. பண்ணுர் நடைப் புரவி - இசைக்கு ஒத்த நடையினை உடைய குதிரை.

பாண்டியன்

நாடு

முத்தம்போல் தோன்றும்

அ. நந்நி னிளஞ்சினையும் புன்னைக் குவிமொட்டும்
பந்த ரிளங்கமுகின் பாளையும்—சிந்தித்
நிகழ்முத்தம் போற்ருேன்றுஞ் செம்மற்றே தென்னன்
தகைமுத்த வெண்குடையா னுடு.

(கு - பு.) வேற்றூர் சென்ற விளங்கிழை யொருத்தி அவ்வூரார்க்குப் பாண்டிநாட்டின் வளந்தினைப் பகர்தல்.

(இ - ள்.) நங்காய்! ஒளி பொருந்திய முத்துக்களால் அழகு செய்யப்பட்ட வெண்கொற்றக் குடையையுடைய எம் மன்னனுகிய தென்னனுடைய நாட்டில், சங்கினங்கள் ஈன்று போட்ட முதிரா முத்துக்களும், புன்னையிலிருந்து உதிர்ந்தனவாகிய குவிந்த அரும்புகளும் பந்தல்போல அழகு செய்கின்ற கமுகம் பாளையிலிருந்து உதிர்ந்த மணிகளும் சிதறிக் கிடக்கும்; எங்கே பார்த்தாலும் இதே

காட்சிதான். ஆனல் அவைகள் உண்மையாகத் திகழ் கின்ற முத்துக்களைப் போன்றே தோன்றும்; அவ்வளவு தலைமையுடையது இந்த நாடு; நீ கண்டால் எல்லாவற்றை யும் முத்துக்கள் என்றுதானே நினைப்பாய்? என்கின்ருள்.

(வி-ம்.) ஒரு நங்கை தன் தோழியுடன் வேற்றூருக்குப் புறப்பட்டுச் செல்கின்ருள்; வெயில் வரவர வெதுப்பத் தொடங்கி விட்டது; பொறுக்க முடியவில்லை; பக்கத்தி லிருக்கும் கடற்கரைச் சோலையிலே போய்த் தங்கி இளைப் பாறச் சென்ருர்கள்; அங்கே போய்ப் பார்த்த உடனே அப்படியே ஒரு பெரு வியப்பு உண்டாகி விட்டது; தோழி பார்த்தாயா! இந்தச் சோலையிலே எங்கே பார்த் தாலும் முத்துக்களாகவே தோன்றுகின்றன; பாக்குப் பாளையிலிருந்து உதிர்ந்த மணிகளும், புன்னையின் அரும்பு களும், சங்கு ஈன்று போட்ட முதிரா முத்துக்களின் தொகுதியும்தானே இவ்வாறு காட்சியளிக்கின்றன; வேற்ருரிலிருந்து யாராவது வந்து பார்த்தால் உண்மை யாலை முத்தென்றே மயங்கி விடுவார்கள் என்று பேசிக் கொண்டு இருந்துவிட்டு எழுந்து போய்விட்டார்கள். அடுத்த ஊருக்குப் போய்ச் சேர்ந்த உடனே பாண்டியனைப் பற்றிப் புகழத் தொடங்கிவிட்டாள்; எங்கள் நாட்டில் எங்கே பார்த்தாலும் முத்துக்கள்தான் என்று பெருமிதம் பேசுகின்ருள்.

"முத்துக் குடையினல் உலகுக்கு நிழல் செய்கின்ற வழுதி நாட்டில் எங்கும் முத்துக்களே மிளிர்கின்றன; அவன் வெண் கொற்றக் குடையைப் போலல்லவா நாடும் விளங்குகின்றது?" என்று அழகாக அமைத்திருக்கின்ருர்.

செம்மற்று - தலைமையை யுடையது.

நந்து - சங்கு. அது முதிர்ந்த முத்துக்களை ஈன்ருல் மக்கள் அணிவதற்கு எடுத்துச் செல்வர். முதிரா முத்துக் கள் எடுப்பாரின்றிச் சிதறிக் கிடக்கும். "எண்ணூர் முத்தம் ஈன்று மரகதம் போற் காய்த்துக் கண்ணூர் கமுகு பவழம் பழுக்கும் கலிக்காழி" (திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம்.)

பந்தர் இளங் கமுகு - பந்தர்போல அழகு செய்கின்ற இளங் கமுகு.

"மேவு செந்துகிர்த் திரளுமா மரகத விதழும்
கோவை வெண்கதிர்த் தாளமும் நிரைநிரை குயிற்றித்
தாவும் வெம்பரித் தேரினுன் தனக்கெதிர் சமைத்த
காவணங்களிற் ருேன்றின பச்சிளங் கமுகம்"

(வில்லி. திரு. தூது. திகை.)

"முன்னாத்தஞ் சிற்றில் முழங்கு கடலோதம் மூழ்கிப் போக
அன்னாக் குரைப்பன் அறிவாய் கடலேயென் றலறிப் பேருத்
தன்மை மடவாரீ தளர்ந்துருத்த வெண்முத்தந் தயங்கு கானல்
புன்னை அரும்பேய்ப்பப் போவாரைப் பேதுறுக்கும் புகாரே எம்மூர்"

(தண்டி. சூ. ககூ. மேற்கோள்)

என்ற பாடலியுங் காண்க.

பாண்டியன்

நகர்

குங்குமச் சார்ந்து

கூ. மைந்தரோ டுடி மகளிர் திமிர்ந்திட்ட
குங்கும வீர்ஞ்சாந்நின் சேறிழுக்கி—எங்குந்
தடுமாற் ருகிய தன்மைத்தே தென்னன்
நெடுமாடக் கூட லகம்.

(கு - பு.) நெடுமாடக் கூடலின் நீள் வளங் கூறல்.

(இ - ள்.) பாண்டியனுடைய உயர்ந்த மாடங்கள் உள்ள மதுரையினிடத்திலுள்ள வீதிகள், எல்லா இடத்திலும், இரவில் மேல் மாடங்களிலே யிருந்துகொண்டு ஆடவருடன் ஊடிய அணியிழையார் பலகணி வழியாகச் சிதறி எறிந்த குங்குமத்துடன் கூடிய குளிர்ந்த சந்தனத்தாலாகிய சேறு, வழுக்கி விடுதலால் வழிச்செல்வோரைத் தடுமாறச் செய்தலாகிய இயல்பை யுடையது எ - று.

(க - து.) கூடல் மகளிர் மேல் மாடத்திலிருந்து கொழுநரோடு ஊடிச் சிதற வீசிய குங்குமச் சந்தனச் சேறு வீதி முழுதும் பரவிக் கிடத்தலால், அவ்வீதிகள் வழிச் செல்வோரை வழுக்கிவிட்டுத் தடுமாறச் செய்யும் இயல்புடையது எ - று.

இதனைற் செல்வப் பெருக்கமும் இன்பப் பெருக்கமும் செவ்விதின் இயம்பினர்.

ஊடி - ஊடல் கொண்டு. திமிர்ந்திட்ட - சிதறிவிட்ட. சாஞ்சாந்து - குளிர்ந்த சந்தனம். இழுக்கி - வழுக்குதலால். கூடல் - மதுரை.

பாண்டியன்

திறை

பூமி மிதியாப் பொருள்

கo. நேமி நிமிர்தோள் நிலவுதார்த் தென்னவன்
காமர் நெடுங்குடைக் காவல் ஆணையால்
ஏம மணிப்பூ ணிமையார் திருந்தடி
பூமி மிதியாப் பொருள்.

(கு - பு.) படைவீரன் தென்னன் ஆணையின் தன்மையைப் பகைமன்னனிடம் பகர்தல்.

(இ - ள்.) மன்னர்காள்! நீவிர் நிலத்தில் கால்வைத்து விட்டால் எம் மன்னனுக்குத் திறை கொடுத்துவிட வேண்டியதுதானே; கொடுக்காவிட்டால் இவ்வுலகில், நும க்கு வாழ்வு ஏது? இந்நிலவுலகம் முழுவதையும் எம் மன்னன் தானே தாங்குகின்றான்; அவ்வாறு தாங்கும் தோள்களில், விளங்குகின்ற வெற்றிமாலையும் அணிந்திருக்கின்றான்; அழகும் நெடுமையும் வாய்ந்த வெண்கொற்றக் குடையும் பிடித்திருக்கின்றான்; உலகத்தையே அவன்தான் காக்கின்றான்; அவன் ஆணைக்கு அடங்காதவர் யார்? தேவர்களுங் கூட, ஏன் பூமியில் மிதியாமல் விண்ணிலேயே இயங்குகின்றார்கள் தெரியுமா? இவனுடைய ஆணைக்குப் பயந்துதான்; பொன்னாலும் மணியாலும் செய்யப்பட்ட பூண் அணிந்திருக்கின்றார்கள் தேவர்கள்; (முன்பு ஒருமுறை பாண்டியன் இந்திரனிடம் ஆரம்பெற்று அணிந்திருக்கின்றான்; ஒருமுறை இந்திரன் முடியை யுடைத்துவிட்டான்; முகிலினங்களைச் சிறைப்படுத்திவிட்டான்) நிலத்தில் மிதித்தால் உடனே அவர்களைப் பிடித்து அவர்கள் மார்பில் அணிந்திருக்கும்

பொன்மணிப் பூணைக் கவர்ந்துகொள்வான் ; இதற்கெல்லாம் பயந்துதானே விழி விழி என்று விழித்துக்கொண்டு இமையாமலும் பூமியில் மிதியாமலும் இருக்கின்றனர்; நீவிர் எந்த அளவினர்? உடனே திறைதந்து உய்ம்மின்; என்று கூறுகின்ருன்.

(வி - ம்:) நேமி நிமிர் தோள் நிலவுதார் - பூமியைத் தாங்கும் தோள்களில் அணியப்பட்டு விளங்குகின்ற வெற்றிமாலை. நிமிர்த்தல் - தாங்குதல், நேமி - பூமி. நேமி என்பதைத் தோள் வினையாகக் கொண்டு பூரிப்பினுலே தோள் வலியை நிமிர்த்ததேகள் எனலுமாம். பூமி முற்றும் ஆள்கின்ருன் என்பதை, "நேமி நிமிர்தோள்" என்பதால் குறித்தாய்; உண்மைதானே; பாண்டியன் தாங்கிக்கொண்டிருக்கின்ற நிலத்தில் தேவர்கள் மிதித்துப் பாரத்தை மிகுதிப்படுத்தினுல் திறை கொடாமல் இருக்கலாமா? இருக்கக்கூடாது என்பது குறிப்பு.

ஏம மணிப்பூண் :—பொன்னுலும் மணியாலும் செய்த அணிகலன் : ஏமம் - பொன். தேவர் அணிவது செய்யாப் பூண்தேரு? எனின், பொன்னுலும் மணியாலும் இயல்பாய் அமைந்த பூண் ; என்க.

இமையா :— கண்ணிமையாத தேவர். திருந்தடி - நல்ல பூங்குறிகள் எல்லாம் அமைந்த அடிகள் ; அந்த அடிகளைத் தான் பூமியில் வையாமல் தூக்கிக்கொண்டு அலைகின்ருர்கள்; என்றவாறு.

இயல்பாகவே கால்நிலந்தோயாத் தேவரைத் தென்னன் ஆணைக்கு அஞ்சி மிதித்திலர் என்றது, தற்குறிப்பேற்ற அணி.

பெருமிதச் சுவை நிறைந்த பாடல் இது.

இறையோ முறையோ.

கக. நிறைமதிபோல் யானைமேல் நீலத்தார் மாறன்
குடைநீழல் ஞாலத் தரசர்—நிறைகொள்
இறையோ வெனவந் திடம்பெறுத லின்றி
முறையோ வென நின்ருர் மொய்த்து.

(கு - பு.) மாறனது குடைநாட்கோள் உணர்ந்து மனங்கலங்கிய மாற்றூர், திறை கொடுப்பாராய் வந்து மொய்த்துச் செல்வியும் இடமும் பெருதவராய் முறையிடல்.

(இ - ள்.) ஏடா! ஈது நீ அறிதியோ? எம் மன்னன் பாண்டியன், குவளைப் பூமாலைதான் அணிந்திருந்தான்; போர்க்கு வேண்டிய துழபைப் பூ மாலையைக் கூடச் சூட வில்லை; மாற்றூரை வெல்வதற்கு நன்னாட் குறித்து அவனுடைய வெண் கொற்றக் குடையைப் புறவீடு விடுதற்காக யானைமேல் வைத்துக்கொண்டு சென்றோம்; அது திறைமதி போல விளங்கிற்று; அதற்குள் மாற்றூராய ஞாலத்து மன்னரெல்லாம் வந்து மொய்த்து நெருக்கிக்கொண்டு, எங்கள் மன்னவோ! திறைகொள்ளாயோ? ஏனக்கூறி இவ்வாறு எம்மேற் பகைகொண்டு குடைநாட் கொள்ளுதல் முறையோ எனறு முறையிட்டுக்கொண்டு நின்றனர்; என்று மாறன் படைத்தலைவன் மற்றொருவனிடம கூறுகின்றனன்.

(வி - ம்.) மாறன் ஆட்சி மன்னி யோங்குகின்ற காலம்; எவ்வளவு காலமோ போர் என்பதின்றியே கழிந்துவிட்டது! பிறரரசர் பார்த்தார்கள்; ஆய; இனிமேல் நாம திறை கொடுக்க வேண்டாம்; பாண்டியன் என்ன செய்துவிடுவான் பார்ப்போமே! என்றுமாக திருந்துவிட்டார்கள்; அறிந்தான் மாறன், சீற்றங்கொண்டான்; நல்ல நாளில் வெண் கொற்றக் குடையை யானைமேல் வைத்து வேறு இடத்திலுள்ள வீட்டிற்குக் கொண்டுபோய வையுங்கள்; படை திரட்டுங்கள்; எனறு கட்டளை இட்டான்; உடனே நல்ல நாளில மலைபோன்ற பெரிய பட்டத்துயானைமேல் அரசனுடைய வெண் கொற்றக் குடையைத் தோன்றவைத்து முழக்கத்துடனே கொண்டு செல்கின்றார்கள்; இதற்குள் ஒற்றர்கள் எப்படியோ சென்று மாற்றரசரிடத்தில் கூறிவிட்டார்கள்; உடனே நடுக்கங் கொண்டார்கள்; ஐயோ; குடைநாட்கோளா? ஆ! ஆ! அது நம் வாழ்நாட் கோளாக வல்லவா முடியும்? என்று உளங்கவன்று எல்லாரும் திரண்டு வந்தார்கள்; வந்து 'மன்னவோ! திறையைப் பெற்றுக்கொண்டு அருள்க. உன் கீழ அடியராய் வாழும எங்கள்மேல் போர் தொடுக்க எண்ணுவது முறையோ', என்றுகூறி முறையிட்டார்கள். இதனைத்தான் பாண்டியனுடைய படைவீரன் பகர்கின்றான்.

நிறைமதிபோல்:—குடை நிறைந்த சந்திரனைப் போல தோன்றிற்றெனவே அரசனுடைய தண்ணளியும் செங்கோலும் விளங்கும். சேய்மைக் கண்ணே நின்று கூவுதலினால் "நிறையோ முறையோ" என்று ஓகாரம் அமைத்துக் கூறினர்.

நீலத்தார் மாறன் - நீல நிறமுள்ள குவளைப்பூ மாலையணிந்த பாண்டியன்; போருக்கு அணியவேண்டிய தும்பைப் பூக்கூட சூடவில்லை; குடைநாட்கோட் செய்தவுடனேயே அரசர் வந்து நிறைகொடுத்துவிட்டனர்; அதனாலேயே ஈண்டு "நீலத்தார் மாறன்" என்றார். இதன் நயம் உணர்க.

மொய்த்து—நெருங்கிக்கொண்டு.

குடைநாட்கோள்:—மாற்றரசனோடு போர்செய்து வெல்வதறகுக் குறித்த நன்னாளில் அரசன் புறப்படுதல் இயலாததொன்றுதலால், குறித்த நல்ல நேரத்தில் அவன் குடையை பட்டத்து யானைமேல் வைத்து வேறு இடத்திற் கொண்டு போய் வைப்பது வழக்கம. பின்பு அரசன் போர்செய்யச் செல்வான். இதனை,

> "பெய்தாமஞ் சூரும்பிழிரப் பெரும்புலவர் புகழ்பாடக்
> கொய்தார் மன்னவன் குடைநாட் கொண்டன்று"

(புறப். வெ. மா. வஞ்சி. நூ)

என்பதானுணர்க.

> "பகலெறிப்ப தென்கொலோ பான்மதியென் றஞ்சி
> இகலரணத் துள்ளவ ரெல்லாம்—அகலிய
> விண்டஞ்ச மென்ன விரிந்த குடைநாட்கோள்
> கண்டஞ்சிச் சும்பிளித்தார் கண"

என்ற பெரும் பொருள் விளக்கப் பாடலும் உணர்க.

பாண்டியன்

யெல்கோடல்

ஆமா உகளும் அணிவரை.

கஉ. செருவெங் கதிர்வேற் சினவெம்போர் மாறன்
உருமீ னிடிமுர சார்ப்ப—அரவுற்றுந்

தரமா வுகளு மணிவரையி னப்புறம்போய்
வேமால் வயிறெரிய வேந்து.

(சு - பு.) மாறனுடைய முரசின் ஒலிகேட்ட மாற்றரசர் மனங் கலங்கி மதிலிலிருந்து மலைகடந்து ஒளித்து மயங்கிய திலைகூறல்.

(இ - ள்.) போர்க்களத்தில் விரும்பத்தகுந்த ஒளிபொருந்திய வேலினையும், மாற்றார் மேற் சீற்றத்தையும் உடையவனும், வெல்லிய போர்த் தொழிலில் வல்லனும் ஆகிய பாண்டியனுடைய முழக்குகின்ற முரசம், இடி முழக்கம் போல முழங்க, பகைவரசு அம்முழக்கம் கேட்ட பாம்பு நடுங்குவதுபோல அஞ்சு நடுங்கித் தம் மதிலை விட்டுவிட்டு ஓடிப்போய்க் காட்டுப் பசுக்கள் துள்ளிக்குதித்துத் திரியும் அழகிய மலைக்கு அப்புறம் ஒளிந்துகொண்டு வயிறு கனல உள்ளம் கொதிக்கும் என்று கூறுகின்றன்.

(வி - ம்.) அமைதியாக இருக்கும்பொழுது சிலர் மாறனுக்குத் திறை கொடாமல் இருந்துவிட்டனர்; உடனே படை புறப்பட்டது. பகைவர் தேயத்தை யடுத்துவிட்டது; போர்ப்பறையும் முழக்குகின்றார்கள்; அஃது இடி முழக்கம் போல முழங்குகின்றது. கேட்டனர் பகையரசர்; இடி முழக்கம் கேட்ட நாகம்போல அஞ்சி நடுங்கி ஓடிப்போய் மலையில் ஏறி ஆள் வழக்கற்ற இடத்தையெல்லாம் கடந்துவிட்டார்கள்; அங்கே ஆமா வினங்கள் துள்ளிக்குதிக்கின்றன; அவைகளின் கால்பட்ட இடங்களிலிருந்து மணிகள் பெயர்ந்து ஒளியொடு மிளிர்கின்றன; அவ்விடத்தையுங் கடந்து சென்று ஒளித்திருக்கின்றார்கள்; ஆனல் திகில் விட்டபாடில்லை; வயிறு எரிகின்றது; மனம் கொதிக்கின்றது; இவ்விடத்திற்கும வந்து கண்டுபிடித்து விடுவார் களோ என்று அஞ்சினர். "வேமால் வயிறெரிய வேந்து" என்பதில், அச்சச்சுவை பொங்கித் ததும்புகின்றது.

செரு - போர். வெம்மை – விருப்பம். வெம்போர் - கொடும்போர். உரும் - இடி. ஆர்ப்ப - முழங்க. அரவு - பாம்பு. உறழ்ந்து - ஒத்து.

ஆமா - ஆப்போலும் மா; இது காட்டில் வாழும் ஒருவகை விலங்கினம்.

ஆமா உகளும் அணிவரை - காட்டுப் பசுக்கள் துள்ளிக் குதித்துத் திரியும் அழகிய மலை. மணிவரை என்று பிரித்து மாணிக்கக் கற்கள் உள்ள மலை என்றும் கொள்ளலாம்.

வயிறு எரிய - வயிறு கனல.

வேம் - உள்ளம் கொதிக்கும். ஆம் - அசை.

முரசொலி கேட்டுப் பகையரசு மலை கடந்து சென்றது என்றமையால், எயிலை மாறன் படைத்தலைவர் பற்றினர் என்பது பெறப்படும்.

பாண்டியன்

குதிரை மறம்

புரைசை யற நிமிர்ந்து பொங்கல்

கக. நிரைகதிர்வேல் மாறனை நேர்நின்ரூர் யானைப்
புரைசை யறநிமிர்ந்து பொங்கா—அரசர்தம்
முன்முன்னு வீழ்ந்த முடிகளுதைத்தமாப்
பொன்னுரைகற் போன்ற குளம்பு.

(கு - பு.) "மாறனுடைய குதிரைப் படையே, அவன் பகைவருடைய யானைப் படையைத் தாக்கி அழிக்கின்றன" என்று அவன் குதிரைப் படையின் மறங் கூறல்.

(இ - ள்.) "நண்ப! போர்க்களத்தில் அணியணியாக ஒளி பொருந்திய வேற்படைகள் சென்று தாக்கின; அப் பொழுது குதிரைப் படைகள் என்ன செய்தன தெரியுமா? பாண்டியனுடைய மாற்ரூரின் யானைப் படைமேற் சென்று மோதின; உடனே அந்த யானைகள் கழுத்தை நிமிர்த்துக் கொண்டு அங்குமிங்குமாகத் திரும்பி அலமரத் தொடங்கின; குதிரைகளும் அவற்றின் கழுத்தடியில் மோதிப் பாய்ந்தன. அதனால் யானைகளின் கழுத்துக் கயிறுகள் அறுந்து போயின. அந்தக் கழுத்துக் கயிற்றினடியிற் காலை நுழைத்துக் கொண்டிருந்த அரசர்கள் கீழே உருண்டு விழுந்தனர்; உடனே குதிரைகள் காலால் அவர்களுடைய பொன்முடிகளை எற்றி இடறிக்கொண்டு அப்பாற் சென்றன. இவ்வாறு பல்வேறு மன்னருடைய முடிகளை

உதைத்து உதைத்து அக்குதிரைகளின் காற்குளம்புகளெல் லாம் பொன்னுரைத்த கட்டளைக்கற் போன்றனவாக ஆயின காண்!" என்று மாறனுடைய வீரன் மற்றொருவனிடம் புகழ்கின்றான்.

(வி - ம்.) நிறை கதிர் வேல் மாறனை - வரிசையாக ஒளி பொருந்திய வேற்படை பிடித்த சேனைகளையுடைய பாண்டி யனை. நேர் நின்றார் - எதிர்த்து நின்ற பகைவர். யானைப் புரைசை - யானைகளின் கழுத்திடு கயிறுகள். அறுமிர்ந்து பொங்கா - அந்தப் புரைசைக் கயிறு அறும்படியாகக் குதிரைப்படை தலையெடுத்து மோதிச் சிறி.

இனி, யானைப் படையை மாறனுடைய படையாகக் கொண்டு அவைகள் புரைசைக் கயிறு அறும்படி பாய்ந்து பொங்க, அதற்கு அஞ்சி வீழ்ந்த பகைவருடைய முடிகளைக் குதிரைகள் எற்றிப் பொன்னுரைகற் போன்ற குளம்பு களையுடையன வாயின; என்றும் பொருள் கூறலாம்; ஆனால், குதிரையின் மறம் விளங்குமாறின்று. இப் பொருட்கு, "யானைப் புரைசை" என்பதில் பகர ஒற்றை நீக்கி, யானையை எழுவாயாகக் கொண்டு, "பொங்கா" என்பதனைப் பொங்கவெனத் திரித்துப் பொங்குதலால், என்று விரித்துரைக்க.

முதற் பொருளுக்குப், "பொங்கா" என்பதனைப் பொங்கி என்று பொருள் கொள்க. செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

தம் முன் முன்னு வீழ்ந்த அரசர் முடிகள் உதைத்த மா என்று கூட்டுக. குதிரைகள் மிகப் பல: அவ்வவற்றின் முன்னே முன்னே வீழ்ந்த அரசர்களுடைய பொன் முடி களை இடறிய குதிரைகள் என்று கொள்க.

மாவின் குளம்பு பொன்னுரைகற் போன்ற என்று கூட்டுக. போன்ற - போன்றன.

முன்முன்னு - என்ற அடுக்கு பன்மை குறித்தது குதிரைகளும் பல மன்னரும் பலர், யானைகளும் பல என்பதை அது விளக்குகின்றது.

பாண்டியன்

யானை மறம்

வையகம் எல்லாம் எமது

கச. மருப்பூசி யாக மறங்கனல்வேல் மன்னர்
உருத்தகு மார்போலை யாகத்—திருத்தக்க
வையக மெல்லா மெமதென் றெழுதுமே
மொய்யிலைவேல் மாறன் களிறு.

(கு - பு.) மாறன் களிறு மாற்றுரைத் தாக்கிய முறை கூறல்.

(இ - ள்.) இலைபோன்ற வல்வேல் மாறனது யானை, தனது கொம்பினை எழுத்தாணியாகவும், வீரம் கனலுகின்ற வேல் மன்னரது, மாற்றுரால் அஞ்சத் தகுந்த மார்பினை ஓலையாகவும் கொண்டு; அம் மார்பின்கண் "செல்வம் நிலைத்த உலகமெல்லாம் எம் மன்னனுடையது" என்று எழுதாநிற்கும் எ - று.

(வி - ம்.) வீரங் கனல்கின்ற வேற்படை மன்னர் திரள் திரளாகக் கூடியிருக்கின்றனர்; அவர்கள் மிக்க வலியர்; அவர்களுடைய அகன்ற மார்பைப் பார்த்தால் உடனே பகைவர் உட்கிப் போய்விடுவர்; அவ்வளவு தகுதி வாய்ந்த மார்புகள்தான்; ஆனாலும் என்ன பயன்? இவையராயினும் பகையரசு கடியும் மாறனுடன் எதிர்க்கலாமா? இது தெரியாமல் வந்து எதிர்த்துவிட்டார்கள்! பார்த்தது பாண்டியனுடைய யானை; பாய்ந்தது; மார்பைத் துளைத்துவிட்டது; உருத்தகு மார்பு உருக்குலைகின்றது; அதைப் பார்க்கின்றான் ஒரு வீரன்; தோழனே! அதோ பார்; நம் மன்னனுடைய யானை என்ன செய்கின்றது? தெரிகின்றதா? வெற்றி ஓலை எழுதுகின்றதைக் காண்பாயாக! அதற்குக், கொம்புதான் எழுத்தாணி; பகைவருடைய மார்புதான் ஓலை; என்ன எழுதுகின்றது என்று நினைக்கின்றாய்? "செல்வம் நிலைத்திருக்கின்ற உலகமெல்லாம் எமது" என்றுதான் எழுதுகின்றது; இனி நாடெல்லாம் நம் மன்னனுக்குத் தானே என்கின்றான்.

மருப்பு - கொம்பு. ஊசி - எழுத்தாணி. மறம் - வீரம். உருத்தகு மார்பு - பகைவரால் அஞ்சத் தக்க மார்பு.

திருத்தக்க - செல்வம் நிலைத்த. உரு - உட்கு; அஃதாவது அச்சம். "உரு உட்காகும்" தொல் - உரியியல். மன்னன் என்றும் தான் என்றும் வேற்றுமை கருதாமையால், "எம தென் றெழுதும்" என்றார். மாற்றாரைக் கொல்லுதலை, 'எழுதும்' என மங்கலமாகக் குறித்தார்.

மருப்பூசியாக, மார்போலியாக என்பன உருவக அணி.

இத் திருத்தக்க நற்பாடலுடன் கருத்தொன்றிய திருத் தக்கதேவர்தும் பாடல் ஒன்று காண்க:

"ஆய்களிற் றசனி வேகம் அதன்மருப் பூசியாகச்
சிவகன் அகன்ற மார்பம் ஓலையாத் திசைகள் கேட்பக்
காய்பவன் கள்வரென்ன எழுதுவித் திடுவம்"

என்று கட்டியங்காரன், கந்துக்கடனிட்டம் கூறுவதாக அமைந் துளது.

மதில் திறக்குமால்

கரு. உருவத்தார்த் தென்னவ னேங்கெழில் வேழத்
திருகோடுஞ் செய்தொழில் எண்ணில் — ஒருகோடு
வேற்றர சகல முழுமே யொருகோடு
மாற்றூர் மதில்திறக்கு மால்.

(கு - பு.) தென்னன் சினக்களிற்றின் இருகோடுஞ் செய்தொழில் செப்பல்.

(இ - ள்.) பேய்களுக்கு அச்சத்தை உண்டாக்கும் வேப்பந்தாரினை அணிந்த பாண்டியனது, உயர்வும் அழகும் பொருந்திய யானையின் இரண்டு கொம்புகளும் செய்கின்ற தொழிலை எண்ணுங்கால், அவற்றுள் ஒரு கோடு மாற்றூரது மார்பமாகிய செய்யின்கண் உழாநிற்கும்; மற்றொரு கோடு மாற்றூரது மதிற் கதவைத் திறவா நிற்கும் என - றும்.

(வி - ம்.) பாண்டியனுடைய படை போய் மாற்றூரது மதிலை வளைத்துக் கொண்டது; பாண்டியனுடைய யானை யைப் பார்த்த உடனேயே பகைவருக்கு அச்சம் வளர்ந்து விட்டது; அவர்கள் மதிற் கதவை அடைத்துக்கொண்டு உள்ளேயே இருந்துவிட்டார்கள்; அதைப் பார்த்தது யானை

இந்த இரண்டு கொம்பு எதற்கு என்பதைக் காட்டிவிடுகின்றேன் என்று விரைந்துசென்றது; பகைவருடைய மதிலை ஒரு கோட்டால் இடித்துத் தகர்ந்து உள்ளே சென்றது; பகையரசனுடைய மார்பாகிய வயலில் மற்றொரு கோடாகிய கலப்பையால் உழுதது; உழுத உடனேயே வெற்றி விளைந்துவிட்டது. அதனைப் பார்க்கின்றன் படைத்தலைவன்; ஏடா! நம் மன்னனுடைய யானையின் இரண்டு கோடும் என்ன செய்யுமென்று தெரியுமா? ஒன்று தகர்கோலின் வேலை செய்யும்; மற்றொன்று கலப்பையின் வேலை செய்யும்; ஒன்றால் மதில் தகர்க்கும்; மற்றொன்றால் பகைவர் மார்பில் உழும்; என்று யானையின் வீரத்தை இயம்புகின்றான்.

'உருவத்தார்' என்பதில் அம் சாரியை வந்ததாகக் கொண்டு, உரு என்பதற்கு அச்சமென்னப் பொருளுரைத்துப் பேய்களுக்கு அச்சத்தைச் செய்கின்ற வேற்படைமாலை என்று கொள்க. மாற்றார்க்கு அச்சஞ் செய்யும் தும்பை மாலை என்றுமாம். உருவம் அழகுமாம்; எழில் - வளர்ச்சியோடு கூடிய அழகு; இங்கு எழில், உருவ வளர்ச்சியையும் அழகு வளர்ச்சியையும் குறிக்கின்றது. வேழம் - யானை.

மாற்றாருடைய மார்பமாகிய வயலில் கொம்பாகிய கலப்பையால் உழாநிற்கும் என்று கொள்க. மதிற் கதவினைக் கோடாகிய தகர்கோலால் தகர்வாநிற்கும் என்க. ஆல்-அசை. ஏகாரம் இசை நிறை. மதில் தகர்த்தலாவது மதிலின் கண்ணுள்ள கதவைத் தகர்த்தல்; மதிலைத் தகர்த்தலெனினுமாம்.

மலைத்தோற்றமும், கடல் முழக்கமும், புயல் மதமும்

**ககூ. தோற்ற மலைகட லோசை புயல்கடா அங்
காற்றி னிமிர்ந்த செலவிற்றாய்க்—கூற்றுங்
குறியெதிர்ப்பை கொள்ளுந் தகைமைத்தே யெங்கோன்
எறிகதிர்வேல் மாறன் களிறு.**

(கு - பு.) மாறன் களிற்றின் மறத்தகை செப்பல்.

(இ - ள்.) ஒளி வீசுகிற வேல்மாறனுடைய எம் மன்னனுடைய களிறு தோற்றத்தால் மலையினையும், ஓசையினால் கடலினையும், மதநீர் பொழிதலினால் முகிலினையும் ஒத்த

தாய்க், காற்றினும் விரைந்த செலவினையுடையதாய்க், கொல்லுந் தொழிலில் கூற்றுவனுந் தன்பால் கடன் வாங்குந் தகுதியையுடையது எ - று.

(வி - ம்.) ஏடா! எம் மன்னனுடைய யானையின் மறத்தை நீ நன்கு அறிவையோ? அறியாயேல்! யான் கூறுகின்றேன் கேள்: அதனுடைய தோற்றம் மலையைப் போன்றது; அதன் ஓசை கடல் முழக்கத்தை ஒத்தது; மேகம் மழை பொழிதல் போல மதநீர் பொழிந்துகொண்டே செல்லும்; கடுங்காற்றினும் விரைந்து நிமிர்ந்து செல்லும்; பகைவரைக் கொல்லுதலில் எமனுங்கூட அதனிடம் கடன் வாங்கவேண்டியதுதான்; அவ்வளவு தகுதியையுடையது என்று இயம்புகின்றன்.

புயல் - மேகம். கடாம் - மதநீர். இப்பாட்டு உவமையணி; குறி எதிர்ப்பாவது, அளவு குறித்து முன்னர் வாங்கிப் பின்னர் அவ்வாறே எதிர் கொடுப்பது. யானையினுடைய தோற்றத்தையும், முழக்கத்தையும், மதமுங் கதமுஞ் சிறந்த தன்மையையும், விரைந்து நிமிர்ந்த செலவினையும், அதன் மறச்செயலையும் இப்பாடல் நன்கு விளக்குகின்றது.

மன்னர் குடரால் மறைக்கும்

கஎ. அடுமதில் பாய வழிந்தன கோட்டைப்
பிடிமுன் பழகழிதல் நாணி—முடியுடை
மன்னர் குடரால்* மறைக்குமே செங்கனல்வேற்
றென்னவர் கோமான் களிறு.

(கு - பு.) குடர் பறிக்கும் யானையின் கொடுமறங் கூறல்.

(இ - ள்.) செம்மை கனல்கின்ற வேற்கைத் தென்னவர் கோமானது யானை, தன்னை அடுத்தவரைப் பொறி முதலியவற்றால் அடுகின்ற மதிலின்கட் பாய்தலினால் ஒடிந்தனவாகிய தன் கொம்புகளை, பிடியானையின் முன்னர் அழகு அழிந்து தோன்றுவதற்கு நாணி, பொன் முடியணிந்த மன்னருடைய குடர்களால் மறையாநிற்கும் எ - று.

---

* (பா - ம்) குடையால்.

(வி - ம்.) போர் தொடங்கிற்று; தென்னனுடைய சினக்களிறு நிமிர்ந்து சென்று பகைவர் மதிலை இடிக்கத் தொடங்கிவிட்டது; மதிலின்கண் எவ்வளவோ பொறிகள் இருந்தும், அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் இடித்து விட்டது; மதிலும் உடைந்தது; கொம்புகளும் ஒடிந்துவிட்டன; விரைந்து நிமிர்ந்து சினந்து பாய்ந்து பகைமன்னரைக் கீழே தள்ளிக் குத்திக் கிழிக்கின்றது; பகைமன்னர் குடல் அதன் ஒடிந்த கொம்பில் உறைபோல மாட்டிக்கொண்டது; பகைவரும் தொலைந்தனர்; அதனைப் பார்க்கின்றன் வீரன்; ஏடா போர் முடிந்துவிட்டது; நம் மன்னனுடைய யானையே போரை முடித்துவிட்டது. இனி நாம் நம் வீட்டிற்குப்போய்க் காதலியைப் பார்க்கலாம்; அதோ! அந்த யானையின் செயலைப் பார்; மதிலை இடித்ததனால் ஒடிந்த கொம்பைப் பிடியானை, பார்த்து இரிவாக நினைக்குமென்று நாணிப் பகையரசனுடைய குடரைக் கிழித்து அதனால் கொம்பை மறைக்கின்றது என்கின்றன்.

அடுமதில் - பொறி முதலியவற்றை உடைமையால் தனக்கு அணுக்கராகியவரை அடுகின்ற (கொல்லுகின்ற) மதில். யானை தான் அழிக்கத் தொடங்கிய மதில் ஏனலுமாம். குடையால் மறைக்கும் என்ற பாடத்திற்கு மாற்று வேந்தருடைய குடையால் மறைக்கும் என்று கொள்க; குடரால் மறைக்கும் என்றமையால் மாற்று வேந்தரது வயிற்றைக் கிழித்த யானை மறம் இனிது புலனாகும்.

பகை மன்னன் குடலைக் குத்தியிழுக்கின்ற யானையை இவ்வாறு கூறுதல் தற்குறிப்பேற்ற அணி.

மதிற்பொறி முதலியன :—

" .....வகைவிற் பொறியும்
கருவிர லூகமுங் கல்லுமிழ் கவணும்
பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியும்
காய்பொன் னுலையும் கல்லிடு கூடையும்
தூண்டிலுந் தொடக்கும் ஆண்டலை யடுப்பும்
கவையுங் கழுவும் புதையும் புழையும்
ஐயவித் துலாமுங் கைபெய சூரியும்
சென்றெறி சிரலும் பன்றியும் பணையும் "

முதலியன. (சிலப். அடைக்கலக்காதை, உ0எ—உகச)

பாண்டியன்

களம்

புருவ மூரிவு

கஅ. வெருவரு வெஞ்சமத்து வேலிலங்க வீழ்ந்தார்
புருவ மூரிவுகண் டஞ்சி—நரிவெரீஇச் [வன்
சேட்கணித்தாய்* நின்றழைக்குஞ் செம்மற்றே தென்ன
வாட்கணித்தாய் வீழ்ந்தார் களம்.

(கு - பு.) தென்னன் வாளுக்கு அணித்தாய் வீழ்ந்தார்தம் களத்தின்தன்மை கூறுதல்.

(இ - ள்.) பாண்டியனது வாளுக்கு அணுக்கராய் வெட்டுண்டு வீழ்ந்தார் கிடக்கின்ற போர்க்களம், மாற்றுரை வெருவச் செய்கின்ற அரிய வெம்போரில், வேற்படையாளரோடு எதிர்த்து, அவர்தம் வேலால் தம்புகழ் நிலவுலகத்தில் நின்றிலங்க வீழ்ந்தவர்தம் புருவத்தின் வளர்வீக்கு நரி கண்டு அஞ்சி நடுங்கிச் சேண் இடத்ததாய் நின்று தன்னிலும் சேய்மைக்கண் நிற்கின்ற நரியைத் துணைக்குக் கூவா நிற்குந் தன்மையை உடையது எ - று.

(வி - ம்.) போரில் வீரர் வேலாழ் குத்துண்டு வீழ்ந்து கிடக்கின்றனர்; அவர்கள் மிக்க திறல்வாய்ந்தவர்; பாண்டியனுடைய படைவீரர் அத்தகைய வீரரைத்தானே கொல்வர்! வீழ்ந்த வீரர்களுடைய புருவமூரிவும் செங்கண்ணும் பார்த்தவர்களுக்கு அச்சம் விளைக்கும்படியாக இருக்கின்றன; போர்க்களத்தில் ஊனுண்ண நரிக்கூட்டங்கள் வருகின்றன; இவ்வீரர்கள் இன்னும் உயிர் துறக்கவில்லை; பக்கத்திலே போனால் நம்மைக் குத்தி விடுவார்கள் என்று நினைத்து எல்லா நரிகளும் தூரத்திலேயே நிற்கின்றன; ஒரு நரி நெருங்க எண்ணித் தன்னெடு வேறொரு நரியைத் துணைக்கு அழைக்கின்றது; துணிவின்மையும் அஞ்சுதலுமாகிய இரண்டு செயலாலும் வீரர் பக்கத்திற்குப் போகமுடியவில்லை.

---

* (பா - ம்.) சேய்த்தணித்தாய்.

சேய்த்தணித்தாய் நின்றழைக்கும் என்ற பாடத்திற்கு, வீரனுடைய பக்கத்திற் போய்விட்டது ஒரு நரி; ஆனல் இன்னும் அச்சம் நீங்கவில்லே, இன்னெரு நரி துணேக்கு வந்தால் இன்னும் பக்கத்திற்குப் போகலாம் என்று நினேக் கின்றது; அதற்காகத் தொலேவில் நிற்கின்ற நரியைத் தன் னெடு வரும்படி கூவுகின்றது, ஆனல் தொலேவில் நிற்கும் நரி "போகாதேவா", என்று வீரன் பக்கத்திற்குப் போய் நிற்கின்ற நரியைக் கூவுகின்றது, இப்படியாக ஒன்றை யொன்று மாறி மாறிக் கூவுகின்றது என்று பொருள் கொள்க.

களத்தில் இறந்தவர்தம் ஊனுண்ண வந்த நரி, அவர் வீழும் முன் உட்கொண்ட உள்ளக் கிளர்ச்சியாலும், பெருங திறலினலும் விழுந்த பின்னரும் வாய்மடித்து இரண்டு கை யும் முறுக்கித் தம் வயிரச் செங்கண் தீயுக விழித்துப் புரு வத்தை நெரித்துக் கிடத்தலேக் கண்டு அவர்க்கு அண்மையி லும் சேய்மையிலும் நின்று ஒன்றை ஒன்று அச்சத்தால் துணேக்கு அழைக்கும் என்க.

அஞ்சி - பயந்து. வெரீஇ - நடுங்கி. சேட்கணித்தாய் - சேண் இடத்ததாய். சேண் - தூரம். கண் - இடம். கணித்து - குறிப்பு வினேமுற்று. வாட்கணித்தாய் - வாளுக்கு அணித்து ஆய்; வாளிடத்து ஆய் எனலுமாம். சேய்த்தணித்தாய் - சேய்மையிடத்ததும் அண்மையிடத்ததுமாய்.

இப்பாட்டில், அச்சம் என்னும் மெய்ப்பாடு விளங்குதல் காண்க.

புல்லார் பிடி புலம்பல்

கக. ஏனைய பெண்டி ரெரிமூழ்கக் கண்டுதன் [லாம்*
தானையாழ் கண்புதைத்தான் தார்வழுதி—யானையெ
புல்லார் பிடிபுலம்பத் தாங்கண் புதைத்தவே†
பல்யானே யட்ட களத்து‡

(கு - பு) மாறன் பகையட்ட களத்தின் நிலேமைகூறல்.

(பா - ம்.) * யானையும். † தான் கண் புதைத்தது.
‡ பல்வாயார் பட்டகளத்து.

(இ - ள்.) பல யானைகள் கொல்லப்பட்டு வீழ்ந்து கிடக்கின்ற களத்தின்கண், மாற்றரசர்தம் மகளிர் "கூம் பெருந்தோட் கணவர் இறந்த பின்னர், யாம் உயிர் வாழேம்" என்று தீக்குளிப்ப, வாகை வனமாலை சூடிய பாண்டியன் அதனைக் கண்டு பொருளனுப் ஆடையால் தன் கண்களைப் புதைத்தான்; அவன் யானைகளும், மாற்று வேந்தரது களிறுகள் இறப்ப, அதனால் அவற்றின் காதற் பிடிகள் புன்மை நிறைந்து புலம்ப அதனைக் கண்டு பொருமல் தம் கண்களைப் புதையாகின்றன என - று.

(வி - ம்.) தென்னன் படை பகை மன்னர் படைகளைத் தாக்கின; அதனால் யானைக் கூட்டங்கள் பல இறந்தன; எல்லாம் களிற்று யானைகள்; பகை மன்னர் மிகப் பலர்; அவர்களும் வீழ்ந்து கிடக்கின்றனர்; பகைவருடைய மகளிர் வந்து பார்க்கின்றனர்; ஓஓ வென்று அலறி "இனி வாழேம்" என்று உரைத்துத் தீயில் பாய்ந்து மாய்கின்றார். பகைவருடைய களிறுகள் இறந்ததால் பிடிகள் துணை யிழந்து புற்கென்று பொலி விழந்து புலம்புகின்றன; பாண்டியன் யானைமேல் ஏறிக் களங் காணச் சென்றான்; சென்று பார்க்கும்பொழுது பகைவருடைய மகளிர் தீயில் மூழ்குவதைக் கண்டான்; அவனுடைய வலிய உள் ளம் உருகிவிட்டது; அத் துன்பத்தைக் கண்ணுற் பார்க்க முடியவில்லை; அதனால் மேலாடையின் முன்றானையினால் தன் கண்களை மூடிக்கொண்டான்; பகைவருடைய பிடி யானைகளின் துன்பம் நிறைந்த தோற்றத்தைப் பார்க்கப் பொறாத பாண்டியனுடைய களிறுகளும் தம் கண்களை மூடிக்கொண்டன; போர்க்களத்தில் அவ்வளவு அவலம் நிறைந்திருந்தது.

"யானையும் ..... தான் கண் புதைத்தது" என்ற பாடத்திற்கு அரசனுடைய பட்டத்து யானையும் தன் கண் களைப் புதைத்தது என்று கொள்க.

பல்வாயார் பட்ட களத்து என்ற பாட்டிற்குப் பல தேயத்திலிருந்து வந்தவர் பட்ட களத்து என்க. அல்லது பலவகையினராய்ப் பட்ட எனலும் ஆம்.

புல்லார்பிடி - புற்கென்ற தன்மை நிறைந்த பிடிகள். அத் தோற்றத்தைப் பார்க்கப் பொறாமல் களிறு கண்ணை

மூடிக்கொண்டது; புல்லார் பிடி என்பதற்குப் பகைவருடைய பிடி யாகிய கள் எனலுமாம்.

பாண்டியன்

பகைப்புலம் பழித்தல்

படுபேய்க்குப் பாட்டு

உ0. வாகை வனமாலை சூடி யரசுறையும்
ஓகை யுயர்மாடத் துள்ளிருந்து—கூகைக்
படுபேய்க்குப் பாட்டயரும் பண்பிற்றே தென்னன்
விடுமாற்றங் கொள்ளாதார் நாடு.

(கு - பு.) வழுதியின் மாற்றங் கொள்ளா மன்னருடைய நாட்டின் இயல்பு கூறுதல்.

(இ - ள்.) பாண்டியன் சொல்லிவிட்ட சொல்லை ஏற்றுக் கொள்ளாத பகைவருடைய நாடு, வாகைப் பூவாற் கட்டப்பட்ட அழகிய வெற்றி மாலையை அணிந்து முன்பு அரசர் தங்கியிருந்த மகிழ்வு தரும் உயர்ந்த மேன் மாடத்தில், பின்பு கூகையிருந்து, கீழே படுத்திருக்கின்ற பேய்களுக்குத் தாலாட்டுப் பாட்டிசைக்கும் பண்பினையுடையதாகி விட்டது எ - று.

(க - து.) தென்னவன், தன் சொல்லிற்கு வணங்கா தாரை வில்லினால் அழிப்ப, அப்பகைவர் வீற்றிருந்த அரண்மனை மாடங்களில் பேய் உறங்கக் கூகை பாராட்டும் இயல்புடையதாயிற்று எ - று.

(வி - ம்.) வழுதியின் பகைவர் நாட்டில் கூகையும் பேயும் ஓகையுடன் வாழுமேயன்றி, வாகை வனமாலை சூடி அரசு, ஓகையுடன் வாழாது என்கின்றார்.

ஒரு காலத்தில் மாற்றரை வென்று வாகைமாலை சூடி ஓகையுடன் இருந்த அரசுதான் இவ்வாறுயிற்று என்கின்றார்.

வாகை வனமாலை - வாகைப் பூவடிவாகப் பொன்னால் செய்து கொள்ளப்பட்ட அழகிய மாலை; வாகைப் பூவுமாம்;

இது வெற்றிமாலை. ஓகை - மகிழ்ச்சி. விடுமாற்றம் – அரசன் தூதனிடம் சொல்லிவிட்ட சொல் ;

"விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்க ணவன்"

என்பது திருக்குறள்.

திறை முறையினுய்த்தல்

உக. பறைநிறை கொல்யானைப் பஞ்சவர்க்குப் பாங்காய்த் திறைமுறையி னுய்யாதார் தேயம்—முறைமுறையின் ஆன்போ யரிவையர்போ யாடவர்போ யாயீன்ற சன்பே யுறையு மிடம்.

(கு - பு.) பாண்டியர்க்குந் திறை கொடா மன்னவர்தம் நாட்டின் பண்பு பகர்தல்.

(இ - ள்.) ஊரிலுள்ளவர் கேட்கும்படியாக, "எல்லோரும் விலகுங்கள் ! விலகுங்கள் !! மன்னனுடைய மதயானைகள் வருகின்றன" என்று கூறி, முழக்குகின்ற பறை அடிக்கின்றவர்களை வீதிதோறும் முதலிற் செல்ல விடுத்துப், பின்பு வரவிடுகின்ற கொல்யானைப் படைகளையுடைய பாண்டியர்க்கு அணுக்கராகி அவர்களுக்குத் தாம் கொடுக்கவேண்டிய திறைப் பொருள்களை முறைப்படி செலுத்தாதவருடைய நாடு, படிப்படியே, பாண்டியனுடைய படைகளாற் பசு நிரைகள் கவரப்பட்டுப் போகப், பின்பு, போர் நிகழுங் காலத்தில் பெண்கள் அஞ்சித் தாமே அகல, புதல்வர்ப் பெறுதவரும், பிணியாளரும், மூதியோரும், போருக்கு அஞ்சியவருமாகிய ஆடவர் நீங்கப், பின்பு, தாய்ப் பேய்கள் பெற்ற இளம் பேய்கள் தங்கும் இடமாம் எ - று.

(க - து.) பாண்டியர்க்குத் திறை கொடாப் பகைஞர் தேயம், அவரால் அழிக்கப்பட்டு இளம்பேய் உறையும் இடமாம் எ - று.

(வி - ம்.) மன்னனுடைய கொல் யானைகளை நீர்த் துறைக்குச் செல்ல விடும்பொழுது, முன்னர் அதன் வருகையைப் பறையறைந்து அறிவித்தல் வழக்கம். அவ்வாறு வீதிதோறும் பலர் பறையறைந்து அறிவித்தலால், "பறை

நிறைகொல் யானை'' என்றார். ''நிறையைக் கொன்ற யானை'' எனலும் ஆம்.

''நிறையழி கொல்யானை நீக்குவிட் டாங்குப்
பறையறைந் தல்லது செல்லற்க என்னு
இறையே தவறுடை யான்''

என்பது, குறிஞ்சிகலி உ0.

நிறை முறையின் உய்த்தலாவது, தம் முன்னோரும் தாமும் இதற்கு முன்பு செலுத்தி வந்தது போலத் தாமும் செலுத்துதல்.

போர் செய்யத் தொடங்குவோர் பகைவர் தேயத்தி லுள்ள ஆனிரையை முதலிற் கவர்ந்துகொண்டு வருதல் வழக்கம். பின்னர், பெண்கள் தமக்கு அரணை வேற் றிடத்தை நாடிச் செல்லுதலும் வழக்கம். அதன் பின்பு, ஆடவரில் மக்கட் பேறில்லாரும்; மூதியரும் பிணியாளரும், போருக்கு அஞ்சியவரும் நீங்குதல் மரபு. இதனை, ''முறை முறையின், ஆன்போய், அரிவையர்போய், ஆடவர்போய்'' என்பதனால் அறிவிததார். அவையாறு ஊரிலிருந்து பசுக் களும் மக்களும் அகன்ற பின்னர் அவ்வூர் இளம பேய்க ளுக்கு இருப்பிடமாம் எனபதை ''சன்பேய் உறையும் இடம்'' என்று கூறினர்.

இளம் பேய்களை சுமற தாய்ப் பேய்களும, ஆண் பேய் களும் போர்க்களத்தில் இறந்தொழிந்தாரதம் ஊனை உண ணச் சென்றனவாகலின் ''சன்பே யுறையுமிடம்'' என்றார். ''ஆயின்றே யின்பே யுறையுமிடம்'' என்பதற்கு, தாயின்றி இளம்பேய்கள் தங்கும் இடம் என்று கொள்க.

''ஆயின்றே'' என்பதனை, ''ஓதலிற் சிறந்தன்று'' என்பதுபோலக் கொண்டு, ''சன்பேய் உறையும் இடம் ஆயினதே'' என்றும் கொள்ளலாம்.

''ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புலம் வாழ்நர்க்கு அருங்கட னிறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெருஅ தீரும்
எம்மம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மின்'' (புறம். கூ)

என்று தமிழ்வீரர் கூறி, அவர்களை விலக்கி, எதிர்த்த வீர ருடன் போர்செய்தல் வழக்கம். செய்து என்னும் வாய்

பாட்டு வினையெச்சங்கள் செயவென்னும் வாய்பாட்டு வினையெச்சங்களாகத் திரிக்கப்பட்டன.

பஞ்சவர் – பாண்டியர். பாங்காய் - அணுக்கராய். "ஆயின்ற ஈன்போய் உறையும் இடம்" என்ற பாடத்திற்குத் தாய் பெற்ற குழந்தைகளும் போகப் பின்பு பகைவர் தேயம் இடிந்து உறையும் இடமாகும் என்று கொள்க.

பாண்டியன்

வென்றி

களிறணையாக் கண்படுத்தல்

உஉ. **கொடித்தலைத்தார்த் தென்னவன் தோற்றான்போல்**
மடித்தவாய் சுட்டிய கையாற்–பிடித்தவேற் [நின்றான்
கண்ணேரா வோச்சிக் களிறணையாக் கண்படுத்த
மண்ணேரா மன்னரைக் கண்டு.

(கூ-பு.) தென்னன் களங்கண்ட காட்சி கூறல்.

(இ - ள்.) மடித்த வாயினையும், மாற்றாரைச் சுட்டிய கையாற் பிடித்த வேலினை எதிர்ப்படுபவர் கண்ணுக்கு நேராகப் பாய்ந்து குத்தி விடுவதுபோல நீட்டிக்கொண்டு, யானையை அமளியாகக் கொண்டு அதன்மேல் சாய்ந்து மல்லாந்து கிடக்கின்ற மண்கொடாத மாற்றரசரைக் கண்டு, வெற்றிக் கொடியின்கண் வாகைவனமாலை சூடிய தென்னவன் தான் வென்றோனேயாயினும் தோற்றவனைப் போல் நின்றான் எ - று.

(வி-ம்.) தென்னன் ஆணைக்கு அடங்கா மன்னர் சிலர் எதிர்த்தனர்; போர் கடுகி மூடுகுகின்றது; பகைவர், முரிந்த புருவமும் சிவந்த கண்ணும் பிடித்த வேலும் கடித்த எயிறும் மடித்த உதடும் சுருட்டிய நுதலும் உடையராய் எதிர்த்து வேலைக் கண்ணுக்கு நேராக எறிவதற்கு ஓச்சுகின்றகிலையில்; பாண்டியனுடைய படைஞர் வேல்கொண்டு வீசிவிட்டார்கள்; அவ் வேற்படைகள் ஏறுண்ட பகைவர், பக்கத்தில்

வெட்டுண்டு வீழ்ந்து கிடக்கும் யானைகளின்மேல் சாய்ந்து விட்டார்கள்; போர் முடிந்தது; தென்னன் களத்தைப் பார்க்கின்றான்; ஒருவகையில் மனம் இளகிவிட்டது; என்ன வெற்றி என்று கருதினான். பகைமன்னருடைய வீரத்தையும், சாய்ந்தபின்னரும் தோன்றும் கிளர்ச்சியையும், வேலைக் கண்ணுக்கு நேரே நீட்டிக்கொண்டு கிடப்பதையும் கண்டு வியப்படைந்து வாடிய முகமும் பீடழி புலனும் உடையனாய்ப் பேசாமல் திகைத்து வென்றும் வென்றிலேன் என்பது போல நின்றுவிட்டான்.

"தேற்றான்போல்" என்ற பாடத்திற்குத் தெளியாதவன் போல் என்று பொருள் கொள்க.

அழிகுநர் புறக்கொடை அயில்வா ளோச்சாக் கழிபேராண்மை மிக்க தென்னன் படைஞர் இத்தகைய பெரு வீரரோடு அன்றி மற்றையரோடு போர் செய்யார் என்பது உணரக் கிடந்தது; மாற்றாரை வெல்லுதலினும் இத்தகைய வீரரைப்போல் களத்தில் மாய்தல் சிறந்ததாகலின், பாண்டியன் இவரை வென்றும் தோற்றவனைப் பொல நின்றான்; இத்தகைய பெருவீரர் இறந்தும் இறவாதவர் ஆதலின், இறந்த என்னாது, "கண்படுத்த" என்றார். மாற்றாரது மறம் கூறவே அவரை வென்றோன் வீரமும் விளங்குதல் காண்க.

"வாய்மடித் திரண்டு கையும் முறுக்கித்தன் வயிரச் செங்கண்
தீயுகக் கனகக் குன்றில் திரண்டதோள் மழையைத் தீண்ட
ஆயிர கோடி யானைப் பெரும்பிணத்து அமளி மேலான்
காய்சினத் தனுமன் என்னும் கடல்கடந் தானைக் கண்டான்"

(கம்பர் - யுத் - மருத் - கo.)

என்பதும் உணர்க.

முன்னிறீஇப் பின்னிற்றல்

உ௩. தொழில்தேற்றாப் பாலகனை முன்னிறீஇப் பின்னின்
றழலிலைவேல் காய்த்தினார் பெண்டிர்—கழலடைந்து
மண்ணிரத்த லென்ப வயங்குதார் மாமாறன்
கண்ணிரத்தந் தீர்க்கு மருந்து.

(கு - பு.) மாறனது வெகுளியைத் தீர்க்கு மருந்து கூறல்.

(இ - ள்.) "நண்ப! விளங்குகின்ற வெற்றிமாலை யணிந்த பெருமை பொருந்திய பாண்டியனுடைய வெகுளியைத் தீர்க்கும் மருந்து, அவனுடைய இலவடிவமைந்த அழல்போல ஒளிர்கின்ற வேலுக்குச் சீற்றத்தை உண்டாக்கின மாற்றரசருடைய மனைவியர், ஒரு தொழிலும் தெளியாத தம் புதல்வரை அவன்முன் நிறுத்திப் பின் நின்று அவனுடைய திருவடியை வணங்கித் தம் ஆட்சிக்கு உட்பட்ட நீண்ணிலகத்தை இரந்து வேண்டிக்கொள்ளுதல் தான்" என்று பெரியோர்கள் சொல்லுகின்றார்கள்; அதுவன்றி வேறு மருந்து இல்லை என்று தென்னனுடைய பகைஞர் சார்பிலுள்ளா னொருவனிடம் மற்றொருவன் கூறுகின்றான்.

சிலர் மானனுடைய வீரத்தை அறியாமல் எதிர்த்துவிட்டனர்; பின்பு போர்செய்து வெற்றிபெற முடியாமல் நடுங்கிக் கொண்டிருக்கின்றனர். இந்த நிலையை அறிந்த ஒருவன் கூறுகின்றான்; மானனுக்கு இன்னும் சீற்றம் தணியவில்லை அவன் கண்ணைப் பார்த்தாலே அச்சமாக இருக்கின்றது; அவன் கண்ணிலுள்ள சிவப்பைத் தீர்க்கவேண்டுமானால், பகைவருடைய மனைவியர், தம் மக்களை அவன் முன்னே நிறுத்திக் காலில் விழுந்து வணங்கி மண்ணிரத்தல் செய்ய வேண்டும்; இல்லாவிட்டால் இம்மண்ணுலகில் வாழ்வில்லை; விண்ணுலகத்திற்குத்தான் செல்லவேண்டும் என்கின்றனர். மண்ணிரத்தல்—திறையை முறைப்படி செலுத்துகின்றோம் எங்கள் நாட்டைத் தந்து இச் சிறுவரைக் காத்துக்கொள் என்று இரந்து கேட்டல்; "மண்ணுலக வாழ்வு வேண்டும்; எங்களை விண்ணுலகுக்கு விரட்டிவிடாதே" என்று இரந்து கேட்பதாகக் கொள்ளலுமாம்.

கண்ணிரத்தம்:—கண்ணிலுள்ள சிவப்பு; அது சீற்றத்தைக் குறிக்கும், "கற்பும் சிவப்பும் வெகுளிப் பொருள" என்பது தொல்காப்பியம், உரியியல்.

பாலகன்:—பாலகர் என்று கொள்க. "ஏவல் இளையர் தாய் வயிறு கறிப்ப" என்பதுபோலக் கொள்க.

"பெண்டிர் - பாலகனை" என்பது ஒருமைப் பன்மை மயக்கம்.

"பெண்டிர்—கழலடைந்து, மண்ணீத்த லென்ப வயங்குதார் மாமாறன், கண்ணீத்தந் தீர்க்கும் மருந்து" என்ற பாட-

வேற்றுமையும் உண்டு. இதற்கு, 'அழலிலைவேல் காய்த்தினர் பெண்டீர்! (நீவிர்) வயங்குதார் மாமாறனுடைய கழலடைந்து, தொழில் தேற்றுத நும் மக்களை அவன் முன்னே நிறுத்தி நீவிர் பின்னே நின்று மண்நீத்தல் மாறனுடைய கண்ணீந்தம் தீர்க்கும் மருந்து என்ப' என்று பொருள் கொள்க. மண்நீத்தல்-நும்முடைய நாட்டை விட்டுவிடுதல். கண்நீத்தம்-சிற்றி வெள்ளம். நீத்தம்-வெள்ளம், மிகுதி.

பாண்டியன்

கைக்கிளை

அளியான் அளிப்பான்

உ-ம். களியானைத் தென்னன் கனவின்வந் தென்னை
யளியா னளிப்பானே போன்றான்—தெளியாதே
செங்காந்தண் மென்விரலாற் சேக்கை தடவந்தேன்
என்காண்பே னென்னலால் யான்.

(கு - பு.) நலிவி தோழி கேட்பச் சொல்லியது. கனவுநிலை யுரைத்தலினும் ஆம்.

(இ - ள்.) "தோழீ! மதத்த யானைப் படைகளையுடைய பாண்டியன் என் கனவில் வந்து, எனக்குத் தன் அருளாற் காதலின்பம் தருபவன்போன்று பொய்த்தோற்றம் செய்தான். யான் அப்பொய்த்தன்மையைத் தெளியாதே உண்மையாகக் கருதி, அவன் என் படுக்கையில் பக்கத்தில் படுத்திருப்பதாகக்கொண்டு, செங்காந்தள் அரும்பு போன்ற என் மெல்லிய விரலால் படுக்கையைத் தடவிப் பார்த்தேன். எதனைக் காண்பேன் யான். என் தனிமையை யன்றி வேறு ஒன்றையும் காணவில்லை; நல்வினை யொன்றில்லாத யான் கனவும் இழந்து தனியேனாய் வருந்தலானேன்" என்று கூறுகின்றாள்.

தென்னன்பால் மனம் போக்கிய தெரிவை தோழியிடம் சொல்கின்றாள்: தோழீ! வழுதி என் கனவில் வந்து, அன்பால் எனக்குக் காதலின்பம் தருபவன் போலப் பொய்த்தன்மை பாராட்டினன். யானும் அதனைக் கனவென்றும்

பொய்மை யென்றும் கருதாதே உண்மையாகவே கருதிப் பக்கத்தில் கைகளால் தடவிப்பார்த்தேன்; அவனைக் காண வில்லை என் தனிமைத் துயரும் ஒழிந்தபாடில்லை. என் நிலைமை இவ்வாறு இருக்கின்றது. இதற்கு யாது செய்வேம்! கூறு என்கின்றாள். கனவில் தான் ஏமாற்றம் அடைந்த தன்மையை உள்ளம் உருகும் படியாகத் தோழியினிடம் கூறியதாக அமைந்த இப்பாடல் மிகவும் உணர்ச்சி வாய்ந்த தாக இருக்கின்றது.

களியானை - மதத்தயானை. சேக்கை - படுக்கை. செங் காந்தள் அரும்பு விரலுக்கு உவமையாகக் கூறப்படும்.

கைக்கிளை :—ஒருமருங்கு பற்றிய கேண்மை; அஃதாவது சிற்றுறவு. கை-சிறுமை; கிளை-உறவு. அன்பினைந்திணையில் வரும் கைக்கிளை தலைவனுடைய இயற்பெயர் பொருந்தா மல் வரும். அது, காதலி தன்னை விரும்புமுன் காதலன் அவளை விரும்பி நிற்கும் நிலை; பின்பு இருவரும் ஒத்து மணந்து இல்லறம் நிகழ்த்துவர். ஒத்த அன்புள்ளவரிடத் திலும் ஒருவரை யொருவர் ஒரே காலத்தில் விரும்புதல் அரிதாகலின், அவ்வாறு இருவர் மனமும் ஒன்றுபடுதற்கு இடையில் உள்ள ஒருதலை விருப்பத்தையே அகத்திணைக் கைக்கிளை என்பர்.

ஈண்டுக் கூறப்படுவது, இயற்பெயர் சார்த்திக் கூறப் படும் புறத்திணைக் கைக்கிளை; இஃதும் ஆண்பாற் கைக் கிளை, பெண்பாற் கைக்கிளை என இருவகைப்படும்; இவற் றுள் ஈங்கு வருவனவெல்லாம், புறத்திணைச் சார்பான பெண்பாற் கைக்கிளையே என வுணர்க.

மகளிர், தம்மை விரும்பினும் தாம் அவரை விரும்பாச் செம்மையுடையவர் தண்டமிழ் மூவேந்தர் என்பதைப் புனைந்துரை வகையில் புகழ்வது ஆசிரியர் கருத்தாதல் உணர்க.

நீர்நிலை நின்ற தவம்

உரு. கார்நறு நீலங் கடிக்கயத்து வைகலும்
நீர்நிலை நின்ற தவங்கொலோ—கூர்நுனைவேல்
வண்டிருக்க நக்கதார் வாமான் வழுதியாற்
கொண்டிருக்கப் பெற்ற குணம்.

(கு - பு.) தலைவி நெஞ்சொடு சொல்லியது.

(இ - ள்.) "நெஞ்சமே! கூறிய நுனையையுடைய வேற் படையினையும், வாசனை மிகுதியாலே அரும்புப் பருவத் திலேயே வண்டுகள் வந்து மொய்ப்ப அதனால் விரிந்த மலர் களாற் கட்டிய மாலையையும், தாவிப்பாயும் குதிரையையும் உடைய பாண்டியன் அணிந்துகொண் டிருக்கும்படியாகக் குவளை மலர் நல்ல குணம் பெற்றிருக்கின்றதே; அக்குணம் எதனால் அதற்குக் கிடைத்திருக்கலாம்! அந்தக் கருமையும் நறுமணமும் வாய்ந்த நீலமென்ற பெயருள்ள குவளைப் பூ, நறுமணமுள்ள தடாகத்திலே நீரில் ஒற்றைத்தாளினால் நிலை யாக நின்று தவஞ்செய்கின்றதே; அந்தத் தவத்தினாலே தான் அதற்கு அந்தச் சிறந்த குணம் கிடைத்ததோ? ஆம் அதனால்தான் கிடைத்திருக்கிறது" என்று தலைவி மனத் தோடு கூறுகின்றாள்.

ஒரு நங்கை வழுதியின்பால் மிக்க விருப்பங்கொண் டாள். அவன் உலாவரும்பொழுது பார்க்கின்றாள். அவன் மார்பில் வேறு நறுமணமுள்ள மாலைகளும் கிடக்கின்றன. அவற்றோடு குவளை மலர் மாலைகளையும் அணிந்திருக்கின் றான். கையில் கூரியவேல் பிடித்திருக்கின்றான். தாவிப் பாயும் குதிரையின்மேல் உயர்ந்த தோற்றத்துடன் விளங்கு கின்றான். தலைவி படிப்படியாக நினைக்கின்றாள். இந்தக் குவளை மலருங்கூடப் பாண்டியன் மார்பினைத் தன் வயப் படுத்திக்கொண் டிருக்கின்றதே? அப்படி உயர்ந்த குணம் அதனிடத்தில் என்ன இருக்கின்றது? அந்தக் குணத்தைத் தான் அஃது எவ்வாறு பெற்றது? ஆம் ஆம்; இப்பொழுது விளங்கிவிட்டது. அந்த நீர்த் தடாகத்தில் குவளைப் பூ நாடோறும் ஒற்றைக் காலிலே நின்று தவம் செய்த தல்லவா? அந்தத் தவத்தினாலேதான் இவ்வளவு அருமை யான குணம் பெற்றிருக்கின்றது. நாமும் இவ்வாறு ஒரு தவம் செய்திருந்தால் வழுதியை வயப்படுத்திக் கொள்ளும் படியான குணம் பெற்றிருக்கலாமே! நல்வினையில்லாத யான் அது செய்யாதவாறு இப்பொழுது ஏங்கும்படியா யிற்றே! என்று தலைவி நினைக்கின்றாள்.

கார்நறு நீலம்-கருமையும் நறுமணமும் உள்ள குவளைப் பூ. கார் என்பதற்குக் கார் காலத்தில் என்று பொருள்

கொள்ளுதல் மிகவும் நலம். முனிவர்கள், கோடையில் தீயின் நடுவிலும், மாரிக்காலத்தில் நீரின் நடுவிலும் நின்று தவம் செய்தல் இயல்பு என்ப. கார்காலத்தில் நீர் நிலையில் ஒற்றைக் காலூன்றி நின்று தவம் செய்தலும் உண்டு. அவ்வாறே இந்தக் குவளை மலரும் ஒற்றைத் தாளூன்றி நின்று தவம் செய்தல்வா வழுதி அணியும்படியான குணத்தைப் பெற்றுவிட்டது! என்று தலைவி கருதுகின்றாள். இயல்பாக நீர்த்தடாகத்தில் மலர்ந்திருக்கும் குவளை மலரை, ஒற்றைத் தாளூன்றித் தவம் செய்கின்றதாகக் குறிப்பது தற்குறிப் பேற்ற அணியாகும். உண்மையில் குவளை மலர் தவம் செய்யவில்லை.

வாமான் - தாவுகின்ற குதிரை. வாவுதல் - தாவுதல். வண்டிருக்க நக்கதார் - வண்டுகள் வந்து இருப்ப அதனாலே மலர்ந்த மலர்களால் கட்டிய மாலை. வண்டுகள் வந்து தங்கும் படியாக மிக்க தேனோடு மலர்ந்த மலர்மாலை எனினும் அமையும்.

அறிவாரார்?

உசு. அறிவாரார் யாமொருநாட் பெண்டிரே மாகச்
செறிவார் தலைமே னடந்து—மறிதிரை
மாட முறிஞ்சும் மதுரையார் கோமானைக்
கூட வொருநாட் பெற.

(கு - பு.) தலைவி தோழி கேட்பச் சொல்லியது.

(இ - ள்.) "தோழி! யாம் ஒரு காலத்தில் மதுரையார் கோமானுக்குப் பெண்டிரே மாவதற்கு வழி வகை அறிபவர் யார்? அதற்குமுன் நாம், நம்மை இற்செறிவில் பொருத்தி வைத்திருத்தலே மேற்சென்று கடந்துபோய் வைகையாற்றிலே மடங்கி மடங்கித் திரைத்துத் திரைத்து வருகின்ற அலைகள் மாடங்களிலே உராய்ந்து கொண்டு போகும்படியான வளம் பொருந்திய மதுரை யூரார்க்கு மன்னனாகிய பாண்டியனை ஒருநாள் கூடப் பெறச் சூழ்ச்சி அறிவார் யார்? அவ்வாறு அறிபவர் யாவராயினும் இருந்தால் கூறு தோழி! அவர் துணையாகவாவது மதுரை மன்னனைப் பெறுதற்கு வழி செய்வோம்" என்று தலைவி தோழியிடம் கூறுகின்றாள்.

மதுரையார் கோமான்பால் மனம் போக்கிய மங்கை அவனைச் சேர்தற்கு வழிவகை யறியாமல் பன்னெடுநாள் உளைந் கவன்றுள். ஒருநாள் தன் தோழியைப் பார்த்துச் சொல்கின்றுள். தோழி! யான் வழுதிக்கு மனையாளாவ தற்கு வழிவகை யறிந்து துணை செய்பவர் யாவர்? அத் தன்மையாளர் யாவரேனும் இருப்பின் அவர் வழியாக வேனும் முயன்று தென்னனைப் பெறலாமே. ஒருநாளைக்கா வது அவனைக் கூடப் பெறுவதற்கு நெறி அறிபவர் இருக் கின்றனரா? இருந்தால் என் கவலையையும் கலங்கியோடச் செய்யலாம். அதுவுமன்றி, நம்மை வீட்டில் வைத்துக் காக்கின்றுர்களே? அந்த இற்செறிவு நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்கிறதே? அதைக் கடந்து மேல்செல்லவும் முடியும் என்கின்றுள்.

செறிவு - தலைவியை வீட்டில் அடைத்து வைக்கும் காவல். ஆர்தல் - பொருந்துதல். மேல் நடந்து - மேற் கொண்டு நடந்து சென்று.

செறிவார் தலைமேல் நடந்து என்பதற்கு எம்மை இற் செறித்து வைப்பவருடைய தலைமேல் நடந்து என்று உரைத்தல் பொருந்துமேற் கொள்க. தலைமேல் நடத்தலா வது அவரை இகழ்ந்து காவலையும் கடந்து செல்லுதல்.

> "யாமொரு நாட் பெண்டிரே மாகச்
> செறிவார் தலைமே னடந்து"

என்பதற்கு ஒரு காலத்தில் எமக்கு ஏமமாக, அரணாவது காவலராகச் செறிபவர் இருக்கின்றனரே? அப் பெண்டிர்க ளுடைய தலைமேல் நடந்து என்று பொருள் கூறினும் அமை யும். அவ்வாறு கூறி, மதுரையார் கோமானை ஒருநாள் கூடப் பெற வழிவகை அறிபவர் யார்? என்று முடித்துக் கொள்க.

யாம் ஒரு காலத்தில் மதுரையார் கோமானுக்கு மனையாளாக இருக்கின்றேம். இப்பொழுது எம்மை இற் செறித்து வைத்துக் காக்கின்றனர். எம் எதிர்கால நிலையை அறிபவரார். எம்மைக் காப்பவர் தலைமேல் நடந்து செல் லும் காலமும் எமக்கு வரும் என்று கூறியதாக உரைப் பினும் அமையும்.

பிறவாற்றினும் பொருள் கொள்ளலாம்.

என்பெரு வாடும்

உ எ. கையது வன்கடலுள் சங்கமால் பூண்டதுவுஞ்
செய்யசங் கின்ற செழுமுத்தால்—மெய்யதுவும்
மன்பொரு வேல்மாறன் வார்பொதியில் சந்தனமால்
என்பெரு வாடுமென் தோள்.

(சூ - பு.) தலைவி தோழியினிடம் சொல்லியது.

(இ - ள்.) தோழீ! என் கையினிடத்து அணியப்பெற்றுள்ள அணிகளும் அந்தப் பாண்டியனுடைய கடலிலிருந்து எடுக்கப்பட்ட சங்க வளையல்களே. யான் பூண்டிருக்கின்ற அணியும், அவன் கடலிலுள்ள ஒழுங்கான சங்கின்ற செழிப்பான முத்துக்களால் செய்யப்பட்டதே. என் மெய்யில் பூசியிருப்பதும், அரசர்களைப் பொருது வெற்றி பெறும் வேற் படையையுடைய பாண்டிய மன்னனுடைய நெடிய பொதிய மலையிலுள்ள சந்தனமே; இவற்றாலேயே என் தோள்கள் ஆறுதலடையலாமே? அதனை விடுத்து வாடுகின்றனவே? வேறு எதனைப் பெறாமல் அவைகள் வாடுகின்றன? என்கின்றாள்.

(வி - ம்.) மாறன்பால் மனஞ் செலுத்தி வருந்திய மங்கை அவனை நினைந்துநினைந்து நெகிழ்ச்சியடைந்தாள். அவளுடைய தோள்களும் வாடின. பாண்டியனுடைய தொடர்பும் அவளுக்குக் கிட்டினபாடில்லை. கிட்டாத செயலை வெட்டென மறக்கவும் அவளால் முடியவில்லை. ஒருவாறாக ஆறுதல் அடையவேண்டுமென நினைத்துத் தோழியை நோக்கிக் கூறுகின்றாள். மாறனது பொதிய மலைச் சந்தனத்தையே அணிந்திருக்கின்றேன். கையில் அணிந்திருக்கின்ற வளையல்களும் அவனுடைய கடலில் இருந்து எடுக்கப்பட்ட சங்குகளாற் செய்யப்பட்டவைகளே; மார்பில் பூண்டிருக்கின்ற ஆரமும் அவனுடைய கடற் சங்கு ஈன்ற முத்துக்களாலே செய்யப்பட்டிருக்கின்றன. இவற்றைக் கொண்டு ஆறுதல் அடையாமல் என் தோள்கள் வாடுகின்றனவே, என் செய்வேன் என்று தலைவி தோழியினிடம் சொல்கின்றாள். "ஆல்" என்று வருவன மூன்றும் அசைகள். கையது அவன் கடலுள் சங்கம் - கையினிடத்த

தாகிய வகையல்கள் பாண்டியனுடைய கடலிலிருந்து எடுக்கப்பட்ட சங்குகளால் செய்யப்பட்டனவே.

செய்யசங்கு :—சூல்நிறைந்த ஒழுங்கான சங்கு. மன் பொரு வேல் - பகை மன்னனைப் போர் செய்து அழிக்கும் வேல். வார் பொதியில் - நெடிய பொதிய மலையில்.

> ''வார்தல் போகல் ஒழுகல் மூன்றும்,
> தேர்தும் நெடுமையும் செய்யும் பொருள''

என்பது, தொல்காப்பிய உரியியல் நூற்பா. வன்சொல் முயக்கம் அவாவி அது பெருமையின் மென்சொல் மெலிகின்றது என்பது குறிப்பெச்சம்.

''வயமான் வழுதி''

உ அ. நாணுக்கால் பெண்மை நலனழியும் முன்னின்று
காணுக்கால் கைவளையுஞ் சோருமால்—காணேனுன்
வண்டெவ்வந் தீர்தார் வயமான் வழுதியைக்
கண்டெவ்வந் தீர்வதோர் ஆறு.

(கு - பு.) தலைவி நோழியினிடம் சொல்லியது.

(இ - ள்.) ''தோழீ! வண்டுகளின் பசித்துன்பத்தைப் போக்கும்படியான மிக்க தேனுள்ள பூக்களால் கட்டப்பட்ட மாலையணிந்தவனும் வலிய குதிரைப்படை உடையவனுமாகிய பாண்டியனை யான் பாராமல் இருந்தேனென்றால் என் தோள்களெல்லாம் மெலிந்து விடும், கைவளையல்களுங்கூடச் சோர்ந்து தொலைந்துவிடும். அவனை முன்னின்று பார்க்க வேண்டும் என்றாலோ நாலும் வந்து தடுத்துக்கொள்கின்றது. நாணமிருந்தேனென்றாலோ எள் பெண்மை நலன் அழிந்துவிடும். இந்த இடையூறு வந்து நேர்வதால் யான் அவனைக் கண்டு துன்பந் தீர்வதோர் வழியைக் காணுதவளானேன்'' என்கின்றாள்.

(வி - ம்.) பாண்டியனிடம் ஒரு நங்கை காதல் கொள்கிறாள். அதனால் அவள் உடம்பு கொதித்துத் தோள்கள் மெலிந்தன. வளையல்களும் கழன்றன. இந்நிலையில் பாண்டியன் வீதிவழியாக உலா வருகின்றான். இவள் வீட்டினுள்ளேயிருக்கின்றாள். வெளியே வந்து மாறனைப் பார்க்காதபடி காவலும் மிகுதியாக இருக்கின்றது; அப்பொழுது

தன் தோழியினிடம் கூறுகின்றாள், தோழீ! யான் தென்னனைப் பார்க்காமல் இருந்தால் என் கைவளைகள் நெகிழ்கின்றன. பார்ப்பதற்கு முயன்று அவன் உலா வருங்கால் முன்னின்று காணத் தொடங்கினால், அப்பொழுது நாணம் வந்து தடுக்கின்றது. நாணமல் இருந்தால் என் பெண்மை நலன் அழிந்துவிடும். உயிரினும் சிறந்ததல்லவா நாணம்? நாணத்தையும் விடக்கூடாது பெண்மை நலனும் கெடக் கூடாது, கைவளையும் சோரக்கூடாது. அவனையுங் காண வேண்டும், என்று நினைக்கின்றேன்; அதற்கு வழியில்லை. ஒரு தடை யில்லாவிட்டால் வேறு ஒரு தடை வந்து குறுக்கிடுகின்றதே! யான் வழுதியைக் கண்டு துன்பந் தீரும் வழியைக் காணவில்லையே, என் செய்வேன்? என்கின்றாள்.

தன்னையடைந்த வண்டினங்கட்குத் தாமரையிருந்து தேனூட்டி அதன் பசித்துன்பந் தீர்க்கும் வழுதியை யான் கண்டால், அவன் என் துன்பத்தை நீக்குவானே! காணப் பெற்றிலேனே என் செய்கேன்? என்பது தலைவியின் குறிப்பு. இக் குறிப்பு "வண்டெவ்வந் தீர்தார் வயமான் வழுதி" என்பதில் அமைந்திருக்கின்றது.

வழுதி - பாண்டியன். வயமான் - வலியகுதிரை. எவ்வம் - துன்பம். ஆல் - அசை.

கோட்டுமண் கொள்ளல்

உக. வாருயர் பெண்ணை வருகுரும்பை வாய்ந்தனபோல்
ஏரிய வாயினு மென்செய்யுங்—கூரிய
கோட்டானைத் தென்னன் குளிர்சாந் தணியகலங்
கோட்டுமண் கொள்ளார் முலை.

(கு - பு.) தலைவி நெஞ்சொடு சொல்லியது.

(இ - ள்.) நெஞ்சமே! கூரிய கொம்புகள் உள்ள யானைப்படைகளுடைய பாண்டியனது குளிர்ந்த சாந்தணிந்த மார்பினிடத்துள்ள, சாந்தம், கலவை முதலியவற்றினிடத்து அழுந்தத் தோய்ந்து, அச்சந்தன முதலியவற்றைத் தம் உச்சி, அடிப்பரப்பு முதலிவற்றினிடத்துத் தோயப் பெற்றுக் கொள்ளாத என்னுடைய கொங்கைகள், வளப்பமாக உயர்ந்த பனையினிடத்துத் தோன்றி அரும்பிக்கொண்டு

வருகின்ற குரும்பைகள் எவ்வளவு வாய்ப்புடையனவாக இருக்குமோ அவ்வளவு வாய்ப்பான அழகுடையனவாக இருப்பினும் என்ன பயனைச் செய்யும்? ஒரு பயனையும் செய்யா என்கின்றாள் தலைவி.

(வி - ம்.) தென்னன்பால் மனம் போக்கிய தெரிவை உளம் நெகிழ்ந்து உருகுகின்றாள். அவளுடைய இளைக் கலாத கொங்கைகள் எழுந்து விம்முகின்றன. அவற்றின் அழகைப் பார்க்கின்றாள். அந்தோ; இவை பனையில் அரும்புகின்ற குரும்பை போன்று அழகாக இருக்கின்றன. இருந்தாலும் இவற்றால் பயன் யாது? தென்னனுடைய குளிர்ந்த சாந்தணிந்த மார்பில் தோய்ந்து கோட்டுமண் கொண்டால் அல்லவோ இவை வாய்ப்பாக இருந்ததனாற் பயனுளதாம்? இவையும் கோட்டுமண் கொண்டில; யானும் பயன் பெற்றிலேன். என் செய்வேன்? என்று தலைவி இரங்குகின்றாள்.

கோட்டுமண் கொள்ளலாவது, காதலனது மார்பில் உழுது அங்குள்ள சந்தனம் முதலிய நறும் பொருளைத் தன்னகத்தே கொண்டு விளங்குதல்.

> ''தோட்டுவண் டொலியல் மாலைத் துடியிடை மகளிராய்ந்த
> மோட்டுவெண் முத்தம் மின்னும் முகிழ்முலை உழுதுசாந்தங்
> கோட்டுமண் கொண்ட மார்பங் கோதைவாள் குளித்தூழ்ந்திக்
> கோட்டுமண் கொள்ள நின்றாள் குரிசில்மண் கொள்ளலின்றாள்''

என்னும் சீவக சிந்தாமணிப் பாடலால் கோட்டுமண் கொள்ளுதலை அறிக.

வாருயர் பெண்ணை - நீண்டுயர்ந்த பனை. வருகுரும்பை - வினைத்தொகை. அரும்புகின்ற குரும்பை.

> ''நீள் நெடும் பெண்ணைக் குரும்பையுஞ் சூதும் நெருங்கு
> கொங்கை''

என்று தஞ்சைவாணன் கோவை உளகூறுவது பாடலிலும்,

> ''கொழுமடற் பெண்ணையின்ற குரும்பையுஞ் செப்புங்கொன்ற,
> இழைமுலைத் தடத்தினாள்''

என்று சீவக சிந்தாமணி உருவகூறுவது பாடலிலும் பனங் குரும்பையைக் கொங்கைக்கு உவமையாகக் கூறப்பட்டிருத்தல் காண்க.

எல்லாம் எனக்கு

௩௦. ஏற்பக் குடைந்தாடில் ஏசுவர் அல்லாக்கால்
மாற்றி யிருந்தாள் எனவுரைப்பர்—வேற்கண்ணாய்
கொல்யானை மாறன் குளிர்புனல் வையைநீர்
எல்லாம் எனக்கோர் இடர்.

(கு - பு.) தலைவி தோழி கேட்பச் சொல்லியது.

(இ - ள்.) வேல்போன்ற அழகிய கண்களையுடைய தோழீ! கொல்லுகின்ற யானைப் படையையுடைய பாண்டியனது குளிர்ந்த புனல்தரும் வையை நீரில் பொருந்தும் வகையாக யான் துதைந்து துதைந்து நீராடினால், உடனே செவிலித் தாயர்கள், "ஓகோ! இவள் வழுதியின்பால் வைத்த காதல் மிகுதியாலல்லவா அவனது வைகை யாற்றில் இவ்வாறு குடைந்து குடைந்து மூழ்குகின்றாள்" என்று மனத்துள் கொண்டு என்னை ஏசுவர். யான் நீராடாமல் இருந்தேனென்றாலோ உடனே, பாண்டியன்பால் வைத்திருக்கின்ற காதல் வெளிப்பட்டு விடுமென்றல்லவா இவள் வழுதியினுடைய வையை யாற்றில் நீராடாமல் இருக்கின்றாள் என உரைப்பர். தோழீ! இவ்வாறாக, நீராடுதலும் தவிர்தலுமாகிய இவையெல்லாங்கூட எனக்கு ஒப்பற்ற இடர்ப்பாடு தருவனவாக இருக்கின்றனவே; யான் என் செய்வேன் என்கின்றாள்.

(வி-ம்.) மாறன்பால் மனம்போக்கி மதியிழந்த மங்கை, செய்யும் செயல்களை விரைவிற் செய்யாமல் காலம் நீட்டிக்கச் செய்து திகைக்கும் இயல்பு உள்ளவளாயினள். அத்தன்மையால், ஆற்றில் நீராடுவதற்கும் அளவிறந்த நேரத்தைச் செலவிடுகின்றாள். கொவ்வைவாய் விளர்ப்பவும் மைக்கருங்கண் சிவப்பவும் குளிர்தரங்க வைகைநீரில் குடைந்து குடைந்து ஆடினமையால் வாயின்சிவப்பை விழிவாங்க விழியின் நிறத்தை வாய்வாங்க நாயகனோடு கூடிய நங்கையைப்போல அம் மங்கை இலங்கினாள். அதனைக் கண்ட செவிலியர் அவளை ஏசினார்கள். அதனால் அவளும் மற்றை நாளில் நீராடாமல் திகைத்து இருந்தாள். அதனைக் கண்ட செவிலியர் ஏன் நீராடாமல் மாற்றியிருக்கின்றனை? என்று உரைக்கலாயினர். இதனைத் தலைவி வேறு வகை

யாகப் பொருள்படுத்திக்கொண்டு தோழியைப் பார்த்துத் தோழி! வைகை நீரில் யான் ஏற்பக் குடைந்தாடினுல் வழுதியின்பால் வைத்த காதலாலல்லவோ இவ்வாறு ஆடுகின்ருள் என்று ஏசுகின்றனர். நீராடாமல் இருந்தால் அவன்பாலுள்ள ஆர்வத்தை மறைப்பதற்குத்தான் இவ்வாறு இருக்கின்ருள் என்கின்றனர். இவ்வாருக நீராடலும் துன்பம், ஆடாமையும் துன்பம்; இதற்கென்செய்கேன் என்கின்ருள்.

ஏற்ப - பொருந்தும் வகையாக. குடைந்தாடுதலாவது நீரினுள் துழைந்து துழைந்து மூழ்குதல். குடைந்தாடுதலெனினும், துழைந்தாடுதலெனினும் ஒக்கும்; அஃதாவது, தண்ணீரைக் கையால் எற்றி எற்றி அணைத்து மூழ்குதல். கொல்யாணை - கொல்கின்றயாணை.

இழையாது இருக்கும்

கூக. கூடற் பெருமானைக் கூடலார் கோமானைக்
கூடப் பெறுவேனேல் கூடென்று—கூடல்
இழைப்பான்போற் காட்டி யிழையா திருக்கும்
பிழைப்பிற் பிழைபாக் கறிந்து.

(கு - பு.) கூடலிழைக்குந் தலைவியின் நிலைமையை மறைவில் நின்று கண்ட தோழி தன்னெஞ்சொடு கூறியது.

(இ - ள்.) "ஏ கூடற்சுழியே! நான் மதுரையில் வாழும் பெருமானும், மதுரையில் வாழ்வார்க்கு மன்னனுமாகிய தென்னனைக் கூடப்பெறுவே னென்ருல், நீ பொருத்தமாகப் பொருந்து" என்று நினைத்துக் கூடற்சுழியைச் சுழிப்பவள் போல நமக்குத் தோன்றும்படிச்செய்து, அச் சுழி பொருந்தாமல் தவறிவிட்டால் அதனுல் வரும் தவறுதலை அறிந்து, கூடற்சுழியைச் சுழியாமல் இருக்கின்ருள் இவள் என்று தலைவியைக் கண்ட தோழி நினைக்கின்ருள்.

(வி - ம்.) மாறனைக் கண்டு காதலால் மயங்கிய மங்கையொருத்தி "அவனை எப்பொழுது கூடப்பெறுவேம்" என்று நினைத்து நினைத்து ஏங்கி நெகிழ்ச்சியடைகின்ருள். அவன் கூட்டம் தனக்குக் கிடைக்குமோ கிடைக்காதோ என்ற ஐயப்

பாடு நாளுக்கு நாள் அவளுக்கு வளர்ந்துகொண்டே வருகிறது. அதனால் குறிபார்க்க வேண்டுமென்று நினைக்கிறாள். வேறு யாரிடத்திலாவது குறி பார்க்கலாமென்றாலோ தன் நினைவு பிறர்க்குப் புலனாகிவிடுமே என் செய்வது? என்று நினைக்கின்றாள். ஆதலால் தானே ஒருவகையாகக் குறிபார்க்கத் தொடங்கிவிட்டாள்.

மணலில் வட்டமாகக் கோடுகிழித்து, அதனுள் சுற்று வட்டமாகச் சுழிசுழியாகச் சுழித்துப் பொருத்திக்கொண்டு, பின்பு அச் சுழிகளை இரண்டு இரண்டு சுழியாக எண்ணிக் கணக்குப் பார்த்து, இரட்டைப் பட்டாற் கணவன் வருவானென்றும், ஒற்றைப்பட்டால் வரமாட்டானென்றுங் கருத்துக் கொள்வதாகப் பண்டை மகளிர் குறிபார்ப்பார்கள் என்ற நினைவும் அவளுக்கு வந்தது. தானும் கூடற் சுழியைக் கிழித்துக் குறிபார்க்க வேண்டுமென்று கையை மணலில் வைத்துக்கொண்டு, "ஏ சுழியே!. நான் மாறனைக் கூடப்பெறுவேனேற் கூடு" என்று சொல்லிச் சுழிக்கத் தொடங்குகின்றாள். அப்பொழுது வேறு ஒரு நினைவு குறுக்கிட்டு அதனைத் தடுக்கின்றது. "கூடற்சுழி ஒழுங்கான நற்குறி தராமல் தவறிவிட்டால் அவனும் வரமாட்டானே" என்று அவளது மயக்கமான மனம் நினைக்கின்றது. ஆதலால், கூடற்சுழியைச் சுழிப்பவள்போல விரலைத் தரையிற் பரப்பியிருக்கும் மணல்மேல் வைத்துக்கொண்டு மயங்கியிருக்கின்றாள். இவ்வாறு இருக்கும் தலைவியை அவளுக்கு வாய்த்த உயிர்த்தோழி வந்து காண்கின்றாள். தன்னைத் தோழி ஒருபால் மறைந்து நின்று பார்ப்பதையுங் கூடத் தலைவி காணவில்லை. உடனே தோழி மனத்திற்குள் அந்தோ! இவள் கூடற்சுழியை நோக்கி "ஏ! சுழியே! யான் மாறனைக் கூடப் பெறுவேனேல் நீயுங்கூடு" என்று சுழிக்கத் தொடங்கினவள், "சுழி கூடாவிட்டால் தலைவன் வரமாட்டான், யாதானும் அவனைப் பற்றி நினைக்குங் காதலின் தொடர்பான நினைவை விடும்படியாக நேரிடுமே!" என்று வேறு நினைவு வரப் பெற்றவளாய்க் கூடலிழையாமல் இருக்கின்றாளே! என்று கூறிக்கொள்கின்றாள். தலைவியின் நினைவைத் தோழி உட்கொண்டு வருந்த அந்த நினைவை நமக்குக் கவிஞர் எடுத்து அமைத்துத் தந்திருக்கும் முறை பாராட்டற்பாலது.

"இசையுந்தன் கோலத்தை யான்காண வேண்டி
வசையில்சீர்க் காளத்தி மன்னன்—அசைவின்றிக்
காட்டுமேற் காட்டிக் கலந்தென்னைத் தன்னோடுங்
கூட்டுமேற் கூடலே கூடு"

என்பது நக்கீரதேவ நாயனார் பாடிய கைலைபாதி காளத்தி பாதி யந்தாதி. "வேபாக்கு" என்பதுபோல் பிழைபாக்கு என வந்தது. பிழைத்தல் என்பது அதன் பொருள்.

தமிழர் பெருமான்

நடை. என்னை உரையல்என் பேருரையல் ஊருரையல்
அன்னையும் இன்னள் எனவுரையல்—பின்னையுந்
தன்படா யாஞ்சத் தமிழர்த்தம் பெருமாற்கென்
கன்படா வாறே யுரை.

(கு - பு.) பாண்டியனிடம் காதல்கொண்டு தூங்காமல் மயங்கும் மங்கை தோழியினிடம் "நீ போய்ப் பாண்டியனிடம் யான் தூங்காமலிருக்கும் நிலையை முன்னிலைப் புறமொழியாகக் கூறு" எனல்.

(இ - ள்.) தோழி! குளிர்ந்த தன்மை பொருந்தாத மதயானைமேல் ஏறிவந்த நம் தமிழர் பெருமானுகிய பாண்டியனிடத்தில் என்னைப்பற்றி இன்ன தெருவில் இன்னாருடைய மகள் என்றிவைபோன்ற ஒன்றையும் சொல்லாதே; சொன்னால் அதற்குள்ளாக நாணமுமின்றி இவ்வாறெல்லாம் சொல்லிவிட்டிருக்கின்றாளே என்று நினைப்பான்; என் பெயரையும் சொல்லாதே; நம்மால் விரும்பப்பட்ட பெண்ணைப் பற்றிப் பிறர் இவ்வளவு விரைவில் அறிந்து கொண்டாரே; தூதும் வந்துவிட்டதே என்று நினைப்பான்; நம் ஊரைப்பற்றியும் சொல்லாதே; சொன்னால் ஆ! நாம் பார்த்த உடனே பிறருக்குத் தெரிந்துவிட்டது; இந்த எண்ணத்தை விட்டுவிட வேண்டுமென்று நினைப்பான்; நம் அன்னையும் இன்னதன்மையள் என்பதைச் சொல்லாதே. இவற்றைச் சொல்லாமல் இருப்பதுடன், அவனுக்கும் கேட்கும்படியாகப் பொதுவாக, வேறொருவரிடத்தில் சொல்லுவது போல ஐயோ! ஒரு பெண் தூங்காமலே ஏங்கிக்கொண்டிருக்கிறாள் என்பதை மட்டும் சொல்லவேண்டும்; என்கின்றாள்.

(வி - ம்.) வீதி வழியாகப் பாண்டியன் பெரிய யானை மேல் ஏறி உலா வருகின்றான் ; யானை அச்சம் உண்டாகும் படியாக விழிக்கின்றது ; விரைவாகவும் செல்கின்றது ; வெம்மையான யானைதான் ; ஒரு பெண் பார்த்துக் காதல் கொள்கின்றாள் ; பாண்டியனும் பொது நோக்காக அந்தப் பக்கத்தைப் பார்த்தான் ; உடனே அவள் நம்மைத்தான் பார்க்கின்றான் ; நம்மிடம் மிக்க காதல்கொண்டு நம்மையே மணந்து கொள்வான் ; என்றெல்லாம் எண்ணுகின்றாள் ; இதற்குள் அந்த யானையும் சென்றது ; இவளும் வீட்டுக்கு வந்தாள் ; அன்று அவள் உள்ளத்தில் முளைத்து வளர்ந்து அரும்பிய காதல் மலர்ந்து மணம் வீசத் தொடங்கிற்று. அன்னை அறிந்தாள் ; ஏன் இவ்வாறு இருக்கின்றாய் ; உணவு கூட ஒழுங்காக உண்கின்றாயில்லையே ; ஏன் இப்படித் தேய்ந்து மெலிகின்றாய் ? என்று அன்னை கலிகின்றாள் ; இப்படியெல்லாம் இருக்கும்போது அவளுக்குத் தூக்கம் வரவில்லை ; இரவில் விழித்துக்கொண்டே யிருக்கின்றாள். அவளுடைய தோழி வந்து ஏன் இவ்வாறு தளர்ந்து இருக்கின்றாய் ? என்கின்றாள் ; உடனே தலைவி, தோழி ! என் நிலையை அந்தப் பாண்டியனிடத்திற் போய்ச் சொல்ல வேண்டும் ; ஆனால் என்னைப்பற்றி முதலிலே ஒன்றும் சொல்லாதே ; அவளுக்கு நாணமில்லையோ என்று நினைப்பான். பெயரைச் சொன்னால், நாம்தானே அவனைப் பார்த்தோம் ; அவளும் நம்மைப் பார்த்தாள் ; இதற்குள் வெளிப்பட்டு விட்டதே என்று நினைப்பான் ; ஊரையும் சொல்லாதே நம் அன்னையும் இன்னதன்மையுள்ளவள் என்று சொல்லாதே. முன்னிலைப் புறமொழியாக, அஃதாவது, வேறு ஒருவரிடம் பொதுவாகச் சொல்வது போலவும் என்னை நீ தெரிந்துகொள்ளாதவள் போலவும், அரசன் என்னை விரும்பியிருக்கின்றதையும் தெரிந்துகொள்ளாதவள் போலவும் ஒருத்தி தூங்காமல் ஏங்கிக்கொண்டே யிருக்கின்றாள் ; என்று சொல் ; மறந்திருப்பான் ; இவ்வாறு நீ சொன்ன உடனே நினைவு வந்துவிடும் ; இங்கே வந்துவிடுவான் என்று தலைவி சொல்கின்றாள். தலைவனைப் பார்க்க விடாமல் யானை விரைவாக நடந்து சென்றதனால் "தண்படா யானை" என்கின்றாள்.

தலைவியின் பெருநாணமும் பெருவேட்கையும் இதனால் நன்கு புலனாகின்றது.

உரையல் - சொல்லாதே ; கண்படாவாறே உரை - என்கண் உறங்காத நிலைமை ஒன்றையுமே சொல்.

இப் பாடலில் சொற்பொருட்பின் வருநிலை அணி அமைந்துள்ளது.

"ஒருத்தி என்முல் அறியுமோ என்னில், எய்தவன் கை உணராதோ 'இன்ன காட்டிலே மான் பேடை ஏவுடனே கிடந்து உளையாகின்றது' என்று ஊரிலே வார்த்தை பிறந்தால்." என்பது திருவாய்மொழி வியாக்கியானப் பகுதி.

இளையளாய் மூத்திலள் கொல்லோ

கூ. வளையவாய் நீண்டதோள் வாட்கணுய் அன்னை
இளையளாய் மூத்திலள் கொல்லோ—தளையவிழ்தார்
மன்கொண்ட தானை மறங்கனல்வேல் மாறனைக்
கண்கொண்டு நோக்கலென் பாள்.

(கு - பு.) தாயால், தலைவனது காட்சியைக் காணவிடாமல் தடைப்படுத்தப்பட்ட தலைவி, தோழியினிடம் சொல்லியது.

(இ - ள்.) வளைகள் அணியப்பெற்றனவாய் நீண்ட தோள்களையும், வாள்போன்ற கண்களையும் உடைய தோழியே! நம் அன்னை, அரும்புக்கட்டு அவிழ்ந்த பூமாலையையும், மாற்றரைக் கொன்று அவர்தம் நிலத்தைக் கைக்கொண்ட படைகளையும், வீரங் கனல்கின்ற வேலினையும் உடைய பாண்டியனைக் கண்ணுல் பாராதே என்று சொல்கின்றாளே. இளமை யுள்ளத்தில் நிலைமை சிறிதுகூட அவளுக்குத் தெரியவில்லையே! நம் தாய் இளமைப் பருவம் உடையவளாக இருந்து படிப்படியாக வளர்ந்து மூப்பு அடைந்திலள் கொல்லோ? என்கின்றாள்.

(வி - ம்.) மாறன்பால் மனம் போக்கி மால்கொண்ட மங்கையொருத்தி, அவன் உலாவருகின்ற அழகினைக் காண ஆசை நிறைந்தவளாய்த் தெருக்கதவின் பக்கத்திற்கு வருகின்றாள்; அப்பொழுது அவளுடைய தாய் கண்டு விரைந்து வந்து எலா! எலா! எங்கே போகின்றாய்? வீட்டிற்குள்ளே ஓடு; போ போ என்று சொல்லி விரட்டி வீட்டிற்குள்ளே கொண்டுபோய்ச் செறித்தாள்; அவ்வளவுதான் நிகழ்ந்த

செயல். அவளுக்கு ஆற்றுமை அலைகடல்போல் பொங்கிற்று. யாரிடம் சொல்லி இத்துன்பத்தைத் தொலைப்போம் என்று நினைக்கின்ற காலத்தில் அவளுடைய தோழியும் வந்து சேர்ந்தாள்; அவளுடைய தோள்கள் இயற்கையாகவே அழகு உடையனவாகப் பருத்து நீண்டு விளங்குகின்றன. அவற்றில் நல்ல புதிய தோள்வளைகளும் அணிந்திருக்கின்றாள்; கண்கள் வாளைப்போல ஒளியுடையனவாக விளங்குகின்றன. இவ்வளவு சிறந்த தோற்றத்துடன் வந்த தோழியைத் தலைவி பார்த்து, "வளையவாய் நீண்டதோள் வாட்கண்ணாய்!" என்று விளித்துத் தன் குறைகளைச் சொல்லத் தொடங்கி, ஏடி! தோழி! மாறனை நம் அன்னை கண்ணினாலுங் கூட நோக்காதே என்கின்றாளே; இவள் இளமைப் பருவ நிலையுடையளாக ஒரு காலத்தில் இருந்திலளோ? இப்பொழுது இருக்கின்ற கிழத்தன்மையுடையவளாகவேதான் என்றும் இருந்தாளோ? நம் உள்ளப் பான்மை அவளுக்குத் தெரியவில்லையே. கண்ணால் அவனைப் பார்த்தால் என்ன கெடுதி வரும் என்று தன் ஆற்றுமையைக் கூறுகின்றாள்.

"இனையளாய் மூத்திலள் கொல்லோ" என்ற முரண் தொடை நயம் வாய்ந்தது. ஓதுவதற்கு இனிமையுடையதாகவும் திகழ்கின்றது.

வளையவாய் - வளையல்களை அணியப்பெற்றனவாகி. தளை அவிழ்தார் - அரும்புக்கட்டு விரிந்த மலர்மாலை. மறங்கனல்வேல் - வீரம் விளங்கும் வேல்.

அம்மனைக் காவலுளேன்

நற. கொடிபாடித் தேர்பாடிக் கொய்தண்டார் மாறன்
முடிபாடி முந்நாரம் பாடித்—தொடியுலக்கை
கைம்மனையில் ஓச்சப் பெறுவெனோ யானுமோர்
அம்மனைக் காவல் உளேன்.

(கு - பு.) பக்கத்து வீட்டுப் பெண்கள் வள்ளைப்பாட்டுப் பாடி உலக்கை ஓச்சுவதை உணர்ந்த தலைவி நெஞ்சொடு சொல்லியது.

(இ - ள்.) நெஞ்சமே! வீட்டினுள்ளேயே பெண்களை அடைத்து வைத்துக் காவல் செய்யும் தாயர்களுள் ஒப்பற்ற

வளாகிய என் தாயின் காவலுக்குள்ளேயே அடங்கி யிருக்கின்றேனே; (அடுத்த வீட்டுப் பெண்களெல்லாரும் தங்கள் காதலர் பெயர், திறம் இவற்றைப்பற்றிப் பாடிக்கொண்டே பொற்சுண்ணம் இடிக்கின்றார்களே) யானும், என் காதலனும் கொய்த பூக்களின் குளிர்ச்சி மாறுமல் உடனே கட்டப் பட்டதாகிய குளிர்ந்த மாலை அணிந்தவனுமாகிய பாண்டியனுடைய கொடியைப்பற்றிப் பாடித், தேரைப்பற்றிப் பாடி, முடியைப்பற்றிப் பாடி, முத்தாரத்தைப்பற்றியும் பாடிப் பூண் கட்டிய உலக்கையினாலே இந்தச் சிறு வீட்டிலே பொற்சுண்ணம் இடிக்கும் செயலைச் செய்யப் பெறுவேனோ? என்கின்றாள்.

(வி - ம்.) ஒரு நங்கை வீட்டிலே இருக்கும்பொழுது பலவகையான மங்கல முழக்கம் முழங்குவதைக் கேட்கின்றாள். உடனே ஓடிவந்து தெருவாயில் கதவின் பக்கத்தில் நின்று பார்க்கிறாள்; நெடுந்தூரத்தில் ஒரு பெரிய தேரின் மேல் கட்டியிருக்கின்ற கொடிமட்டும் தோன்றுகின்றது. அதனையே பார்த்துக்கொண்டு நிற்கின்றாள்; சிறிதுநேரம் சென்றபின் பெரிய தேர் ஒன்று தெரிகிறது. பின்பும் பார்த்துக்கொண்டே யிருக்கின்றாள். தேரும் வருகின்றது; தேரினுள்ளே இருக்கின்ற செம்மல் யார் என்று நோக்குகின்றாள்; அவனுடைய மணி பதித்த முடி தோன்றுகின்றது; அதனையே நோக்கிக் கொண்டிருக்கின்றாள்; அதற்குள் தேரும் பக்கத்திற்கு வருகிறது; உள்ளே பாண்டியன் இருக்கின்றான்; அப்பொழுதுதான் கொய்த பூக்களால் கட்டப்பட்ட மாலைகள் மார்பில் கிடந்து புரளுகின்றன; அவற்றையும் கண்டாள். அவற்றைப் பார்த்துக்கொண்டிருக்கும்போது தேர் இன்னும் பக்கமாக வந்தது; மாறனுடைய மார்பில் முத்தாரங்கள் கிடந்து மிளிர்கின்றன; அவற்றையும் காண்கின்றாள். பின்பு தேரும் போயிற்று; அதுமுதல் அந்நங்கை மாறன்பால் மட்டற்ற காதல் கொண்டு மயங்குவாளாயினாள்; அவளுடைய தாய்க்கும் இது தெரிந்தது. உடனே மகளை வெளியே எட்டிப் பார்க்க விடாமல் காவல் செய்யத் தொடங்கினாள்; நங்கை என்ன செய்வாள்? ஓர் இடத்திலே இருந்து என்னென்ன வெல்லாமோ எண்ணுகின்றாள்; அப்பொழுது அடுத்த வீட்டிலே இருக்கின்ற நங்கைமார் தங்கள் காதலருடைய வீரம் முத

யவற்றைப்பற்றிப் புகழ்ந்து பாடிக்கொண்டு சுண்ணம் இடிக்கின்றார்கள்; அந்தப் பாடல்களை இவளும் கேட்டாள்; உடனே தன் காதலனுகிய பாண்டியனைப்பற்றிப் பாடிக்கொண்டு சுண்ணம் இடிக்கவேண்டுமென்ற ஓராசை இவளுக்கும் உண்டாயிற்று; ஆனால் தன்னுடைய வீடோ சிறு வீடாக இருக்கின்றது; பெரிய வீடாக இருந்தால் தாயார் ஒரு பக்கம் இருக்கும்போது நாம் ஒரு பக்கத்திலே உலக்கை ஓச்சிக்கொண்டு அவளுக்குக் கேளாமற் பாடலாம் அதற்கும் வழி யில்லையே! என்று நினைக்கின்றாள்; இவ்வாறு நினைக்கின்ற தலைவி யானும் என் காதலனைப் பற்றிப் பாடப் பெறுவேனே என்று ஏங்குகின்றாள்; தலை நாளில் தான் கண்ட காட்சி கண்ணையும் கருத்தையும் விட்டகலாமல் நிற்கின்றது; முதற்கண் கண்டது கொடி, அதற்குப் பின்பு தேரைக் கண்டாள்; அதற்குப் பின்புதான் உள்ளே இருப்பவன் மாறன் என்றும், அவன் அணிந்திருப்பது குளிர்ந்த மாலை என்றும் தெரிந்து கொண்டாள், பின்பு அவனுடைய மலர்முடியை நோக்கினாள்; பின்பு முத்தாரத்தைப் பார்த்தாள்; தான் கண்ட முறை சிறிதும் பிறழாமல், தன் கருத்தையும் கண்ணையும் விட்டகலாத காட்சியைப் பற்றி உலக்கை ஓச்சும்போது பாடப் பெறுவேனே? "கொடிபாடித் தேர்பாடிக் கொய்தண்டார் மாறன், முடி பாடி முத்தாரம் பாடித் தொடியுலக்கை," ஓச்சப்பெறுவேனே? என்று நினைக்கின்றாள்; அடுத்த வீட்டுப் பெண்களெல்லாரும் பாடுகின்றார்களே; யானும் பாடப் பெறுவேனே என்று நினைக்கின்றாள்; பெரிய வீடாக இருந்தால் எங்காவது ஒரு பக்கம் தாய் போயிருக்கும்போது பாடிக் குற்றலாமே அதற்கும் வழியில்லையே! "கைம்மலையிலொச்சப் பெறுவெனே?" என்று நினைக்கின்றாள்; தாய் எங்கேயாவது போய்த் தொலைவாள் என்று பார்த்தால் அதற்கும் வழியில்லையே, அம்மனைக் காவலுளேனுகிய யானும் ஓச்சப்பெறுவேனே? என்கின்றாள்: இவ்வாறுகத் தலைவி ஏங்கிக்கொண்டிருக்குந் தன்மை அப்படி அப்படியே அமையுமாறும், பாடற் பண்பு மிகுதியாக நிறையும்படியும், இப்பாட்டை ஆசிரியர் இயற்றி யிருக்கின்றார்; தலைவி கண்ட காட்சி, அவளுடைய எண்ணம், ஏக்கம், இடையூறு, காவலின் கடுமை முதலிய எல்லாவற்றையும் விளக்குகின்ற தன்மை இப்பாடலில் மிகவும் நன்றாக அமைந்திருக்கின்

றது; இஃதோர் தலைமை சான்ற செய்யுளாதலைத் தெள்ளிதின் உணர்ந்து மகிழ்க.

தொடியுலக்கை - பூண் கட்டிய உலக்கை. ஓச்சுதல் - சுண்ணம் இடிக்கும்போது உலக்கையை மேலோங்கிச் செல்லும்படி நீட்டுதல்; பாடிக்கொண்டே உலக்கை ஓச்சுதல் மரபு. கைம்மகனை - தலைவி தன் வீட்டைச் சிறு விடாகக் கூறிக் கொள்கிறாள்; பெரிய அரண்மனைக்குப் போக விரும்புகின்றவளல்லவா? அதனுடனும், பெரிய வீடாக இருந்தால் ஏதாவது ஒரு கடைசியில் பாடினால் மற்ற இடத்திற்குக் கேளாது; இது கையகலமனையாகத் தானே இருக்கின்றது; இங்கே இருந்து எவ்வாறு பாடமுடியுமென்று நினைத்துக் "கைம்மகனை" என்று கூறுகின்றாள். கை - சிறுமை; கைக்குடை, கையரிவாள் முதலியன காண்க. அம்மனை - தாய்; "எம் அம்மனையை இனிது காக்க" என மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் வருதல் காண்க.

யானும் - என்பதிலுள்ள உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை. அடுத்தவீட்டு நங்கையரெல்லாரும் பாடிச் சுண்ணம் இடிக்கின்றார்களே யானும் அப்பேறு பெறுவேனோ என்பதை அந்த உம்மை குறிப்பிடுகின்றது.

ஓர் அம்மனை - ஒப்பற்ற தாய்; எத்தன்மையில் ஒப்பற்றவள்? சிறுமியரை வீட்டினுள் வைத்துக் கதவடைத்துக் காக்குந் தன்மையில்தான்; வேறு ஒன்றிலும் ஒப்பற்றவளென்று சொல்லமுடியாது.

வள்ளைப்பாட்டு :—உலக்கை போடும்போது பாடும் பாட்டு. மூவேந்தரைப்பற்றியனவாக மிகப் பல வள்ளைப் பாடல்களும், கொடி, தேர் முதலிய பத்து உறுப்புக்களைப் பற்றிப் பாடுவதாகிய பாடல்களும் மிகுதியாக மூற்கால்த்தில் வழங்கியிருத்தல் வேண்டுமென்பதை இளங்கோவடிகள் சிலப்பதிகார வஞ்சிக்காண்டத்தில் கூறியிருக்கும் வள்ளைப் பாடல்களால் உணரலாம். அவை வருமாறு :

> "நிங்கரும்பு நல்லுலக்கை யாகச் செழுமுந்தம்
> பூங்காஞ்சி நீழல் அவைப்பார் புகார்மகளிர்
> ஆழிக் கொடித்தின்டேர்ச் செம்பியன் வம்பலர்தார்ப்
> பாழித் தடவரைத்தோட் பாடலே பாடல்
> பாவைமார் ஆரிக்கும் பாடலே பாடல்.

பாடல்சால் முத்தம் பவழ வுலக்கையால்
மாட மதுரை மகளிர் குறுவரே
வானவர்கோன் ஆரம் வயங்கியதோட் பஞ்சவன்றன்
மீனக் கொடிபாடும் பாடலே பாடல்
வேப்பந்தார் நெஞ்சுவக்கும் பாடலே பாடல்.

சந்துழற் பெய்து தகைசால் அணிமுத்தம்
வஞ்சி மகளிர் குறுவரே வான்கோட்டாற்
கடந்தடுதார்ச் சேரன் கடம்பெறிந்த வார்த்தை
படர்ந்த நிலம் போர்த்த பாடலே பாடல்
பனந்தோ டுளங்கவரும் பாடலே பாடல்.''

''கொடிபாடித் தேர்பாடி'' என்ற இப்பாடலில் ''பாடி'' என்ற சொல் பலமுறை வந்து பாடலைச் சுவைப் படுத்துகின்றது. இது சொற்பொருட் பின்வருநிலை யணி. ''காதார் குழையாட'' என்ற திருவெம்பாவைப் பாடலி லும் இவ்வாறு வருதல் காண்க.

வெறுங்கூடு காவல்

நடு. கோட்டெங்கு சூழ்கூடல் கோமானைக் கூடவென
வேட்டாங்குச் சென்றவெண் னெஞ்சறியாள்—கூட்டே
குறும்பூழ் பறப்பித்த வேட்டுவன்போல் அன்னை
வெறுங்கூடு காவல்கொண் டாள்.

(சு - பு.) அன்னையால் இற்செறிக்கப்பட்ட தலைவி தன் தெஞ் சொடு கூறியது.

(இ - ள்.) நெஞ்சமே! தேங்காய்க் குலைகளை மிகுதி யாகக் கொண்டிருக்கின்ற தென்னைகள் சூழ்ந்திருக்கின்ற மதுரை மன்னனாகிய பாண்டியனைக் கூட வென்று விரும்பி அவ்விடத்திற்குச் சென்ற என்னுடைய நெஞ்சின் இயல்பை அறியாதவளாகிய அன்னை, கூட்டுக்குள்ளே இருந்த காடை யைத் தன் சோர்வினாலே பறந்து செல்ல விடுத்துப் பின்பு அந்தக் காடை வெளியே சென்றதையுங்கூட அறியாமல், உள்ளே இருப்பதாக நினைத்துக் கூட்டை எடுத்து வீட்டி னுள்ளே வைத்துக் கதவைப் பூட்டிக் காவல் செய்த அறி வில்லாத வேட்டுவனைப் போல, என் உடம்பாகிய வெறுங் கூட்டையும் வீட்டுக்குள்ளே தள்ளி வைத்துக் கதவை அடைத்துப் பூட்டிக் காவல்செய்து கொண்டாளே! எவ் வளவு அறியாமை? என்கின்றாள்.

(வி - ம்.) ஒருநாள் பாண்டியன் வீதி வழியாக உலா வந்தான்; அப்பொழுது வீட்டினுள்ளே இருந்த ஒரு பெண் ஓடிவந்து பார்த்தாள்; உடனே அவள் மனமும் அந்த மன்னன் பின்னுலேயே சென்றுவிட்டது; இவ்வாறு இருக்கும் பொழுது வீட்டினுள்ளே இருந்து தாய் விரைந்து வந்து மதிமயங்கி நின்ற மங்கையை வீட்டுக்குள்ளே தள்ளிக் கொண்டுபோய்ச் சேர்த்துக் கதவையும் அடைத்துக் காவலும் காக்கத் தொடங்கினுள். காவலோ கடுங்காவல்; வெளியே எட்டிப் பார்ப்பதற்குங்கூட வழியில்லை; யாது செய்வாள்? வீட்டினுள்ளே யிருந்துகொண்டு நினைக்கின்றாள்; என்ன அறியாமை! இவ்வாறு வீட்டுக்குள்ளே வைத்துக் கதவை அடைத்தவளே; முதலிலேயே என்னை வெளியே விடாமல் வீட்டுக்குள்ளேயே வைத்துக் காவல் காத்திருந்தால் என் மனமும் வெளியே சென்றிராது; எனக்கு இத்தத்துன்பமும் வந்திராது; அறிவில்லாத வேட்டுவன் பார்வைக் காடையைக் கூட்டிலிருந்து பறந்து போகும்படி விடுத்துப் பின்பு வெறுங்கூட்டை வீட்டுக்குள்ளே வைத்துக் காத்ததுபோல, நம் அன்னையும், பாண்டியனைக் கூடவென்று விரும்பி, அவன் பின்னுலே சென்ற என் நெஞ்சின் இயல்பு அறியாதவளாய், இந்த வெறுங்கூடாகிய உடம்பைக் காக்கத் தொடங்கி விட்டாள்; எவ்வளவு மடமை! காடை பறந்துபோன பின்பு கூடு எங்கே கிடந்தாலென்ன? காடையிருக்கும்போது காத்தல் நலந்தான்; அதுபோல, நெஞ்சு வெளியே ஓடிப்போய்ப் பாண்டியனை யணையச் சென்ற பின்பு இந்த வெறுங் கூட்டைக் காத்துப் பயன்பெற முடியுமா? என்ன செய்கை இது? என்று தலைவி நினைக்கின்றாள்.

காடை. தீவினை செய்யும் அறிவில்லாத வேட்டுவனுடைய கூட்டிலிருந்து பறந்துபோய் முன்னைத் தொடர்புள்ள தன் இனத்துடன் சேர்ந்து மகிழச் சென்றதுபோல நம் நெஞ்சும் முன்னைப் பிறவியில் தொடர்புள்ள பாண்டியனுடனே சென்று சேர்ந்து இன்புறப் போயிற்று. இந்த நெஞ்சின் இயல்பைக்கூட நம் தாய் அறியவில்லையே! என்று தலைவி நினைக்கின்றாள்.

கோட்டெங்கு சூழ் கூடற் கோமானைக்கூட-தேங்காய்க் குலைகளையுடைய தென்னைகள் சூழ்ந்த மதுரை மன்னனைக் கூட. தென்னை சூழ்ந்த இயற்கை வளமுள்ள சோலையிற்

பாண்டியனைத் தனியே காணலாம் என்ற நினைவு தலைவிக்கு உளதாயிற் றென்னுங் கருத்துப் புலப்படக் "கோட்டெங்கு சூழ் கூடல்" என்றார். குறும்பூழ் - காடை. பார்வைக் காடை ஒன்றைக் கூட்டினுள் வைத்து வேடர்கள் வளர்த்தல் இயல்பு. அந்தக் கூட்டைக் காட்டில் ஒரு பக்கத்தில் வைத்து அதைச்சுற்றி வலைக்கண்ணியையாவது, அல்லது சிறு தட்டிக் கண்ணியையாவது வைத்துவிட்டு மறைந்து கொள்வர். இந்தக் கூட்டுக் காடை குறுகுறு என்ற ஒலியுடன் தன் இனக் காடைக்குக் கேட்கும்படி பயிர்ந்து அழைக்கும். உடனே மற்றைக் காடைகள் வந்து கண்ணிக் குள்ளே பட்டுவிடும். மற்றைக் காடைகளை எல்லாம் பிடித்துப் பயன் படுத்திக்கொண்டு, கூட்டுக் காடையை மட்டும் வீட்டில் வைத்து வளர்த்தல் வேடர் இயல்பு. அவ்வாறு வீட்டிலிருந்த கூட்டுக் காடை ஒருநாள் பறந்து சென்றதை யறியாமல் வேடன் கூட்டை வீட்டுக்குள்ளே வைத்துக் காக்கத் தொடங்கினன்; இச் செய்தியைத்தான் தலைவி உவமையாகக் கூறுகின்றாள்.

தலைவியினுடைய ஆற்றாமை, தாயினுடைய அறியாமை, அவள் நெஞ்சை வெளிச்செல விடுத்துத் தவிக்கும் நிலை முதலிய எலலாம் இப்பாட்டில் அமைந்திருக்கின்றன.

கைதொழுதேனும் இழக்கோ

கூகூ. கவியாளைத் தென்னன் இளங்கோவென் றெள்ளிப்
பணியாரே தம்பார் இழக்க—அணியாகங்
கைதொழுதேனும் இழக்கோ நறுமாவின்
கொய்தளிர் அன்ன நிறம்.

(கு - பு.) பாண்டியனைக் கண்டு காதல்கொண்டு பசலை பூத்த நங்கை தன் நெஞ்சொடு சொல்லியது.

(இ - ள்.) நெஞ்சமே! மதமுங் கதமுஞ் சிறந்த யானைப் படைகளை மிகுதியாக வைத்திருக்கின்றவன் என்றுகூட நினையாமல் இந்தப் பாண்டியன் சிறுவன்தானே! என்று நினைத்து இகழ்ந்து அவனை வணங்காத மன்னர் இருக்கின்றார்களே! அவர்கள் தமமுடைய நிலம் முழுவதையும் இழக்க வேண்டியது முறைதான். ஆனால் அவன் உலாவரும்பொழுது அவனுடைய அழகிய மார்பினைக்கண்டு கைகுவித்து வணங்

இனி நானும், கையினால் எளிதாகக் கொய்யும்படியான அவ்வளவு மென்மையான மாந்தளிரைப்போன்ற என் உடம்பிலுள்ள நிறத்தை இழக்கப் பெறுவேனோ? இது முறையாகுமா? என்கின்றாள்.

(வி - ம்.) சில காலங்களில் பலரென்று அரசர்களுக்குள் மனமாற்றம் உண்டாகும்; உடனே போர் செய்யத் தொடங்குவார்கள். தம் அரசன் போருக்குச் வேற்று நாட்டுக்குப் போயிருக்கும்பொழுது, குடிகள் அவன் போரில் வெற்றி பெற்றுக்கொண்டு வரவேண்டுமென்று வாழ்த்திக் கொண்டே இருப்பார்கள்; அரசனும் வெற்றியுடன் திரும்புவான்; இவ்வாறு தன்னை எதிர்பார்த்துக்கொண்டிருந்த மக்கள் தன்னைக்கண்டு மகிழவேண்டுமென்று நினைத்து ஊர்வலம் வருவான்; இது பழைய கால வழக்கம்.

ஒரு முறை பாண்டியருள் இளங்கோ ஒருவன் முடி புனைந்து கொண்டு அரியணையேறி அரசாளத்தொடங்கினன்; அவனுடைய முன்னோர் காலத்தில் அடங்கி, ஒழுகிய சிற்றரசர்கள் பார்த்தார்கள். இவன் சிறுவன்தானே? என்று நினைத்துத் திறை செலுத்தாமலும், வந்து வணங்காமலும் இருந்தனர். உடனே பாண்டியன் சீற்றங்கொண்டு பெரிய மதயானைப் படைகளுடன் புறப்பட்டான். பகையரசர்களையெல்லாம் ஓடஓட அடித்து விரட்டி அவர்கள்தம் நிலங்களையெல்லாம் கைப்பற்றிக் கொண்டு வந்தான்; தன் வெற்றிச் செய்தியைக் கேட்ட மக்கள் தன்னைப் பார்த்தும் மகிழவேண்டுமென்று உடனே ஊர்வலம் வருகின்றான்.

ஒரு பருவமங்கை; அவளுடைய உடம்பு மாந்தளிரைப் போன்று பளபளப்பாக இருக்கின்றது; அழகும் வாய்க்கப் பெற்றவள்தான்; வீட்டினுள்ளிருந்து ஓட்டமாக ஓடிவந்து பார்க்கின்றாள்; மாற்றாரை யெல்லாம் மனங்கலங்கி ஓடும்படி செய்த மன்னனைக் கண்டு கைகுவித்து வணங்கினாள்; அவனும் அந்த வீதியைக் கடந்து சென்றான். உடனே வீட்டுக்குள் வந்தாள்; ஒரேயடியாகப் பாண்டியனை நினைந்து நினைந்து நெகிழ்ந்து உருகினாள்; மாந்தளிர் நிறமெல்லாம் எங்கேயோ போயிற்று; உடம்பெல்லாம் பசலை பூத்தது; முகத்தில் குறுமறுக்கள் கிளம்பின; இந்த நிலையில் மெதுவாக எழுந்து பக்கத்தில் இருக்கின்ற கண்ணாடியைப் பார்த்தாள்; அப்பொழுதுதான் தன் உடம்பின் நிறம், அழகு

இவற்றையெல்லாம் பாண்டியன் கவர்ந்துகொண்டு போயினான் என்பது தெரியவந்தது. தன் நெஞ்சொடு சொல்லிக் கொள்கின்றாள்; களிமயக்கமுள்ள யானைப்படையுடையவன் என்றுகூட நினையாமல் இகழ்ந்தார்களே. அந்தப் பகையரசர் தம் பார் முழுவதையும் இழந்தார்களென்றால் அதனால் குற்றமில்லை; அவர்கள் இவனை வணங்கவில்லை; அந்தக் குற்றத்திற்கு அது பொருந்தும். நான் நன்றாக் கைகுவித்து வணங்கினேனே! நானுமா இந்த அழகு, நிறம் இவற்றையெல்லாம் இழக்கவேண்டும்? இவற்றை அவன் கவர்ந்தது அவ்வளவு முறையான செயலல்லவே! என்று தலைவி நினைக்கின்றாள். பகையரசர்களுடைய நிலம் எவ்வளவு கோடி பெறுமதியானதோ அவ்வளவு பெறுமதியுடையதல்லவா! என்னுடைய மாமை நிறம். அந்த நிலத்தை இழந்து அவர்கள் தவிக்கும் நிலையா எனக்கும் வரவேண்டும்? என்று நினைக்கின்றாள் தலைவி.

தலைவியின் ஏக்கம், மயக்கம் இவையெல்லாம் பாட்டில் அமைந்திருக்கின்றன.

அணியாகம் - அழகிய மார்பு. களியானை - மதக்களிப்புள்ள யானை. நறுமா - நல்ல மணம் உள்ள மாமரம். கொய்தளிர் - கொய்யும் தன்மையுள்ள மாந்தளிர்.

எவ்வாறே?

கூ எ. கனவை நனவென் றெதிர்விழிக்கும் காணும்
நனவில் எதிர்விழிக்க நாணும்—புனையிழாய்
என்க ணிவையானல் எவ்வாறே மாமாறன்
தன்க ணருள்பெறுமா நான்.

(கு - பு.) தலைவி தோழி கேட்பச் சொல்லியது.

(இ - ள்.) நல்ல அணிகலன்களெல்லாம் அணிந்த தோழியே! என் கண்கள், பாண்டியனை நேரிற்காணச் செல்வி வாய்த்த போது அவனை நோக்கி விழிப்பதற்கு நாணுகின்றன. கனவிற் பாண்டியன் தோன்றும்போது கனவென்று நினையாமல் அவனை எதிரே நோக்கி விழிக்கின்றன. என் கண்களே எனக்குப் பகையாகத் தாறுமாறான செயல்களையெல்லாம் செய்யத்தொடங்கினால், பெருமை

பொருந்திய மாறனிடம் யான் அருள் பெறுமாறுதான் எந்த வழியாலோ? என்கின்றாள்.

(வி - ம்.) பாண்டியன் வீதிவழியாக உலா வருகின்றான்; அவனிடத்தில் காதல்கொண்ட நங்கை யொருத்தி "எப் பொழுது நம் கருத்தை அவனிடம் கண்ணாற் குறிப்பாக உணர்த்துவோம்" என்று நினைத்துக்கொண்டே இருந்தாள்; உடனே எழுந்து வந்து பாண்டியனைப் பார்க்கப் போகின்ற நேரத்தில் நாணம் வந்து குறுக்கிட்டதனால் தலையைக் கவிழ்ந்து கொண்டாள்; அதற்குள் பாண்டியனும் அந்த வீதியைக் கடந்து போயினன். பின்பு நிமிர்ந்து பார்க்கும் போது அவனைக் காணவில்லை; அதனால் அவள் மனம் வருந்தித் தன் கண்களையும் நாணத்தையும் நொந்துகொண்டு வீட்டுக்குள் வந்து கவலையுடன் படுக்கையிற்போய்ச் சாய்ந்தாள். ஓர் இரவுப்பொழுது ஓர் ஊழிக் காலமாகத் தோன்றுகிறது, உறக்கமும் வரவில்லை; இப்படிக் கழிகின்றபொழுது சிறிது உறக்கம் வந்து கண்ணைமெல்ல மூடிற்று; உடனே பாண்டியனும் கனவில் வந்து தோன்ற, நனவிலேதான் வந்திருக்கின்றானென்று நினைத்து அவளுடைய கண்கள் பலவகைக் குறிப்புகளை உணர்த்தின. தலைவியும் குற்றமில்லை, நம் கண்கள் கடமையைத் தவறாது செய்து முடித்தன; பாண்டியனிடத்தில் நம் கருத்தை உணர்த்தினோம்; இனி நம் செயல் நிறைவேறும் என்று நினைக்கின்றபொழுது பலீரென்று தூக்கம் கலைந்துபோயிற்று; உடனே அவள், ஐயையோ கனவல்லவா கண்டிருக்கின்றோம்? இந்தப் பாழான கண்கள் அவன் நேரே தோன்றும்போது, நாணிப் பின்வாங்கின; கனவில் பலவாறுக விழித்தன; விழித்தும் பயனில்லையே என்று விடியுமளவும் ஏங்கிக்கொண்டிருக்கின்றாள்; இரவும் ஒரு ஊழிக்காலம்போல நீங்கியபின்; அவளுடைய உயிர்த்தோழி வருகின்றாள்; என்ன செய்தி? நேற்றுப் பாண்டியன் வீதி வலம் வரும்பொழுது பார்த்தாயா? உன்னுடைய குறிப்பை உணர்த்தினையா? என்றெல்லாம் கேட்கின்றாள்; உடனே தலைவி சொல்கின்றாள்; என்ன பார்வை? இந்தக் கண்ணைக் கொண்டு; அவன் வந்தவுடனே நாணிக்கொண்டு கவிழ்ந்து விடுகின்றன; இரவு கனவைமட்டும் உண்மையாக நினைத்துக் கொண்டு விழிவிழியென்று விழிக்கின்றன; என்ன செய்யலாம்? என் கண்களே இவ்வாறு எனக்குத் தாறு

மாறுக நடந்தால் இனி அவன் கண் அருள் பெறுவது எப்படி? என்கின்றாள்.

மாமாறன் தன் கண் - பெருமை பொருந்திய பாண்டியனிடத்து. பாண்டியனுடைய கண்ணினிடத்து அருள்பெறுவது எவ்வாறு? என்றும் பொருள் கொள்ளலாம்; தோழி தலைவியினிடம் உன் கண்கள் அவனைச் சிறிது பார்த்துங் குறிப்பை உணர்த்தவில்லை என்கின்றாய், அவனுவது உன்னை நோக்கி ஏதாவது குறிப்பு உணர்த்தினானு? என்று கேட்க, அதற்குத் தலைவி "ஆமாம் என் கண்களே இவ்வாறானால் அவன் கண்கள் இரங்கவா செய்யும்? அவைகள் அவ்வாறு ஒன்றும் குறிப்பிடவில்லை; இந்தக் கண்கள் ஏதாவது குறிப்பித்தாலல்லவா அந்தக் கண்களின் அருட் குறிப்பைப் பெறலாம்; இவற்றினிடமே அருள் இல்லையே, அங்கே ஏது? என்றதாகக் கொள்க.

இவ்வாறுகத் தலைவி தன்னுடைய நாணத்தைக்கூடத் தன் கண்களிலேற்றிக் கூறுகின்றாள்; அவளுக்கு அவ்வளவு மயக்கம். புனையிழாய் - அணிந்த அணிகலன்களையுடைய தோழியே.

என் கண், தன் கண் என்ற முரண்தொடை செய்யுளின் இனிமையை மிகுதிப் படுத்துகின்றது. ஒன்றற்கு ஒன்று மாறுபட்ட சொற்கள் பாடலில் அமையின் அது முரண் தொடை எனப்படும்.

கைதிறந்து காட்டேன்

கூ அ. தளையவிழும் பூங்கோதைத் தாயரே! ஆவி [போம்
கிளையினுமென் கைதிறந்து காட்டேன்—வளைகொடு
வன்கண்ணன் வாண்மாறன் மால்யானை தன்னுடன்
தென்கண் புகுந்தா னிரா. [வந்

(கு. பு.) தலைவி செவிலித்தாய்களிடம் சொல்லியது.

(இ - ள்.) அரும்புக் கட்டு அவிழ்கின்ற பூமாலையை எனக்குச் சூட்ட வந்திருக்கின்ற தாய்மார்களே! என் வளையல்களைத் திருடிக்கொண்டு போகின்ற அஞ்சாதவனும் வாளாயுதத்தையுடையவனுமாகிய பாண்டியன் இரவு தன்னுடைய பெரிய மதயானையுடனே வந்து என் கண்ணுக்குள்ளே புகுந்துவிட்டான்; கண்ணைத்திறந்தால் ஓடிவிடுவான்; ஆத

லால் என் உயிரைக் கனைத்தாலுங்கூட திறந்து காட்டமாட்டேன்; என்கின்றாள்.

(வி - ம்.) ஒரு நங்கை பாண்டியன் வீதிவழியாக உலா வரும் பொழுது பார்த்தாள்; அன்றுமுதல் அவனிடத்தில் மிக்க காதல் கொண்டாள்; தோள்களெல்லாம் மெலியும் படியாக உருகினாள்; இந்த நிலையிலுங்கூட மாறனை மறக்கவேயில்லை; மாலைப் பொழுதில் தோட்டத்திற் போய் உலாவுகின்றாள்; இன்னும் தன் மெலிவு அதிகமாகின்றது; தன்னுடைய கை வளையல்கள் கழன்று கீழே விழுந்து தொலைந்தன; ஆதையுங்கூடக் கருதாமல் வீட்டுக்குச் சென்று இரவு உணவுகூட ஒழுங்காக உணணுமற் படுத்துக்கொண்டாள்; உறக்கம் வரவேயில்லை; நெடுநேரங் கழித்துச் சிறிது உறக்கம் வர உடனே பாண்டியனுங் கனவில்தோன்றி அவளுடைய கையைப் பிடித்து மெதுவாக வளையல்களையெல்லாம் கழற்றிக்கொண்டு போய் மறைந்தான்; உடனே விழித்துக்கொண்டு கையைத் தடவிப் பார்த்தாள்; வளையல் களைக் காணவில்லை; உண்மையாகவே பாண்டியன் வந்து வளையல்களைத் திருடிக்கொண்டு சென்றானென்றே நினைத்துக்கொண்டாள்; முதல் நாள் தோட்டத்தில் வளையல்கள் கழன்று விழுந்தது அவளுக்குத் தெரியாதல்லவா? பொழுதும் விடிந்தது; அவளை வளர்த்த செவிலித்தாய்கள் வந்து நீராட்டி நல்ல பூமாலைகளைச் சூட்டவேண்டுமென்று பார்க்கின்றார்கள்; தலைவியோ அவர்களைப் பார்த்துத் தன் குறையினைச் சொல்வாளாகித் "தாய்மாரே! இரவு அந்தப் பாண்டியன் வந்து என் கைவளைகளைக் கழற்றிக்கொண்டு சென்றான்" என்று சொல்லி வெறுங்கையைக் காட்ட அவர்களும் இவள் எதனாலோ மயங்கி இவ்வாறு சொல்கின்றாள் என்று கருதிக்கொண்டு ஒப்பனை செய்து தேர்தல் சொல்லிச் சென்றார்கள். பின்பு, அன்றைக்கு இரவு பாண்டியன் வீதிவழியாகப் பெரிய மதயானை மேல் ஏறி ஒருவாளும் கையிற் பிடித்துக்கொண்டு அஞ்சாத பெருமிதத் தோற்றத்துடன் உலாவந்தான். அந்த உலாக்காட்சியைத் தலைவி வந்து பார்த்தாள்; பின்பு அவள் சென்று துயிலும்போது பாண்டியன் பெரிய மதயானைமேல் ஏறிக் கையில் வாளும் பிடித்துக் கொண்டு பெருமிதத்துடன் வந்து தன் கண்ணுக்குள் நுழைந்ததாகக் கனவுகண்டு அதனை நனவென்று கருதி, ஏ கண்வழி நுழையுங் கள்வா! அன்று வளையல்களைத் திருடிக்

கொண்டு ஓடிச்சென்றனையே! இன்றைக்கும் ஓடலாமென்று நினையாதே; உன் வாளுக்கெல்லாம் அஞ்சேன்; உன்னுடைய யானையையும் விடேன்; என்று சொல்லிக் கண்ணைச் சிக்கென்று கையினுற் பொத்திக்கொண்டாள்; பொழுதும் விடிந்தது; முதல் நாளைப்போல செவிலியர்கள் வந்து நங்காய்! இந்தப் பூமாலையை அணிந்துகொள்; ஏன் முகத்தை மூடிக்கொண்டு இருக்கின்றாய்? என்று கேட்க அதற்குத் தலைவி, தாய்மாரே! அன்று என் வளையல்களைத் திருடிக்கொண்டு ஓடிய கள்வன் இரவு பெரிய யானையுடனே வந்து என் கண்ணுக்குள்ளே புகுந்தான்; ஆதலால், என் ஆவியைக் களைந்தாலுங்கூட யான் கையைத் திறவேன் என்று சொல்கின்றாள்; காதல் மயக்கம் மிகுந்த நிலையில் கனவுகூட அவளுக்கு உண்மையாய்த் தோன்றுகின்றது. அதனால் இவ்வாறெல்லாம் சொல்கின்றாள்; மயக்கமான உணர்ச்சி பாடலில் நிறைந்திருக்கின்றது. தனையவிழும் பூங்கோதையை அணிந்த தாயர் என்று உரைப்பினும் அமையும்.

"வன்கண்ணன் வாண்மாறன் மால்யானை தன்னுடன் வந்து" என்பதில் மாறனுடைய பெருமிதம் தோன்றுகின்றது; "வன்கண்ணன் என் கண்ணுக்குள் புகுந்துவிட்டான்' என்பது இனிமையாக அமைந்திருக்கின்றது.

பாட்டில் மாறனுடைய பெருமிதமும் கள்வனைப் பிடித்த நங்கையின் பெருமிதமும் மயக்கமும் கலந்து விம்மிச் சுவையை மிகுதிப்படுத்துகின்றன.

இப்பாடலைத் திரும்பத் திரும்பச் சொல்லிச் சொல்லி அதன் சுவையை யுணர்க.

மால்யானை - பெரிய மதயானை. இரா - இரவு. தனைய விழும் பூங்கோதை - அரும்புக் கட்டு அவிழ்ந்த பூக்களாற் கட்டிய மாலை. வன் கண்ணன் - அஞ்சாதவன். மாறன் - பாண்டியன். ஆவி - உயிர். வளை கொடுபோம் - வளையலைத் திருடிக்கொண்டுபோகிற.

நல்வினை யொன்றில்லேன்

நகை. ஓராற்றான் என்கண் இமைபொருந்த அந்நிலையே
கூராழிவேல் மாறன்என் கைப்பற்ற—வாரா
நனவென் றெழுந்திருந்தேன் நல்வினையொன் றில்
கனவும் இழந்திருந்த வாறு. [லேன்

(கு - பு.) தலைவி தோழியினிடம் சொல்லியது.

(இ - ள்.) தோழி! இரவு நெடுநேரம் வரை தூக்கமே வரவில்லை; பின்பு ஒருவழியால் என் கண் இமை சிறிது பொருந்த, அவ்வளவில் கூரிய வேற்படையையுடைய பாண்டியன் வந்து என் கையைப் பற்ற, உடனே அதைக் கனவென்று நினையாமல் உண்மையாகவே நனவிலேதான் பாண்டியன் வந்து கையைப் பிடிக்கின்றனென்று நினைத்து எழுந்திருந்தேன்; அவனைக் கனவிற்கூட அணையும் நல்வினையில்லாத யான், அந்தக் கனவையும் இழந்து ஏமாந்து திகைத்து இருந்த இந்த முறை எந்தத் தீவினையினாலாயிற்றோ? என்கின்றாள்.

(வி - ம்.) ஒரு நங்கை வழுதியினிடம் விருப்பம் வைத்திருந்தாள்; அதனால் இரவு நெடுநேரம் தூக்கம் வராமல் அங்குமிங்கும் புரளுகின்றாள்; இப்படிச் சிறிது நேரம் கழிந்த பின்பு, ஒருவகையாகச் சிறிது தூக்கம் வந்து கண்ணிமையைச் சிறிது மூடிற்று; உடனே பாண்டியன் வந்து கனவில் தோன்றி மெள்ள மெள்ள வந்து கையைப் பிடிக்க உடனே தலைவி அதனை உண்மையாக நினைத்து எழுந்து பார்த்துப் பாண்டியனைக் காணுமல் ஐயையோ! கனவல்லவா கண்டிருக்கின்றோம்; நனவென்று நினைத்ததனால் கனவையுங்கூட இழந்துவிட்டோமே; அவனைக் கூடுவதற்குத்தான் நல்வினை செய்திலேன். இந்தக கனவையும் இழப்பதற்கு என்ன தீவினை செய்தேன்? என்று நினைத்து ஏங்குகின்றாள். இவ்வாறு விடியுமளவும் ஏங்கிக்கொண்டே இருக்கின்றாள்; விடிந்த உடனே உயிர்த் தோழி வந்து ஏன் இவ்வாறு தளர்ந்து இருக்கின்றாய்? உள்ளதைச் சொல்; என்னிடம் சொல்லக்கூடாதா? என்றிவ்வாறெல்லாம் கேட்க, உடனே தலைவி சொல்கின்றாள்: "தோழி! இரவு முழுவதும் தூக்கமே வரவில்லை; எப்படியோ ஒருவழியாகச் சிறிது தூக்கம் வந்தது; உடனே கனவில் பாண்டியன் வந்து என் கையைப் பிடித்தான்; நான் ஒன்றுஞ் செய்யாமலாவது இருந்தேனா? இருந்தால் ஒரு துன்பமும் வராதே. நான் அவன் உண்மையாகவே வந்து பிடிக்கின்றான் என்று நினைத்து எழுந்தேன்; அவனைக் காணேம்; கனவையும் இழந்துவிட்டேன்; நல்வினை செய்யாத யான் என்ன தீவினை செய்தேனோ? இப்படி யெல்லாம் துன்பப்படுகின்

றேன் ; என்று தன் ஆற்றுமையைத் தோழியினிடம் கூறுகின்றாள்.

"நனவெனப் புல்லுங்காற் காணலாய்க் கண்டது
கனவென உணர்ந்துபின் கையற்றுக் கலங்குமே"

"நனவில் வாரா நயனி லாளனைக்
கனவிற் கண்டியான் செய்தது கேளினி"

"கனவினுற் கண்டேன் தோழி காண்டகக்
கனவின் வந்த கானலஞ் சேர்ப்பன்
நனவின் வருதலும் உண்டென
அனைவரை நின்றதென் அரும்பெற லுயிரே"

என்பது கலித்தொகை.

கனவும் இழந்திருந்த வாறு - கனவும் என்பதில் உம்மை இழிவு சிறப்பு ; நனவின் நிலையை நினைக்கும்போது கனவு இழந்ததாயிருப்பினும் அதனையுங்கூடப் பெருமல் இழந்து விட்டேனே என்று ஏங்குகின்றாள். நல்வினையில்லாத எனக்கு நனவிற் கூட்டம் கிடைக்கவில்லை. அதற்கு ஏற்ற நல்வினை முன்னைப்பிறவியிற் செய்திருந்தாலன்றே கிடைக்கும்? என்று நினைக்கின்றாள். கனவும் இழந்திருக்கும்படியாக என்ன தீவினை செய்தேனே? என்று மூடித்துக் கொள்க. இழந்திருந்த என்பதில் இருந்த என்பது இழந்ததோடு அமையாது விடியுமளவும் தூங்காமல் ஏங்கிக் கொண்டு இருந்ததைக் குறிப்பிடுகின்றது ; வாரா - என்பது செய்யா என்னும் வாய்பாட்டு வினை எச்சம் ; வந்து என்பது பொருள்; "கூரார் வேல் மாறன் வாரா என் கைப்பற்ற" என்று கூட்டுக. கூரார்வேல் - கூர்மை பொருந்திய வேல். நனவு - விழிப்பு. ஓராற்றால் - ஒரு வகையால்.

திரைவரவும் உரைவரவும்

சo. உகுவாய் நிலத்த துயர்மணல்மேல் ஏறி
நகுவாய்முத் தீன்றசைந்த சங்கம்—புகுவான்
திரைவரவு பார்த்திருக்குந் தென்கொற்கைக் கோமா
உரைவரவு பார்த்திருக்கும் நெஞ்சு. [ல்

(சு - பு.) பாண்டியனிடம் மனத்தைத் தூதாக விடுத்துக் குறியிடத்திலிருக்கின்ற தலைவி மனத்தொடு கூறியது.

(இ - ள்.) கடலின் அலைகள்வந்து மோதுகின்றதனாலே இடிந்து மணல்கள் கீழே சொரிந்து உதிரும்படியான விளிம்பினை உடைய, கடற்கரை நிலத்தினது உயர்ந்த மணல்மேட்டில், விரைந்து வந்து கரையில் மோதுகின்ற பெரிய அலையின் துணைகொண்டு வந்து ஏறி, ஒளிவிட்டு விளங்குதல் வாய்ந்த முத்தை யின்றுவைத்துச் சிறிது தூரம் போய்த் தளர்ச்சியோடு தங்கியிருக்கும் சங்கு, கடலினுள்ளே போவதற்கு மற்றொரு பெரிய அலையின் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்; அதுபோல 'வளப்பமான கொற்கைப் பதியை ஆளுகின்ற பாண்டியனுடைய கட்டளைச் சொல்லின் வரவு எப்பொழுது வரும நாம் போய் அவனிடம் தலைவியின் குறையைக் கூறுவோம்' என்று நினைத்துக் கொண்டு அவனுடைய அரண்மனை வாசலிலேயே என் மனம் காத்துக்கொண்டிருக்கும், என்று தலைவி தனக்குள்ளே சொல்லிக்கொள்கின்றாள்.

(வி - ம்.) கொற்கை ஒரு கடற்கரைப் பட்டினம்; அஃது எப்பொழுதும் பாண்டியருடைய ஆட்சிக்குள்ளேயே இருந்தது; முத்துக்குளித்துப் பெரும்பொருள் திரட்டுவதற்கு அது ஏற்ற இடம். அங்கே ஒரு நாள் பாண்டியன் வருகின்றான்; பார்க்கின்றாள் ஒரு நங்கை; அவனுடைய பெருமிதத் தோற்றம், மார்பில் ஒளிரும் மணி முத்தாரம் இவையெல்லாம் அவள் உள்ளத்தைக் கவர்ந்தன: அவனிடத்தில் மிக்க காதல் கொண்டாள்; அவன் அணிந்திருக்கும் முத்துக்குக் கிடைத்திருக்கும் தன்மை நமக்கு எப்பொழுது கிடைக்குமென்று எண்ணிக்கொண்டேயிருக்கின்றாள்; இந்த எண்ணமும் மிகுதியாக வளர்ந்தது; ஓர் அருமையான சோலை கடற்கரையோரமாக இருக்கின்றது; இருள்தான் அங்கே குடிகொண்டிருக்கின்றது; வெயில் நுழையாச் சோலை அது; தலைவியினுடைய மனம் காதல் வேட்கையினால் நொந்தது தலைவியை அழைத்துக் கொண்டு அந்தச் சோலைக்கு வந்து சேர்ந்தது. தலைவி அந்த இடத்தில் தனிமையாக இருந்து கொண்டு இது பாண்டியனைக் கூடுவதற்கு நல்ல தனித்த குறியிடமல்லவா? என்று நினைத்தாள்: அவள் மனமும் தன் வேலையைப் பார்க்கத் தொடங்கித் தலைவியை நோக்கி நீ இங்கேயே இரு; நான் போய்ப் பாண்டியனை அழைத்துக்கொண்டு வருகின்

றேன் என்று கூறி, மன்னன் அரண்மனை வாயிலை நோக்கிச் சென்றது. நெடுநேரம் போய்ப் பாண்டியனுடைய வாசலிலே காத்துக்கொண்டிருக்கின்றது; உள்ளே பாண்டியன் இருக்கின்றான்; "வெளியே நிற்பவர்கள் வந்து தங்கள் குறைகளைச் சொல்லிக்கொள்ளலாம்" என்று அரசன் விடை கொடுத்தாலன்றி வெளி வாசலில் காத்திருப்பவர்கள் உள்ளே செல்ல முடியாது; அவன் விடையின்றி உள்ளே போனால், மேட்டு நிலத்தில் முத்தின்று வைத்திருக்கின்ற சங்கு அலையோடு போகாமல் தானாகக் கடலினுட் போனால் எப்படி மணலில் விழுந்து உருண்டு புரண்டு தவிக்குமோ அவ்வாறு தவிக்கவும், அது எவ்வாறு மறுபடியும் சில அலையால் எறியுண்டு கரை சேருமோ அதுபோல் அரசனுடைய வேலையாளால் தள்ளப் பட்டு வெளிச் செல்லவும் நேரிடும்; இதற்காக அந்த மனம் பாண்டியனுடைய வாசலில் நெடுநேரம் அவன் உரையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றது; இங்கே சோலையிலிருக்கும் தலைவி கடற்கரையை எட்டிப் பார்த்தாள். ஒரு பெரிய அலை ஓஓ வென்று இரைந்துகொண்டு அவள் இருக்கும் சோலையைக்கூட விழுங்குவதுபோல வந்தது; வந்து மேட்டு நிலத்தில் மோதிவிட்டுப் பின்வாங்கிவிட்டது; பின்பு பார்க்கின்றாள்; ஒரு பெரிய சங்கு மணல் மேட்டில் கிடக்கின்றது; அது வயிறு உளைந்து நெளிந்து ஒரு முத்தை யீன்று அந்த மணல் மேட்டில் வைத்துவிட்டுப் பின்பு மெதுவாகப் பெயர்ந்து அந்த மணல் மேட்டின் விளிம்புக்குச் சென்றது; சிறு அலை வந்து மோதுகின்றது கடற்கரை விளிம்பிலிருந்து கடலுக்குள் மணல் உதிருகின்றது; இன்னும் ஒரு பெரிய அலைவந்தால் அதனோடு நாம் கடலுக்குள்ளே போய்விடலாமென்று நினைத்துச் சங்கு எதிர்பார்த்துக்கொண்டே யிருக்கின்றது. இவற்றையெல்லாம் பார்த்தாள் தலைவி; நினைக்கின்றாள்; மேட்டிலிருக்கின்ற முத்து பாண்டியனுடைய மார்பில் அணியாக விளங்குவதற்கு இருக்கின்றது; நாமும் அவனுடைய மார்பில் அணியாக விளங்க இருக்கின்றோம். கடல் அலையின் துணைகொண்டு சங்கு இந்த மேட்டில் வந்து ஏறி முத்து ஈன்றது. நம் மனமும் ஆசையாகிய கடல் அலையின் துணைகொண்டு இங்கே வந்து நம்மை இந்த மேட்டில் இருக்கச் செய்திருக்கின்றது. அந்தச் சங்கு போய்க் கடற் கரையின் விளிம்பிலிருந்துகொண்டு இன்னும் ஒரு பெரிய அலையை எதிர்பார்க்கின்றது; நம் மனமும் பாண்டியனுடைய

அரண்மனை வாசலிற் போய் நின்றுகொண்டு அரசனுடைய உரை வரவை எதிர்பார்க்கிறது. இந்தச் சங்கு எவ்வாறு அலையின் வரவை எதிர்பார்த்துக்கொண்டு தளர்ந்திருக்கின்றதோ அப்படித்தானே நம் மனமும் பாண்டியனுடைய வாசலில் ஏங்கிக்கொண்டு தளர்ந்து அவனுடைய உரை வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் என்று நினைக்கின்றாள்; அவளுடைய உள்ளமாகிய உலகத்தில் புலவர் புகுந்து "பெண்களின் மனத்தை அறியமுடியாது" என்பவர் உரையையும் பொய்யாக்கி அவள் நினைவைப் பாட்டில் அமைத்து உயிர் கொடுத்து "என்றென்றும் உலகத்தில் நிலைத்திருந்து பாடலின் சுவையுணர்வார்க்கு இன்பம் கொடு" என்று கட்டளையிட்டு நம்மிடத்தில் தந்தருளினர்.

"புகுவான்,
திரைவரவு பார்த்திருக்குந் தென்கொற்கைக் கோமான்
உரைவரவு பார்த்திருக்கும் நெஞ்சு"

என்ற பகுதி பாடப்பாட மனத்தைக் கனியச் செய்கின்றது.

உகுவாய் - மணல் உதிருகின்ற கடற்கரை விளிம்பு. நகுவாய் முத்து - நகுதல் (ஒளிவிட்டு விளங்குதல்) வாய்ந்த முத்து. புகுவான் - கடலினுள்ளே புகும் பொருட்டு. திரை - அலை. திரைந்து திரைந்து வருவதால் திரையெனப் பெயர் பெற்றது.

பாண்டியன் இப்பொழுது வந்தால் நம்மையும், இந்த முத்தையும் பெறுவானே; வரவில்லையே; என்று தலைவி நினைக்கின்றாள்.

மாறடுபோர் மன்னர்

சுக. மாறடுபோர் மன்னர் மதிக்குடையுஞ் செங்கோலுங்
கூறிடுவாய் நீயோ! குளிர்வாடாய்!—சோறடுவார்
ஆரத்தால் தீமூட்டும் அம்பொதியிற் கோமாற்கென்
வாரத்தால் தோற்றேன் வளை.

(கு - பு.) தலைவி குளிர்வாடையை நட்பாக்கிப் பாண்டியனிடம் தூதுவிட்டது.

(இ - ள்.) நீயா! நான் வேறு யாரோ வென்றல்லவா நினைத்தேன்; குளிர்ந்த வாடையே! நீ தெற்கே போகின்ற

யல்லவா? அங்கே சோறு பொங்குகின்றவர்கள் சந்தனக் கட்டைகளாலே தீ மூட்டுவார்களே அந்த அழகிய பொதிய மலைத் தலைவனுகிய பாண்டியனிடம் யான் வைத்த அன்பி னுலே என் வலையிலே தோற்றேன். "பகைவர்களைக் கொல்லுகின்ற போர்வலியுள்ள அரசர்களுடைய திங்கள் போன்ற வெண் கொற்றக் குடையின் தகுதிக்கும், செங் கோல் முறைமைக்கும் அன்பு செலுத்தும் ஒரு பெண்ணை வருந்த விடுவது தகுமா?" என்று சொல்லிவிடு; என்கின் றுள்.

(வி - ம்.) வாடைக்காலத்தையும் பொருட்படுத்தாமல் மலைவளம் பார்க்கவேண்டும் என்று நினைத்துப் பலர் தம் குடும்பத்துடனே சென்று மலை வள்ளத்தையும், இயற்கை யழகையுங் கண்டு மகிழ்ந்து பின்பு சோறு பொங்கத் தொடங்கிக் காய்ந்த சந்தனச் சுள்ளிகளைப் பொறுக்கிக் கொண்டு வந்து அடுப்பில் வைத்துத் தீ மூட்டினர்கள். அத னுல் எங்கும் சந்தன நறுமணங் கமழ்ந்தது; இவ்வாறு, நறுமணத்துடனே சோறு பொங்கி உண்டு உலவும்பொழுது பாண்டியனும் அங்கே வருகின்றன்; தன் கூட்டத்துடனே வந்து மலையில் தனக்கென்று அமைத்திருக்கும் இடத் திற்குப் போகின்றன்; ஒரு நங்கை பார்க்கின்றுள்; ஆ! இந்த மலைக்கு இவன்தானே தலைவன்; எவ்வளவு அழகு உடையவனுக இருக்கின்றன்; என்று நினைத்தாள்; அவனைக் கண்டதும் இவளுடைய உள்ளம் திகிரென்று கலங்கியது. அவன் தோற்றம் மின்னல் தோன்றி மறைந்ததுபோல இருந்தது; அவனுடைய மார்பு, அணிகள் இவைகளை மறக்க முடியவில்லை; காதல் வளரத் தொடங்கியது. உணவும் ஏற்கவில்லை; வாடையோ எலும்பைத் துளைக்கின்றது; பார்த்தாள்; சந்தனக் கட்டை வைத்துத் தீமூட்டி யிருக்கின்ற இடத்திற்போய் இருந்துகொண்டு குளிர்காய்ந்து வாடை யைப் போக்கினுள்; பின்பு எல்லோரும் வீட்டுக்குச் சென் றுர்கள்; காதல் வளர வளர அவள் உடம்பு உருகி மெலிந்தது. இந் நிலையில் அவள் பின்வாசல் தோட்டத்திற் போய் உலா வும்பொழுது மனம் வேறு ஏதோ ஓர் உலகில் இயங்கிக் கொண்டு இருந்தது. கைவளையல்கள் கழன்று விழுந்து தொலைந்தன; அதையுங்கூட அறியாமற் போய்ப் படுத்துக் கொண்டாள்; தூக்கம் நெடுநேரம் வரையில் வரவில்லை;

பின்பு சிறிது வந்து எட்டிப் பார்த்தது; பாண்டியனும் கனவில் வந்து வலையல்களைக் கழற்றிக்கொண்டு மறைந்தான். விழித்தாள்; வலையல்களைக் காணேம்; ஆ! வலையல்களைக் கழற்றிக்கொண்டு அல்லவா மறைந்தான்; நான் அன்பு வைத்திருந்ததினாலேதானே இவ்வாறு நேர்ந்தது; என்று நினைக்கின்றாள்; மூதலில் தூக்கம் வருவது எளிதுதான்; ஆனால் காதல் கொண்டவர்களுக்கு அவ்வளவு எளிதில் வராது; தூக்கம் வந்து கலைந்தாற் பின்பு தூக்கம் வருவது மிகவும் அரிது; அவள் மனம் எங்கேயோ உலாவுகின்றது; குளிர்ந்த வாடைக் காற்று வந்து துன்புறுத்துகின்றது; அதைக்கூட அறியாமல் இருக்கின்றாள்; இன்னும் வாடை அதிகமாக மோதுகின்றது; மனம் இந்த உலகத்திற்குச் சிறிது திரும்பி வருகின்றது; என்ன இது; இவ்வாறு துன்புறுத்துகின்றது; என்று அறிவு தெளிந்தவுடன் பார்க்கின்றாள்; வாடைக் காற்று; உடனே வாடையை நட்பாக்குகின்றாள்; நல்ல தூது கிடைத்தது என்று வரவேற்கின்றாள்; ஓ! நீயா? நான் யாரோ வென்றல்லவா நினைத்தேன்; வா; என்ன குளிர்ச்சி; குளிர்வாடாய்! தென்மலைக்குப் போகின்றாயல்லவா? சோறு சமைக்கின்றவர்கள் சந்தனக் கட்டையினால் தீ மூட்டுவார்களே அந்தப் பொதியமலைத் தலைவனிடம் வைத்த அன்பினால் வலையல் தோற்றேன். நீ போய்ச் சொல்; என்ன இது? உங்களுடைய வலிமையைப் பகைவரிடத்திலேதான் காட்டவேண்டும்; அன்புகொண்ட ஒரு பெண்ணினிடம் காட்டலாமா? உங்களுடைய குடையின் தண்மைக்கும், செங்கோலின் செம்மைக்கும் இது தகுமா? என்று சொல்லிவிடுவாய் வாடையே; மறந்துவிடாதே; என்கின்றாள்.

நீயோ! குளிர் வாடாய்! என்பதில் தலைவியின் மனம் வேறு உலகிலிருந்து திரும்பிவந்து, வாடையை உணர்ந்து நீயோ? என்று சொல்லி வரவேற்று நட்பாக்குதலை உணர்க.

வாடை யடித்த உடனே ஆரத்தால் தீ மூட்டின இடத்தில் குளிர் காய்ந்தது தலைவிக்கு நினைவுக்கு வருகின்றது; மிகவும் திறமையாகப் பேசித் தலைவி வாடையைத் தூதாக விடுகின்றாள்; "மரக்கண்ணே மண்ணுள்வார் கண்ணென்றிரக் கண்டாய்" (முத்.) என்று ஒருத்தி நெஞ்சுக்குச்

சொல்லிவிட்டதுபோல", "மாறடு போர் மன்னர் மதிக் குடையும் செங்கோலும், கூறிடுவாய்" என்று வாடையி னிடம் சொல்லிவிடுகின்றாள்; "மண்ணாள்வார்" "மாறடு போர் மன்னர்" என்று, அரசனிடம் கூறும்போது பன்மைச் சொல்லாகச் சொல்லவேண்டுமென்று தலைவி கூறுகின்றாள்; "அம்பொதியிற் கோமான்" என்று தான் ஒருமையாகக் கூறினாலும், அவன் நேரில் பன்மையாகக் கூறவேண்டு மென்பது கருத்து.

மாறடு போர் மன்னர் என்பது பகையைக் கொல்கின்ற ஆண்மைக்கு அன்புகொண்ட பெண்ணின் வாயைக் கவர் தல் எவ்வளவு முரண்பாடான செயல்? இது தகாது; என்ப தைக் குறிக்கின்றது.

மாறு அடு - பகையை அழிக்கும்; மதிக்குடை - திங்கள் போன்ற குடை. அடுதல் - அழித்தல். ஆரம் - சந்தனம். வாரம் - அன்பு.

நகுவாரை நாணி

சூ. புகுவார்க் கிடங்கொடா போதுவார்க் கொல்கா
நகுவாரை நாணி மறையா — இகுகரையின்
ஏமான் பிணைபோல நின்றதே கூடலார்
கோமான்பின் சென்றவென் னெஞ்சு.

(கு - பு.) வழுகியின்பால் மனம் போக்கிய மங்கை, அதன் நிலைமையைத் தோழியிடம் சொல்லியது.

(இ - ள்.) தோழி! மதுரையார் மன்னன் பின்னாலே தொடர்ந்துபோன என் மனம், அவன் அரண்மனை வாசலின் இடப் பக்கத்திலே போய் நின்றுகொண்டு, உள்ளே அரி யணையில் இருக்கும் பாண்டியனைப் பார்ப்பதற்காக வெளியி லிருந்து உள்ளே செல்வோருக்கு இடங்கொடுத்து உள்ளே யிருந்து வெளியே வருபவருக்கு வழிவிட்டு விலகி, அரசன் தனித்திருக்கும் செவ்வி பார்த்துக்கொண்டு வேனில்வேள் எய்த அம்பு தன்மேல் பாய்ந்து உள்ளேயே இருப்ப, அந்த நோவுடனே தன்னைப் பார்த்து இரங்காமல் சிரிக்கும் இயல்பு உள்ளவர்களைக் கண்டு நாணிக் கதவின் ஓரத்தில் மறைந்துகொண்டு, தாண்டிச் செல்லக்கூடிய நீர்க்கரையில், வேட்டுவனால் எய்யப்பட்ட அம்பு தைத்து உடம்பினுள்ளே

இருப்ப, அதனால் வருகின்ற நோவையும் பொறுத்துக் கொண்டு, போகின்றவருக்கும் வருகின்றவருக்கும், இடங் கொடுத்துத் தன்னைப் பார்த்துச் சிரிக்கும் இயல்பு உள்ள வர்களு நாணி இடப் பக்கத்திலுள்ள புதரில் மறைந்து வருந்துகின்ற பெண்மானைப் போல என் மனம் நிற்கின் றதே என் செய்வேன்? என்கின்றாள்.

(வி - ம்.) பாண்டியன் உலா வருகின்றான்; பார்க்கின் றாள் ஒரு நங்கை; உடனே காதல் கொள்கின்றாள்; மன்மத னுகிய வேட்டுவன் அம்பு எய்துகொண்டே யிருக்கின்றான்; பாண்டியன் மட்டும் அத்த அம்புக்கு இலக்காகாமல் தன் அரண்மனைக்குப் போய்ச் சேர்ந்தான்; இந்த நங்கையின் மனத்தில் மன்மதனுடைய அம்பு நன்றாகத் தைத்துத் தங்கி யது. இனிமேல் இங்கே நின்றால், இந்தத் தீய வேடன் மன்மதன் நம்மைக் கொன்றுவிடுவான்; ஓடிவிட வேண்டி யது தான்; என்று அவள் மனம் நினைக்கின்றது. தலைவியும் போ; போ; ஓடு; என்று சொல்லிவிட்டாள்; பாண்டியன் பின்னாலேயே போகின்றது; அரண்மனை வாசலுக்குப் போன உடனே அங்கே உள்ள கூட்டத்தின் மிகுதியால் உள்ளே போக முடியவில்லை; உடனே இடப் பக்கத்துக் கதவுப் பக்கத்தில் ஒன்றிக்கொண்டு நிற்கின்றது; அரசனை உள்ளே இருக்கின்றான்; பலர் பல காரியங்களைப்பற்றிச் சொல்கிறார்கள்; அவற்றிற்கெல்லாம் மறுமொழி சொல் கின்றான். மனம் மெதுவாக எட்டிப் பார்க்கின்றது; கூட் டம் குறையவில்லை. பாண்டியன் எப்பொழுது தனித்து இருப்பான்? தலைவியின் நிலைமையைக் கூறுவோம்; என்று நினைத்துக்கொண்டு உள்ளே சுரிப்பதும் பழையபடி எட்டிப் பார்ப்பதும் தொழிலாக நிற்கின்றது; உள்ளே போகின்ற வர்களுக்கு ஒரு தடையும் செய்யாமல் இடம் விடுகின்றது; உள்ளே யிருந்து வெளியே வருகின்றவர்களுக்கும் இடம் விடுகின்றது, "இது என்ன? ஏ! இதைப் பார் அம்பு தைத்துச் செருகிக்கொண்டு இருக்கின்றது; அதனுடனே வந்து நிற்கின்றதே" என்று சொல்லி அதைப் பார்த்துச் சிரிக்கும் இயல்பு உள்ளாரைக் கண்டு நாணிக் கதவின் பக்கத்தில் போய் மறைகின்றது; இதையெல்லாம் அகக் கண்ணாலே நோக்குகின்றாள் தலைவி: மற்றொரு நிகழ்ச்சி அவள் நினைவுக்கு வருகின்றது;

ஒரு பெரிய காடு; அதன் மேற்பகுதியில் வடக்கே யிருந்து தெற்கே நோக்கி ஒரு நீரோடை ஓடுகின்றது; அந்த நீரோடையில் இறங்கினால் வெள்ளம் ஆளை இழுத்துக் கொண்டு போய்விடும்; ஒரே ஓர் இடத்தில் தாண்டிப் போகும்படியாக ஓடையின் இருபக்கமும் பாறை நெருக்கிக் கொண்டு இருக்கின்றது; எல்லோரும் அதைத் தாண்டித் தான் மேற்கே போவார்கள். கிழக்கே வருகின்றவர்களும் அதைத் தாண்டித்தான் வருவார்கள்; அந்தக் காட்டில் மான் முதலிய விலங்கினங்கள் வாழ்கின்றன; ஒருநாள் வேடர்கள் அந்தக் காட்டின் கிழக்கிலும் வடக்கிலும் தெற் கிலும் வந்து சூழ்ந்துகொண்டு விலங்கினங்களைக் கலைத்து வேட்டையாடத் தொடங்கினர்கள்; மான்களெல்லாம் கலைந்து ஓடுகின்றன; ஓர் ஆண் மானும் அதனிடம் காதல் கொண்டுள்ள பெண் மானும் புதரிலிருந்து எழுந்தன; பார்த்துவிட்டான் வேடன்; உடனே அம்பை எடுத்து வில்லில் வைத்துத் தொடுத்து எய்தான்; குபீரென்று அம்பு போய்ப் பெண் மானின் மேலே பாய்ந்து உள்ளே புகுந் தது; ஆண் மான் மேற்கு நோக்கி ஓடி அந்தத் தாண்டு கரையின் வழியாகத் தாவிப் போய் ஓடைக்கு மேற்கே யுள்ள காட்டினுள் மறைந்து கொண்டது; பெண் மானும் ஓடி வேடன் கண்ணுக்குத் தப்பித் தாண்டு கரைக்குப் பக் கத்தில் வரும்போது காலனைப்போல மேற்கே யிருந்து சிலர் வந்து சேர்ந்தார்கள்; அவர்கள் தாண்டிப் போனபின் நாம் போவோம் என்று நினைத்து இந்த மான் அந்தத் தாண்டு கரையின் இடப் பக்கத்திலுள்ள புதரில் மறைந்து கொண்டது: அவர்கள் தாண்டிக் கிழக்கே வந்தபின் கிழக்கிலிருந்து மேற்கே போவதற்குச் சிலர் வந்தார்கள்; அவர்களும் போயின பின்புதான் போகவேண்டுமென்று நினைத்துக்கொண்டு பின்னும் மறைந்து இருக்கின்றது; பின்னும் இரக்கமில்லாத சிலர் வருகின்றார்கள்: இவர்கள் நம்மைப் பார்த்துச் சிரிக்கும் இயல்பு உள்ளவர்களல்லவா? என்று நினைத்துக்கொண்டு மான் நாணி மறைந்துகொண்டு நிற்கின்றது; அம்பு தைத்த வாய்வழி இரத்தம் வடிகின் றது; நோவும் வளர்கின்றது; அதனுடன் அந்த மான் நின்று உலைகின்றது; இந்த நிகழ்ச்சிதான் தலைவிக்கு நினை வுக்கு வந்தது; ஆ! இந்த மானைப்போல் அல்லவா நம் முடைய மனமும் நின்று உலைகின்றது; நம்முடைய மனத்

திலும் மன்மதன் எய்த அம்பு தைத்திருக்கின்றது என்று நினைக்கின்றாள்; தன் உயிர்த் தோழி வருகின்றாள்; அவளிடம் கூறுகின்றாள்; 'தோழி கூடலார் கோமான் பின் சென்ற என்னெஞ்சு ஏமான் பிணைபோ லல்லவா நின்று உளைகின்றது' என்கின்றாள்.

புகுவார்க்கு - அரண்மனைக்கு உள்ளே போகின்றவர்களுக்கு. இடங்கொடா - இடங்கொடுத்து. கொடா - கொடுத்து. இது செய்யா என்னும் வாய்பாட்டு வினை எச்சம். போதுவார்க்கு - அரண்மனையினுள்ளே யிருந்து வெளியே வருபவர்க்கு. ஒல்கா - ஒல்கி. இதுவும் செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம், நகுவாரை நாணி மறையா - தன்னைப் பார்த்துச் சிரிக்கும் இயல்பினரைக் கண்டு நாணிக் கதவின் பக்கத்தில் மறைந்து; மறையா - மறைந்து. இதுவும் செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். இந்த எச்சம் மூன்றும் உணர்ச்சியை அதிகப் படுத்துகின்றன.

> "மக்களைமுன் காணா மனநடுங்கா வெய்துயிரா
> புக்கெடுத்து வீரப் புயத்தணையா"

என்பதையும் உணர்க.

இகுகரை - தாண்டிச் செல்லக்கூடிய கரை.

ஏமான் :—ஏ - அம்பு. வேடனால் எய்யப்பட்ட அம்பு ஏவுண்ட மான். பிணை - பெண்மானைப் பிணை என்பது மரபு.

> "தாமரைபோல் வாண்முகத்துத் தையலீர் காணீரோ
> ஏமரை போந்தன ஈண்டு"

என்பது திணைமாலை நூற்றைம்பதிலுள்ள முதற்பாட்டின் பிற்பகுதி.

> "இன்ன காட்டிலே மான்பேடை ஏவுடனே கிடந்து உழையா நின்றது, என்று ஊரிலே வார்த்தையானால், எய்தவன்கை உணராதோ"

என்பது, "விதியினால் பெடை மணக்கும்" என்ற திருவாய் மொழிப்பாட்டின் வியாக்கியானப் பகுதி.

"ஏமான் பிணைபோல நின்றதே.....நெஞ்சு" என்பதில் அவலம் நிறைந்திருக்கின்றது; தலைவிக்கு அழுகையே வந்து விட்டது என்று கூறிவிடலாம்.

தலைவியின் ஏக்கம், இரக்கம், வேனில்வேள் மலர்க் கணையால் ஏவுண்டு நெஞ்சங் கலங்கிய நிலைமை எல்லாம் பாடலில் நிறைந்து இருக்கின்றது.

புகுவார்க்கு இடங்கொடுத்தல், போதுவார்க்கு ஒல்கு தல், நகுவாரை நாணி மறைதல் ஆகிய செயல்களை மாணுக் கும் கூட்டிக் கொள்க. அம்பு எய்யப்படுதலை நெஞ்சுக்கும் கூட்டிக் கொள்க.

தாண்டுகரைக்கும் பாண்டியனுடைய அரண்மனை வாச லுக்கும் ஒப்புக் கூறப்பட்டிருப்பதையும் அறிக.

தலைவியின் மார்பில் மன்மதன் அம்பு தைத்த நிலைமை யைக் குறிப்பால் அறியும்படி கூறியிருக்கின்ற சிறப்பினை நன்கு உணர்க.

தாண்டுகரையின் இடப்பக்கத்திலே ஒரு புதருக்குள் ழான் மறைந்ததாகக் கொள்க.

தலைவியின் மனம், அரண்மனை வாசலின் இடப்பக்கத் தில் கதவின் ஓரத்தில் மறைந்ததாகக் கொள்க. இடப் பக்கத்தில் மறைதல் இயல்பு. இவையெல்லாம் குறிப்பால் ஆசிரியர் உணர்த்தியிருக்கின்றார்.

மணவா மருண்மாலை

சாங. **பிணிகிடந் தார்க்குப் பிறந்தநாட் போல**
அணியிழை அஞ்ச வருமால்—மணியானை
மாறன் வழுதி மணவா மருண்மாலைச்
சீறியோர் வாடை சினந்து.

(கு - பு.) வழுதியின்பால் மனம் போக்கிய மங்கை மாலைப் பொழுதில் வாடைக் காற்றுல் எற்றுண்டு மெலிந்து தோழியினிடம் சொல்லியது.

(இ - ள்.) அழகிய அணிகலன் அணிந்திருக்கின்ற தோழியே! மாறி மாறிக் கணீர்கணீர் ரென்று ஒலிக்கும் படியாக இரண்டு பக்கமும் மணி கட்டித் தொங்கவிட்டி ருந்த அழகிய யானையின்மேல் ஏறிவந்த பாண்டியனுடனே கூடாத இந்த மயக்கமான மாலைப்பொழுதில், வடக்கே யிருந்து சினந்து வருகின்ற ஒப்பற்ற வாடைக் காற்று

நோய்வாய்ப்பட்டுக் கிடப்பவர்க்கு இயல்பாகச் சினந்து வருத்துகின்ற நோய், பிறந்தநாள் அன்றைக்கு எவ்வாறு சிறிச்சிறி வந்து அஞ்சும்படியாகத் துன்புறுத்துமோ அது போல, சிறிச் சிறி வந்து துன்புறுத்துகின்றதே யான் என் செய்வேன்? என்கின்றாள்.

(வி - ம்.) ஒரு நாள் மாறன் யானையின்மேல் ஏறி உலாவருகின்றான்; இரண்டு பக்கமும் அழகான மணிகள் கட்டித் தொங்கவிட்டிருக்கின்றனர்; 'யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே' என்றபடி மணியோசை கேட்கின்றது; வீட்டினுள்ளிருந்து ஒருங்கை வந்து எட்டிப் பார்க்கின்றாள்; பாண்டியனுடைய அழகு, யானை, மணியின் தோற்றம் இவையெல்லாம் அவள் மனத்திற் பதிந்தன. காதல் வளர்ச்சிக்கோ எல்லையே இல்லை; காலையில் காதல் அரும்பிப், பகலெல்லாம் போதாக விரிந்து, மாலையில் மலர்ந்து, மணம் வீசுகின்றது. இப்படி ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் காமம் மலர்ந்தவுடன் அந்த நறுமணத்தைத் இருவருங்கூடி நுகர்ந்தாற் பயனுடையதாகும்; அதற்கு வழியின்றிப் பிரிந்திருக்கும் மாலையில் வாடை நடுக்கத்தை உண்டாக்கிவிடும்; இவள் நிலையும் அவ்வாறு ஆயிற்று; மற்ற நேரமும் வாடையடிக்கின்றது; ஆனால் மாலைப்பொழுதில் சிற்றத்துடன் வந்து காற்றுத் தாக்கி மேலும் மேலுஞ் சிறிச் சிறி மோதுகின்றது; ஐயையோ! இந்த வாடை கொன்று விடும்போ லிருக்கின்றதே என்று அஞ்சுகின்றாள்; நோய் வாய்ப்பட்டுக் கிடப்பவர்க்குப் பிறந்த நாள் வந்த உடனே நோய் இன்னும் அதிகமாகிச் சிறிச் சிறி வருத்தத் தொடங்கி விடும்; எல்லோரும் ஐயோ! இந்த நாள் முழுதும் எவ்வாறு கழியும்? கண்கொண்டு நோக்க முடியவில்லையே! என்று வருந்துவார்கள்; நோயாளிக்கு உயிர் எவ்வாறு கூட்டிலிருக்குமோ என்று அஞ்சுவார்கள்; அதுபோல இந்த மாலைப் பொழுதில் தலைவியும் வாடையினால் வருந்துகின்றாள்; அதனைத் தன் உயிர்த்தோழி வந்த உடனே கூறுகின்றாள்.

நோயாளிக்கு வந்த பிறந்த நாள் துன்பம் போலவே தான், மாலைப்பொழுதும் தலைவியை வருத்துகின்றது. தலைவியின் ஏக்கம், வருத்தம், அவலம் எல்லாம் பாட்டில் நிறைந்து இருக்கின்றது.

காதல் மயக்கத்தினாலே "மாறன், வழுதி" என்று இரண்டு முறை அடுக்குகின்றாள்; அது ஒரு தனி உணர்ச்சியை உண்டாக்குகின்றது.

இயல்பாக வீசும் வாடை சினந்து வீசுவதாகவும், வந்து மோதுகின்றதைச் சீறி மோதுகின்ற தென்றும் கருதி ஓர் வாடை சினந்து சீறி வருகின்றது என்கின்றாள். வருமால்: ஆல் - அசை. மருள்மாலை - மயக்கமான மாலைப் பொழுது.

ஒளிதான் மக்களை இயக்குகின்றது; காலையில் எழுகின்றோம்; அது சூரியனுடைய தூண்டுதலாலேதான் நிகழ்கின்றது; மற்றக் கோள்களும் நம்மை இயக்குகின்றன; தாய் வயிற்றிலிருந்து பிறந்த உடனே எந்த நாள்மீனின் ஒளி வந்து உடம்பில் தாக்குகின்றதோ அந்த ஒளிதான் அவனை வாழ்நாளில் இயக்கிக்கொண்டு போகின்றது: நோய்வாய்ப் பட்டார்க்கு அந்த நாளில் நோய் அதிகமாதலும் கொல்லுதலும் இயல்பு; இது ஒளி நூலின் துணிபு. திங்களினுடைய ஒளி உடலில் தாக்கும்போது பிணி குறைதலும், அதன் ஒளி குறையக் குறைய நோய் வளர்தலும், அமாவாசை யன்றைக்கு நோய் அளவு கடந்து மிகுதலும் இதனை உணர்த்தும்; ஆராயின் ஒளி நூல் இதனை நன்கு வலியுறுத்தும்.

புல்லப் பெறுவேனே?

சசி. மாணிக் கடந்த மறவெம்போர் மாறனைக்
காணக்கா லாயிரமுஞ் சொல்லுவேன் கண்டக்காற்
பூணகந் தாவென்று புல்லப் பெறுவேனே
தாணெடுஞ் பிறந்த நான்.

(கு - பு.) பாண்டியனிடம் காதல்கொண்ட மங்கை நெஞ்சொடு சொல்லியது.

(இ - ள்.) நெஞ்சமே! பகைவரெல்லாரையும் நேரே நின்று பொருது கொன்ற கொடிய ஆண்மைப் போரில் வல்லவனாகிய பாண்டியனைக் காணுமல் இருக்கும்பொழுது, "நீ அணிந்திருக்கின்ற வேப்பம்பூமாலையைத் தா" என்று பாண்டியனிடம் கேட்டு வாங்கி அணிந்துகொண்டு, நின்னுடைய தோள்களிலும் எனக்கு உரிமையில்லையா? என்று

சொல்லிக்கொண்டு, பாண்டியனுடைய திரண்ட தோள் களுடன் கூடுவேன்; அவ்வாறு கூடி முயங்குவேன்; பின்பு மயங்குவேன்; மயங்கி நின்று ஊடுவேன்; அவனை நினைந்து உருகுவேன்; பின்பு தேடுவேன்; தேடி அவனையே சிந்திப் பேன்; சிந்தித்து வாடுவேன்; பின்பு மலர்ச்சியடைவேன்" என்றிவற்றையும், இன்னும் இவைபோன்ற ஆயிரக்கணக் கான சொற்களையும் சொல்லுவேன்; நேரே கண்ட உடனே நாணம் வந்து தடுக்கின்றதே. இத்தகைய நாணத்துட னேயே பிறந்த நான், பாண்டியனைக் கண்டு "எவ்வளவு அருமையான ஆபரணங்கள் அணிந்திருக்கின்றாய்? எங்கே பார்ப்போம்!" என்று சொல்லிக்கொண்டு பக்கத்திற் போய் "அந்த மார்பையுந்தான் தந்துவிடு" என்று சொல் லித் தழுவும் பேற்றையும் பெறுவேனோ? நெஞ்சமே! பெறுதற்கு முடியவில்லையே! என் செய்வேன்? என் கின்றாள்.

(வி - ம்.) பாண்டியன் பகைவருடன் போர் செய்யப் போயிருக்கிறான்; எப்பொழுது வருவான்; போரில் என் னென்ன துன்பமெல்லாம் நேரிடுமோ? என்று ஊரிலுள்ள வரெல்லாரும் கலங்கிக்கொண்டு இருக்கின்றார்கள்; அவனும் பகைவரெல்லாரையும் எதிர்த்துப் பொருது வென்றான்; ஊருக்கும் வந்து சேர்ந்தான்; தன்னைப் பல நாளாகப் பாரா மல் வருந்துபவரெல்லாரும் பார்த்து மகிழவேண்டு மென்று கருதி வீதிவழி உலா வருகின்றான்; பார்க்கின்றாள் ஒரு நங்கை. அவனுடைய பெருமிதத் தோற்றம் அவளை மயக்கியது. அவன் போர்த் தொழிலிற் செய்த ஆண்மைச் செயல்களையும் கேள்வியுற்றிருந்தாள்; இப் பொழுது நேரிலும் பார்த்தாள்; காதல் கடலாகப் பெரு கிற்று. அலையும் வீசுகின்றது; தனியே இருக்கும்போது ஆயிரக் கணக்கான நினைவுகள் நினைப்பாள்; எப்படியாவது அந்த ஆண்டகையுடன் நேர் நின்று உரையாடியாவது விருப்பத்தை முடித்துக் கொள்வேன் என்று சொல்லிக் கொள்வாள்; ஆனால் அவனை நேரே பார்க்க முடிந்தபோது நாணி விடுகிறாள்; பின்பு தனியே இருந்து நினைக்கும்போது, இந்த நாணோடு உடன் பிறந்த நான், அவனை நேரே கண்ட பொழுது 'பூணுகந்தா' என்று புல்லப் பெறுவேனே? என்று ஏங்குகின்றாள். 'இந்த அணிகலன் நின் மார்பைத்

தழுவிக்கொண்டிருக்கின்றதே, நானும் தழுவிக் கொண்டால் என்ன கெடுதி வந்துவிடும்' என்றெல்லாம் கேட்கலாம் என்று நினைத்தவள், பின்பு நாணத்தால் தடையுண்டு ஏங்குகின்றாள்.

மாஞ்சூர் - பகைவர். கடந்த - நேர் நின்று பொருது வென்ற. மறம் - வீரம். வெம்போர் - கொடும்போர்; விரும்பிய போர் என்றுங் கொள்ளலாம்.

வல்லே புலர்க

சது. புல்லாதார் வல்லே புலர்கென்பர் புல்லினீர்
நில்லா யிரவே நெடிதென்பர்—நல்ல
விரா அமலர்த் தார்மாறன் வெஞ்சாந் தகலம்
இராவளிப் பட்ட நிது.

(கு - பு.) பாண்டியனிடம் உள்ளம் வைத்த பாவை இரவில் தனக்குள்ளே இயம்பியது.

(இ - ள்.) நெஞ்சமே! நல்ல பலநிற மலர்களால் விரவத் தொடுத்த மாலையணிந்திருக்கின்ற பாண்டியனுடைய தூய வெண் சந்தனம் அணிந்த மார்பினைத் தழுவிக்கொண்டவர்கள், இரவினை நோக்கி "இரவுப் பொழுதே! நில்! போய்விடாதே; நெடுநேரம் நில்" என்று சொல்வார்கள்; இரவில் அவர்களுக்கு அருளுதலைப் பொருந்திய நிலை இதுவாகும். ஆனால், அவன் மார்பினைத் தழுவாதவர்கள் என்ன செய்கின்றார்கள்? "ஏ இரவே! நில்லாதே; போ; விரைவாகப் போ; விரைவாகப் பொழுது விடிவதாக" என்று சொல்வார்கள்; இரவில் இவர்களுடைய நிலைமை இவ்வாறு இரங்குதலைப் பொருந்தியதாக இருக்கின்றது; என்கின்றாள்.

(வி - ம்.) ஒரு நாள் பாண்டியன் வீதி வழி உலா வருகின்றான்; காண்கின்றாள் ஒரு நங்கை; மார்பில் வெண் சந்தனம் பூசியிருக்கின்றான்; பலநிறமுள்ள பூக்களால் கட்டிய மாலையும் அணிந்திருக்கின்றான்; பார்த்து உடனே வேட்கையுற்றாள்; அவனும் அவ்வீதியைக் கடந்து போயினான்; இவளும் வீட்டிற்குட் போயினாள்; இவளுடைய கண் வழியாகப் பாண்டியனுடைய மார்பு நுழைந்து நெஞ்சில் தங்கியிருக்கின்றது; அவ்வாறு இருக்கும்போது எவ்வாறு

தூக்கம் வரும்; வரவேயில்லை; நெடுநேரம் இருந்து பலவாறுக எண்ணுகின்றாள்; நமக்குத்தான் அவனுடைய மார்பைத் தழுவும் பேறு கிடைக்கவில்லை; அந்தப் பேறு கிடைத்தவர்கள் அப்படியே விரைந்து தழுவிக்கொண்டு, ஆ! இந்த இன்பம் விடிந்தால் கிடையாதே! ஏ இரவே நில்; போய்விடாதே; நெடுநேரம் நில் என்பர்; தழுவாதவர்கள் "பொழுதே விரைவாக விடிவாயாக," என்று சொல்லுவர்; இப்படியாகப் புல்லினவர் மகிழவும், புல்லாதார் வருந்தவும் காரணமாக இந்த இராப்பொழுதில் அவனுடைய மார்பு இருக்கின்றது என்று நினைக்கின்றாள். தன்னைப்போல் எத்தனை பேர் "வல்லே புலர்க" என்று சொல்லிக் கொண்டு இருக்கின்றார்களோ தெரியவில்லை; பலர் இவ்வாறு இருக்கத்தான் செய்வார்கள்; என்று நினைக்கின்றாள். மார்பு ஒன்றுதான்; ஆனால் அது சிலருக்குத் துன்பம் விளைவிப்பதாகவும் சிலருக்கு இன்பம் விளைவிப்பதாகவும் இருக்கின்றதே! ஒரு பொருள் இரண்டு செயலுக்குக் காரணமாக வல்லவா இருக்கின்றது; என்று நினைக்கின்றாள். சிலர், 'விடிக; விடிக; விரைவாக விடிக' எனவும், சிலர், 'இரவே! நில்; நெடுநேரம் நில்,' எனவும் சொல்லும்படியாக இருக்கின்றது இரவின் நிலைமை என்று நினைக்கின்றாள்.

புல்லினர் - (பாண்டியனுடைய மார்பைத்) தழுவினவர். புல்லாதார் - தழுவாதவர். புலர்கென்பர் - விடிக என்பர். விரா அமலர் - விரவிய மலர். பல பூக்களும் விரவிய பூமாலை அணிந்திருக்கின்றான் என்றவாறு. இரா அளிப்பட்டது - இரவில் அருளுதலைப் பொருந்திய நிலை இது. இரவில் இரங்குதலைப் பொருந்திய நிலை இது. "அளிப்பட்டது" என்பதைச் சிலேடையாகப் பொருள் கொள்க. வல்லே - விரைவாக. வெண் சாந்தகலம் - வெண்மையான சந்தனம் பூசிய மார்பு.

கருதியார் கண்

சகூ. இப்பியின் றிட்ட எறிகதிர் நித்திலங்
கொற்கையே யல்ல படுவது—கொற்கைக்
குருதிவேல் மாறன் குளிர்சாந் தகலங்
கருதியார் கண்ணும் படும்.

(கு - பு.) வழுதியின்பாற் காதல்கொண்டு கண்ணீர் உகுக்கின்ற மங்கையின் நிலைமை கண்ட தோழி தன்னெஞ்சொடு சொல்லியது.

(இ - ள்.) நெஞ்சமே! சிப்பிகளால் ஈன்று வைக்கப் பட்ட ஒளி வீசுகின்ற முத்துக்கள் உண்டாவது கொற்கைத் துறையில் மட்டுமா? அல்ல அல்ல; அந்தக் கொற்கையை ஆளுகின்ற, குருதிக்கறை தோய்ந்த வேலை வைத்திருக்கின்ற மாறனுடைய குளிர்ந்த சந்தனம் பூசிய மார்பைக் கருதியவ ருடைய கண்களிலும் உண்டாகும் என்கின்றாள்.

(வி - ம்.) மாறன் உலா வருகின்றான்; மாற்றாரை வென்ற குருதிக் கறை தோய்ந்த வேலும் ஒன்று வைத்திருக் கின்றான்; மார்பில் சந்தனமும் பூசியிருக்கிறான். பார்க்கின் றாள் ஒரு நங்கை; பின்பு அதனை மறக்க அவளால் முடிய வில்லை; அவனுடைய கூட்டமுங் கிடைத்தபாடில்லை; நினைந்து நினைந்து உருகுகின்றாள்; கண்களிலிருந்து நீர்த்துளி முத்து முத்தாக உதிர்கின்றன; பார்க்கின்றாள் தோழி; முத்துக்கள் பாண்டியனுடைய கொற்கைத் துறையிலே தான் உண்டாகு மென்று சொல்வார்கள்; அவனுடைய மார்பைக் கருதியவருடைய கண்களிலுமல்லவா முத்துக்கள் உண்டாகத் தொடங்கி விட்டன? இது என்ன வியப்பு; என்று அழுகையை மறைத்து வியப்பொடு கலந்து தோழி நினைத்துக் கொள்கின்றாள்.

கண்ணில் நீர் துளித்தலை முத்தாகக்கொண்டு, பாண்டிய னுடைய கடலில்மட்டு மன்று; அவனைக் கருதியவருடைய கண்ணாகிய கடலிலும் முத்துக்கள் உண்டாகிவிடுகின்றன என்று அவலத்தின் மேல் வியப்புப் போர்வை ஒன்றைப் போர்த்தி வைத்துக் கவிஞர் கவினுறுத்துகின்றார்.

இப்பி - முத்துச்சிப்பி; எறிகதிர் - வீசுகின்ற ஒளி. நித்திலம் - முத்து. குருதி வேல் - உதிரம் தோய்ந்த வேல். கருதியார் - நினைத்தவர்.

யானுந்தானும்

சஎ. யானூடத் தானுணர்த்த யானுணரா விட்டதற்பின்
தானூட யானுணர்த்தத் தானுணரான்—தேனூறு
கொய்தார் வழுதி குளிர்சாந் தணியகலம்
எய்தா திராக்கழிந்த வாறு.

(கு - பு.) ஊடல் நீடலால் கூடல் இழந்த தலைவி புணரா இரக்கத் துடன் இரவில் எங்கியிருந்து காலையில் தோழியினிடம் தன் துயர் கூறுதல்.

(இ - ள்.) தோழி! வழுதி கூடுதல் வேட்கையுடன் வந்தான்; யான் ஊடினேன்; உடனே அவன் பலப்பல வகையாகக் கூறித் தெளிவித்தான்; யான் தெளியாமல் ஒரேயடியாய் ஊடிக்கொண்டே யிருந்தேன்; அதற்குப் பின்பு என் மனம் நெகிழ்ந்தது. இணங்கும் நோக்கத் துடனே அண்மையிற் சென்றேன்; அவன் ஊடினான்; நான் தெளிவு சொல்லிப் பார்த்தேன்; அவனும் தெளி யாமலே ஒரேயடியாக இருந்தான்; ஆக இருவரும் செய்த திறத்தால், கொய்த பூக்களாற் கட்டப்பட்டதும் தேனூறிக் கொண்டிருக்கின்றது, மாகிய மாலையை அணிந்த வழுதியி னுடைய சந்தனம் அணிந்த மார்பைத் தழுவப்பெறாமல் பய னின்றி இராப்பொழுது இவ்வாறு கழிந்தது; என் செய் வேன்? என்கின்றாள்.

(வி - ம்.) வழுதி ஒழுக்கொடு புணர்ந்த விழுக்குடிப் பிறந்தோன் ஆதலானும், தன்னை விழைந்த மகளிரையெல் லாந் தழுவும் இயல்பில்லாதவன் ஆதலானும், இது புனைந் துரைவகையாற் கூறப்பட்டது என்றுதல், கனவின்கண் நிகழ்ந்த ஊடல் என்றுதல் கொள்க. அவ்வாறன்றி, மூவேந் தர், தம்மை விரும்பிய மகளிரைத் தாமும் விரும்பி அவர் வழிச் சென்றுரென்று பொருள் கொள்ளுதல் எவ்விடத்தும் சாலாது என்றறிக. பெண்டிருள்ளும் தமிழ் நாட்டுப் பெண் டிர் எல்லோரும் மன்னனைக் கண்டு மனம் நெகிழ்ந்தன ரென்று கருதுதலொழிக. ஞாலம் போற்றும் நன்னிறைத் திண்கோள் அமைந்த கற்பினையுடையவர் நம் நாட்டுப் பெண்டிர் என்பதும், பொது மகளிர் போன்றவராய் ஆடல் பாடலுக்குரிய மகளிரே மன்னனைக் கண்டு இவ்வாறு மனம் நெகிழ்ந்தனர் என்றும் கொள்க. கொங்கு வேள் மாக்கதை யிலும் இவ்வாறு வருதல் காண்க. அஃதுமன்றி இக் கைக் கிளைப் பாடல்களெல்லாம், தமிழ் நாடாண்ட மூவேந்தரும், தம்மைப் பிறமகளிர் விழையினும், தாமவரை விழையாச் செம்மையுடையவர் என்பதையுணர்த்தற்கே எழுந்தன என் பதையும் நன்கு உணர்க. கைக்கிளை என்பது ஒருதலை பற் றிய உறவு என்று பொருள் தரும். மகளிர் மனம் நெகிழ

மன்னன் மனம் நெகிழாத் தன்மையினுலேயே இக் கைக் கிளைச் செய்யுட்கள் பாடப்பட்டன என்று உறுதியாய்த் தெளிந்து கொள்ளுதல் வேண்டும்; இந்த முறைகளையும், தமிழ் மரபினையும் உணராமல் தமிழரசரும், தமிழ் மகளிரும் நிறை வழி இயினுரென்று தவருகக் கொள்ளுதல் கூடாது.

ஊடலைப்பற்றி எழுதவந்த இந்நூலாசிரியர், "யான்" "தான்", "உணர்த்த", "உணரா", என்று ஒன்றற் கொன்று முரணன சொற்களை முன்னும் பின்னுமாக அமைத்து நல்லிசையுடன் நன்றுகப் பாடியிருக்கின்ருர். பாடலே ஊடல்கொண்டு நடிக்கின்றது. தலைவனும் தலை வியும் ஊடுதலும் வாடுதலும் நீடுதலுமாகிய நிலைமையைப் பாடல் நடித்துக் காட்டுகின்றது; சொற்களும் ஊடுகின் றன: இசையும் ஊடுகின்றது; தலைமை வாய்ந்த நல்லிசைப் புலவர்கட்கே இத்திறம் வாய்க்கப் பெறும்.

"யானுடத் தானுணர்த்த யானுணரா விட்டதற்பின்
தானுட யானுணர்த்தத் தானுணரான்"

என்ற அடிகளில் அமைந்திருக்கின்ற முரண்டொடை நயத்தை ஓதி ஓதி யுணர்க. "என் கொங்கை நின்னன்பர் அல்லார் தோள் சேரற்க" என்ற திருவாசக அடியையும் உணர்க.

வழுதியின் மார்பினை அடைந்த மாலையில் அவன் மார் பின் சிறப்பினுலே தேனூறுகின்றது; அவனைத் தழுவிய தார் இன்பினைப் பெருக்கிக் கொள்கின்றது; யான் அது பெறே னுய்க் கழிகின்றேன்; தென்மலைப் பிறந்த சாந்தும் அவ னணியாகத்தே தோய்ந்திருக்கின்றது. யான் அது பெற்றி லேன்; என்று ஏங்கிய தலைவி,

"தேனூறு, கொய்தார் வழுதி குளிர்சாந் தணியகலம்
எய்தா நிராக்கழிந்த வாறு"

என்று இரங்குகின்ருள்.

தலைவியினுடைய அவலம் பரட்டின் இறுதியில் தேங்கி வழிகின்றது.

வரிவளையும் புரிவளையும்

சஅ. செய்யார் எனினுந் தமர்செய்வ ரென்னுஞ்சொல்
மெய்யாதல் கண்டேன் விளங்கிழாய்—கையார்
வரிவளை நின்றன வையையார் கோமான்
புரிவளை போந்தியம்பக் கேட்டு.

(கு - பு.) தலைவனது வலம்புரி முழக்கம் கேட்ட தலைவி அவன் வரவு உணர்ந்து பூரிப்பு அடைந்து தோழியினிடம் கூறுதல்.

(இ - ள்.) ஒளி விளங்கும் அணிகலன் அணிந்திருக்கின்ற தோழியே! 'ஒரு காலத்தில் உதவி செய்யாவிட்டாலும், மற்றொரு காலத்தில் சுற்றத்தார்கள் உதவி செய்வர்' என்கின்ற பழமொழி உண்மையாதலைக் கண்டு கொண்டேன்; நங்காய்! என்னால் விரும்பப்பட்ட, வையை நாட்டார் மன்னனுடைய வலம்புரி வளை வந்து முழங்கக் கேட்டு, அதற்கு இனமாகிய, என் கையில் பொருந்தியுள்ள வரிவளைகள் சரிந்து விழுந்து உடையாமல் நின்றுவிட்டன; என்று கூறுகின்றாள்.

(வி - ம்.) பாண்டியன் வையைக் கரை வழி செல்கின்றான்; பார்க்கின்றாள் நங்கை; அவன் விரும்பவே இல்லை; ஆனால் விரும்பினதாக இவள் நினைத்துக் கொண்டாள்; காதலால் மெலிகின்றாள்; தோள் வாடின. கையிற் சங்கினாற் செய்த வரிவளைகள் அணிந்திருந்தாள். அவைகள் கழன்று கீழே விழுந்து உடைந்து சிதறிவிடக் கூடிய நிலையிற் சரிகின்றன; அப்பொழுது, பாண்டியன் உலாப் புறப்பட்டு விட்டான்; அவனுடைய வலம்புரிச் சங்கின் முழக்கம் காது குளிர முழங்கிற்று; கேட்டாள்; அவனே வந்து விட்டதாக நினைத்தாள்; உடல் பூரித்தது; கைகள் விம்மின; கழன்றுகொண்டே வந்த வளைகள் பொம்மென்ற விம்முதலால் தடைப்பட்டு நின்றன. பார்க்கின்றாள் தலைவி; கீழே வரிவளைகள் விழாமல் எவ்வாறு உய்ந்தன என்று நினைத்தாள்; ஆம்; தெரிந்துகொண்டேன்; இவ்வளைகள் விழுந்து உடையுமென்றுதானே அந்த வலம்புரிவளை முழங்கியிருக்கின்றது; அந்த ஒலியைக் கேட்டுத்தானே; இவைகளும் நின்றன. இந்த வளைக்கு அந்த வளை இனம்தானே; இவ்வாறு உதவி செய்வதற்குத் தமர்தாமே உதவு

வர்; "செய்யார் எனினும் தமர் செய்வர்" என்ற பழமொழியும் உண்மைதானே; என்று நினைக்கின்றாள்; தோழியினிடம் கூறுகின்றாள். இதற்குமுன். இந்த வளை, முழங்காமையாலும் இப்பொழுது முழங்கினமையாலும், "ஒரு காலத்தில் உதவாவிட்டாலும் ஒரு காலத்தில் உதவுவர்" என்று பழமொழிக்குப் பொருள் கூறப்பட்டது. "எக்காலத்திலும் உதவி செய்யார் என்று கருதும்படி இருந்தன ராயினும் சுற்றத்தார் உதவி செய்வர்" என்றும் பொருள் கொள்ளலாம்.

காதலால் உடல் மெலிந்து வாடுகின்றவள் சங்கு முழக்கம் கேட்டுப் பூரிப்பு அடைய, நழுவும் நிலையிலுள்ள வளைகள் நிலைபெற்றன; தலைவி அதனை வளையின்மேல் ஏற்றி, இனவளையின் இன்னொலி கேட்டு வரிவளை நின்றனை என்கின்றாள்.

புரிவளை வரிவளைக்குத் துணை செய்தது என்ற நயம் பாராட்டத்தக்கது.

"செய்யார் எனினும் தமர் செய்வர்"

என்பது பழமொழி.

"மெய்யா உணரிற் பிறர்பிறர்க்குச் செய்வதெவன்
மையார் இருங்கூந்தல் பைந்தொடி! எக்காலும்
செய்யார் எனினும் தமர்செய்வர் பெய்யுமரம்
பெய்யா தெனினும் மழை"

என்பது பழமொழி நானூறு (கூடுக.)

துளை தொட்டார்

சகூ. காப்படங்கென் றன்னை கடிமனை யிற்செறித்
தியாப்படங்கு வோடி யடைத்தபின்—மாக்கடுங்கோன்
நன்னலங் காணக் கதவந் துளை தொட்டார்க்
கென்னைகொல் கைம்மா றினி.

(கு - பு.) கதவுத் துளைவழி மாக்கடுங்கோன் உலாவருதலைக் கண்ட நங்கை தோழியினிடம் கூறுதல்.

(இ - ள்.) "எம் காவலுக்கு அடங்கு" என்று சொல்லிக் காவலுடைய வீட்டின்கண், அன்னை என்னைச் செறித்து

வைத்துக் கதவின் விளிம்பு இசைப்புப் பொருந்த விரைந்து ஓடிச் சென்று அடைத்த பின்பு, திருமிக்க கடுங்கோன் எனப் பெயரிய பாண்டியனுடைய நல்லெழில் நலத்தை யாம் காணும்படியாகக் கதவின்கண் முன்னமே துளை தோண்டி வைத்த தச்சர்க்கு இனி நாம் செய்யுங் கைம் மாறு யாது கொல்? எதுவுமில்லையே! என்செய்வோம்? என்று தலைவி தோழியினிடங் கூறுகின்றாள்.

(வி - ம்.) செவிலித்தாய், நம் மகளிர் வழுதியின் எழில் நலத்தைக் காணின் நைந்துருகி நலன் அழிவர் எனக் கருதி விரைவில் நண்ணிக் கதவை அடைத்த பின்னர், முன் னமே யமைக்கப்பட்டிருந்த பூட்டுவாய்த் துளைவழி வழுதி யின் நலங்கண்ட மங்கை, கதவுப் பூட்டுத் துளையைத் தனக் கென்றே தச்சர் இரக்கமுற்றுத் துளைத்து வைத்திருந்த தாகக் கொண்டு, இவ்வாறு காலத்தினாற் செய்து வைத்த நன்றிக்கு ஞாலம் முற்றிலும் கொடுப்பினும் சாலாதே; இனி வேறு கைம்மாறு யாது உளது? என்கின்றாள்.

'என்னைகொல் கைம்மாறினி?' என்பதில் தலைவியின் ஆர்வமும் மயக்கமும் சுவையும் நன்றாக வெளிப்படுகின் றன. மாக்கடுங்கோன் - பாண்டியன். சேரன் எனினும் அமையும்.

"மல்லல்நீர் மாந்தையார் மாக்கடுங்கோ"

என்று சேரன் குறிப்பிடப்படுதல் காண்க. காப்பு - காவல். கடிமனை - காவல் உள்ள மனை. இற்செறித்து - வீட்டினுள் அடக்கி வைத்து. யாப்பு அடங்க - (கதவின் விளிம்பின்) இசைப்புப் பொருந்த. தொட்டார் - தோண்டினவர்.

சாலேகஞ் சார்

ரு0. துடியடித் தோற்செவித் தூங்குகைந் நால்வாய்ப்
பிடியேயா னின்னை யிரப்பல்—கடிகமழ்தார்ச்
சேலேக வண்ணனொடு சேரி புகுதலுமெஞ்
சாலேகஞ் சார நட.

(கு - பு.) வழுதி உலா வருங்கால் பிடியை நோக்கி, நீ எம் பல கணிக்கு அண்மையாக நட, எனக் கூறுதல்.

(இ - ள்.) உடுக்கையைப் போன்ற அடியினையும், கேடகம் போன்ற செவியினையும், தூங்குகின்ற கையினையும், தொங்குகின்ற வாயினையும் உடைய பெண் யானையே! யான் நின்னை இரந்து வேண்டிக் கொள்கின்றேன்; நீ நறு மணங் கமழ்கின்ற மாலையை யணிந்த செந்தூர வண்ணனுகிய மன்னனுடன் எம் தெருவிற்கு வந்தவுடன், எங்கள் வீட்டுச் சாளரங்களின் பக்கமாக நடப்பாயாக; என்கின்றுள்.

(வி - ம்.) மாறன் உலா வருகின்றுன்; கதமும் மதமுஞ் சிறந்த களிற்றில் உலா வருதலினும் பிடியின்மேல் வருதல் நன்றென்று கருதி அதன்மேல் ஏறி வருகின்றுன்; பார்க்கின்றுள் நங்கை; அதற்குக் கேட்கவா செய்யும்? வரவா செய்யும்? என்ற நினைவெல்லாம் மில்லை; எப்படியாவது அழைப்போம் வந்துவிடுமென்று பிடி யானையை அழைக்கின்றுள்; பிடியே எம் சாலேகஞ் சார நட! சேலேக வண்ணனுடன் எம் சேரிப் பக்கமாக வருவாயல்லவா? அப்பொழுது; என்று யானையைப் பார்த்துக் கூறுகின்றுள்.

உலாவிற் கூறியதாகவும் கொள்ளலாம்; தனியே செல்கின்ற யானையைப் பார்த்துக் கூறியதாகவும் கொள்ளலாம்.

துடி - உடுக்கை. தோல் - கேடகம். நாலுதல் - தொங்குதல். தூங்குதல் - தொங்குதல். சேலேகம் - செந்தூரம்.

'செங்கதிர்க் கிரணம் போலுஞ் செந்தூரப் பேர்ச் சேலேகம்'

என்பது நிகண்டு. சேலேகம் பூசிய செந்நிறத்தன் என்ற வாறு. சேலேகம் போன்ற செந்நிறத்தன் எனினும் அமையும். சேலேகம் - சந்தனம் எனலுமாம். தலைவியின் உள்ளத்தில் உள்ள ஓவியத்தை அப்படியே காட்டுகின்றது இப் பாட்டு.

"செய்ய சடைமுடியென் செல்வனையான் கண்டெனது
கையறவும் உண்மெலிவும் யாற்காட்டப் —பையவே

காரேறு பூஞ்சோலைக் காளத்தி யாள்வார்தம்
போரேறே இத்தெருவே போது"

என்பதுங் காண்க. சாலேகம் - சன்னல்.

மடப் பிடியே!

நுக. எலாஅ மடப்பிடியே யெங்கூடற் கோமான்
புலாஅல் நெடுநல்வேல் மாறன்—உலாஅங்கால்
பைய நடக்கவுந் தேற்றாயால் நின்பெண்மை
ஐயப் படுவ துண்டத்து.

(கு - பு..) மாறன் உலாவரும்பொழுது பிடியை நோக்கித் தலைவி எலாஅ! பைய நட எனல்.

(இ - ள்.) இளமையான பெண் யானையே! நீ என் தோழியல்லவா? யாம் நின்பால் நடை கற்கும்போது மெல்ல நடந்தாயே! இப்பொழுது எமது மதுரை மன்னனுகிய புலால் தோய்ந்த நீண்ட வேலையுடைய பாண்டியன். நின்மேல் ஏறி எம் வீதி வழியாக உலாவரும்பொழுது மெல்ல நடக்கத் தெரியாத நிலைமையைக் கொண்டுவிட்டாயே! நின் பெண்மைத் தன்மை ஐயப்படுவதாகிய இயல்பை உடையதாகி விட்டதே! இது தகுமோ? என்கின்றாள்.

(வி - ம்.) உலாவரும்பொழுது பெண் யானைமேல் ஏறி வருதல் மரபு. பாண்டியன் உலா வருகின்றான்; பார்த்த மகளிர் காதல் கொள்கின்றனர்; இன்னும் கண் குளிர அவனைப் பார்க்கவேண்டுமென்று நினைக்கின்றனர்; அதற்குள் யானை விரைந்து நடந்து சென்றது; அதனைக் கண்ட மகளிர் இங்ஙனம் கூறுகின்றனர்.

எலாஅ - தோழி. எலாஅ - என்பது தோழியை விளிக்கும் முன்னிலைப் பெயர். கூடல் - மதுரை. மாறன் - பாண்டியன். புலால் நெடு நல் வேல் - பகைவர் மார்பிற் பாய்ந்தமையால் புலால் கமழும் நீண்ட நல்ல வேல். தேற்றாயால் - தெளியாமலிருக்கின்றாய்; ஆல் - அசை.

"கடுநடை கற்றாய்.....பிடியகால் பாவி" என்றார் சிந்தாமணியிலும்.

மெல்ல நடவாயோ

(உ. போரகத்துப் பாயுமா பாயா துபாயமா
ஊரகத்து மெல்ல நடவாயோ—கூர்வேல்
மதிவெங் களியாகீன மாறன்றன் மார்பங்
கதவங்கொண் டியாமுந் தொழ.

(கு - பு.) மாறன் மாவேறி வீதி வழி வரக் கண்ட மங்கை அம் மாவை நோக்கி, நீ போரகத்துப் பாயுமாறு பாயாது ஊரகத்து மெல்ல நடவாயோ என்று கூறுதல்.

(இ - ள்.) குதிரையே! நீ போரினிடத்து விரைந்து பாய்வதுபோல பாயாது, கூரிய வேற்படையினையும், மதி வெம்பிய மதயானைப் படையினையும், உடைய மாறனது மார்பின் அழகினைக் கதவினை ஒதுக்கிடமாக்கிக்கொண்டு நின்று, கண்டு யாங்களுந் தொழுதற்கு உபாயமாக இவ் வூரினிடத்து மெல்ல நடவாயோ? என்கின்றுள்.

(வி - ம்.) பாண்டியன் வீதி வழியாக உலாவருகின்றுன்; எல்லோரும் பார்க்கின்றனர்; அவனுக்கு வணக்கமும் செய்கின்றனர்; அவன் ஏறியிருக்கின்ற குதிரையோ வென்றுல், அது மிகவும் அழகு வாய்ந்தது; போர்த் தொழிலும் நன்றுகப் பழகியிருந்தது; ஆனுல் அது உலாவரும் பொழுதும் விரைவாகப் பாய்கின்றது; அப்பொழுது, செவிலித் தாயரால், வீட்டினுள் அடைத்து வைத்துப் பாதுகாக்கப்பட்ட மகளிர் மாறனது மார்பின் அழகினைக் காணமுயல்கின்றனர்; கதவின் மறைவில் நின்றுவது, பார்த்து விடவேண்டுமென்று ஆசை கொண்டனர்; குதிரையின் விரைவினுல் மாறனது தோற்றமும் மறைகின்றது; அதனைக் கண்ட மகளிர் மனம் வெதும்பிப், பாய்ந்து செல்லுகின்ற பரியைப் பார்த்துக், குதிரையே மெல்ல நடவாயோ? போர்க்களத்தில் பாய்வது போன்று பாய்கின்றுயே? இது என்ன போர்க்களமா? ஊர் தானே; ஆதலால் மெல்ல நட; யாங்களும் அதனை உபாயமாகக் கொண்டு, மாறனது மார்பின் அழகைக் கண்டு வணங்கலாகும்; என்று இயம்புகின்றனர்.

மதிவெங் களியாகீன: மதி - அறிவு. வெம்மையாவது திரிதல். அறிவு திரிந்த மதயானை என்க. "பாயுமாறு

பாயாது" என்பது, பாயுமா பாயாது என்று ஆயிற்று. பாயுமா என்பதற்குப் பாயும் குதிரை எனப் பொருள் உரைத்து, அண்மை விளியாகக் கொள்ளுதலுமாம். குதிரை என்று தோன்ரு எழுவாய் வருவிக்கப்பட்டது. பாயுமா! போரகத்துப்போல பாயாது உபாயமா மெல்ல நட வாயோ? என்றும் கொள்ளலாம்.

ஏடு கோடு

சூக. ஆடுகோ சூடுகோ ஐதாக் கலந்துகொண்
டேடுகோ டாக எழுதுகோ—நீடு
புனவட்டப் பூந்தெரியல் பொற்றேர் வழுதி
கனவட்டங் கால்குடைந்த நீறு.

(சூ - பு.) தலைவி பொற்றேர் வழுதி கனவட்ட மேறிவரக் கண்டு நெஞ்சொடு கூறல்.

(இ - ள்.) நெஞ்சமே! பெரிய பூந்தோட்டத்திலிருந்து கொய்து கொண்டு வரப்பட்ட நல்ல மலர்களால் கட்டிய வட்டமான பூமாலையை அணிந்தவனும், பொன்னுற் செய்த தேர் உடையவனுமாகிய பாண்டியன், ஏறிவந்த கனவட்டம் என்ற பெயருடைய குதிரையின் கால்களால் கிளரப் பெற்றதாக வீதியில் கிடக்கின்ற புழுதியின்மேல், விடாயர்ன் மடுவிலே விழுந்து நீராடினுற் போலே விழுந்து புரண்டு புழுதியாடுவேனே? அல்லது, அதனைத் தலையில் அள்ளிச் சூடிக் கொள்வேனே? அல்லது, நறுமணமுள்ள பலவகைப் பொருள்களோடு கலந்து குழம்பாகக் குழைத்து அழகிய தாக ஆக்கிக்கொண்டு, பூ இதழை எழுது கொம்பாகவும் ஆக்கிக்கொண்டு, மார்பிலுந் தோளிலும் தொய்யில் எழுது வேனே? என்செய்கேன் எதனைச் செய்தால் என் நோவு தீரும்? என்கின்ருள்.

(வி - ம்.) பாண்டியன் வீதி வழியாக உலாவருகின் ருன்; அவன்பாற் காதல் கொண்ட மகளிர் காண்கின்றனர்; அவனும் அடுத்த வீதிக்கு விரைவிற் சென்றுவிட்டான்; அவன் மார்பில் அணிந்த பூமாலை, பொற்றேர், குதிரை இவைகளெல்லாம், தலைவிக்கு நினைக்குந்தோறும் நினைக்கும் தோறும் காதலை மிகவும் வளர்க்கின்றன; ஆனல், அவை

களில் ஒன்றுகூட அவளுக்குக் கிடைக்கவில்லை; கிடைத்திருந்தால், அவற்றைக் கொண்டாவது ஆறுதல் அடைவாள்; அதற்கு வழியில்லையே; என் செய்வாள்? வீதியைப் பார்த்தாள்; மாறனது குதிரையின் கால்களால் துழாவிய புழுதி நிறையக் கிடந்தது; நெஞ்சை முன்னிலைப் படுத்தினாள்; நெஞ்சமே! இந்தப் புழுதியில் விழுந்து புரண்டு மூழ்குவேனோ? அல்லது தலையில் அள்ளிச் சூடிக்கொள்வேனோ; அல்லது நறுஞ்சுண்ணமும், தொய்யிற் குழம்பும் அதனுடன் கலந்து குழைத்துப் பூ இதழை எழுது கருவியாகக் கொண்டு தொய்யில் எழுதுவேனோ? இவற்றில் எதைச் செய்வது நல்லது! என்கின்றாள்; மகளிர்க்குத் தமமால் காதலிக்கப் பட்டவருடைய பொருளில் தோய்ந்த புழுதியிலுங்கூட அவ்வளவு காதல் உண்டாகுமென்பது விளங்குகின்றது.

"ஆர்க்கோ அரற்றுகோ ஆடுகோ பாடுகோ
பார்க்கோ பரம்பரனே என்செய்கேன்—தீர்ப்பரிய
ஆனந்த மாலேற்றும் அத்தன் பெருந்துறையான்
தானென்பார் ஆரொருவர் தாழ்ந்து"

என்பது திருவாசகம்.

ஆடுகோ-மூழ்குவேனோ. சூடுகோ-சூடிக்கொள்வேனோ. ஐதா - அழகிதாக. ஏடு - பூவிதழ்; இதழையுடைய அரும்பு என்றுமாம். கோடாக - எழுது கொம்பாக. நீடு - பெரிய. புனம் - முகைப்புனம். வட்டம் - வளைவு. தெரியல் - பூமாலை. கனவட்டம் என்பது பாண்டியனுடைய குதிரையின் பெயர். கால்குடைந்த நீறு - காலாற் கிளரப்பட்ட புழுதி.

ஆபுகுமாலை

ருச. குடத்து விளக்கேபோற் கொம்பன்னார் காமம்
புறப்படா பூந்தார் வழுதி — புறப்படின்
ஆபுகு மாலை யணிமலையிற் றீயேபோல்
நாடறி கௌவை தரும்.

(கு - பு.) ஆபுகு மாலையினும் அதற்கு முன்னும் பின்னும் வழுதியின் உலாக்கண்ட அணியிழையார் இயல்பை அறிந்தோர் கூறியது.

(இ – ள்.) பூந்தாரணிந்த பாண்டியன், வீதி வழியாக உலா வருதற்குப் புறப்படுதற்கு முற்பட்ட பகற்பொழுதி

லெல்லாம் பூங்கொம்பினையொத்த மகளிருடைய காமம், குடத்தினுள் மறைத்துவைத்த விளக்கின் ஒளி, புறத்தே தோன்றாது மறைந்து இருத்தல் போல, அவர் தமக்குள்ளேயே மறைந்து வெளியில் தோன்றாது இருக்கும்; பாண்டியன் உலாவிற்குப் புறப்பட்டு விட்டான் என்றால், உடனே காட்டிற்கு மேயச்சென்ற பசுவினங்கள், வீட்டிற்குப் புகுகின்ற மாலைப்பொழுதில் அண்மையிடத்ததாகிய மலையில் எரிகின்ற தீயானது, எல்லோருக்கும் தெரிதல்போல ஊரார் எல்லோரும் அறியும்படியான ஆரவாரத்தைத் தரும்; என்கின்றார்.

காலையரும்பிப் பகலெல்லாம் போதாகி மாலையில் மலர்ந்து தோன்றும் இயல்புடைய காமம், பகற்பொழுதில், குடத்துள் விளக்குப்போலக் கொம்பன்னாரிடத்துள் மறைந்திருக்கும்; மாலைப்பொழுதும் வர, பாண்டியனும் வீதிவழியாக உலாவந்து விட்டான் என்றால், உடனே, அது, அந்திப் பொழுதில் அழகிய மலையில் தோன்றுகின்ற தீ, ஊரார் எல்லோரும், அறியும் இயல்பினதாகத் தோன்றுதல்போல, ஊரெல்லாம் அறிந்து அலர்தூற்றி ஆரவாரம் செய்யும் இயல்பைத் தரும் என்கின்றனர்.

கௌவை - ஊரார் தூற்றும் அலரின் முதிர்ச்சியாலாகிய ஆரவாரம்.

"ஊரவர் கௌவை எருவாக"
என்பது திருக்குறள்.

"ஆபுகு மாலையும் ஆகின்றாலோ"
என்பது திருவாய்மொழி.

கொம்பன்னார் - பூங்கொம்புபோன்ற இடையுள்ள மகளிர். அணிமலை - அழகிய மலை; பக்கத்திலுள்ள மலை என்றுங் கூறலாம்.

யார்க்கிடுகோ பூசல்இனி

நிரை. வழுவிலெம் வீதியுள் மாறன் வருங்கால் [திரைக்
தொழுதேனைத் தோணலமுங் கொண்டான்—இமிழ்
கார்க்கடற் கொற்கையார் காவலனுந் தானேயால்
யார்க்கிடுகோ பூச லினி.

(சூ - பு.) தலைவி தோழியினிடங் கூறியது.

(இ - ள்.) தோழி ! குற்றமில்லாத எம்முடைய வீதியினிடத்துத் தென்னன் உலாவரும்பொழுது, யான் வேறொன்றும் செய்யவில்லை; தொழுதேன்; உடனே என்னெஞ்சம், நாணம், பெண்மைநலன் இவைகளையே யன்றித் தோளினது அழகையும் கவர்ந்துகொண்டான்; அதனால், இரவு முழுதும் தூக்கமும் இல்லை; மேலும் இந்தக் கருங்கடல் ஒலித்துக் கொண்டே அலையையும் வீசுகின்றது; போதாக் குறைக்கு அதுவும் சேர்ந்துகொண்டு என்னை நைந்து உருகச் செய்கின்றது; இந்தக் கரிய கடலுக்கும் அதனைச் சூழப்பட்ட நம்முடைய கொற்கைப் பதிக்கும் அரசனும் அவன்தானே; இனி யாரிடத்திற்போய் இந்தக் குறையைச் சொல்லித் தீர்த்துக்கொள்வேன் ! காவலனே கள்வனாக இருக்கின்றான்; வேலியே பயிரை மேய்ந்தால் என் செய்வது? ஒன்றும் செய்ய முடியாதல்லவா? இவ்வாறு இருக்கின்றதே என் நிலைமை என் செய்கேன்? என்கின்றாள்.

(வி - ம்.) வழுதி எம் வீதியின் வழி உலாவருதற்குமுன் யாம் சிறிதும் வழுவில்லாமல் இருந்தோம்; என்னெஞ்சும் நாணும் நலனும் இவையெல்லாம் என்பாலேயிருந்தன; அவனும் வந்தான் இவையும் தொலைந்தன; அவனைக் கவரப்பட்ட பொருள்கள் திரும்பிவரவா செய்யும்? ஆனை வாயில் அகப்பட்ட கரும்புபோல அன்றோ ஆயின! என்று தலைவி தன் ஆற்றாமையைக் கூறி அலமருகின்றாள்; தன்னெஞ்சிற்குச் சொல்லியதாகவும் கொள்ளலாம்.

வழு - குற்றம். மாறன் - பாண்டியன். இமிழ்திரை - ஒலிக்கின்ற அலை; தோள்நலமும் கொண்டான் - நெஞ்சம், நாணம், கைவளை இவற்றையே யன்றித் தோளினது நலத்தையும் கொண்டான். கார்க்கடல் - கரிய கடல். கொற்கை - கடற்கரைப் பக்கத்திலுள்ளதும், முத்துக் குளிக்கும் துறை உடையதுமாகிய பாண்டியரது பட்டினம்.

"ஆர்க்கோ இனி நாம் பூசலிடுவது"
"ஆர்க்கிடுகோ தோழி அவன்தார் செய்த பூசலையே"

(நாச்சியார் திருமொழி.)

என்பனவும்,

"தானே உலகாள்வான் தான்கண்ட வாவழுக்கம்
ஆனல்மற் றுரிதன்ன அன்றென்பார்"

(நக்கீர தேவநாயனார்.)

என்பதுங் காண்க.

சீரோழுகு செங்கோல்

நிகூ. மன்னுயிர் காவல் தனதான அவ்வுயிருள்
என்னுயிரும் எண்ணப் படுமாயின் - என்னுயிர்க்கே
சீரொழுகு செங்கோற் செழியற்கே தக்கதோ
நீரொழுகப் பாலொழுகா வாறு.

(கு - பு.) தலைவி தோழியினிடம் சொல்லியது.

(இ - ள்.) தோழி! மிகக புகழுண்டாகும்படி நடக்கின்ற செங்கோல் மன்னனுகிய தென்னனுக்கு நிலே பேறுடைய உயிர்க்காவலும் தனது. அவ்வாறு தன் காவலுகுள்ளான அவ்வுயிர்களுள் ஒன்ருக என்னுயிரும் எண்ணப்படுமாயின், ஒரு வரிசையில் உண்பவர்க்குப் பால் ஊற்றிச் செழிக்கச் செய்துவிட்டு மற்ற வரிசையில் உண்பவருக்கு நீரை மட்டும் ஊற்றிப் பால் ஊற்ருமல் இருப்பதுபோல, எல்லா உயிர்களுக்கும் இனிமையுடையவனுக நடந்து கொண்டு, எனக்கு மட்டும் துன்பம் விளேவிக்கின்ருனே; இது அந்தப் பாண்டியன் மனத்துக்குத் தக்கதோ? ஒருக்காலும் தகுதி உடையது ஆகாது; மன்னனே தகாத செயலேச் செய்யின் நாம் அதற்கு என் செய்வது? என்கின்ருள்.

(வி - ம்.) பாண்டியனிடத்தில் ஒரு பெண் மிக்க காதல் கொண்டாள்; அதனல் அவளுக்கு உணவும் ஏற்கவில்லே; உறக்கமும் வரவில்லே; மிகுதியாக மனம் கலங்குகின்றது; அந்நிலேயில் கூறுகின்ருள்; "இந்த மன்னனுடைய காவலில் எல்லோரும் அல்லவா இன்புற்றிருக்க வேண்டும்? மற்றையோ ரெல்லாம் உண்டு, உறங்கி, மகிழ்ந்து உவப்புடன் இருக்க யான் மட்டும் ஏன் வருந்தவேண்டும்? இவன் காவல் அவ்வளவு ஒழுங்கு உடையதன்று; இது அவனுக்கே தகுமா? இவ்வாறு தகாத செயலே ஒரு மன்னனல்லவா செய்கின்ருன்? இது என்னே! தோழி! இது முறையாகுமா? சொல் எனகின்ருள்.

'நீரொழுகப் பாலொழுகா வாறு' என்பதற்குத், தாய் ஒரு குழந்தைக்குத் தன்னிடத்திலிருந்து பால் சுரந்து மற்றக் குழந்தைக்கு நீர் சுரந்தாற்போலுமென்று உரைப்பினுமாம். மன்னுயிர் - நிலைபேறுடைய உயிர். சீர் - புகழ். செழியன் - பாண்டியன்.

"நீரொழுகப் பால் ஒழுகாவாறு"

என்பது பழமொழி.

"முறை தெரிந்து செல்வர்க்கும் நல்கூர்ந் தவர்க்கும்
இறைதிரியான் நேரொக்கல் வேண்டும்—முறைதிரிந்து
நேரொழுகா ராயின் அதுவாம் ஒரு பக்கம்
நீரொழுகப் பாலொழுகா வாறு"

என்பது பழமொழி நானூற்றிலுள்ள பாட்டு.

வானேற்ற வையகம்

நிள. தானேற் றனிக்குடைக் காவலனுற் காப்பதுவும்
வானேற்ற வையக மெல்லாமால்—யானே
எளியேனேர் பெண்பாலே னீர்ந்தண்டார் மாறன்
அளியானேல் அன்றென் பார்ஆர்.

(கு - பு.) தலைவி தோழியினிடம் கூறியது.

(இ - ள்.) தோழி! யானே மிகவும் எளியேன்; அதுவு மன்றி ஒரு பெண்பாலாகவும இருக்கின்றேன். என் நெஞ் சம், நாணம், நலன் இவற்றைக் கவர்ந்து கொண்ட அக் கள்வனே வென்றுல் ஒப்பற்ற வெண் கொற்றக் குடை பிடித்தவனுகவும், அரசர்க்கு அரசனுகவும் இருக்கின்றன்; சிற்றரசனுக இருந்தால் அவனுக்கு மேற்பட்ட அரசனிடத் திற் சொலலியாவது குறையைத் தீர்த்துக்கொள்ள வழியிருக் கும்; அதற்கும் வழியில்லை; வேற்று நாட்டு அரசனிடத்திற் சொல்லியாவது, இந்த வழக்கைத் தீர்த்துவிடு என்று சொல்லலாமென்றுல், வானத்திற்கு எதிராகப் பொருந்திய வையகம் எல்லாமே அவனுடைய ஆட்சிக்கு உட்பட்டதாகத் தான் இருக்கின்றது; குளிர்ச்சியான ஈரமுள்ள மாலையை அணிந்த மாறன் தானுக இரங்கி அருள் செய்தால் பயன் உண்டு; அவன் அருள் செய்யா விடின், "நீ நின்னைக் காத லித்த மங்கைக்கு அருளாமலிருப்பது முறைமையன்று"

என்று கூறுபவர் யாவர்? ஒருவருமில்லையே; என் செய் வேன்? என்கின்றாள்.

(வி - ம்.) மாறன்பால் மனம் போக்கிய மங்கை அவனது ஏற்றத்தையும் தனது தாழ்வையும் நோக்குகின் றாள்; மலைக்கும் மடுவிற்குமுள்ள ஏற்றத்தாழ்வினுங்கூட அதிகமாக இருக்கின்றது; என் செய்வாள்; அவளுக இரக் கப்பட்டு எண்ணை ஏற்றுக்கொண்டால் உண்டு; இன்றேல் ஒருவரும் சொல்லித் திருத்திவிட முடியாது; இது, முறை யன்று என்று கூறித் திருத்தவல்லார் இந்த வானேற்ற வையகத்திலேயே ஒருவரும் இல்லை; அதனல் இனித் தூது விடுத்தலும் பயனில்லை என்கின்றாள்.

தனிக்குடை – ஒப்பற்ற குடை. வானேற்ற வையகம் - வானவெளி யெல்லாவற்றிற்கும் எதிராக இருக்கின்ற இவ் வுலகம். அளியானேல் – அருள் செய்யாவிட்டால்.

"தானே உலகாள்வான் தான்கண்ட வாவழக்கம்
ஆனல்மற் றுரிதனை அன்றென்பார்—வானோர்
கனைகண்தா னுய்நின்ற காளத்தி ஆள்வார்
வனைகொண்டார் மால்தந்தார் வந்து.

என்பது நக்கீரதேவ நாயனார் பாடிய கைலைபாதி காளத்தி பாதி யந்தாதிச் செய்யுள்.

தியேன்

நுஅ. பன்மாடக் கூடல் மதுரை நெடுந்தெருவில்
என்னேடு நின்றூர் இருவர் அவருள்ளும்
பொன்னேடை நன்றென்றாள் நல்லளே பொன்னே
கியானேநன் றென்றுளும் அந்நிலையள் யானே [டைக்
எருத்தத் திருந்த இலங்கிலைவேல் தென்னன்
திருத்தார்நன் றென்றேன் தியேன்.

(கு - பு.) பொன்னேடை மா களிற்றின் உச்சிமிசை யிருந்து தென்னன் மதுரை நெடுந்தெருவில் உலாவரும்பொழுது கண்டு காத லித்த நங்கை, புணரா இரக்கமாகிய ஏக்கத்துடனும், பொருமலுடனும் சொல்லில் ஒரு மாற்றிரை சோரும்படி நெஞ்சொடு சொல்லிப் பெருமூச்சு விடுதல்.

(இ - ள்.) நெஞ்சமே! பல மாடங்கள் அமைந்து விளங்கும் மதுரையில் உள்ள பெரிய தெருவில் என்னோடு நங்கையர் இருவர் நின்றனர்; அவர் இருவருள்ளும் ஒருத்தி பாண்டியனுடைய யானையின் பொன்னோடை நன்றாக இருக்கின்றது என்றாள்; அவள் நல்லவள்தான்; மற்றொருத்தி அந்தப் பொன்னோடையின் அழகுக்கு ஏற்ப யானையும் நல்ல யானைதான் என்றாள்; அவளும் நல்லவளே; யானும் அவ்வாறு சொல்லியாவது விட்டேனா? இல்லை; யானையின் பிடரியின்மேல் இருக்கின்ற, விளங்குகிற வேல் வைத்திருக்கின்ற பாண்டியனுடைய மார்பில் அணிந்திருக்கின்ற அழகிய மாலைதான் நல்லது என்றேன்; தீயேனுகிய யான்; என்று தலைவி பெருமூச்சு விடுகின்றாள்.

(வி - ம்.) மதுரைக்கு அண்மையிலுள்ள ஓர் ஊரிலிருந்து நங்கையர் மூவர் மதுரை விழாவிற்குச் சென்று பார்க்கின்றார்கள்; பெரிய பெரிய மாடங்கள் வானளாவி விளங்குகின்றன; தெருக்களெல்லாம் அகன்று நீண்டு அழகுடன் பொலிகின்றன; எங்கே பார்த்தாலும் நெருக்கம்; பாண்டியன் வீதி வழி உலாவருகின்றான்; பெரிய யானையின்மேல் இருக்கின்றான்; மார்பில் நல்ல மாலைகள் அணிந்திருக்கின்றான்; கையில் சுடர்விட்டு விளங்குகின்ற வேல் ஒன்று வைத்திருக்கின்றான்; யானையின் நெற்றியில், மாணிக்கமும், முத்தும் அழுத்திப் பொன்னால் செய்த முகபடாம் அழகோடு அழகாய்ப் பொருந்தி விளங்குகின்றது; ஒருத்தி கூறுகின்றாள்; "அதோ பார்! பொன்னோடை எவ்வாறு இலங்குகின்றது! நெற்றிப் பட்டம் இவ்வாறல்லவா இருக்கவேண்டும்" என்கின்றாள்; மற்றவள் ஆம்; நன்றாகத்தானிருக்கின்றது; இவ்வளவு அழகான பொன்னோடையை வேறு யானைக்கு அணிந்தால் இவ்வளவு அழகு வருமா? அந்தப் பொன்னோடைக்கு ஏற்ப இந்தயானையும் நல்ல யானைதான் என்கின்றாள்; மற்றவள் இவற்றை ஒருவகையாக அறிந்தாள்; ஆனால் அவள் மனமுங் கண்ணும் மாறனுடைய மார்பையே நோக்கின; ஆ! எவ்வளவு அகன்ற மார்பு பருத்த தோள்கள்! இந்த மார்பைக் கவ்விக்கொண்டு விளங்குகின்ற பூமாலைகளும் என்ன அழகாக இருக்கின்றன! அவை அவனால் அணியப் பெற என்னமுறையில் என்னதவம் செய்தனவோ? அந்த மாலை கிடைத்தால் ஒருவாறு அறியலாமே; ஆறுதலடைய

லாமே என்று நினைக்கின்றாள்; பக்கத்தில் நிற்கின்றவரிடத்தில் பாண்டியனுடைய மார்பு நன்றாக இருக்கின்றது என்று சொல்லலாமா? அவர்கள் நகைத்து விடுவார்களே; அன்றியும் இவளுடைய நாணமும் அதற்கு இடங் கொடாது அல்லவா? அதனால் பாண்டியனுடைய மாலைதான் நன்றாக இருக்கின்றது என்று கூறிவிட்டாள்; மூவரும் ஊருக்கு வந்த பின் மற்ற இருவரும் நலனுடையராய்க் கிளர்ச்சியுடன் இருக்கின்றார்கள்; இவள் பாண்டியனை நினைத்து உருகுகின்றாள்; கண்ணால் விட்டகலாத காட்சியை மறக்கமுடியவில்லை; எல்லோரும் பழிக்கின்றார்கள்; தனியே இருந்து நினைகின்றாள்; "அவர்களிருவரும் மெலியவில்லையே; பொன்னைடை நன்றென்றாள் நல்லளே; பொன்னைடைக்கு யானை நன்று என்றாலும் அங்கிலியன்தான் என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டே வந்து, "திருத்தார் நன்றென்றேன் தீயேன்" என்று சொல்லும்போது பெருமூச்சுடனும், பொருமலுடனும் வாய் சோர்ந்து, "தீ" என்பது இயல்பாகவே குறுகத், "திருத்தார் நன்றென்றேன் தியேன்" என்று ஏங்குகின்றாள்.

அவலச்சுவை நன்றாக விளங்குகின்றது. ஈற்றடி மெல்லினம் பயின்று குறுகி நிற்கும் முறை மிக அழகிது.

குறுக்கும்வழிக் குறுக்கலும் மெய்ப்பாடு பற்றிச் சொல்பவர் சொல் நெகிழ்ந்து குறுகியவழியே அமைத்தல் நலம் என்பது உணர்க. (தொல் - செ. சூ.).

பொன்னைடை - பொன்னால் செய்த நெற்றிப்பட்டம். தியேன் - தீயேன்.

வஞ்சியானல்லன்

நிகூ. நறவேந்து கோதை நலங்கவர்ந்து நல்கா
மறவேந்தன் வஞ்சியான் அல்லன்—துறையின்
விலங்காமை நின்று வியன்தமிழ்நா டைந்தின்
குலங்காவல் கொண்டொழுகுங் கோ.

(கு - பு.) தோழி தன்னெஞ்சொடு சொல்லியது.

(இ - ள்.) நெஞ்சமே; தேனைத்தாங்கிய பூமாலைகளை அணிந்திருக்கின்ற இவளுடைய அழகினைக் கவர்ந்து பின்பு

அதனை இவளுக்குக் கொடுக்காத கொடுமையுள்ள வேந்தன், பிறரை வஞ்சியாதவனல்லன்; (வஞ்சியென்னும் ஊரையுடைய சோழனல்லன்) ஒழுக்கத்துறையில் இழுக்காமல் நின்று அகன்ற தமிழ்நாடு ஐந்தனையும் தம் குலத்திற்குப் பொருந்திய முறைப்படி காவல்கொண்டு நடக்கின்ற பாண்டியன்; ஆதலால், எவ்வாறு இவளுக்கு அவன் அருள் கிடைக்கப் போகின்றது? என்று தோழி நினைக்கிறாள்.

(வி - ம்.) தலைவி பாண்டியன்பால் காதல்கொண்டு தளர்கின்றாள்; அவனை ஒழுக்க நெறியில் வழுக்காத உரனுடையவன்; அவனுடைய அருள் கிடைப்பது அரிதாக இருக்கின்றது; அவன் வஞ்சனையுடையவன்போல் காணப்பட்டான்; வஞ்சியானல்லன் (வஞ்சிக்கத்தான் செய்வான்) அஃதாவது வஞ்சி என்னும் ஊராளும் சோழனல்லன்; இவன் பாண்டியன். ஒழுக்கத்துறையில் வழுக்காத இவன் எவ்வாறு இரங்கப் போகின்றான் என்று ஏங்குகின்றாள்.

நறவு - தேன். நறவேந்து கோதை - தேனைத் தாங்கிய கோதையை அணிந்த பெண்; அன்மொழித் தொகைக் காரணப் பெயர். விலங்காமை - தவறுமை. வஞ்சி - கருவூர்; இதனைச்சேரனுடைய நகரம் எனலுமாம். வஞ்சியானல்லன் என்பதற்குக் கருவூருடையானல்லன் என்றும் பிறரை வஞ்சியாமல் விடுவானல்லன் என்றும் பொருள் கொள்க. விலங்காமை நின்று - ஒழுக்க நெறியிலிருந்து வழுவாமல் நின்று. வியன்தமிழ் நாடைந்து - அகன்ற தமிழ் நாடு ஐந்து. குலங்காவல் - தம் குலத்திற்குப் பொருந்திய முறைப்படி காக்குங் காவல்.

உழுத உழுத்தஞ் செய்

சூ0. உழுத உழுத்தஞ்செய் ஊர்க்கன்று மேயக்
கழுதை செவியிரித் தற்றால்—வழுதியைக்
கண்டநங் கண்கள் இருப்பப் பெரும்பணைத்தோள்
கொண்டன மன்னே பசப்பு.

(கு - பு.) மாறனைக் கண்டு காதலித்துத் தோள் மெலியப் பசலை பூத்த நங்கை தெஞ்சொடு சொல்லியது.

(இ - ள்.) நெஞ்சமே! பாண்டியன் உலா வரும் பொழுது அவனைக் கண்ட நங் கண்கள் ஒரு கேடு மின்றி வாளா இருப்ப, பருத்த மூங்கில்களைப் போல அழகாக இருந்த நம் தோள்கள் வீணாக மெலிந்து பசலையுங் கொண்டனவே; இது, உழுத்தங்காய் பிடுங்கிய பின் உழுத வயலில் தழைத்திருந்த புல்லை ஊர்க்கன்றுகள் மேய்ந்துவிட்டுச் செல்லக் கழுதையைப் பிடித்துச் செவியை அரிந்துவிட்டது போலல்லவா இருக்கின்றது என்கின்றாள்.

(வி - ம்.) பாண்டியன் வீதிவழி உலா வருகின்றான்; பார்க்கின்றாள் ஒரு நங்கை; உடனே வேட்கை கொள்கின்றாள்; அவனும் அந்த வீதியைக் கடந்து போயினான்; இவளும் வீட்டிற்குட் சென்றாள்; உடம்பு கொதித்தது; உணவும் செல்லவில்லை; நினைந்து நினைந்து நைந்தாள். மூங்கில் போன்ற அவளுடைய பருத்த தோள்கள் மெலிந்து பசலை கொண்டன; மன்னனுடைய மணத்திற்கோ வழியில்லை; தனியே இருந்து நினைக்கின்றாள்; நம்முடைய கண்கள்தானே பாண்டியனுடைய மார்பைப் பார்த்தன; அதனால் கண்கள் தாமே மெலிவடைய வேண்டும்; அவைகள் விழிவிழி யென்று விழித்துக்கொண்டு இருக்கத் தோள்களல்லவா மெலிகின்றன; பசலையுமல்லவா பூத்திருக்கிறது; என்று நினைக்கின்றாள்; அப்பொழுது மற்றொரு எண்ணமும் தோன்றிற்று; ஒரு பெரிய வயல்; கொத்துக் கொத்தாக உழுத்தங் காய்கள் காய்த்துக் கிடந்தன; அவற்றை யெல்லாம் பிடுங்கி உழுத பின்பு அதில் பசும்புல் தழைத்துப் படர்ந்திருந்தது; அதனை ஊரிலுள்ள பசுவின் கன்றுகள் சென்று மேய்ந்து விட்டுப் போய்விட்டன; நிலத்துக்குரியவன் பார்த்தான்; வயலுக்குப் பக்கத்திற் சில கழுதைகள் சென்றுகொண்டிருந்தன; அவைகள்தான் மேய்ந்துவிட்டுச் செல்கின்றன என்று கருதி, விரைந்து ஓடிக் கத்தியை உருவி அவற்றின் காதுகளை அறுத்துத் தொலைத்தான்; அவைகளும் கத்திக் கொண்டு ஓடிவிட்டன; இதைத்தான் நினைத்தாள்; ஆ, ஊர்க்கன்றுகள் சென்று மேயக் கழுதையின் செவியை அரிந்தது போலல்லவா நம்முடைய நிகழ்ச்சியும் இருக்கின்றது? என்று நினைக்கின்றாள்; நம்முடைய கண்கள் பார்த்தன; அதற்கு இந்தத் தோள்கள் மெலிந்துவிட்டனவே; என்று ஏங்குகின்றாள்.

பாண்டியனுடைய மார்புக்கு "உழுத உழுத்தஞ் செய்" உவமையாகக் கருதப்பட்டது; இதில் தலைவியின் உட் கோள் ஒன்று மறைந்து கிடக்கின்றது; அவனுடைய உரிமை மகளிரால் மார்பிலுள்ள பயன்கொண்டு அதிலுள்ள முடிகளுந் தேயும்படி உழப்பட்ட மார்பில், என் கணகள் தானே சென்று மேய்ந்தன; அதற்குத் தோள்களா மெலிய வேண்டும்? என்பது குறிப்பு.

இது, ஏது நுதலிய முதுமொழியணி.

முழங்குங் கடா யானை

கூக. சென்றதுகொல் போந்ததுகொல் செவ்வி பெறுந்
துணையும்
நின்றதுகொல் நேர்மருங்கில் கையூன்றி—முன்றில்
முழங்குங் கடாயானை மொய்ம்மலர்த்தார் மாறற்
குழந்துபின் சென்றவென் னெஞ்சு.

(கு - பு.) மாறன்பால் வேட்கையுற்றுப் பின்தொடர்ந்து சென்ற தன் மனத்தின் நிலையைத் தலைவி தன் நெஞ்சொடு கூறியது.

(இ - ள்.) மனமே! முற்றத்திலே நின்று முழங்கு கின்ற மதயானைகளை யுடையவனும், வண்டுகள் மொய்க் கின்ற மலர்மாலை அணிந்தவனுமாகிய பாண்டியனை அடை தற் பொருட்டு வேட்கை நோயுழந்து, அவன் பின்னுலே தொடர்ந்து சென்ற என் மனம் அங்கே போய்ச் சேர்ந் திருக்குங் கொல்லோ? அல்லது, போய் அவனுடைய அரு ளைப் பெற்றுக்கொண்டு மீண்டு விட்டதோ? அன்றேல், அவனுடைய செவ்வி கிடைக்கும் வரை தன் அழகிய இடை யிற் கையை ஊன்றிக்கொண்டு அங்கேயே நிற்கின்றதோ? யாது செய்தது கொல்லோ? என்கின்றாள்.

(வி - ம்.) வழுதியின்பால் உளம்போக்கி மயலுற்ற நங்கை உருவமில்லாத தன் மனத்திற்கு உருவம் கொடுத்து அதன் நிலையை எண்ணி ஏங்குகின்றாள்.

வண்டு மொய்க்கும்படி மலர்மாலை யணிந்திருந்த மாற னுடைய மார்பினை அவளுக்கு மறக்க முடியவில்லை. மனம் சுழன்றது; அவன் பின்னுலேயே போயிற்று; வீட்டிலே

யிருந்துகொண்டு நினைக்கின்றாள். மனம் பாண்டியனிடத்திற் போயிற்றே? போய்த்தான் திரும்பியதோ? அவன் செவ்வி கிடைக்கும்வரைத் தன் மருங்கிற் கையூன்றிக் கொண்டு நிற்கின்றதோ? என்று நினைக்கும்போது தலைவிக்கு மற்றொரு நினைவு வருகின்றது; மாறனுடைய மூற்றத்தில் மத யானைகள் மறிகடல்போல் முழங்கிக்கொண்டு நிற்குமே; அதற்கு அஞ்சி நடுங்கிக்கொண்டுதானே அரண்மனை வாசலில் நிற்கும் என்று கருதுகின்றாள்.

"கடும்பனித் திங்கள்தன் கைபோர்வை யாக
நெடுங் கடை நின்றதுகொல் தோழி"

என்ற பாடலிலும், இப்பாடலிலும் உருவமில்லா மனத்திற்கு உருவங்கொடுத்துச் செயலும் ஏற்றி அருவ ஓவியம் தீட்டியிருக்கின்ற முறை பாராட்டத் தக்கது. 'இவ்வளவிற் செல்லுங்கொல்' என்ற நளவெண்பாப் பாடல் இதனை ஒத்து வந்தமை காண்க.

கொல் என வருவன வெல்லாம் ஐயப்பொருள் குறித்த இடைச் சொற்கள். செவ்வி - மன்னனைப்பார்த்து உரையாடற்கு வாய்ப்புடைய நேரம்;

"கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி,
அதம்பார்க்கும் ஆற்றி னுழைந்து"

என்பது குறள். சென்றதுகொல் - பாண்டியனுடைய இருப்பிடத்திற்குப் போயிற்று கொல்லோ? போந்ததுகொல் - போய் அவனருள் பெற்று மீண்டது கொல்லோ? நேர் மருங்கு - அழகிய இடை. முன்றில் - வாசல். கடாயானை - மதயானை. மாறற்கு உழந்து - பாண்டியன் பொருட்டு வேட்கையுற்றுச் சுழன்று.

தலைவியினுடைய வருத்தத்தையும், அழுகையென்னும் மெய்ப்பாட்டினையும் நன்றாக உணர்த்துகின்றது இப்பாடல்.

சோழன்

புகழ்

திங்கள் அதற்கோர் திலதம்

சூ உ. மந்தரங் காம்பா மணிவிசும் போலியாத்
திங்கள் அதற்கோர் திலதமா—எங்கணும்
முற்றுநீர் வையம் முழுது நிழற்றுமே
கொற்றப்போர்க் கிள்ளி குடை.

(கு - பு.) கொற்றப் போர்க் கிள்ளி குடையின் கீர்த்தனை கூறல்.

(இ - ள்.) வெற்றிப் போர்ச் சோழனது குடை, மந்தர மலையினைக் காம்பாகவும், நீலவிசும்பினை ஓலையாகவும், சந்திரனை அதற்கு ஓர் நடு வட்டமாகவுங்கொண்டு கடல் புடைசூழ்ந்த வையகம் எங்கணும் எஞ்சாமல் நிழலைச் செய்யும் எ - று.

(வி - ம்.) குடை, செங்கோல் என்பன அரசர்க்குச் சிறந்தவை; செங்கோல் பிடித்தல் முறைகோடாமைக்கு அறிகுறியாகும்; குடை பிடித்தல், அரசன், தன் தண்ணளி யாகிய குளிர்ந்த அருள் நிழலினால் உலகத்தைக் காக்க வேண்டும் என்பதற்கு அறிகுறியாகும்; வாயிற் கடைமணி நடுநா நடுங்காமல் தன் ஆணை எங்கும் சென்று இடர் வெப்பத்தை நீக்க அரசாண்ட சோழனுடைய குடை ஒரு குறுகிய அளவு உடையதன்று. அறிகுறிக்காக வைத்திருக் கும் குடை சிறியதுதான்; ஆனால் அவன் உலகிற்கு நிழல் செய்கின்ற குடை மிக மிகப் பெரியது; மந்தர மலைதான் அதற்குக் காம்பு; நீல ஆகாயப் பரப்பு முழுதும் அதற்கு மேற்பரப்பு ஓலை; சந்திரன் நடுவட்டம்; அந்தக் குடை உலகம் முழுதும் நிழல்செய்து காக்கின்றது; என்று அவன் குடையின் தண்மையும் கோலின் செம்மையுங் கூறுகின்றார்.

"ஞாயிறு சுமந்த கோடுகிரள் கொண்மூ
மாக விசும்பின் நடுவுநின் றுங்குக்
கண்பொர விளங்குநின் வின்பொரு வியன்குடை
வெயின்மறைக் கொண்டன்றே வன்றே வருந்திய
குடிமறைப் பதுவே கூர்வேல் வளவ!"

என்ற புறநானூற்றின் ஈ0டு - வது பாடல் அடிகளையும் நோக்குக.

மந்தரம் - மந்தரமலை. மணிவிசும்பு - நீலமணிபோன்ற நிறமுள்ள ஆகாயம். திங்கள் - சந்திரன். திலதம் - நடு வட்டம். நிழற்றும் - நிழலிச் செய்யும். கொற்றம் - வெற்றி. எங்கணும் - எவ்விடத்தினும்.

எமக்குக் காட்டாய்

சூ ஈ. *குருந்தம் ஒசித்தஞான் றுண்டால் அதனைக்
கரந்தவடிவெமக்குக் காட்டாய்—மரம்பெரு
போரிற் குருகுஉறங்கும் பூம்புனல்நீர் நாட!
மார்பிற் கிடந்த மறு.

(கு - பு.) பூவைநிலை: அஃதாவது மாநிலங் காக்கும் மன்னனைக் காத்தற் கடவுளாகிய திருமாலாகக் கூறுதல்.

(இ - ள்.) வைக்கோற் போரின்கண் உள்ள நெல்லைத் தின்பதற்குச் சென்ற குருகுகள் அதனைத் தின்று பின், தன்னை விரட்டுவாரின்மையானும், அப்போதே தனக்கு ஒரு பஞ்சணைபோன்று இருத்தலானும், அடைகால் மரத்திற்குச் செல்லப் பெறாது, அங்கேயே தங்கி உறங்குகின்ற பூவிரி புதுப்புனற் காவிரி புரக்கின்ற தண்ணடை சூழ்ந்த நாட்டினையுடைய சோழனே! நினது மார்பின்கட் கிடந்த மறு, முன்னர் நீ குருந்தம் ஒசித்த காலத்தில் இருந்தது; அதனைக் கரந்த வடிவினை எமக்குக் காட்டாய்; என்கின்றார்.

ஒசித்த - ஒடித்து வளைத்த; குருகு - பறவை; கரந்த - ஒளித்த; போர் - வைக்கோற்போர்.

இது 'மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பிற்
றுவா விழுப்புகழ்ப் பூவைநிலை.'

அன்றைக்குக் கோவியருக்கு ஒதுக்கிடமாகக் குருந்த மரத்தை ஒடித்து வளைத்த காலத்திலே, நின் மார்பில் மறு

---

* தொல் - புறத்திணை இயல் ஞ. நச்சினார்க்கினியர் மேற்கோள். இதுமுத்தொள்ளாயிரப் பாடலாக விருக்கும் என்று கருதிச் சேர்க்கப் பட்டுள்ளது.

இருந்ததே ; அதை இப்பொழுது யாங்கு ஒளித்தாய் காட்டு; என்கின்றார்.

ஒளித்து வைத்திருந்ததைக் கண்டுவிட்டதாக ஒரு பெரு மிதம் பேசுகின்றார். 'கூந்தன்மா ஊர்ந்து' என்ற பாடலும் அதன் உரையும் காண்க.

திருமாலின் மார்பில் திருவும் மறுவும் இருத்தல் உணர்க.

வினைவகையால் வேறு

கூ௪. *புனல்நாடர் கோமானும் பூந்துழாய் மாலும்
வினைவகையால் வேறு படுவர்—புனல்நாடன்
ஏற்றெறிந்து மாற்றலர்பால் எய்தியபார் மாயவன்
ஏற்றிரந்து கொண்டமையி னால்.

(கு - பு.) புனல் நாடாளும் சோழன் திருவுடைமையினால் திருமாலை யொப்பவனானாலும், தொழில் வகையால் மேம்பட்டவன் காண்; சோழன் மாற்றாரை எதிர்த்து வென்று கொண்ட நிலத்தை மாயவன் மாவலியினிடத்து இரந்துதானே பெற்றுக்கொண்டான், என்று தலைவி கூறுதல்.

(இ - ள்.) தோழி! காவிரிப்புனல் பாய்கின்ற நாடனாகிய சோழன் மாற்றார் வீசிய வேலைத் தன் மார்பில் ஏற்றும், தன் வேலைப் பகைவர்மேல் எறிந்தும் அவரை வென்று கொண்ட நிலத்தைத் திருமால் மாவலிபால் இரந்தும் நீரேற்றும் பெற்றுக் கொண்டானல்லவா? ஆதலால், நீர்நாட்டில் வாழ்பவருடைய தலைவனாகிய சோழனும் அழகிய துளசிமாலை யணிந்த திருமாலும் வினைவகையால் வேறுபடுவர்காண், என்று தலைவி தோழியினிடம் கூறுகின்றாள்.

(வி - ம்.) போர் தொடங்கிற்று; சோழன் சென்று மாற்றாரை வென்று வாகைமாலை சூடிக்கொண்டு வந்தனன்; வீதிவழி உலா வருகின்றான்; எல்லோரும் பார்க்கின்றார்கள்; திருமால் என்றுதான் இவனைச் சொல்லவேண்டும்; காத்தல் தொழிலாலும் செல்வத்தாலும் அவ்வளவு சிறந்

---

* முத்தொள்ளாயிரம் என்று கருதத் தக்கது.

திருக்கின்ருன் ; என்று பேசுகின்ருர்கள் ; இதைக் கேட்ட தலைவி தோழியைப் பார்த்துக் கூறுகின்ருள் ; தோழி ! நம் சோழன் மாற்ருரை வென்று மாநிலத்தைத் தனதாக்கிக் கொண்டான் ; திருமால் மாவலியினிடம் இரந்து தானே நிலம் பெற்ருன் : ஆதலால் தொழிலால் சோழன் மேம் பட்டவன்காண் ; என்று தோழியினிடம் கூறுகின்ருள்.

புனல் நாடர் கோமான் - புனல் நாட்டில் வாழ்பவ ருடைய மன்னனுகிய சோழன் ; பூந்துழாய்மால் - அழகிய துளசிமாலே யணிந்த திருமால் ; ஏற்றெறிந்து - மாற்ருர் வீசிய வேலைத் தன் மார்பில் ஏற்றும், தன் வேலை மாற்ருர் மேல் எறிந்தும். போரேற்று மாற்ருர்மேல் வேலை வீசி எனலும் ஆம். ஏற்றிரந்து - ஈரேற்று இரந்து கேட்டு.

நாடு

கூற்றிசைத்தாற் போலுமே

கூடு. காவல் உழவர் களத்தகத்துப் போரேறி
நாவலோ வென்றழைக்கும் நாளோதை—கர்வ
லன்றன்
கொல்யானை மேலிருந்து கூற்றிசைத்தாற் போலுமே
நல்யானைக் கோக்கிள்ளி நாடு.

(கு - பு.) கோக்கிள்ளியின் நாட்டுவளம் கூறுதல்.

(இ - ள்.) நல்ல யானைப் படைகளையுடைய கிள்ளி என்னும் சோழ மன்னனுடைய நாட்டில் நெற் களத்தைக் காக்கின்ற உழவர் அக்களத்திலுள்ள நெற்கதிர்ப் போர் களின் மேல் ஏறி நெல் அடித்தல் முதலிய தொழிலில் மூழ்தற்பொருட்டு உழவர்களை நாவலோ என்று அழைக் கின்ற காலே ஓசையானது, போர் வீரர்கள், மன்னனுடைய மாற்ருரைக் கொல்லும் யானைகளின்மேல் இருந்து, போர்த் தொழிலில் மூளும்பொருட்டுத் தம் பகுதியினராகிய வீரர் களை நாவலோ, என்று இசைத்து அழைத்தாற் போன் றிருக்கின்றது எ - று.

"கூற்றிசைத்தாற் போலுமே"

என்பதற்கு,

வில்லேருழவர் யானேமேலிருந்து கூவும் ஆண்மைக் கூச்சல் கூற்றுவனேத் தமக்குத் துணேயாக அழைத்தாற் போலும் என்றேனும், "உயிர்த்தொகைகளே விருந்தாக உண்ணவருதி! யாம் விருந்திடுகின்றேம்" என்று அழைத்ததாக வேனும், கூற்றே யானேயின் மேலிருந்து கூச்சலிட்டது போலும் என்றேனும் கொள்க. கொல்லுதற் றொழில் ஒப்புமைபற்றி மன்னனது போர் வீரனேயே கூற்றுவனுக முற்றுருவகப்படுத்தியதாகவும் கொள்ளலாகும். கூற்று - ஒரு பகுதியாளர், கூற்றுவன், கூற்றுவனேயொத்த படைத் தலேவன்.

(வி - ம்.) கிள்ளியின் நாட்டில் காவிரியின் வளத்தால் நெல் மிகுதியாக விளேகின்றது. அறுவடைக் காலத்தில் எங்கே பார்த்தாலும் களமும் வைக்கோற் போர்களும் வண்டிகளும் வேலியாட்களின் ஆரவாரமும் மிகுதியாக இருக்கும். களத்தில் நெல்லே அடித்துக் குவித்து அதனேக் காப்பதற்காகக் களத்திலேயே படுத்திருந்த பலர் அதிகாலேயில் விழித்துக்கொண்டு வேலே செய்பவர்களே அழைக்கத் தொடங்கி வைக்கோற் போரின்மேல் ஏறி நின்றுகொண்டு அக்காலத்து முறைப்படி 'நாவலோஒ' என்று கூவுகிறார்கள்; இவ்வாறு கோடிக்கணக்கான வைக்கோற் போரின் மேல் ஏறி அவர்கள் மருத நிலத்திற் கூவும் ஓசையின் மிகுதியைக் கூறவந்த ஆசிரியர் அதற்குப் போர்க்களத்து ஆரவாரத்தை உவமை கூறத் தொடங்கி நெய்தல் நிலத்தில் வீரர்கள் தும்பை சூடிப் போர் செய்யத் தொடங்குங் காலேயிற் கோடிக்கணக்கான யானேகளின் மேல் ஏறித்தம் பகுதியினராகிய வீரர்களே, 'நாவலோஒ' என்று அழைத்துப் போர்த் தொழிலில் மூளச்செய்யும் ஆரவாரத்தை ஒத்திருக்கின்றது; என்கின்றூர்.

"நாவலோஒ" என்னும் சொல் ஏர்க்களம், போர்க்களம் முதலிய இடங்களில் தத்தம் பகுதியினரை அழைக்கும் குறியீட்டுச்சொல்.

மன்னரும், உழுவித்து உண்ணும் வேளாளரும் தத்தம் தொழிலாளருக்கு மகிழ்வாய்ப் பொருள் வழங்கும்பொழுது "நாவலோஒ" என்று தொழிலாளரை அழைப்பித்தலும் உண்டு.

இருவர் தம்முள் எதிர்த்துச் சொற்போர் புரியுங்கால் நாவற்கொம்பை நட்டுவைத்து, 'நெடுமொழி கூறி ஒருவரை ஒருவர் 'நாவலோ' என்று விளித்தலும் உண்டு.

தனிச்சீரில், "மாவலவன்" என்றும் ஒரு பாடம் உண்டு. அப்பாடத்திற்கு, "யானை ஏற்றத்தில் வல்லான்" என்று பொருள் கொள்க.

"நாவலோ என விளிப்பத் தொழுவரெலாம் நயந்து
எய்தி விடினயின் மூள்வார்" என்பதுகாஞ்சிப்புராணம்.
நாளோதை - காலைப்பொழுதில் இசைக்கும் ஓசை.

கூற்று இசைத்தாற் போலும்—தம் பகுதியாரை அழைத்தாற்போலும்; காவல் உழவர் - ஏர்க்களங் காக்கும் உழவர்; போர் ஏறி - நெற்கதிர்ப்போரின்மேல் ஏறி; ஏர்க்களங்காப்போர், நெற்போரின்மேல் ஏறி அழைத்தல் போர்க்களங் காப்போர் யானைமேலேறி அழைத்தலை ஒக்கும் என்க.

நகர்

விற்பயில் வானகம்

கூகூ. மாலை விலைபகர்வார் கிள்ளிக் களைந்தபூச்
சால மருவியதோர் தண்மைத்தால் – காலையே
விற்பயில் வானகம் போலுமே வெல்வளவன்
பொற்பார் உறந்தை யகம்

(கு - பு.) உறையூரின் வளத்தை உவந்து உரைத்தல்.

(இ - ள்.) மாற்றரசரைப் போரில் வெல்லும் வளவனது அழகு நிறைந்த உறையூரினிடத்திலுள்ள வீதிகள், முதல் நாள் மாலைப் பொழுதில் பூ விலை பகர்பவர் தொடுக்கும் பொழுது நகத்தாற் கிள்ளிக் களைந்த பல நிறப் பூக்கள் மிகுதியாகப் பொருந்தியதாகிய ஓர் இயல்பினை யுடைத்தாதலால், மறுநாள் காலையில் வானிடத்திலே பொருந்திய வில்லைப் போன்றதாக இருக்கும் என்று.

(க - து.) பூ விற்பவர்கள் முதல்நாள் மாலைப்பொழுதிற் கிள்ளிக் களைந்தெறிந்த பல வண்ணப் பூக்கள் மிகுதி

யாகப் பரவியிருக்கின்ற உறந்தைத் தெருக்கள் வில்லொடு பொருந்தியாய் விண்ணகம் போன்று கண்ணுக்கு இனியன வாய்க் காட்சியளிக்கும்.

(வி - ம்.) மாலை - முதல்நாள் மாலைப் பொழுதில். காலை - மறுநாள் காலையில். விலைபகர்வார் - பூ விலை கூறுபவர். கிள்ளிக்களைந்த பூ - தொடுக்கும்போது (வடுவுற்றும் சுருண்டும் இருத்தலால்) கிள்ளிக் களைந்து போடப்பட்ட பூக்கள்; சால - மிகுதியாக. உறந்தை - உறையூர். மாலைப் பொழுதில் உறந்தையின் வீதிவழியாகப் போனால் அங்கே பலநிறப் பூக்கள் தொடுத்து விற்பதைப் பார்க்கலாம். அதி காலையில் மக்கள் எழுந்து வீதிவழி போக்குவரவு புரியும் முன்பு பார்த்தால் முதல் நாளிற் கிள்ளிக்களைந்து போட்ட பூக்கள் வீதியிற் பரவிக் கிடத்தலால் பலவேறு வண்ண முள்ள வான வில்லைப் போல இலங்குவதைக் காணலாம். கிள்ளிக் களைந்த பூவின் மிகுதி இவ்வளவென்றால் தொடுத்த பூக்களுக்கு அளவு எவ்வளவாகும்? அவற்றை அணிந் திலங்குபவர் எவ்வளவினர்? அம்மலர்ப் பொழில்கள் தாம் எவ்வளவோ? என்று ஆராயுங்கால் உறந்தையின் சிறப்பும்; மக்களின் கூட்டமும, செல்வ வளனும்; பூம்பொழிலின் மிகுதியும் இன்பப் பெருக்கமும் புலனாகும்.

திறை

செவ்வி இலனே

கூ எ. நின்றீமின் மன்னீர் நெருநற் றிறைகொணர்ந்து
முன்றந்த மன்னர் முடிதாக்க—இன்றுந்
திருந்தடி புண்ணாகிச் செவ்வி யிலனே
பெருந்தண் ணுறந்தையார் கோ.

(கு - பு.) சோழனுக்குத் திறை கொடுக்க வந்து மொய்த்து நெருக்கிய மன்னரைப் பார்த்து, இன்று செவ்வியில்லை பொறுமின் எனல்.

(இ - ள்.) மன்னர்காள்! பொறுமின்; நேற்றுத்திறை கொண்டுவந்து முதலிற் றந்த மன்னர்கள் வணங்கும்போது அவர்கள் முடி தாக்குதலால் அரசனுடைய அழகிய அடிகள் புண்ணாகிவிட்டன; ஆதலால் நெற்றுப் பின்பு வந்து திறை

செலுத்த நினைத்தவர்களுக்கும் எம் மிகுந்த தண்ணிய் உறந்தையார் மன்னன் செவ்வியிலனுயினன் ; ஆதலால் நேற்று வந்தவரில் திறை செலுத்தும் செவ்வி வாய்க்கப் பெருதவரும் பலருளர். இன்னும் செவ்வியிலனே ! என்செய்வது? என்று கூறுகின்ருன்.

(வி - ம்.) தாம் கொடுக்கவேண்டிய திறைப் பொருளை உரிய காலத்திற் கொடுக்காவிட்டால் மாறனுக்குப் பெருஞ் சீற்றம் வந்துவிடும் ; ஆதலால், மன்னர் பலர் திரண்டுவந்து திறைசெலுத்தி வணங்குகின்றனர். மிகப்பலர் வணங்கும் போது அரசனுடைய திருவடிகளில் முடிகள் தாக்குதலால் அவைகளிற் புண்ணேற்பட்டுவிட்டன. பின்பும் வந்து நெருக்குகின்ருர்கள்; அப்பொழுது வாயிற் காப்பாளன் இவ்வாறு கூறுகின்ருன்.

நின்றீமின் - பொறுமின் ; 'நில்' என்ற பகுதியின்மேல் ஈகாரம் வந்து சேர, அதற்கிடையில், லகரம் னகரமாகப் பின் நகரமும் வரப்பின்பு 'நின்றீ' என்ருகும்; அதன்மேல் 'மின்' விகுதி சேர்ந்தது ; ஆதலால் நின்றீமின் என்ருயிற்று. 'முன்னிலை முன்னர் ஈயும் ஏயும், அந்நிலை மரபின்மெய் யூர்ந்து வருமே' என்பதனுலுணர்க.

நின்று ஈமின்—என்று பிரித்தல் சாலாது. பொருந்து மெனின் அதுவுங் கொள்க.

நெருநல் திறை கொணர்ந்து முன்றந்த மன்னர் முடி தாக்க - நேற்றுத் திறைப்பொருள் கொண்டுவந்து முதலிற் றந்த மன்னர் வணங்கும்போது முடிதாக்குதலாலே ; இன்றும் செவ்வி இலனே - நேற்றுப்பின்பு வந்தவர்க்குச் செவ்வியிலனுகியிருந்தான் ; அதுவேயன்றி இன்றைக்கும் செவ்வியிலனே ; என்கின்ருன். உம் - இறந்தது தழுவியது.

பெருந்தண் ணுறந்தையார் கோ—உறந்தையார் மன்னன் மிக்க தண்ணளியுடையன்தான் ; உங்களைக் காக்க வைக்கமாட்டான் ; ஆனல் திருந்தடி புண்ணுகிச் செவ்வியிலனே ! என்ன செய்யலாம் என்கின்ருன். 'இலனே' என்பதில் தன் மன்னன் காலில் புண்பட்டதைப் பொருமல் அவன் மனம் வருந்துகின்ற நிலை வெளியாகின்றது. திருந்தடி - நல்லியல்பான பூங்குறி, வளைக்குறி முதலியன உள்ள அடிகள்.

குதிரை மறம்

பொன்னுரை கற் போன்ற

கூ அ. *சாலியரி சூட்டால் மடையடைக்கு நீர்நாடன்
மாலு மழைத்தடக்கை மாவளவன்—காலியன்மா
மன்னர் முடியுதைத்து மார்பகத்துப் பூணுழக்கிப்
பொன்னுரைகற் போன்ற குளம்பு.

(கு - பு.) சோழனுடைய குதிரையின் மறச்செயலைக் கூறுதல்.

(இ - ள்.) நண்ப! நெற்கதிர் அறுத்த பின்பு அந்த வைக்கோலினாலே மடைகளை அடைக்கும்படி அவ்வளவு நீர்வளம் நிறைந்திருக்கின்ற சோழநாட்டினை ஆள்பவனுகிய ஒன்றனோடு ஒன்று கூடித் திரண்டு மயங்கிப் பொழிகின்ற மேகத்தைப்போலக் கொடைத் தொழிலிற் சிறந்த பெரிய கையினை உடைய பெரிய வளவனுடைய, காற்றைப் போல விரைந்து செல்லுந் தன்மையுடைய குதிரைகளின் குளம்புகள்; மாற்றரசருடைய பொன்முடிகளை உதைத்தலாலும், அவர்களுடைய மார்பில் அணிந்திருக்கின்ற பொன்னணிகளை எற்றித் திருகுதலாலும் பொன்னுரைத்த கட்டளைக் கற்களைப் போன்றனகாண்; என்று கூறுகின்றார்.

சாலி அரி சூட்டால் மடை அடைக்கும் நீர்நாட்டன் - மற்ற நாடுகளில் நெற்கதிர் விளையும் வரை குளத்திலும் கால்களிலும், யாற்றிலும் நீர் வருதல் அரிது; ஒரோஒரு கால் செழிப்பாக இருப்பினும் கதிர் அறுக்கின்ற காலத்திலே நீர் வற்றிவிடும்; ஆனால், பூவிரி, புதுப்புனற் காவிரி பாய்கின்ற நாட்டில், நெற்கதிர் அறுத்த பின்புங்கூடத் தண்ணீர் மடைவழி பொங்கிக் கொண்டுவரும்; அந்த மடைகளை அடைப்பதற்கு வைக்கோற் போரைக் கட்டிக்கொண்டு வந்து மிகமுயன்று அடைப்பார்கள். அவ்வளவு நீர்வளம் உடையது என்று பாராட்டுகின்றார்.

சாலி - நெற்கதிர். அரி சூட்டால் - அறுத்துக் களத்திற் சேர்த்துக் கடாவிட்டு உதறி அடைத்த நெற்போரினாலே.

---

* முத்தொள்ளாயிரமென்று கருதத்தக்கது.

மாலும் மழைத் தடக்கை - முகிற் படலங்கள் ஒன்றோடொன்று மயங்கிக் கலந்து பெய்கின்ற மழைபோலக் கொடைத் தொழில் செய்யும் பெரிய கை. காலியல்மா : கால் - காற்று. இயல் - தன்மை. மா - குதிரை. காற்றைப் போன்று விரைந்து செல்லும் தன்மையுடைய குதிரை. இயல் - இயலுதல் எனினும் ஆம். போர்க்களத்தில் வளவனுடைய குதிரைகள் காற்றினும் கடுகிச் சென்று மன்னருடைய பொன் முடிகளை உதைத்தன. மார்பிலுள்ள பொன்னணிகளை எற்றி உழக்கித் தங்கம் உரைத்த கட்டளைக் கற்போன்ற முளம்புகள் உடையவாயின என அவற்றின் மறத்தை விரித்துரைக்கின்றார்.

இதனால், நீர்நாட்டுவளமும் வளவனுடைய போர்ப் பரிகளின் செயலும் கூறப்பட்டன.

யானை மறம்

பனி மதியம்

99. * மண்படுதோட் கிள்ளி மதயானை மாற்றரசர்
வெண்குடையைத் தேய்த்த வெகுளியால்—விண்படர்ந்து
பாயுங்கொல் என்று பனிமதியம் போல்வதூஉம்
தேயுந் தெளிவிசும்பில் நின்று.

(கு - பு.) சோழனுடைய யானையின் வீரத்தை இயம்புதல்.

(இ - ள்.) தோழி! நிலவுலகத்தைத் தாங்குகின்ற பெரிய தோள்களுடைய கிள்ளியினுடைய மதயானை பகைவரசருடைய வெண் கொற்றக் குடையைப் பிடுங்கித் தேய்த்த தறிந்த சீற்றத்தினால்; ஆகாயத்திலே பாய்ந்து வந்து மேலும் பாய்ந்துவிடுங்கொல்லோ என்று நினைத்துக் குளிர்ந்த முழுமதி எனப் படுவதும், தெளிந்த ஆகாயத்திலே நின்று நடுங்கித் தேய்கின்றது; என்று தலைவி கூறுகின்றாள்.

தலைவியும் தோழியும் நாள்தோறும் நிலாமுற்றத்திலே நின்று, மதியைப் பார்த்து மகிழ்வது வழக்கம். ஒருநாள்

* முத்தொள்ளாயிரமென்று கருதத்தக்கது.

தலைவி தோழியைப் பார்த்துக் கூறுகின்றாள்; தோழி! இந்தத் திங்கள் ஏன் தேய்கின்றது? தெரியுமா? நம் மன்னனுடைய யானை மாற்றரசர் குடையைப் பிடுங்கித் தரையில் மோதி நொறுக்கித் தேய்த்த சீற்றத்தினாலே, தன்மேலும் பாய்ந்து பிடுங்கித் தேய்த்து விடுமென்று பயந்து நடுங்கி அச்சத்தினால் நிலத்திற்கும் வராமல் ஆகாயத்திலேயே நின்று தேய்கின்றது, என்கின்றாள். குடைக்கு உவமைப் பொருளாகிய திங்களையும் யானை பிடித்துத் தேய்த்தாலும் தேய்க்கும் என்று கூறுகின்றாள்.

இதனால் மன்னனுடைய மதயானையின் *தோற்றமும் ஏற்றமுங் கூறினார்.

மண்படுதோள் கிள்ளி – நிலவுலகத்தைத் தாங்கியிருக்கின்ற தோள்களையுடைய சோழன்; வெகுளியால் - சீற்றத்தால்; விண்படர்ந்து - ஆகாயத்திலே பாய்ந்து சென்று.

போல்வது என்பதனை ஒப்பில் போலியாகக் கொள்க.

நால்வாய்ப் பொருட்பு

எ0. * **கானிமிர்த்தால் கண்பரிப வல்லியோ புல்லாதார்**
மானனையார் மங்கலநாண் அல்லவோ—தானை
மழைத்தடக்கை வார்கழற்கால் மானவேற் கிள்ளி
புழைத்தடக்கை நால்வாய்ப் பொருப்பு.

(கு - பு.) **கிள்ளியின் களிற்றின் வீரத்தினை ஒருவன் மற்றொருவனிடம் புகழ்ந்து கூறுதல்.**

(இ - ள்.) நண்ப! உலகத்திற்கு வரையாது பெய்கின்ற மேகத்தைப் போன்று வரையாது கொடுக்கும் பெரிய கைகளையும் நீண்ட வீரக்கழல் அணிந்த அடிகளையும், வலிய வேற்படையையும் உடைய கிள்ளியென்னும் சோழமன்னனுக்கு உரித்தான, உள்ளே துளையுடைய பெரிய கையையும் தொங்குகின்ற வாயையும் உடைய மலையாகிய யானை, காலை நிமிர்த்து இழுத்தால் அதன் கால்களில் கட்டியிருக்கும் சங்கிலியின் கண்கள் மட்டுமா பூட்டுவிட்டு நெகிழும்?

---

* 'யா - காரிகை' மேற்கோள்.
முத்தொள்ளாயிரம் என்று கருதத்தக்கது.

அவைமட்டும் அன்று; பகைவருடைய மான்போன்ற பார்வை யுடைய மகளிர்தம் கழுத்தில் நல்ல நாளிற் கட்டிய அந்த மங்கல நாண்கயிறுகளும் அறுபட்டுவிடுங் கண்டாய் என்று கூறுகின்றான்.

(வி-ம்.) அடுத்த ஊரிலிருந்து தன் நண்பன் ஒருவன் வர அவனை வரவேற்று மகிழ்கின்றான்; ஒவ்வொரு வீதியாகப் பார்த்துக்கொண்டு போகின்றார்கள்; உறையூர் வள மெல்லாங்கண்டு மகிழ்ந்துகொண்டு யானைப் படை நிற்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள்; எங்கே பார்த்தாலும் யானைக் கூட்டங்கள் மலை மலையாக நிற்கின்றன; பெரிய கோடுகளும், அவற்றிற் கட்டியிருக்கும் கிம்புரிப் பூண்களும் உயர்ந்த தோற்றமும் மனத்தைக் கவர்ந்தன. ஆயிரக் கணக்கான யானைக் கூட்டங்கள் மறிகடல்போன் முழங்கு கின்றன. பெரிய பெரிய சங்கிலிகளாற் கால்களைக் கட்டிப் போட்டிருக்கின்றார்கள். அவற்றைப் பார்த்துக்கொண்டே போகும்பொழுது நண்பன் கூறுகின்றான்; பார்த்தாயா இந்த யானையை? காலை நிமிர்த்தால் அந்தச் சங்கிலிக் கண் கள் அற்றுப் போய்விடும்போ லிருக்கின்றதே என்ன, மற்றவன் சங்கிலிக் கண்கள் மட்டுமா? காலை நிமிர்த்தால் சங்கிலியை அறுத்துக்கொண்டுபோய்ப் பகைவரையெல்லாம் அழித்துவிடும்: பகைவருடைய மகளிர் தம் கழுத்தி லுள்ள மங்கலக் கயிறுகளும் அற்றுப்போய்விடும் என்று யானையின் மறத்தன்மையை இயம்புகின்றான்.

காலை நிமிர்த்தால் பரிப வல்லிக் கண்ணே? என்று மொழி மாற்றிப் பொருள் கொள்க. வல்லிக்கண் - சங்கிலி (விலங்கு)களின் பூட்டுவாய்க் கண்கள். பரிப - அற்றுப் போவன. புல்லாதார் - பகைவர். மான் அனையார் - மானைப்போன்ற விழியுடைய பெண்கள். தானம் மழைத் தடக்கை - உலகிற்கு இன்றியமையாத தண்ணீரைத் தானம் செய்கின்ற மேகத்தைப் போன்று கொடைத்தொழில் செய்யும் பெரிய கை. வார் கழல் கால் - நீண்ட வீரக்கழல் அணிந்த கால்கள். புழைத்தடக்கை - உள்ளே துளையுள்ள பெரிய கை. நால்வாய் - தொங்குகின்றவாய். பொருப்பு - மலையாகிய யானை. மானவேல் - வீரவேல்.

யானை மறம்

கோத் தெடுத்த கோடு.

எக. அயிற்கதவம் பாய்ந்துழக்கி யாற்றல்சால் மன்னர்
எயிற்கதவங் கோத்தெடுத்த கோட்டாற்—பனிக்கடலுட்
பாய்தோய்ந்த நாவாய்போற் ரோன்றுமே யெங்
காய்சினவேற் கிள்ளி களிறு. [கோமான்.

(கு - பு.) எயிற்கதவம் கோத்தெடுத்த யானையின் மறத்தை இயம்புதல்.

(இ - ள்.) நண்ப! போர் தொடங்கிற்று; மதிலைப் போய் வளைத்தோம்; காய்கின்ற சினமுள்ள வேற்படை சூழ்ந்தன; யானைப் படைகள் நெருக்கின; பகைவருடைய மதிற்புறத்தில் வேல் வடிவாகச் செய்த இரும்புக் கதவுகள் அமைக்கப்பட்டிருந்தன. அதற்கு உள்ளே மதிற்கதவு மிகப் பெரியதாக அமைக்கப்பட்டிருந்தது; எங் கோமானுடைய கிள்ளியின் களிறு சீற்றத்துடன் சென்று பாய்ந்து வேற் கதவுகளை வளைத்து ஒடுக்கி நிலைகுலையச் செய்தது. பகைவரோ ஆற்றல் மிக்க அரசர்; ஆனாலுமென்ன? நம் யானையை என்ன செய்துவிடமுடியும்? அப்படியே போய்ப் பாய்ந்து மதிற் கதவைக் குத்தித் தூக்கிவிட்டது; அக்கதவும் கொம்பிற் சிக்கிக்கொண்டது; கையை மேலே நீட்டிக் கொண்டு விரைந்து ஓடி நடுச் சேனைக் கூட்டத்திற்கு வந்துவிட்டது. அதன் தோற்றம் குளிர்ந்த கடல் நடுவில் தோன்றும் பாய்கட்டிய மரக்கலத்தைப் போன்றிருந்தது. யானை மரக்கலத்தைப் போன்றும் அதன் உயர்த்திய கை கூம்புபோன்றும் எயிற்கதவு பாய்மரம் போன்றும் விளங்கின என்று கிள்ளியின் வீரன் கூறுகின்றான்.

(வி - ம்.) மதிலுக்குப் புறத்தில் உள்ள வேல்வடிவுள்ள இரும்புக்கதவுகளை யானைகள் முதலிற் பாய்ந்து ஒடித்தன. பின்பு உட் சென்று மதிற்கதவைக் கோத்து எடுத்த கோட்டுடன் விளங்குதலால் "பாய் தோய்ந்த நாவாய்போல் தோன்றுமே" என்றார். யானை, சேனைக் கடலின் நடுவில் பாய்கட்டிய மரக்கலம்போல விளங்கிற்று.

"உருவக் கடுந்தேர் முருக்கிமற் றத்தேர்ப்
பரிதி சுமந்தெழுந்த யானை—இருவிசும்பில்

செல்சுடர் சேர்ந்த மகீபோன்ற செங்கண்மால்
புல்லாரை யட்ட களத்து''

என்பதையும் படித்து உணர்க.

''துணைபுணர்ந் தெழுதரும் தூநிற வலம்புரி
இணைநிரள் மருப்பாக எறிவளி பாகனு
அயில்திணி நெடுங்கதவு அமைத்தடைத் தணிகொண்ட
எயிலடு களிறேபோல் இடுமணல் நெடுங்கோட்டைப்
பயில்திரை நடுநன்னுட் பாய்த்தூருந் துறைவகேள்.''

என்ற கலித்தொகையைப் பகுதியையுங் காண்க.

அயில் - வேல். உழக்கி - நிலைகுலையச் செய்து. ஆற்றல் சால் - வலிமைமிக்க. எயில் - மதில். நாவாய் - மரக்கலம்.

புறங்கடை நின்றதே.

எஉ. கொடிமதில் பாய்ந்திற்ற கோடு மரசர்
முடியிடறித் தேய்ந்த நகமும்—பிடிமுன்பு
பொல்லாமை நாணிப் புறங்கடை நின்றதே
கல்லார்தோட் கிள்ளி களிறு.

(கு - பு.) புறங்கடையில் நிற்கும் கிள்ளியினுடைய யானையின் பெருமிதத்தைக் கூறுதல்.

(இ - ள்.) மலையை யொத்த தோள்களையுடைய கிள்ளியினது யானை, கொடிகட்டிய மதிலிற் பாய்ந்து ஒடிந்த தன் கொம்புகளும், மாற்று வேந்தர்தம் மணிமுடியைக் காலால் எற்றித் தேய்ந்த தன் நகங்களும், பெண்யானையின் முன்பு அழகழிந்து தோன்றும் பொல்லாமைக்கு நாணிப், பிடியானை நிற்கும் அந்தப் புரத்திற்குச் செல்லாமல் புறங்கடையிலே நின்றுவிட்டது (எ - று).

(வி-ம்.) கிள்ளி அரசாளுகின்றான்; அவன் தோள்கள் கல்மலையை யொத்துப் பருத்து வன்மையுடையனவாக விளங்குகின்றன; யானைப் படைகளும் மிகுதியாக மதமுங் கதமுஞ் சிறந்து நிற்கின்றன; இப்படியிருக்கும்போது பகைவர் மதிலின்மேற் கொடிகள் கட்டி வாழ்ந்திருப்பதைப் பார்த்துக்கொண் டிருப்பானே? உடனே படை புறப்பட்டன; பகைவரைத் தாக்கின. யானைகள் மதிலைக் கிம்புரிக் கொம்பால் இடித்துத் தொலைத்தன; கிம்புரியோடு கொம்பும் ஒடிந்து தொலைந்தன; அதனுடன் விட்டதா? இல்லை.

மதிலை அழித்து உள்ளேசென்று பகை மன்னரைப் பாய்ந்து தள்ளிக் காலால் இடறிக்கொண்டே போகின்றது; கால் நகமும் தேய்ந்து போயின; போரும் முடிந்துவிட்டது. திரும்பி ஊருக்கு வருகின்றார்கள்; ஊரில் போர் வீரருடைய மனைவியர் "வருவார் கொழுநர் எனத்திறந்தும் வாரார் கொழுநர் என அடைத்தும், திருகுங் குடுமி விடிவளவும் தேயும் கபாடம்" உள்ள வீட்டிலிருந்து ஓழிமேல் விழி வைத்து நோக்கிக்கொண் டிருக்கின்றனர்; வீரரும் வந்துவிட் டார்கள். காதலிமார் கவலையும் கலங்கிப் பறந்தது; அரச னும் அந்தப்புறத்தில் அரசியின் கவலையைத் தீர்க்கப் போய்விட்டான்; ஆனால் அரசனுடைய களிறு புறங்கடை யிலேயே நின்றுவிட்டது; கடை திறப்புப் பாடிய கவிஞர் காண்கின்றார்; அடா! அடா! அந்தப் புறத்திலே எல்லோ ரும்போய் இன்புற்றிருக்க இது இங்கே நிற்கின்றதே; ஆமாம் கொம்பும் நகமும் தேய்ந்துவிட்டன; பிடியானை கண்டால் எளிமையாக நினைக்குமே; அதனால் நாணித்தான் இங்கே நின்றுவிட்டது என்று அதன் வெற்றிச்சின்னங்களைப் பாராட்டுகின்றார். இயல்பாகப் புறங்கடையில் நிற்கும் களிற்றினை இவ்வாறு கூறல், தற்குறிப்பேற்ற அணி.

ஒருகால் மிதியா வருமே

எங. கச்சி யொருகால் மிதியா வொருகாலால்
தத்துநீர்த் தண்ணுஞ்சை தான்மிதியாப்—பிற்றை
ஈழம் ஒருகால் மிதியா வருமேநங் [யும்
கோழியர்கோக் கிள்ளி களிறு.

(கு - பு.) உறந்தைக் கோமான் களிற்றின் விரைந்த பாய்ச்சல் விளம்பல்.

(இ - ள்.) ஏடா! அதோ பார், நம் உறந்தையர் மன் னன் களிற்றை; உறையூரிலே நின்று ஒரு எட்டு வைத்துக் காஞ்சிபுரத்தில் மிதிக்கின்றது; அதிலிருந்து அடுத்த அடியை வடக்கே, அடா! நீர்தாவிப் பாய்கின்றன குளிர்ந்த உச்சயினி நகரத்தில் மிதிக்கின்றன பார்; ஏ! அதோ! தெற்கே திரும்பி விட்டதே; காலைத் தூக்குகின்றதே; ஓஓ! இலங்கையி லல்லவா மிதிக்கின்றது; இதோபார் இங்கே வருகின்றதே! என்று கூறுகிறான்.

(வி - ம்.) பேர்ர் தொடங்கி விட்டால் வடக்கே உச்சயினிவரை போய் வென்று பின்பு தெற்கே வந்து ஈழ நாட்டையும் வென்று உறையூருக்கு வந்து சேர்தல் கிள்ளியின் வழக்கம்; அவனுடைய யானையும் அவ்வளவு தொலைவுக்குச் சென்று வரும் அல்லவா? போரில் அது தாவிப் பாய்கின்ற ஓட்டத்தைப் பார்த்த வீரர்கள் கூறுகின்றார்கள்; நம் கிள்ளியின் யானை உறையூரிலிருந்து காஞ்சியில் ஒரு கால் வைத்து மிதித்துப் பின்பு உச்சயினியில் மிதிக்கும்; அங்கிருந்து அப்படியே திரும்பி இலங்கையில் மிதிக்கும்; வடக்கும் தெற்கும் வேறு வழியில்லாமையாலே பின்பு உறையூருக்கே வந்துவிடும்; உலகத்திலேயே அதற்கு எதிரில்லை என்று பாராட்டுகின்றார்கள்.

ஒரு காலாற் காஞ்சியிலும், இரண்டாவது காலால் உச்சயினியிலும், மூன்றாவது காலால் தெற்கே திரும்பி இலங்கையிலும் மிதித்து நாலாவது காலால் உறையூருக்கு வந்துவிடும் என்று நாலுகாலுக்கும் உள்ள பெருமை கூறுகின்றார்; இதனால், கதமும் மதமும் சிறந்து விரைந்து சீறித் தாவிப் பாய்ந்து சுழன்று வருகின்ற யானையின் விரைவு உணரப்படும்.

கோழி - உறையூர்; ஈழம் - இலங்கை; மிதியா - மிதித்து; இவ்வாறு வருஞ் சொற்கள் செய்யா என்னும் வாய்பாட்டு வினை எச்சங்கள்.

கச்சி - காஞ்சிபுரம். தத்தும் நீர்த் தண்உஞ்சை - தாவிப்பாயும் நீர்வளம் மிக்க தண்மையுள்ள உச்சயினி. **உச்சயினி** நகரம் "உஞ்சை" என்று தமிழில் வழங்கப்படுதலை "சிமையத் திமையமும் செழுநீர்க் கங்கையும், உஞ்சையம்பதியும் விஞ்சத் தடவியும்" என்ற சிலப்பதிகார அடியிலும், பெருங்கதை உஞ்சைக் காண்டம் என்ற இடத்திலும் காண்க.

பேய்மகளிர் ஆட வரும்

எ சை. *பாற்றின மார்ப்பப் பருந்து வழிப்படர
நாற்றிசையு மோடி நரிகதிப்ப—ஆற்ற
அலங்கலம் பேய்மகளி ராட வருமே
இலங்கிலைவேற் கிள்ளி களிறு.

*மு. தெ. என்று கருதத் தக்கது.

(கு - பு.) கிள்ளியின் சினவெங்களியானையின் கொலைத்தொழில் கூறல்.

(இ - ள்) நண்ப! அதோ காண்! நம் மன்னன் ஒரு வேல் வைத்திருக்கின்றான்; அது இலை வடிவுடன் மிகவும் விளக்கமாக இருக்கின்றது; அவனுடைய யானையைப் பார்; விரைந்து வருகின்றது; வருகின்றபோதே படுகொலை செய்கின்றது காண்; அதன் பின் வந்த கழுகுகள் நன்றாக ஊன் தின்று ஆரவாரிக்கின்றன; பருந்துக் கூட்டம் பின் தொடர்ந்து பந்தர்போலப் பறந்து வருகின்றன. நாலா பக்கமும் ஓடி நரிக்கூட்டம் ஊன் தின்று எழுச்சி பெற்றுத் துள்ளுகின்றன; அதோ பேய்மகளிர் குடர்மாலை அணிந்துகொண்டு ஊனுண்ட பெருமிதத்தால் மிகுதியாக ஆடுகின்றனர்; இக் கூட்டத்துடனே வருகின்றதே நம் களிறு பார்த்தாயா? என்கின்றான்.

(வி-ம்.) போருக்கு யானை செல்கின்றது; நெடு நாளாக எதிர் பார்த்திருந்த கழுகுக் கூட்டம், பருந்துக் கூட்டம், நரிக் கூட்டமெல்லாம் பின்தொடர்கின்றன; ஏன்? செல்கின்ற வழிகளில் நன்றாக ஊனுண்ணலாம் என்றுதான். இவற்றுடன் பேய்க் கூட்டங்களும் வந்து விட்டன; களத்தில் இறந்தவருடைய குடல்களை இழுத்து மாலையாக அணிந்து கொண்டு ஊன்தின்ற மகிழ்ச்சியினால் பேய் மகளிர் ஆடுகின்றனர். இவ்வளவு ஆரவாரத்துடன் மலை நடந்து வந்தது போல வருகின்றது யானை; கிள்ளியின் யானையின் இயல்பு இவ்வாறு இருக்கின்றது.

பாறு இனம் - பாற்றினம்; கழுகுக் கூட்டம். பாறு - கழுகு. அலங்கல் - மாலை; அம் - சாரியை. ஆர்ப்ப - ஆரவாரம் செய்ய. வழிப்படர - பின்தொடர்ந்து பறந்து வர. நாற்றிசையும் - நாலுபக்கமும். நரி கதிப்ப - நரி துள்ள. இலங்கு இலைவேல் - இலை வடிவுடன் விளங்குகின்ற வேல்.

களம்

பெருநடஞ்செய் பெற்றி

எசு. உடைதலையும் மூளையும் ஊன்தடியும் என்பும்
குடருங் கொழுங்குருதி யீர்ப்ப—மிடைபேய்
பெருநடஞ்செய் பெற்றித்தே கொற்றப்போர்க் கிள்ளி
கருநடரைச் சீறும் களம்.

(கு - பு.) சோழன் பொருத களத்தின் நிலைமை சொல்லல்.

(இ - ள்.) நண்ப! வெற்றி பொருந்திய போர்த் தொழில் வல்ல சோழன், கருநாடக நாட்டு மன்னரைச் சிறித் தாக்கிய போர்க்களமானது, உடைந்த தலைகளையும், மூளைகளையும், நிணத்தையும், தசையையும், எலும்பையும், குடலையும் செழித்த இரத்த வெள்ளம் இழுக்க, நெருங்கிய பேய்க் கூட்டங்கள் கூத்தாடுதல் செய்கின்ற இயல்பை யுடையது காண்: என்று கூறுகின்றான்.

(வி - ம்.) கருநட நாட்டு வேந்தன் தமிழ்ப் படையின் ஆற்றலை அறியாது திறை கொடாமல் இருப்ப, உடனே கிள்ளி பெரும் படையைத் திரட்டிக்கொண்டு போய்ப் போர் செய்தான். பகைவரெல்லாரும் மடிந்தனர். குருதி வெள்ளம் பெரிய ஆறாக ஓடுகின்றது; உடைந்த தலைகளும், மூளையும், ஊனும், தசைத் தொகுதியும், எலும்பும், குடலும், இரத்த வெள்ளத்தில் மிதந்து செல்கின்றன. பேய்க் கூட்டங்கள் ஊன் தின்ற பெரு மகிழ்ச்சியினால் கூத்தாடுகின்றன: இதனைப் பார்த்த வீரன் தன் நண்பனிடத்தில் அதன் இயல்பைக் கூறுகின்றான்.

ஊன் - நிணம். தடி - தசை. என்பு - எலும்பு. குடர் - குடல். ஈர்த்தல் - இழுத்தல். மிடைதல் - நெருங்குதல். பெற்றி - தன்மை. கொற்றம் - வெற்றி. கிள்ளி - சோழன். கருநடர் - கரு நாடகர்.

பேய் விளக்கயரும் பெற்றி

எசு. முடித்தலை வெள்ளோட்டு மூளைநெய் யாகத்
தடித்த குடர்நிரியா மாட்டி—எடுத்தெடுத்துப்
பேஎய் விளக்கயரும் பெற்றித்தே செம்பியன்
சேஎய் பொருத களம்.

(கு - பு.) சோழன் பொருத களத்தின் நிலைமை சொல்லல்.

(இ - ள்.) சோழன் மகன் பொருத் களம், மாற்றரசர் தம் மணிமுடி அணிந்த தலைகளிலிருந்து உடைந்து விழுந்த வெள்ளோ ஓட்டினே அகலாகவும், அதன் கண்ணுள்ள மூளையை நெய்யாகவுங் கொண்டு, அவர்தம் திரண்ட குடர்களேத் திரியாக அமைத்துப் பேய்க ளெல்லாம் அவற்றை எடுத்து எடுத்து விளக்கு எரியா நிற்கும் இயல்பை யுடையது எ-று.

(வி - ம்.) போர் தொடங்கிற்று; சோழன் மகன் புறப் பட்டான்; கன்னிப் போர் நிகழ்கின்றது; மணிமுடியணிந்த மன்னருடைய தலைகளேயெல்லாம் உடைத்து ஏறிந்துவிட்டு வந்தனன்; அந்தோ! இதற்குமுன் மணிமுடி யணிந்து விளங்கிய தலைகள் இப்பொழுது வெறும் முடியுடன் உடைந்து கிடக்கின்றன; பேய்க் கூட்டங்கள் வந்து நன்முக விலாப் புடைக்கத் தின்றுவிட்டுப் பின்பு விளேயாடத் தொடங்கிவிட்டன. சிறுபிள்ளேகள் நெற்குத்தி விளேயாடு தல் போன்றும் சிறுசோறட்டு விளேயாடுதல் போன்றும் பேய்கள் விளக்கீடு செய்து விளேயாடத் தொடங்கின; பொருது வீழ்ந்தார்தம் தலேயோட்டினே அகலாக வைத்துக் கொண்டு, அவர்தம் மூளேயை நெய்யாக ஊற்றித் தடித்த குடர்களேத் திரியாக அமைத்தன; ஒரேயிடத்தில் அகலும், நெய்யும், திரியும் கிடைக்கப் பெற்றன; இவ்வாறு அமைத்து விளக்கு எரித்தல் போல ஒரு விளேயாட்டு நிகழ்த்து கின்றன; ஊன்தின்ற களிப்பினுலே இங்ஙனம் ஏளனமான ஆடலே நிகழ்த்துவனவாயின.

எடுத்து எடுத்து என்ற அடுக்குப் பன்மை குறித்தது; சேஎய் செம்பியன் என்று கொண்டு செவ்வேளே யொத்த செம்பியன் எனலும் ஆம். செம்பியனுகிய சேஎய் எனவு மாம். செம்பியன் சேஎய் என்பது அவனுடைய பெயர் எனினும் அமையும். போர்க்களத்தின் நிகழ்ச்சி, பெருமிதம் அச்சம் முதலியவற்றை விளேவிக்கின்றது.

ஊமன் பாராட்டல்

பகைப்புலம் பழித்தல்

எஎ. இரியல் மகளிர் ஈன்ற
வரியிளஞ் செங்காற் குழவி—அரையிரவின்
ஊமன்பா ராட்ட வுறங்கிற்றே செம்பியன்றன்
நாமமீ பா ராட்டாதார் நாடு.

(கு - பு.) செம்பியனுடைய சிரைப் பாராட்டாதவருடைய நாட்டின் சிறமிவு செப்பல்.

(இ - ள்.) தோழி! நம் சோழனுடைய புகழைப் பாராட்டாம லிருந்தாரல்லவா? அந்த மன்னருடைய நாட்டின் நிலையைக் கேள்வியுற்றாயா? அங்கே நம் மன்னனுடைய ப்டைகள் சென்று தாக்கின. உடனே பெண்களெல்லாரும் ஊரை விட்டு விலகிப்போய்க் காட்டிலுள்ள சோலைகளில் தங்கிவிட்டார்கள். சூலுற்ற பெண்களுஞ் சென்றிருந்தனர். அங்கே குழந்தைகளையும் ஈன்று வைத்தனர். பாய்கூட இல்லை; அங்கே உதிர்ந்து கிடந்த இலைச் சருகின்மேல் குழந்தைகள் கிடந்து அழுகின்றன. நடு இரவு; அந்த இரவில் இவ்வளவு அச்சமிருக்கும்போது ஐயோ! யார்தாம் அந்தக் குழந்தைகளைத் தாலாட்டுவார்; ஒருவருமில்லை. மரத்திலிருந்த கூகைகள்தான் பாராட்டித் தாலாட்டின; இந்த ஒலியைக் கேட்டுக்கொண்டே குழந்தைகளும் உறங்கின, என்கின்றாள்.

(வி - ம்.) போர் தொடங்கிற்று. பெண்களெல்லாரும் ஊர்ப் புறத்திலுள்ள சோலை முதலிய இடங்களிலே போய் மறைந்தார்கள். கருவுற்ற மகளிரும் போய்த் தங்கி இருந்தார்கள். அங்கே அவர்கள் ஈன்ற குழந்தைகள் இலைச் சருகின்மேல் கிடந்து அழுகின்றன. அப்பொழுது கூகை குழறுகின்றது. அந்த ஒலியைக் கேட்டுக்கொண்டே குழந்தைகள் தூங்கிவிட்டன. கூகை கூவுதலைப் பாராட்டியதாகக் கூறல் தற்குறிப்பேற்றம்.

செம்பியனுடைய நாமம் பாராட்டாதார் நாட்டிலுள்ள பெண்டிர் ஈன்ற குழந்தையை ஊமன்தான் பாராட்டும் என்ற நயம் உணரத் தகுந்தது.

கூகைக்கு வேறு பெயர் இருப்பவும் அதனைக் கூறாது வாய் பேசாத ஊமனை உணர்த்தும் பெயருடன் ஒற்றுமையுள்ள ஊமன் என்ற சொல்லை அமைத்து ஊமன் பாராட்ட என்றது நயமாகும். ஊமன் பாராட்டும் நாட்டைப் பாவலர் எங்ஙனம் பாராட்டுவர்?

இரியல் மகளிர்-போர்க்காலத்தில் ஊரிலிருந்து விலகிச் சென்ற பெண்கள். இலைஞெமலுள் ஈன்ற-இலைச் சருகின் மேல் ஈன்று வைத்த. வரியிளஞ் செங்கூற் குழவி - வரிக் கோடுகள் உள்ள செம்மையான காலையுடைய குழந்தை. அரையிரவில் - நடு இரவில். ஊமன் கூகை. ஊமன் பாராட்ட என்பதில் அவலத்திற்கு இடையில் நகையும் அரும்புகின்றது.

வென்றி

நூறுயிரம்

எஅ. * பொன்னி வளநாடன் கைவேல் பொழிநிலவால்
முன்னர் அசைந்து முகுளிக்கும்—தன்னோர்
பொரவந்த வேந்தர் புனைகடகச் செங்கை
அரவிந்த நூறு யிரம்.

(கு - பு.) சோழனுடைய வேலுக்கு அஞ்சி அவனுடைய மாற்றரசர் வணங்கியமை கூறல்.

(இ - ள்.) தோழி! காவிரிநீர் பாய்கின்ற வளம் பொருந்திய புனல் நாடனாகிய சோழனுக்கு நேராகப் போர் செய்ய வந்த மன்னர்களுடைய கடகம் புனைந்த செங்கைகளாகிய நூறுயிரந் தாமரை மலர்கள், அச்சோழனுடைய கையிலிருக்கும் வேல் பொழிகின்ற நிலவினால் அவன் முன்னே நடுங்கிக் குவியாநிற்கும்; என்று தலைவி தோழியினிடம் கூறுகின்றாள்.

(வி - ம்.) சோழனை எளிதில் வென்றுவிடலாமென்று கருதி நூற்றுக் கணக்கான மன்னர்கள் திரண்டு வந்தார்கள்; வந்து போர்செய்ய நெருங்குகின்ற காலத்தில் அவனுடைய

---

* இப்பாடல் முத்தொள்ளாயிரம் என்று கருதத்தக்கது.

தோற்றத்தையும், படைகளையும் கண்டு, அஞ்சி நடுநடுங்கினர்: தூதனை விடுத்துத் தங்கள் குற்றத்தைப் பொறுத்தருள வேண்டுமென்று கேட்டு, அவனிடத்தில் அருள் பிறந்ததென்று தெரிந்துகொண்ட பின்பு மன்னரெல்லோருஞ் சென்று வணங்குகின்றனர்; கைகளில் கடகங்கள் அணிந்திருக்கின்றனர்; அவை தாமரை மலரைப்போன்று இலங்குகின்றன; சோழன் கையில் இருத்தின்ற வேல் நிலவைப் பொழிகின்றது; பகை மன்னருடைய கையாகிய தாமரை மலர்கள் குவிகின்றன; நிலவால் தாமரை குவிதல் இயல்பேயன்றே; இதனைக் கேள்வியுற்ற தலைவி தோழியினிடம் கூறுவாளாயினள்.

செங்கை அரவிந்தம் நூறுயிரம் கைவேல் பொழி நிலவால் மொட்டிக்கும் என்று கொள்க.. நூறுயிரம் என்பது மிகப் பல என்பதை உணர்த்தி நின்றது.

பொன்னி - காவிரியாறு. அசைந்து - நடுங்கி. முகுளிக்கும் – குவியும். பொரவந்த - போர் செய்ய வந்த. அரவிந்தம் - தாமரை.

தேரடிக்கூர் வெம்படை

எகூ. *போர்வேவின் வென்றதூஉம் பல்புகழால் போர்த்ததூஉம்
தார்மேவு திண்புயத்தால் தாங்குவதூஉம் — நீர் நாடன்
தேரடிக்கூர் வெம்படையால் காப்பதூஉம் செங்கண்மால்
ஓரடிக்கீழ் வைத்த உலகு.

(கு - பு,) சோழனுடைய வென்றிக் திறன் கூறல்.

(இ - ள்.) நண்ப! நீர்நாடனுகிய சோழன், போர் செய்ய வாய்ப்புடைத்தானுகிய வேலினுல் வென்றதும், பல வகைப்பட்ட புகழினுலே மூடியதும், மாலையணிந்த வலிய புயங்களினுல் தாங்குவதும், தேர்க்காலின் பெயருடைய கூரிய கொடிய ஆழிப்படையால் காப்பதும், செம்மையான கண்களையுடைய திருமால் தன் ஓரடியின்கீழ் அடக்கிவைத்த இந்த உலகந்தானே; என்று கூறுகின்றன்.

---

* மு. தொ. என்று கருதத்தக்கது.

திருமால் ஒரு துன்பமும் இல்லாமல் தன் அடியினுல் அளந்த இவ்வுலகத்தைத்தானே சோழன் பல முயற்சி செய்து ஆளுகிறுன்? என்று கூறுதலால் இது புகழாப் புகழ்ச்சி யணியாகும். சோழன் மடியில்லா மன்னவனுய்த் திருமால் தன் அடியினுல் தாவியளந்த உலகம் எல்லாவற் றையும் ஆள்கின்றுன் என்ற பொருள் தருதல் காண்க.

"மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு"

என்பது திருக்குறள்.

சோழனுடைய புகழ் உலகத்தை மூடிவிட்டது என்பார், "பல்புகழால் போர்த்த தூஉம்" என்றார்.

தேர்க்கால் - ஆழி. அதன் பெயருடைய படை ஆழிப் படை. திண்புயத்தால் தாங்குவது - தோள்வலியால் ஆள் வது. ஆழியாற் காத்தலாவது, ஆணையாற் காத்தல்.

தளைபட்ட தாள்

அ0. *ஏங்கா முகில்பொழியா நாளும் புனல்தேங்கும்
பூங்காவிரிநாடன் போர்மதமா — நீங்கா
வளைபட்ட தாளணிகள் மாறெதிர்ந்த தெவ்வர்
தளைபட்ட தாட்டா மரை.

(கு - பு.) சோழனுடைய வெற்றித்திறங் கூறல்.

(இ - ள்.) நண்ப! முழங்குதலேச்செய்து மேகம் மழை பொழியாத காலத்திலும், நீர் பெருகிப் பாய்கின்ற வளம் உள்ள பூவிரி புதுப்புனல் காவிரிநாடனுகிய சோழனுடைய போரில் மதயானைகளின் கால்களெல்லாம் கழலாதபடி வளைத்திடப்பெற்ற வீரக் கழல்களாகிய அணிகளைப் பூண் டன; அப்பொழுதே, பகை மன்னருடைய அடிகளாகிய தாமரைகளெல்லாம தளைகளாகிய விலங்குகளைப் பூண்டன காண்; என்று கூறுகின்றுன்.

(வி - ம்.) சோழனுக்கும் பகையரசர் சிலர் திறை கொடாமல் இருந்தனர். உடனே போர்ப்படை திரண்டது;

---

* மு. தொ. என்று கருதத்தக்கது.

யானைகளுங்கூட வீரக்கழல் அணிவது வழக்கம். அவ்வாறு அணிந்து சென்றது படை; உடனே பகை மன்னருடைய படைகளெல்லாம் முறிய அடிக்கப்பட்டன; பகையரசருடைய கால்கள் விலங்கிடப்பட்டன; அதனை, யானைகளின் காலில், அணிகள் வளைபட்ட உடனே மாற்றூர் காலாகிய தாமரை தளைபட்டன என்று கூறினர்.

ஏங்கா - ஏங்கி. அதாவது இடித்து முழங்கி. மாறு - பகை. தளை - விலங்கு. மதமா - மதமுள்ள யானைகள். நீங்கா - நீங்காமல். அஃதாவது கழலாமல். தாளணிகள் வளைபட்ட - காலணிகளாகிய வீரக்கழல்கள் வளைத்திடப் பட்டன. தெவ்வர் தாள்தாமரை தளைபட்ட - பகைவருடைய கால்களாகிய தாமரைகள் விலங்கிடப்பட்டன.

கொடை

பொருள் நசையால் பாரா

அக. *செருமான வேற்சென்னி தென்னுறந்தை யார்த்தம்
பெருமான் முகங்கண்ட பின்னர்—ஒருநாளும் [ம்
பூதலத்தோர் தம்மைப் பொருள்நசையாற் பாராவா
காதலித்துத் தாழ்ந்திரப்போர் கண்.

(கு - பு.) சோழனுடைய கொடைத்திறங் கூறல்.

(இ - ள்.) நண்ப! பொருளை விரும்பித் தாழ்ந்து இரப்பவர்களுடைய கண், போரில் தாழாது வென்றி தரும் வேலினையும், 'சென்னி' என்னும் பெயரினையும் உடைய, தெற்கிலுள்ளதாகிய உறையூரில் வாழ்வார்தம் பெருமானுகிய சோழ மன்னனுடைய திருமுகத்தை ஒருமுறை பார்த்த பின்னர், ஒரு நாளும் இந்நிலவுலகத்தில் வாழ்பவர்தம் முகத்தைப் பொருள் பெறும் விருப்பத்துடனே பார்ப்பன அல்லவாகும் என்று கூறுகின்றனர்.

(வி - ம்.) சோழனுடைய திருமுகத்தைப் பொருள் விருப்பினுடன் ஒரு முறை பார்த்தாற் போதும்; கேட்கக்

---

* மு. தொ. என்று கருதத் தக்கது.

கூட வேண்டாம்; உடனே மிக்க பெரும் பொருள் நல்குவான்; இலன் என்னும் எவ்வத்தைப் பிறரிடம் சென்று என்றும் கூறுதபடி அவ்வளவு பெரும் பொருள் கொடுப்பான்; பின்பு அவனைப் பார்த்த கண்கள் எவரையும் பொருள் விருப்புடனே பார்த்தல் செய்யா என்று இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈயுங் குலனுடைய சோழனைப் பாராட்டுகின்றார்.

செரு - போர். மானவேல் - தன்னிலையில் தாழாமல் வென்றிதரும் வேல். தென்னறந்தையார் தெற்கின்கண் ணுள்ள உறையூரில் வாழ்பவர். பொருள்நசை - பொருளின் மேலுள்ள ஆசை.

இப்பாடலில் சோழனுடைய கொடையின் பெருமிதத்தை நன்றாகக் கூறுகின்றார்.

இரேவதித் திருநாள்

அஉ. அந்தணர் ஆவொடு பொன்பெற்றூர் நாவலர்
மந்தரம்போல் மாண்ட களிறூர்ந்தார்—எந்தை
இலங்கிலைவேற் கிள்ளி இரேவதிநாள் என்னை
சிலம்பிதன் கூடிழந்த வாறு.

(கு - பு.) இரேவதித் திருநாளில் பரிசில் வழங்கி மகிழ்வு கொண்டாடும்பொழுது கண்ட வேறு ஒரு நிகழ்ச்சி கூறல்.

(இ - ள்.) எந்தையாகிய, விளங்குகின்ற இலைபோன்ற வேற்படையுடைய கிள்ளி பிறந்த இரேவதி நாளில், அந்தணர் பசுவும் பசும்பொன்னும் பரிசிலாகப் பெற்றார்; நாவலர், மந்தரமலை போன்ற மாட்சிமை பொருந்திய யானையைப் பரிசிலாகப் பெற்று ஏறி நடாத்தினர்; இந்நன்னாளில் சிலம்பிப் பூச்சி தம் கூடுகளை இழந்த வாறு யாதோ? என்று இரங்குகின்றார்.

(வி - ம்.) கிள்ளியின் பிறந்த நாள் விழாவாகிய இரேவதித் திருநாளில் எல்லோரும் பரிசில் பெறச் சிலம்பிப் பூச்சிகள்மட்டும் கூடிழந்து தவிப்பதற்குக் காரணம் யாதோ? என்றிரங்குகின்றார். வீட்டினும், மதிலினும், மாடங்களினும் வெண்சுதை தீற்றுங்கால் சிலம்பிகள் தம் கூடுகளை இழந்தன ஆதலால், அதனைக் கண்டானொருவன்

எல்லோரும் மகிழுங் காலத்தில், இவைகளுக்கு இவ்வாறு இடையூறு அடுத்தவாறென்னே ? என்று இரங்கிக் கூறுகின்றாள்.

"எந்தை" என்ற சொல் வருவதால் இளவரசன் இரங்கிக் கூறியதாக உரைப்பினும் அமையும்.

இது, மகிழ்வும் அவலமும் நிறைந்த பாடல்.

"ஞாவலர் மந்தரம்போல் மாண்ட களிறு ஊர்ந்தார்" என்னும் பொழுது, பெருமிதம் புலனுகின்றது.

"என்னே? சிலம்பிதன் கூடிழந்தவாறு" என்பதில் அவலச்சுவை புலனுகின்றது.

இதனுல், வீடு புதுக்கிப் புறஞ்செய்யுங்கால் சிலம்பிப் பூச்சி இடையூறடைந்து வருந்தினுல் வருந்தலாமேயன்றி வேறு அங்கு உள்ள மக்களுக்கு வருத்தம் யாதொன்றுமில்லை என்பது உணரப்படும்.

அறிவரிதாய் நிற்கும்

அகூ. * கன்றும் வயவேந்தர் செல்வம் பலகவர்ந்தும்
என்றும் வறிஞர் இனங்கவர்ந்தும்—ஒன்றும்
அறிவரிதாய் நிற்கும் அளவினதால் அம்ம
செறிகதிர்வேற் சென்னி திரு.

(கு - பு.) சோழனின் கொடைப் பெருக்கமும் வெற்றியாற் கிடைக்கும் வருவாய்ப் பெருக்கமும் கண்டு வியந்து கூறல்.

(இ - ள்.) தோழி ! நிறைந்த ஒளியுள்ள வேற்படையுடைய சென்னியின் செல்வம், அவனுற் சீறப்பட்ட வலிய மன்னருடைய செல்வம் பலவற்றைக் கவர்ந்து கொண்டு வந்து சேர்தலால் மிகுதலும், எக்காலத்திலும் ஏழைகள் கூட்டத்தால் தமக்கு வேண்டிய அளவு தாமே எடுத்துக் கொள்ளுதலால் குறைதலும், ஆகிய இரண்டு இயல்பு உடையதாய் ஒரு சிறிதும் அளந்து அறிவதற்கு அரிதாய் நிலை பெற்றிருக்கும் இயல்பினதுகாண் அம்ம ! என்று தலைவி தோழியினிடம் கூறுகின்றுள்.

---

* மு. தொ. என்று கருதத்தக்கது.

(வி – ம்.) சோழன் மாற்றரசரை வென்று மிகுந்த பொருளகளைக் கொண்டுவந்து குவிக்கின்றான்; ஏழைகள் தங்கள் விருப்பம் போல் எடுத்துக் கொண்டு போய் இனிமையாக வாழ்கின்றார்கள். இந்த இரண்டு செயலும் இடையறாது நிகழ்ந்துகொண்டே யிருத்தலால் வரவு, செலவு, இருப்பு இம்மூன்றும் பார்த்து அளந்து அறிய முடியவில்லை; அவ்வளவு வரவும் கொடையும் பெருக்கமாயின. இந்த நிலையைத் தோழியினிடம் கூறித் தலைவி வியப்படைகிறாள். செல்வமிகுதியும் கொடை மிகுதியும் கண்டு வியந்தமை காண்க.

அம்ம என்பது, வியப்பிடைச் சொல். கன்றும் – மனம் மாறுபட்ட; சீறப்பட்ட எனவுமாம். வயவேந்தர் – வலிய மன்னர். வறிஞர் – பொருளற்றோர். செறிகதிர்வேல் – நிறைந்த ஒளியுள்ள வேல். (உ)

படை வீரமோ கொடை வீரமோ

அச. *சேர்ந்த புரவின் நிறைதன் திருமேனி
சார்ந்திட் டுயர்துலைதான் ஏறினன்—நேர்ந்த
கொடைவீர மோமெய்ந் நிறைகுறையா வன்கட்
படைவீர மோசென்னி பண்பு.

(சூ – பு.) குலவு வேல் சென்னி கொடைத்திறங் கூறல்.

(இ – ள்.) நண்பா! தன்னிடத்தே அடைக்கலமாக வந்து சேர்ந்த புறாவின் எடைக்காகத் தன் அழகிய உடம்பிலுள்ள தசையை அறுத்துத் தராசுத் தட்டில் வைத்துப் பின் எடை போதாததற்குத் தானும் உயர்ந்த துலையின்மேல் ஏறினான்; இப்படிச் செய்ய நேர்ந்த இது, அவன்பாற் பொருந்திய கொடை வீரமோ? அன்றேல், மெய்யொழுக்கங் குறையாத வன்கண்மையையுடைய படையின் வீரமோ? யாது காண்? இவ்விரண்டு மல்ல; அஃது அவனுடைய தன்மை காண்; எனறு கூறுகின்றான்.

(வி – ம்.) தன்பால் வந்தடைந்த புறாவினைக் காத்த சோழன் வரலாற்றை அவன் வழித்தோன்றலாக உள்ளான்

*முத்தொ – என்று கருதத்தக்கது.

மேல் ஏற்றிக் கூறினர். தன் மேனியை அறுக்குங்கால் உள்ள பொறுமையும், கொடை வீரமும், அறுக்குந் துலி வாகிய படைவீரமும் உடைய சோழன்பெருமை எங்ஙனம் அளவிடுந் தகைத்து? இத்தகைய மன்னர் அஃறிணைப் பொருள்மேலும் மிக்க அருள் வைத்து ஆண்டனர் "புற வொன்றின் பொருட்டால் யாக்கை புண்ணுற அரிந்த புத் தேள்" என்றே கம்பர் கூறுகின்றார். இத்தகைய பொறை யும், அருளும், கொடையும் உடையானைத் தெய்வத்தோ டொப்பக் கொளவேண்டும் என்னும் கருத்துள்ள கம்பர், "புத்தேள்" என்று பாராட்டுகின்றார்.

புறவு - புறா. நிறை - எடை. ஈர்தல் - அறுத்தல். துலை - தராசு. நிறை - ஒழுக்கம். வன்கண்மை - வீரத் தன்மை. செ ன்னி - சோழன். (உ)

கைக்கிளை

அரு. நிறந்திடுமின் தீயவை பிற்காண்டும் மாதர்
இறந்து படிற்பெரிதாம் ஏதம்—உறந்தையர்கோன்
தண்ணுரை மார்பிற் றமிழ்நர் பெருமானைக்
கண்ணுரைக் காணாக் கதவு.

(கு - பு.) உறந்தையர்கோன் உலாவினைக் காண நங்கையர்க்கு இடங் கொடுங்கள்; கதவினை அடைத்து வைத்தல் வேண்டா; நிறமின் என்று சொல்லுதல்.

(இ-ள்.) "உறையூரில் வாழ்பவர்க்கு மன்னனும், குளிர்ந்த ஆத்திமாலை அணிந்த மார்பினையுடைய தமிழர் தலைவனுமாகிய சோழனைக் கண்ணுரைக் காணும்படியாகக் கதவினை நன்றாகத் திறந்துவிடுங்கள்; அதனால் தீமைகள் வருமாயின் அவற்றைப் போக்குவதற்கு வழி பின்பு செய் வோம்; அடைக்கப்பட்டிருக்கும் பெண்கள் சாக்காட்டு நீலை எய்தி இறந்துவிட்டால் அதனால் பெண் பழி பெரும் பழியாக ஆகும்" என்று இரக்கமுள்ள செவிலியர் மற் றைச் செவிலியரிடங் கூறுகின்றனர்.

(வி - ம்.) உறந்தையர்கோன் பாடலம் என்ற பெயருள்ள குதிரைமேல் ஏறி ஒளி நிறைந்த வீதியில் உலாவருங் காலத்தில், முன்பே அவன் பாற் கழிபெருங் காதல்கொண்டு கைவளை சோரக் கவினழிந்த காரிகையார் பின்னருங் காண்பதற்குத் துணிய, அவர்தம் செவிலியர் கதுமெனச் சென்று கதவினை அடையாநிற்ப, அதனைக் கண்டு இரங்கிய செவிலியர் மற்றச் செவிலியரை நோக்கி, "தண்ணுர மார்பிற் றமிழ்நர் பெருமானைக், கண்ணுரக் காணக் கதவுதிறந் திடுமின்" என்கின்றனர்.

இது பூட்டுவிற் பொருள் கோள்.

கதவு திறத்தலால் வரும் தீமையாவது, பெண்டிர் சோழனைப் பார்த்துக் கைவளை சோரக் கவினழிவதனை மறுகிற் பெண்டிர் சிலரும் பலருங் கடைக்கண்ணுல் நோக்கி மூக்கின் உச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி அம்பலும் அலரும் தூற்றுதல்.

தீயவை பிற்காண்டும் - தீமையைப் போக்குவதற்கு வழி, கதவு திறந்த பின்பும் தீயவையாகிய அலர்ச் சொற்கள் வருதற்கு முன்புமாகிய இடைப்பட்ட காலத்திலே செய்வோம்; அதற்குமுன் சாக்காட்டு நிலைவரின் பழி பெரிதாகும் என்று கூறுகின்றனர்.

அலர் தூற்றப்படுந் தீமையினும் பெண்பழி பெரும் பழி என்பது கருத்து. இப்பாடலில், நங்கையரின் பேராண்மையும், செவிலியரின் அன்பின் பெருக்கமும் உருக்கமும் வெளிப்படுகின்றன. (உ-ச)

அகூ. நீணீலத் தார்வளவ னின்மேலா னுகவும்
நாணின்மை யின்றி நடத்தியால்—நீணீலங்
கண்டன்ன கொண்டல் வருங்கா விரிநாட்டுப்
பெண்டன்மை யில்லை பிடி.

(கு - பு.) தலைவி கேளாத பிடியைக் கேட்பதாகக் கொண்டு கூறல்.

(இ - ள்.) பிடியே! நீலப்பூக்கள் வைத்துக் கட்டப்பட்ட நீண்ட மாலையை அணிந்திருக்கின்ற சோழன் நின்

மேல் ஏறியிருப்பவும் நீ சிறிதும் நாணம் இல்லாமல் கடந்து செல்கின்றாயே! இது தகுமா? தடாகத்தில் மலர்ந்திருக்கின்ற நீலமலரின் பரப்பினைக் கண்டாற்போன்ற தோற்றமுள்ள கார்மேகங்கள் தவழும் பொழில் சூழ்ந்த இந்தக் காவிரிநாட்டுப் பெண்தன்மை நின்பால் இல்லையே; நம் நாட்டுப் பெண்கள் தம் கற்பின் ஆற்றலினால் கொண்டலையும் ஏவல் கொண்டவர்கள்; அவர்கள் மழை பெய்யென்றால் பெய்யும்; அதனால்தானே நம் நாடு நீள் நீலம் கண்டன்ன கொண்டல் வரும் காவிரி நாடாக இருக்கின்றது; நீ நம் நாட்டுப் பெண்தன்மைக்கு ஏற்ப நடந்துகொள்ள வேண்டாமா? என்கின்றாள்.

(வி - ம்.) வளவனைப் பார்க்கப் பெரிதும் விருப்புற்ற மகளிர் அதற்கு இடையூறாக விரைந்து நடக்கும் பிடியைப் பார்த்துப் பிடியே! சோழன் நின்மேல் இருக்கும்பொழுது சிறிதும், நாணமின்றி விரைந்து நடக்கின்றாயே; நின்பாற் பெண்தன்மை யில்லையே என்கின்றனர். பிடி மெல்ல நடப்பின் வளவனுடைய எழில் நலத்தைக் கண்ணாரப் பருகலாமே; இது விரைந்து நடக்கின்றதே; என்று நினைத்த மகளிர் அப்பிடியைப் பழித்துக் கூறுகின்றனர்.

காவிரி நாட்டுப் பெண்தன்மையினாலேயே மழைவளம் மிகுகின்றது என்பதை விளக்குதற்கு "நீள் நீலங் கண்டன்ன கொண்டல் வருங் காவிரி நாட்டுப் பெண்தன்மை" என்கின்றார்.

நீலம் - நீலப்பூ; குவளைப்பூ. தார் - மாலை. கொண்டல் - மேகம். பிடி - பெண்யானை. நாணின்மை - நாணினது தன்மை. "நீணீலம் கண்தன்மை கொண்டு அலரும்" என்ற பாடத்திற்கு அதற்கு ஏற்ப உரைத்துக்கொள்க. (உரி)

வலியிற்கயல்போல்

அள. சூடரிலைவேற் சோழன்றன் பாடலம் ஏறிப்
படர்தந்தான் பைந்தொடியார் காணத்—தொடர்
நீல வலியிற் கயல்போற் பிறழுமே [புடைய
சாலேக வர்யில்தொறுங் கண். உக

(கு - பு.) சோழன் உலாவருங் காட்சியைப் பலகணி வழியாகப் பார்க்கும் பைந்தொடியாருடைய நிலைமை பகர்தல்.

(இ - ள்.) ஒளிபரப்புவதும் இலைபோன்ற வடிவினை உடையதும் ஆகிய வேற்படையை யுடைய சோழன் பாடலம் என்னும் பெயருள்ள தனது குதிரையின்மேல் ஏறிப் பசிய வகையல்கள் அணிந்த பெண்களெல்லாரும் காணும்படியாக வீதிவழி உலாவந்தான்; அப்பொழுது, வீதியின் இரு பக்கங்களிலும் தொடர்பாக உள்ள சாளர வாயில்கள் தோறும் சோழனைப் பார்க்கும் பெண்களின் கண்கள், தொடர்பாக நின்று மீன்வீசி உதறுகின்ற பரதவர்களுடைய நீலவலையில் கண்டைகள் பிறழுகின்ற தோற்றம்போலப் பிறழுகின்றன; என்று கண்டோர் மற்றையோரிடம் கூறுகின்றனர்.

(வி - ம்.) சோழன் வீதிவழியாக உலா வருகின்றான்; சிறந்த குதிரையின்மேல் இருக்கின்ற தோற்றம் மிக அழகாக இருக்கின்றது; கையில் சுடரொளி பரப்புகின்ற வேல் ஒன்று வைத்திருக்கின்றான். அதன் வடிவு இலை போன்றதாக இருக்கின்றது; ஒவ்வொரு வீட்டிலும் அமைத்திருக்கின்ற சாளரங்களின் வழியாகப் பெண்கள் பார்க்கின்றார்கள்; சன்னலிலோ வென்றால் நெருக்கமாக வலைகள் பின்னப்பட்டிருக்கின்றன; குதிரை விரைவாக நடக்கின்றது; பெண்களுடைய கண்களாகிய கெண்டைகளெல்லாம் சோழனுடைய அழகாகிய நீர்த்தடாகத்திலே பாய்ந்து உயிர்தப்பவேண்டுமென நினைத்து அங்கும் இங்கும் ஓடியாடிப் பிறழுகின்றன. அத்தோற்றம் நீலவலையில் அகப்பட்ட கெண்டைகள் பிறழும் தோற்றம்போல் இருக்கின்றன என்கின்றனர்.

செம்படவருடைய வலையில் அகப்பட்ட மீன்களைப் போலச் சாளரவலையி னுட்புறத்தில் நிற்கும் பெண்களின் கண்கள் பிறழுகின்றன.

பாடலம் - சோழனது குதிரை. கயல் - கெண்டை. சாலேகம் - சன்னல். (உசு)

அஅ. கண்டனவுண்கண் கலந்தன நன்னெஞ்சந்
தண்டப் படுவ தடமென்றோள்—கண்டாய்
உலாஅ மறுகில் உறையூர் வளவற்
கெலாஅ முறை கிடந்தவாறு.

(கு - பு.) தலைவி தோழியினிடம் கூறியது.

(இ - ள்.) தோழியே! வளவன் வீதியில் உலாவந்தான்; அப்பொழுது என்னெஞ்சும், கண்களும் அவனை நோக்கின; அதுவுமன்றி அவனிடமே சென்று கலந்துவிடவும் செய்தன. இந்தக் குற்றத்திற்கு என்னெஞ்சும், கண்களும்தானே தண்டிக்கப்பட வேண்டும். அவற்றை வாளா விருக்கவிடுத்து, என் மெல்லிய பெரிய தோள்கள் தண்டிக்கப் படுகின்றன. ஐயோ! தோள்கள் ஒரு குற்றமும் செய்யவில்லையே; அவ்வாறு இருப்பவும் அவைகள் தண்டிக்கப்படுதல் முறையாகுமா? உலாவுதற்கேற்ற அகற்சியும் நீட்சியும் அமைந்துள்ள இந்த உறையூர் வளவனுக்கு முறையல்லாதன வெல்லாம் முறையாகப் பொருந்திக் கிடக்கின்றதை நீயே பார்த்தாய்; யான் சொல்லவேண்டியது யாது? ஆதலால் இந்த வளவன் செய்யும் முறைக்கேட்டுக்கு யான் என் செய்கேன்; என்றாள்.

(வி - ம்.) தோழியைப் பார்த்துத் தலைவி குற்றம் செய்தவர்களைத் தண்டிப்பது அரசனுக்கு முறையாயிருக்க அம்முறையை விடுத்துக் குற்றம் செய்யாதவரைத் தண்டிக்கத் துணிந்து விட்டான் வளவன். என் செய்வது? அவன் செய்வதுதான் முறை யென்றல்லவா உலகம் கொள்ளும் என்று கூறுகிறாள்.

வளவன்பால் மனம் வைத்து மனம் நெகிழ்ந்து தோள் நலத்தைத் தொலைத்த மங்கை, அக்குற்றத்தை அவன்மேல் ஏற்றிக் கூறுகின்றாள். இவ்வாறு கூறுகின்ற முறைமையினாலேயே வளவனது செங்கோன் முறையும், நல்லொழுக்கமும் தெற்றென விளங்குதல் உணரத்தகும்.

எலாஅ என்பதனை எல்லா என்பதன் தொகுத்தல் எனக்கொண்டு தோழி என்று பொருள் உரைத்து விளியாகக் கொள்ளினும் அமையும். கண்ணும் நெஞ்சும் நோக்கின கலந்தன எனப்பொருள் கொள்ளல் வேண்டும்.

உண்கண் - மையுண்டகண். தட - பெரிய. (உ)

நாணும் நலனும்.

அகம். என்னெஞ்சு நாணு நலனு மிவையெல்லாம்
மன்னன் புனலுடன் வௌவினன்—என்னே
அரவக லல்குலாய் ஆறிலொன் றன்றே
புரவலர் கொள்ளும் பொருள்.

(கு - பு) தலைவி தோழி கேட்பச் சொல்லியது.

(இ - ள்) பாம்பினது அகன்ற படத்தின் புறத்தைப் போலத் துடைகளின் மேற்புறம் அழகாக அமையப்பெற்ற தோழியே! அரசர்கள் திறையாகக் கொள்ளும் பொருள் குடிகளிடத்திலிருக்கின்ற பொருள்களில் ஆறிலொரு கூறு அல்லவா? அவ்வாறு இருப்பவும் நீர்முடைய மன்னன், காவிரிப் புனல் பாய்கின்ற சோணாட்டன், எனது நெஞ்சும், நாணமும், எழில் நலனுமாகிய இவற்றை எல்லாம் கவர்ந்து கொண்டான்; இது என்னே! முறை கேடாக இருக்கின்றதே; இதற்கு யான் என் செய்கேன் என்கின்றாள்.

(வி - ம்) சோழனைக் கண்டு காதலுற்ற ஒரு நங்கை தன் மனத்தை அவனிடத்திலேயே தொலைத்தனள்; அதனால் அவளது நாணமும் பறந்து போயிற்று; பெண்மை நலனும் பெயர்ந்து போயிற்று: ஆனால் பயனொன்றும் இல்லை; சோழனை தனக்குக் கிட்டியபாடில்லை. பின்பு அவனைக் குறைகூறவும் தொடங்கினளாய் "என்ன முறையில் அவன் என் உள்ளம், நாணம், அழகு இவற்றையெல்லாம் கவர்ந்தான். காதலன் என்ற முறையிலும். என்னை ஏற்றுக் கொள்ளலாம் என்ற முறையிலும் கவர்ந்தாற் குற்றமில்லை; அரசன் என்ற முறையிற் கவர்ந்தால் ஆறிலொரு பங்கு தானே அவன் கவரவேண்டும்; எல்லாவற்றையும் கவர்ந்தது முறைகேடல்லவா? இந்த முறைகேடான செயலை மன்னனே செய்யத் தொடங்கினனே. அதிலும் புனல்நாடனாகும் மன்னனே இவ்வாறு கவர்தல் வேண்டும்? இது, பெரிய குற்றம்தானே? இதற்கு நாம் என்செய்வோம்? ஏடி தோழீ! இது, அறன்கொல்? சொல்;" என்கின்றாள்.

புரவலர் - அரசர். புனல்நாடு - பூவிரி புதுப்புனற் காவிரி புரக்குஞ் சோணாடு: ஆறிலொரு கூறு வவ்வாது

நெஞ்சம், நாணம், நலன் இவற்றையெல்லாம் வௌவினன். என்னே, என்றமையால் தலைவன் தன்னை மணந்துகொள்வானே என்ற குறிப்பு அவளுக்கு உண்டாயிற்று.

பெண்பாலிடத்தில் அரசனுக்கு ஆறிலொருபங்கு உரிமை இல்லை என்பதூஉம் அவர்தம் கற்பினால் உலகம் அடையும் மழை வளத்தில் ஆறிலொரு பங்கே உரித்தாகுமென்பதூஉம்.

கீழ்வரும் அகலிகை வெண்பாப் பாடல்களால் உணர்க.

"ஆறில் ஒருகூ(று) அரசற்(கு) உரியதெனக்
கூறும் முறைஉன் கொழுநன்ஓர்—கூறு
தலத்தே எனக்குத் தரல்போல் நிறையில்
உவப்போ டொருகூ(று) உதவு"

என்று இந்திரன் அகலிகையினிடம் கேட்க,

அவள் மறுமொழியாக

"காந்தைக்கு வேந்தன்அவள் காந்தனே; மேலாகப்
போந்திட்ட தெய்வம் புருடனே—வாய்ந்த
அறமும்அவன் அன்னே அன்றி அறத்தால்
பெறுபயனும் இல்லை பிறிது."

"தவத்துக் கிடையூறு சாராது காப்பார்
தவத்திற் பகுதிபெறுர் சாற்றும்—தவத்தின்
பயனிலோர் பங்குறுவர் பார்த்திபர்கள் கற்பின்
பயனிலோர் பங்கேயுன் பங்கு."

என்று கூறியவற்றையும் தெளிக. (உஅ)

பொங்கோதம் போழும்

கூஅ "கனவினுள் காண்கொடாக் கண்ணுங் கலந்த
நனவினுள் முன்விலக்கு நாணும்—இனவங்கம்
பொங்கோதம் போழும் புகாஅர்ப் பெருமானர்
செங்கோல் வடுப்படுப்பச் சென்று"

(கு - பு) தலைவி தோழியினிடம் சொல்லியது.

(இ - ள்) தோழீ! சோழனைக் கண்ணுற் பார்த்தாலாவது என் கலக்கம் ஒருவாறு தீராதா என்று நினைத்தேன்;

அவனும் கனவில் என்னிடத்தில் வந்தான்; அப்பொழுது என் கண்களும் பார்க்கக் கொடாதனவாக மூடிக்கொண்டன; பின் வீதியில் உலா வரும்பொழுது விழித்துக் கொண்டுதானிருந்தேன்; அதுவும் நேரே பார்ப்பதற்கும் பொருத்தமான நேரந்தான்; ஆனால் நாணம் என்று ஒன்று இருக்கின்றதே அது அப்பொழுது வந்து விலக்கிவிட்டது; கூட்டமான மரக்கலங்கள் பொங்குகின்ற அலைகளைக் கிழித்துக்கொண்டு செல்லுகின்ற கடற்கரையிலுள்ள காவிரிப்பூம் பட்டினத்திற்கு மன்னனுகிய சோழனுடைய செங்கோல் முறைமையில் குற்றம் உண்டாகும்படியாக வந்து, கண்களும் நாணமும் இவ்வளவு கொடிய செயல்களைச் செய்கின்றன; ஆதலால் அவனைக் கண்ணுற் பார்க்கவும் முடியவில்லை; என் செய்வேன்! என்கின்றாள்.

(வி - ம்) காதலன் நல்கான் நயவான் ஆயினும் அவனைப் பல்காற் காண்டலும் உள்ளத்துக்கு இனிதெனத் தலைவி நினைக்கின்றாள்; அதனற் பயன் யாது? நாணோடு உடன்பிறந்த நங்கை அவள்; ஆதலால் வளவனைப் பார்க்க விடாமல் நாணம் நனவில் வந்து விலக்கிவிடுகின்றது; கனவிலோ எவற்றிற் கண்கள் கன்றுக மூடிக்கொள்கின்றன; ஆதலால் காட்சி யின்பமுங்கூடக் கிடைக்கவில்லை; என் செய்வேன்! என்கின்றாள்.

கனவு - சொப்பனம். நனவு - விழிப்பு. பொங்கு ஓதம் - பொங்குகின்ற கடல். போழ்தல் - பிளத்தல். புகார் - காவிரிப்பூம்பட்டினம். (உக)

வண்டடக்கை

உக "தானைகொண் டோடுவ தாயிற்றன் செங்கோன்மை
சேனை யறியக் கிளவேனே—யானை
பிடிவிசும் வண்டடக்கைப் பெய்தண்டார்க் கிள்ளி
நெடுவீ நேர்பட்ட போது".

(கு - பு) தலைவி தோழிகேட்பச் சொல்லியது. நெஞ்சொடு கூறியது எனலுமாம்.

(இ - ள்) தோழீ! பரிசிலருக்குக் களிற்றுயானையையும், பிடியானையையும், மிகுதியாகக கொடுக்கின்ற வளப்ப

மான பெரிய கையினையும், மலர்கள் மிகுதியாக வைத்துக் கட்டப்பெற்ற குளிர்ந்த மாலையையும் உடைய கிள்ளி என்ற சோழனுடைய செங்கோல் முறைமை எத்தகையது என்பதைப் பார்த்தனையா? கனவில் வந்து என்னுடைய ஆடையைக் கவர்ந்துகொண்டு ஓடிப்போயினன். அவன் செயல் இதுவாயின், நாளை நமது பெரிய வீதியில் உலா வந்து, நமக்கு நேராக எதிர்ப்பட்டபோது, இந்த முறை கேடான செயலை அவனுடைய சேனைகளும் அறியும்படியாகச் சொல்லாமலா விடுவேன்; சொல்லிவிடுகிறேன் பார்; அவன் தனியிடத்தில் கனவில் என்னைப் பீடழித்தானென்றால் யான் நனவில் பலர் முன்னிலையில் அவனைப் பீடழித்து விடமாட்டேனோ? என்கின்றாள்.

(வி - ம்) ஒரு நங்கை, கிள்ளியினுடைய பெரியதோள், அழகிய மாலை, அழகு இவற்றில் ஈடுபட்டுத் தன் மனத்தைப் பறிகொடுத்தாள். கனவிலுங்கூட அவன் நினைவாகவே தான் இருந்தாள். இவ்வாறாக ஒருநாள் அவன் கனவில் வந்து அவளுடைய ஆடையைக் கவர்ந்து கொண்டான்; அவள் பிடிக்க முயன்றாள்; ஓடியே போய்விட்டான்; அதை வைத்துக்கொண்டு அறிவு கலங்கிய நங்கை, தோழியைப் பார்த்துத் தோழீ! வளவன் இவ்வாறு செய்தானே! யானும் அவனுடைய முறைகேட்டைச் சேனைகளெல்லாம் அறியும்படி சொல்லமாட்டேனோ? என்கின்றாள்.

தானை - ஆடை. பிடி - பெண்யானை. வண்தடக்கை - வண்மையுள்ள பெரியகை; முழந்தாள் அளவும் நீண்டகை. தட - பெரிய. பெய்தண்தார் - மலர் மிகுதியாக வைத்துக் கட்டப்பட்ட குளிர்ந்த மாலை. கிள்ளி - சோழன். (கூ0)

காவானே?

கூஉ. தெண்ணீர் நறுமலர்த்தார்ச் சென்னி யிளவளவன்
மண்ணகங் காவலனே யென்பரால் — மண்ணகங்
காவலனே யானக்காற் காவானே மாலைவாய்க்
கோவலர்வாய் வைத்த குழல்.

(கு - பு.) தலைவி நெஞ்சோடு கூறியது.

(இ - ள்.) நெஞ்சமே! தெளிந்த நீர்த்தடாகத்திலிருந்து கொய்துகொண்டு வந்த நறுமலர் மாலை யணிந்த

சென்னி என்னும் இளவளவனாகிய சோழன் இம்மண்ணுலகத்தைக் காத்தலில் வல்லவன் என்று எல்லோரும் கூறுகின்றனரே; அவன் இந்த மண்ணுலகத்தைக் காக்கின்ற காவலனாக இருந்தால், இந்தக் கொடிய மாலைப் பொழுதில் ஆயர் தம் வாயில் வைத்து ஊதுகின்ற குழலிசை யென்னைக் கொல்லாமல் காத்தல் செய்யானோ?" என்கின்றாள்.

(வி - ம்.) வளவன்பால் மனம் போக்கிய மங்கை மாலைப் பொழுதில் கோவலர் ஊதும் குழலிசை கேட்டு உருகுகின்றாள். இசையினுடைய செயலோவெனில், பிரிந்தாரை வருத்துவதும் சேர்ந்தாரை மகிழ்விப்பதுமாக விருக்கின்றது. ஆதலால், பிரிந்திருக்கும் அவளுக்கு அது அளவற்ற துன்பத்தை உண்டாக்குகின்றது; "இப்போது வளவன் வந்தால் இந்த இசை நமக்கு இனிமை பயக்குமே? அவன் இல்லாமையினல்லவோ கொல்கிறது? இந்தத் துன்பத்திலிருந்து காப்பதற்கு அவன் வராவிட்டால் அவனை எவ்வாறு காவலனென்பது? இங்கே வந்து காக்கிலனெனினும், கோவலரைக் குழலூதாதே யென்று கட்டளையிட்டேனுங் காக்கலாமல்லவா? அதுவுஞ் செய்கின்றானிலையே. இத்தகைய கொடியவனையல்லவா உலகம் காவலன், காவலன் என்று கதறுகின்றது! என்ன அறியாமை!" என்று தலைவி தனக்குள்ளே கூறிக்கொள்ளுகிறாள்.

"அழல்போலு மாலைக்குத் தூதாகி யாயன்
குழல்போலுங் கொல்லும் படை"

என்பது திருக்குறள்.

மண்ணகம் - மண்ணுலகம். காவலன் - அரசன். கோவலர் - ஆயர். குழல் என்பது குழலின் இசையைக் குறித்தது (ஆகுபெயர்). ஆல் - அசை. (௩௧)

அணிவளையே சொல்லாதோ?

௯௩. "அறைபறை யானை யலங்குதார்க் கிள்ளி
முறைசெயு மென்பராற் றோழி—யிறையிறந்த
அங்கோ லணிவளையே சொல்லாதோ மற்றவன்
செங்கோன்மை செந்நின்ற வாறு."

(கு - பு.) தலைவி தோழிகேட்பச் சொல்லியது.

(இ - ள்.) தோழீ! ஊரார் கேட்கும்படியாகக் கொல்லுகின்ற கொடிய மதயானைகள் வருகின்றவ. எல்லோரும் விலகுங்கள்; விலகுங்கள்," என்று அறைகின்ற பறையை முன்னரே செல்லவிடுத்து, அதற்குப் பின்னர் வரவிடும் மதயானைப் படைகளையும், நன்றாக அசைகின்ற தொங்கல் மாலையையும் உடைய கிள்ளி என்னும் சோழ மன்னன், ஒழுங்காக முறை செய்கின்றானென்று பலர் கூறுகின்றனர். அவர் கூற வேண்டுவது எற்றுக்கு? என்னுடைய கைகளிலுள்ள இறைகளைக் கடந்துசென்ற அழகிய கோல்தொழி லமைந்த நல்ல வளையலே அம்மன்னனது செங்கோல் முறைமை செவ்விதாக நிலைபெற்ற நெறியைச் சொல்லாதோ? என்கின்றாள்.

(வி - ம்.) கிள்ளியின்பால் உள்ளம் செலுத்திக் கழி பெருங் காதல் கொண்டாள் ஒரு நங்கை. அதனால், அவனை நினைந்து நினைந்து, உயிர்த்து உணர்ந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து உருகினள். அதனால் அவள் கைகளிலுள்ள வளையல்கள் இறையைக் கடந்து கீழே விழுந்து தொலைந்தன. இந்நிலையில், சிலர் மன்னனைச் செங்கோல் வேந்தன் என்று புகழ்ந்துகொண்டிருந்தனர். பார்த்தாள் தலைவி. அவளுக்குப் பொறுக்க முடியவில்லை. "தோழீ! இந்த வளவன் ஏதோ நல்ல முறைமை செய்கின்றானோ? என்ன முறை செய்கின்றான்?" என்னுடைய நெஞ்சம், நாணம், நலன், கைவளை இவற்றையெல்லாம் கவர்ந்து பெரிய முறைகேடல்லவோ செய்துவிட்டான்? அந்த முறை கேட்டை என் கைவளையல்களே உணர்த்துகின்றனவே! அதற்கு வேறு சான்றும் வேண்டுமோ"?

வளவனுடைய செங்கோன்மை செய்கின்றவாறு மிகவும் நன்றாக இருக்கின்றது என்று தலைவி பழிக்கின்றாள். 'பலர், கிள்ளி முறை செய்யும் என்கின்றனர். என்ன முறை செய்கின்றான்? மைத்துன முறைதான் செய்கின்றான். வேறு ஒரு முறையுமில்லை; அதனை என்னுடைய வளையல்களே கூறுகின்றன. வேறு சான்று ஒன்றும் இதற்கு வேண்டியதில்லை, 'தோழீ!' என்று கூறியதாக உரைத்தல் பொருந்துமேல் அதுவுங் கொள்க.

தன்னை வளவன் மகிழ்வுறுத்தாமல் பிரிந்ததினால் அவனை இவ்வாறு தலைவி கூறினாள்;

"துறைவன் துறந்தமை தூற்றுகொல் முன்கை
யிறையிறவா தின்ற வளை"

என்பது திருக்குறள்.

அலங்குதார் - அங்குமிங்கும் அசைகின்ற மாலை. இறை - கையிறை. செந்நின்றவாறு - செவ்விதாக நிலைபெற்ற நெறி. (கூ உ)

'தேங்குண்ட தேரை'

கூசை. அன்னையுங் கோல்கொண் டலைக்கும் அயலாரும்
என்னை யழியுஞ் சொற் சொல்லுவர்—நுண்ணிலைய
தெங்குண்ட தேரை படுவழிப் பட்டேன்யான்
திண்டேர் வளவன் றிறத்து.

(கு - பு.) தலைவி தோழியினிடம் சொல்லியது.

(இ - ள்.) தோழீ! வலிமையான தேர்ப்படையை உடைய வளவனுகிய சோழன் பொருட்டு, அயலாரும் என்னைப்பற்றி வருந்தும்படியான சொற்களைச் சொல்லுகின்றனர். அதுவுமின்றி, அன்னையும் சிறுகோல்கொண்டு என்னை அடித்துத் துன்புறுத்துகின்றாள். யானோ வளவனை நுகர்ந்தறியேன். எனக்குப் பழியும் வந்துற்றது. அதுதான் எதைப்போலென்றால், குரும்பைப் பருவத்திலேயே, தேங்காயைப் பற்றி அதன் உள்ளீட்டை உண்டதாகத் தேரை எவ்வாறு பழிவழிப்பட்டதோ அதுபோன்றுதான் யானும் பழிவழிப்பட்டேன், என்கின்றாள்.

(வி - ம்.) வளவன்பால் மனம் போக்கிய மங்கை ஒருத்தியைப் பற்றிச் "சிலரும் பலருங் கடைக்கண் நோக்கி, மூக்கினுச்சிச் சுட்டு விரல் சேர்த்தி, மறுகிற் பெண்டிர் அம்பலும்" அலரும் தூற்றுகின்றனர். அவள் அன்னையும் சிறுகோல் வலத்தளாய் அலைக்கின்றாள்; அதனால் அலந்த அங்கங்கை தோழியினிடந் தன் வருத்தத்தைக் கூறுகின்றாள். "தோழி, தேரை தேங்காயை உண்ணுமலே பழிசுமக்கின்றதல்லவா? அதுபோல யானும் வளவனைச் சேராமலே பழிசுமந்தேன். அன்னையும் அலைக்கின்றாள். அயலாரும் அலர்

தூற்றுகின்றனர். யானும் அலமருகின்றேன்'' என்று தன் வருத்தத்தைக் கூறுகின்றாள்.

விளங்காய்க்கு யானைநோய் என்ற ஒரு நோய் வருதல் போலத் தேங்காய்க்குத் தேரைநோய் என்ற ஒரு நோய் வரும்; அது சிறுகுரும்பைப் பருவத்திலேயே தேங்காயைப் பற்றிவிடும். தேங்காயினுள்ளே உள்ளீடு வளர வளர அதனை அரித்து அரித்துத் தொலைத்துவிடும்; உண்மை இவ்வாறிருப்ப எல்லோரும் 'தேரை உண்ட தேங்காய்'; 'யானை உண்ட விளங்காய்' என்று சொல்லுவார்கள். யானையும், தேரையும் விளங்காயையும், தேங்காயையும் உண்ணுமலே உண்டனவாகப் பழிதூற்றப்படுகின்றன; அதுபோலத் தானும் பழிதூற்றப்படுவதாகத் தலைவி கூறுகின்றாள்.

''தேரையார் தெங்கின்நீர் உண்ணார் பழிசுமப்பர்''

என்று வருவதுங் காண்க.

அழியுஞ்சொல் - வருந்தும்படியான அலர் மொழி

''கிளரும் பலருங் கடைக்கண் ணோக்கி,
மூக்கின் உச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி,
மறுகிற் பெண்டிர் அம்பல் தூற்றச்,
சிறுகோல் வலத்தனள் அன்னை அலைப்ப,
அலத்தனன் வாழி தோழி''.

என நற்றிணையில் வருவதுங் காண்க.

நுண்ணிலைய தெங்கு உண்ட - நுண்மையான நிலையை உடைய தேங்காயை உண்ட; நுண்மை - சிறுமை. இளநீர்ப் பருவத்திலேயே தேரைநோய் பற்றித் தேங்காயினுட் பருப்பு முதிர முதிரத் தேரை நோய் அதனை அரித்துவிடும். ஒரு தென்னையில தேரை விழத் தொடங்கிவிட்டால் அந்த மரம் உள்ளளவும் காய்க்கின்ற காய்களெல்லாம் தேரோடிகளாகவே போகும் என்ப. (நூ)

'களிமயங்கிக்காணேன்'

கூ. புலவி புறக்கொடுப்பன் புல்லிடினு ணீர்ப்பன்
கலவி களிமயங்கிக் காணே—னிலவியசீர்
மண்ணுலஞ் செங்கோல் வளவனை யானிதன்றே
கண்ணுரக் கண்டறியா வாறு.

(கு - ப.) தலைவி தோழி கேட்பச் சொல்லியது.

(இ - ள்.) தோழீ! யான், சோழனுடன் ஊடலில் அவனுக்கு நேரே நில்லாமல் புறங்காட்டி நின்றுகொள் வேன். அவன் தழுவும்போது நாணி நிற்பேன். கலவி யிலோவெனில் அந்த இன்பக் களிப்பிலே மயங்கி அவனைப் பாரேன். இம்மண்ணுலகத்தை ஆளும் செங்கோன்முறை மையினையும், நிலைபெற்ற புகழினையும் உடைய வளவனை யான் கண்ணுரக் கண்டறியாவாறு இதனல்லவா? என்கின்ருள்.

(வி - ம்.) வளவனைத் தன் காதலனுக வரித்த ஒரு நங்கையினிடம் அவள் தோழி சென்று "நீ நின் தலைவனைக் கண்ணுரப் பருகினையோ," என்று வினவினுள். அதற்கவள் 'அந்தோ யான் அதுசெய்திலேனே' என்ன, 'புலவிக் காலத்தி லாவது செயிர்த்தது நீ சினந்து நோக்கினையோ' வென்ன, 'இல்லை, இல்லை. யான் புலவிக் காலத்தில் புறங்காட்டி நின்றுகொள்வேன்' என்ருள்; 'புல்லுங் காலத்திலோ' என்ன, 'அப்பொழுது நாணி நிற்பேன்; அதனல் கண்டிலேன்' என் ருள்; 'கலவிக்காலத்திலோ' என்ன, 'அப்பொழுது அந்த இன்பக் களிப்பிலேயே மயங்கி இருந்துவிடுவேன். ஆத லால் அப்பொழுதும் கண்டறியேன்.' என்ருள். ஆகவே, அவள் தோழியைப் பார்த்து, 'யான் புலவி, கலவி, புல்லல் ஆகிய இம்மூன்று காலத்திலும் வளவனைக் கண்ணுரக் காணேன்' என்று சொல்லிவிட்டாள்.

புலவியுங் கலவியும் நாணமும் யான் வளவனைப் பாராத படி தடுத்துவிட்டன தோழி. அதனலேதான் யான் பார்க்க வில்லை எனறு கூறுகின்ருள்.

புலவி - ஊடல். புறங்கொடுப்பன் - புறங்காட்டி நின்றுகொள்வேன். நாண் நிற்பன் - நாணிக் கவிழ்ந்து நிற் பேன். கலவி - கூடல். களி மயங்கி - இன்பத்திலே மயங்கி. (நச)

கரையுரிஞ்சி மீன்பிறழும்

கூகு. செங்கான் மடநாராய்! நென்னுறந்தை சேறியேல்
நின்கான்மேல் வைப்பனென் கையிரண்டும்—
நன்பாற்
கரையுரிஞ்சி மீன்பிறழுங் காவிரிநீர் நாடற்
குரையாயோ யானுற்ற நோய்.

(கு - பு.) தலைவி காமமிக்க கழிபடர் இளையாள் கேளாத புள்ளினத்தைக் கேட்பனவாகக் கருதிக் கூறுதல்.

(இ - ள்.) "செம்மையான கால்களை உடைய இளமையான நாரையே! நின்னுடைய கால்களின்மேல் என்னுடைய கைகளை வைத்து வணங்கிக் கேட்டுக்கொள்ளுகிறேன். நீ, தென்பாலுள்ள உறையூருக்குச் செல்வாயேயானால், நல்ல மருத நிலத்தின் இரு மருங்கும் அமைந்துள்ள கரைகளிலே, மீன்கள் உராய்ந்து உராய்ந்து பிறழ்ந்து பிறழ்ந்து நீரில் எதிரேறிச் செல்லும்படியாக விரைவாகவும், மிகுதியாகவும் வருகின்ற காவிரிநீர்நாடனுடைய சோழனுக்கு யானுற்ற இந்தக்காதல் நோயை உரையாயோ?" என்று தலைவி நாரையை முன்னிலைப்படுத்திக் கூறுகின்றாள்.

(வி - ம்.) உறையூருக்கு வடபால் அமைந்துள்ள ஓர் ஊரிலிருக்கும் ஒரு நங்கை சோழனிடத்தில் மனம் போக்கித் துயருறுகின்றாள்: அவன்பால் தான் கொண்ட காதல் கரைகடந்து பெருகியது; அதனால் மயக்கமுடையவளாகி ஒரு நாரையை விளித்து அதன்பால் தன் கருத்தினைக் கூறிப் புலம்புகின்றாள். 'ஏ நாரையே!' என்று நாரைக் கூட்டத்தைப் பார்த்து விளிக்கின்றாள். ஒன்றும் திரும்பிப் பார்க்கவில்லை. 'ஏ செங்கால் நாரையே!' என்கின்றாள். அப்பொழுதும் பார்க்கவில்லை; அவள் மீண்டும் மீண்டும் அழைக்கும் ஒலி கேட்டுப் பல நாரைகள் பறந்துபோயின. ஒரு சிறு நாரைமட்டும் இருக்கின்றது. அதனையும் கூவுகின்றாள். அதனுடைய இளமைப் பருவமும் மடமும் தன்னுடைய நிலையை அறிய விடுகின்றனவில்லை என்று நினைக்கின்றாள்; நாரையும் பறக்கத் தொடங்குகின்றது. "உன்னைத் தானே! ஏ செங்கால் மடநாராய்! உன் கால்மேல் கைவைத்து வணங்கிக் கேட்டுக்கொள்கின்றேன்; நீ உறையூருக்குப் போனால் சோழனிடத்து யானுற்ற நோயை உரையாயோ?" என்கின்றாள். "நீ சென்றால் காவிரிக் கரையோரத்தில்" உராய்ந்து உராய்ந்து பிறழ்கின்ற மீனை மிகுதியாகப் பிடித்துத் தின்னலாம். உனக்கும் பயனுண்டு." என்பவளாய்க் "கரையுரிஞ்சி மீன் பிறழ்ங் காவிரி" என்கின்றாள். "அந்தக் காவிரிநாடன் காவிரிக் கரைக்கு வருவான். அவனிடம் நீ கூறுதலும் எளிது." என்பவளாய்க் "காவிரி நீர் நாடன்" என்கின்றாள்.

ஆற்றில் நீர்வற்றி அற்று ஓடுகின்ற காலத்தில் மீன் மேலேறிச் செல்லுதல் எளிது : காவிரி அவ்வாறின்றி என்றும் வற்றாது ஒடும் இயல்புடையது. காவிரியின் நீர்ப் பெருக்கின் மிகுதியினாலும், விரைவினாலும், மேலேறிச் செல்லக் கருதிய மீன் தடைபட்டு, நட்டாற்றிற் செல்லமுடியாது. கரையோரமாக உராய்ந்து உராய்ந்து பிறழ்ந்து பிறழ்ந்து நீரை எதிர்த்தேறிச செல்லும் என்று அதன் இயற்கையை அழகாகத் தலைவி வாயிலாக நல்லிசைப் புலவர் நவில்கின்றார். இதனால் காவிரியின் வளமும், மீன் நீர்ப்பெருக்கில் ஓரமாகவே ஏறிப் பிறழ்ந்து, செல்லும் இயல்பும், அம்மீன்கள் நாரைக்குப் பற்றுதற்கு எளிது என்பதும் பெறப்படுகின்றன. நாரை தென்னுறந்தைக்குச் சென்றால் அதுவும் மீன் தின்று பயணடையும், தலைவியின் காரியமும் இனிது கூறத்தகும் என்பதையும் அமைத்துக் "கரையுரிஞ்சி மீன் பிறழுங் காவிரி நீர்நாடன்" என்று அடைமொழிகளோ நயமாக அடுக்கிச் செய்யுளைச் செவ்விதின் இயற்றி இருக்கின்றார்.

பிடித்தற்கு நாரை அஞ்சும் இயல்புடையது; ஆதலின், காலைப்பற்றி வணங்குவேன் என்னாது, "நின் காலைத் தொட்டு வணங்குவேன்", என்னுங் குறிப்புத் தோன்ற "நின் கால் மேல்வைப்பன் என்கையிரண்டும்" என்றும் கூறுகின்றாள். "நின்கால், என்கை" என்ற முரண்தொடை ஒத்து வதற்கு இனிதாகவும், நாரையின் காலில் தலைவி கைவைப்பதைத; அதுவும் முரண்தான் என்று குறிப்பதாகவும் இருக்கின்றது.

நன் பால் — மருத நிலம்: காவிரி தான் செல்லும் இடத்தை எல்லாம் நன்பாலாக்கியது, என்பது குறிப்பு. அல்லது "நன்பாற் கரை," என்பதற்கு நற்பகுதியாக அமைந்த கரை எனக் கொண்டு, தேமாவும், பலாவும், மருதும் முதலிய பலவேறு மரங்கள் அடர்ந்து கவின்செய்து, 'கரையுரிஞ்சிப் பிறழுகின்ற மீனை நாரையுண்டு தங்குவதற்கு ஏற்ற நற்பகுதியான, கரை எனக் கூறலும் அமையும்.

சேறியேல் - செல்லுதியேல். தென்னுறந்தை - தென் பாலுள்ள உறையூர்.

"காண்டகைய செங்காலொண் கழிநாராய் காதலால்
புண்டகையமுலை மெலிந்து பொன்பயந்தா ளென்றுவளர்
சேண்டகைய மணிமாடத் திருத்தோணி புரத்துறையும்
ஆண்டகையாம் கின்றேசென் றுடியறிய வுரைத்தாயே."

என்பது ஆஞ்டைய பிள்ளையார் அருள்மொழி.

"அஞ்சிறைய மடநாராய்! அளியத்தாய் நீயுநின்
அஞ்சிறைய சேவலுமாய் ஆ ஆ என் றெனக்கருளி
வெஞ்சிறைப்புள் ளுயர்த்தார்க்கென் விடுதூதாய்ச் சென்றக்கால்
வன்சிறையில் அவன்வைக்கில் வைப்புண்டால் என்செயுமே."

என்பது, நம்மாழ்வார் நன்மொழி. (நூடு)

மாமருட்டி

கூள. குதலைப் பருவத்தே கோழிக்கோ மானை
வதுவை பெறுகென்ரு ளன்னை—யதுபோய்
ஷீளந்தவா வின்று வியன்கானல் வெண்டேர்த்
துளங்குநீர் மாமருட்டி யற்று.

(கு - பு) சோழனிடம் காதல் கொண்ட நங்கை தன் நெஞ் சொடு சொல்லியது.

(இ — ள்.) நெஞ்சமே! நாம் மழலைச்சொல் பேசு கின்ற பருவத்திலே நம் அன்னை நம்மைப்பார்த்து நீ "உறை யூர் மன்னனுகிய சோழனுக்குத் திருமணம் செய்து கொடுக் கப் பெறுவாயாக" என்றெல்லாம் சொன்னுளே! பெரிய பெண்ணுகி இருக்கின்ற இப்பொழுது அந்தத் தன்மை முற் றும் மாறிச் சோழனைப் பார்க்கவும் கூடாதென்று சொல் லும்படியான தன்மையுடையவளாக விளைந்த முறைமை, அகன்ற பாலை நிலத்திலே ஒளி அலையாக அசைகின்ற கான லாகிய நீர் காட்டிலுள்ள விலங்குகளுக்குத் தண்ணீர் போலக் காட்சி அளித்துப்பின் அந்த விலங்குகள் தன்னை நோக்கி வரவர வெறும் வெட்ட வெளியாகத் தோன்றி மயக்கின நிலைமையை ஒத்தது என்கின்ருள்.

(வி - ம்.) ஒரு பெண் சோழன் உலாவரும்போது பார்த்து அவன்பால் பெருங் காதல் கொண்டாள்; உடம் பெல்லாம் மாறுபாடு அடைந்தது; பார்த்தாள் தாய்:

ஏதோ, 'இவள் உள்ளத்தில் மாறுபாடு தோன்றி இருக்கின்றதே என் செய்வோம்?' என்று நினைத்தாள்; உடனே மகளிடம் வந்து, "இனிமேல் அங்கும் இங்கும் போய் பட்டிப் பார்க்கின்ற வழக்கத்தையெல்லாம் விட்டுவிடு; வீட்டை விட்டு வெளியே போகவே கூடாது" என்று சொல்லி கடுங் காவலில் வைத்தாள். அதனால் அந்த நங்கைக்கு ஆற்றுமை ஆற்றுமையாகவே தோன்றியது தன்னுடைய்தாய் ஒவ்வொரு காலத்திலும் ஆதரித்த தன்மையெல்லாம் நினைக்கின்றாள்: நாம் குதலைச் சொல் பேசும்போது 'சோழனே மணமகனைப் பெறுக' என்றெல்லாம் சொன்னாளே; இன்றைக்கு அவனைப் பாராதே; நினைக்கவும் செய்யாதே; மறந்து விடு; என்று சொல்லுகின்றாளே; இஃது என்ன? பாலை வனத்திலே தோன்றுகின்ற கானல், அலை வீசுகின்ற தண்ணீர்போலக் காட்சி அளித்துப் பின், விலங்கினங்களெல்லாம் தண்ணீர் நோக்கி வரவர வெட்டவெளியாய்த் தோன்றி ஏமாற்றினதுபோல் எல்லவா இருக்கின்றது? நம்முடைய அன்னையின் அன்புடைமைதான் என்னே! அவளுடைய அன்பின் பெருக்குப் பெரிய நீர்த்தடாகம்போல் அந்தக் காலத்திலே எனக்குத் தோன்றிற்று: என்னுடைய அறிவும் அந்தக் காலத்திலே காட்டு விலங்கின் தன்மையுடையதாகத்தானே இருந்திருக்கின்றது; அறிவறிந்த இந்தக் காலத்தில் அவளுடைய அன்பு பாலைவனத்தில் தோன்றுகின்ற கானல் நீர்போல அல்லவா வெறும் பயனற்றதாக இருக்கின்றது; அந்தக் காட்டு விலங்கினம் எவ்வாறு தண்ணீர்விடாய் தீராமல் மருண்டு தவித்தனவோ அவ்வாறல்லவா என்னுடைய விடாயும் தீர்ந்தபாடில்லை; என் செய்வேன்! அன்னையினிடத்தில் சிறிதும் ஈரமென்பது இல்லவே இல்லை; வெறும் பாலைவனம்தான் என்றெல்லாம் நினைக்கின்றாள்; இந்த நினைப்பெல்லாம் அமையும் படியாகவும், விலங்கினத்தின் மயக்கம் முதலிய எல்லா உணர்ச்சிகளும் பாடலில் நிறைந்து அலை வீசிக்கொண்டு இருக்கும்படியாகவும் பாடியிருக்கின்ற இச்செய்யுளைப் பல முறை சொல்லி உணர்வது நலம்; உணர்ச்சியாகிய செழுந் தேனைப் பாடலாகிய பொற் கிண்ணத்திற் பெய்து பருகுவாரது உடலினிக்க, உயிரினிக்க, உடம்பிலுள்ள ஒவ்வொரு அணுக்களும் விம்மிதம் அடையும்படியாகத் தருபவனே பாவலன்; அவன் பாடலே பாடலாம்; இத்தகுதியான

தன்மை எல்லாம் இந்நூல்களிலுள்ள பாடல்களில் மலிந்துள்ளமை காண்க.

குதலைப்பருவம் - மழலைச்சொற் பேசும் இளம்பருவம். கோழிக் கோமான் : உறையூர் மன்னனுகிய சோழன். வதுவை - திருமணம். வியன்கானல் - அகன்ற பாலைவனம். வெண்டேர் - பெய்த்தேர் ; அஃதாவது கானல் - கானலாகிய நீர். (கூசு)

நீர்மேல்—நெருப்பு

கூஅ. அலங்குதார்ச் செம்பியன் ஆடெழிற்சேரல் நோக்கி
விலங்கியான் வேண்டா வெனினும் — நலந்
தொலைந்து
பீர்மேற் கொளலேற்ற பேதையர்க் கென்வாய்ச்
நீர்மேல் எழுந்த நெருப்பு [சொல்

(கு - பு.) செவிலித்தாய் நெஞ்சொடு சொல்லியது.

(இ - ள்.) நெஞ்சமே! யான் ஓடிப்போய்க் குறுக்கிட்டு நின்றுகொண்டு, "ஏடி, போய்ப் பார்க்கவேண்டாம்," என்று சொல்லியுங்கூடக் கேளாமற் போய், அங்குமிங்குமாக அழகாக அசைகின்ற ஆத்திப் பூமாலையை அணிந்த சோழனுடைய வெற்றி பொருந்திய தோளையுப் பார்த்து அவன்மேற் காதல் கொண்டு தன் அழகு நலன் எல்லாந் தொலைந்து போகப் பீர்க்கம் பூவின் நிறத்தைப் போன்ற பசலையை உடம்பு முழுவதும் பெற்றுக்கொண்ட பெண்களுக்கு என் வாய்ச்சொல் தண்ணீர்மேல நிரியிட்டுப் பற்றச் செய்கின்ற நெருப்பின் தன்மைபோலப் பயனில்லாதவாக அமைந்துவிட்டனவே ; என்செய்கேன் ? என்கின்றாள்.

(வி - ம்.) மழைபெற்ற பயிர்போலவும் தாய்முகங் கண்ட குழந்தைபோலவும் மன்னனைக் கண்ட மக்கள் மகிழ்ச்சி அடைவார்கள். ஆதலால் பண்டைக் காலத்து வேந்தர் சிற்சில காலங்களில் வீதிவழியாக உலாவருதல் இயல்பு ; ஒருநாள் சோழன் வீதிவழியாக உலாவருகின்றான் : ஆதலால் பூமாலை அணிந்திருக்கின்றான் ; அந்த மாலை அங்குமிங்குமாக அசைந்துகொண்டு அழகாக விளங்குகின்

றது. அவனுடைய தோள்களோ பகைவரை யெல்லாம் அடங்கக் கொன்று வெற்றிபெற்று விளங்குகின்றன. இந்தத் தோற்றத்துடன் நல்ல குதிரையின்மேல் ஏறி வருகின்றான். பெண்களும் வந்து பார்க்கத் தொடங்குகின்றார்கள். வளர்த்த செவிலித்தாயார்கள் குறுக்கிட்டு "ஏடி! எங்கே செல்லுகின்றாய்? வீட்டுக்குள்ளே போ" என்று சொல்லுகின்றார்கள்; ஆனால் ஒருவரும் அந்தச் சொற்களைக் கேட்கவேயில்லை; ஆட்களோடு ஆட்களாய்ப் போய்ச் சோழனைப் பார்த்தனர்; அவனுடைய ஆண்மைத் தோற்றத்தைப் பெண்களுக்கு மறக்க முடியவில்லை. அதுமுதல் அவர்களுக்கு உறக்கமும் இல்லை; உணவோ நஞ்சாக ஆயிற்று. செவிலிகள் சோற்றைப் பிசைந்து வைத்துக் கொண்டு "இந்தா, உண்" என்று சொல்கின்றனர்; கேட்கவேயில்லை: ஒருபிடி சோற்றைக் கையில் அள்ளிக் கொண்டு என்னென்ன வெல்லாமோ நினைத்துக்கொண்டு மயங்கியிருக்கின்றனர்: உடம்போ பீர்க்கம் பூப்போல மஞ்சள் நிறமாகப் பசலை உடையனவாக ஆகிவிட்டன; அழகும் நலமும் குடிபோயின; பார்த்தார்கள் செவிலியர்கள்: "என்ன! இவர்களுக்கு நம் சொல் காதில் ஏறவில்லையே! நீர்மேல் நெருப்புக் கொளுத்தத் தொடங்கியதுபோலல்லவா ஆயிற்று; என் செய்வோம்?" என்று நினைக்கின்றாள்:

கலிவியின் ஏக்கம், செவிலி சொல்லுகின்ற சொல்லையும் உணராத மயக்கம், செவிலியின் நினைவு முதலிய உணர்ச்சிகளெல்லாம் பாடலில் அமைந்து விளங்குகின்றன;

முதியவளாகிய செவிலியுஞ் சோழனைப் பார்த்து அவனுடைய தோள்களையும் மாலையணிந்த மார்பினையும் "அலங்குதார்ச் செம்பியன் ஆடெழிற்றோள்" என்று புகழும்படியான அவ்வளவு அழகு வாய்ந்தவன் சோழன் என்பது புலனாகின்றது.

அலங்குதார் = அங்குமிங்கும் அசையும் மாலை. பீர் - பீர்க்கம் பூவின் நிறத்தைப்போன்ற பசலை நிறம். விலங்கி - குறுக்கிட்டு. (கூ எ)

பாளையில்தேன் தோடுக்கும்

கூகூ. ஊட லெனவொன்று தோன்றி யலருறூஉங்
கூட லிழந்தேன் கொடியன்னாய்—நீடெங்கின்
பாளையிற் றேன்றொடுக்கும் பாய்புன னீர்நாட்டுக்
காளையைக் கண்படையுட் பெற்று.

(கு - பு.) தலைவி தோழியிடம் சொல்லியது.

(இ - ள்.) பூங்கொடியை யொத்த தோழியே! நீண்ட தென்னையின் பாளையில் தேனீக்கள் தேன் தொடையைத் தொடுத்து வைக்கின்ற, வளம் உண்டாகும்படி நீர் பாய்கின்ற, புனல்நாடாகிய சோழ நாட்டை ஆளுகின்ற காளைப் பருவமுள்ள சோழனை யான் தூக்கத்துள் தோன்றிய கனவினுள் கிடைக்கப்பெற்றுக் கூடப்போகின்ற நேரத்தில் அதற்கு இடையூறாக ஊடலென்று சொல்லும்படியாக ஒன்று தோன்றி அளவு கடந்து விரிதலால், அவனுடன் பொருந்தக்கூடிய கூடலை இழந்துவிட்டேனே! இனி என் செய்வேன்? என்கின்றாள்.

(வி - ம்.) ஒருநங்கை நீராடச்செல்லுகின்றாள். காவிரியாறே கரைபுரண்டு ஓடுகின்றது. பக்கத்தில் உயர்ந்த தென்னைகள் வானளாவி வளம் நிறைந்து நிற்கின்றன. காவிரியாற்றின் நீர்பாய்தலினாலேதான் அவ்வளவு வளம் அத்தத் தோப்புக்கு உண்டாயிருக்கின்றது; பார்க்கின்றாள் நங்கை; தோழியைப் பார்த்துக்கேட்கின்றாள். இந்தத் தென்னைகளெல்லாம் யாருடையன? எவ்வளவு அழகாக இருக்கின்றன! என்கின்றாள். இவை யெல்லாம் நம் சோழ மன்னனுடையவைதான் என்கின்றாள் தோழி; இவ்வாறு பேசிக்கொண்டு போகும்போது, தேனீக்கள் அங்குமிங்கும் 'ஓ' வென இரைந்துகொண்டு பறக்கின்றன; அவற்றைக் காண்கின்றார்கள்; பின்னும் சிறிது தொலையில் நின்று பார்க்கும்போது ஒருவன் தென்னையின்மேல் ஏறியிருப்பதைப் பார்க்கின்றார்கள்; அவனும் இளநீரைப் பறிப்பதற்காகத் தென்னங் குலையில் கை வைக்கப் போகின்றான். அப்பொழுது இன்னும் அதிகமாகத் தேனீக்கள் இரைகின்றன. என்ன வென்று பார்க்கும்பொழுது அவன் தென்னின் இளநீர் பறிக்கப்போகின்ற குலையின் பாளையில் தேனீக்களின்

தேன்தொடை கட்டப்பட்டிருக்கின்றன; அதற்குள் அவன் கையைத் தேங்காய்க் குலைக்குப் பக்கத்தில் நீட்டிவிட்டான்; அவ்வளவுதான் தேனீக்கள் அடங்காத சீற்றங்கொண்டன; அவனை வளைத்து வளைத்துக் கொட்டித் தொலைத்துவிட்டன; அவனும் தேங்காய் பிடுங்காமல் கீழே இறங்கிச் சென்றான்; இவற்றையெல்லாம் பார்த்துவிட்டுப்போய் நீராடும் பொழுது அங்கே காவலிப்பருவமுள்ள சோழன் வருகின்றான்; அவனையும் பார்த்தனர்; உடனே தோழி தலைவியை வீட்டுக்கு அழைத்துவந்தாள்; ஆனால் தலைவி சோழனை மறக்கவேயில்லை. காதலும் காலஞ் செல்லச் செல்லக் கணக்கின்றி வளர்ந்தது; இந்த நிலையில் இரவில் தூக்கம் எங்ஙனம் வரும்? வராது; ஆதலால் தூங்காமலே இருக்கின்றாள்; பிறகு எவ்வாறோ சிறிது தூக்கம் வருகின்றது: உடனே காவலிப்பருவமுள்ள சோழனும் வந்து பற்றிக் கொண்டான்; எப்படியெல்லாமோ முயன்று கூடவேண்டுமென்று பார்த்தான்; தலைவி ஒரேயடியாக ஊடினாள்: ஊடலும் வேண்டியதுதான்; ஆனால் அதற்கு ஓர் அளவு வேண்டுமல்லவா? ஊடுதல் காமத்திற்கு இன்பந்தான்; ஆனாலும் கூடிமுயங்கினாலன்றோ அதற்குச் சிறந்த பயனுண்டு: உப்பமைந்த தன்மைபோல் ஓர் அளவில் நில்லாமல் ஊடல் அலர்ந்து விரிந்தது; தேனீக்கள் எவ்வாறு தேனைக் காத்து வைத்துக்கொண்டு இருந்தனவோ அதுபோல ஊடலும் இன்பத்தைக் காத்துவைத்துக்கொண்டுதான் இருக்கின்றது; ஆனாலும் தேனீக்கள் எவ்வாறு அவனைத் தேன் எடுக்க விடாமலும் இளநீரைப்பற்றிப் பிடுங்கிப் பருக விடாமலும் கொட்டித் தொலைத்தனவோ அதுபோல ஊடலும் தலைவனைப் பாடாகப் படுத்திற்று.

இளநீருக்கும் தேனுக்கும் முயன்றவனுடைய செயல் எவ்வாறு கைகூடாமல் தடையுற்றதோ, அதுபோலத் தலைவியைக் கூட நினைத்த சோழனுக்கும் தலைவியின் இருவகை இன்பமும் கிடையாமற் போயின; அங்கே எவ்வாறு தேனீக்கள் தடுத்தனவோ அதுபோல இங்கே ஊடல் தடுத்தது; அவன் எவ்வாறு தென்னையிலிருந்து இறங்கி ஏமாற்றத்துடனே போனானோ அதுபோல இவனும் தலைவியை விடுத்து ஏமாற்றத்துடனே போயினான்.

தேனீக்கள் அதிகமாகத் துன்புறுத்தாமல் ஓரளவாக நின்றால் அவனும் இளநீரும் தேனும் பெறுவான்; அது

போல ஊடலும் அளவுகடந்து விரியாமல் ஓர் எல்லையில் நின்றால் சோழனும் கூட்டம் பெறுவான்; ஆனால் அவன் நாட்டுத் தேனீக்களைப்போல் அல்லவா இந்த ஊடலும் இருக்கின்றது, என்று தலைவி கூறுகின்றாள்; ஊடலென ஒன்று தோன்றியலர்தலால் 'உறு உங்கூடல் இழந்தேன்' என்று விரித்துக் கொள்க;

அலர்தல் - விரிதல்; அலர் முதனிலைத் தொழிற்பெயர்; தல் விகுதி குறைந்தது; ஆல் உருபுவிரித்துக் கொள்க.

ஊடல், அலர்தலாவது, உப்பமைந்ததுபோல ஓரளவோடு நில்லாமல் அளவின்றிப் பரத்தல். தலைவி, தோழி இவர்கள் தலைவனுக்கு அடைமொழிகளாகக் கூறும் இயற்கை வளமுள்ள பொருள்களிலிருந்து உள்ளுறைபோல வேண்டியபடி விரித்து உரைத்துக்கொள்ளுதல் தமிழ்மரபு. ஆதலால் இங்ஙனம் உரைக்கலாயிற்று; இவ்வாறு கூறாவிடின் நீள் தெங்கின் பாளையில் தேன் றொடுக்கும் பாய்புனல் நீர்நாடு" என்பது வெறும் அடைமொழிகளாக நின்று இயற்கை யழகைமட்டுஞ் சிறப்பித்து நிற்கும்; இவ்வாறு குறிப்புப் பொருள் கொள்ளாமல் வாளாவிடுதல் பொருந்துமெனின் அதுவுங் கொள்க. தலைவிக்கு உள்ள ஏக்கமுந் தலைவனுக்குமேல் அதிகந்தான்; இவளுடைய ஊடல் எவ்வாறு அவனைத் துன்புறுத்திற்றோ அதுபோல அவனும் ஊடல்கொண்டு கூடாமல் போயினமை இவளைத் துன்புறுத்தியது; தென்னையில் ஏறிப் பயன்பெறாதவனுடைய தன்மை தலைவனின் ஊடலால் தலைவிக்கும் வந்தது; அதனால்தான் ஏங்கிஏங்கித் தன் குறையைத் தோழியினிடம் இயம்புகின்றாள். (௩அ)

திரிதரும் பேரும்

கoo. நாணொருபால்வாங்கநலனொருபாலுண்ணெகிழ்ப்பக்
காமருதோட் கிள்ளிக்கென் கண்கவற்ற—யாமத்
திருதலைக் கொள்ளியின் உள்ளெறும்பு போலத்
திரிதரும் பேருமென் னெஞ்சு.

(கு - பு.) சோழன் உலாவருங்கால் பார்க்கச் சென்று நாணத்தால் தடுக்கப்பட்ட தலைவி தன் னெஞ்சொடு சொல்லியது.

(இ - ள்.) நெஞ்சமே! சோழனைப் பார்க்கவேண்டுமென்று நினைத்து எனமனந் தெருவாயிற் கதவுப்பக்கத்திற்குப்போக, அப்பொழுது பின்னாலேயே மறைந்துகொண்டு தொடர்ந்துவந்த நாணம் பளீரென்று வந்து குறுக்கிட்டுத் தடுத்து வீட்டிற்குள்ளே யிழுக்கச் சோழன்மேல் வைத்திருக்கின்ற காதல் நலன் மனத்தை நெகிழச்செய்து முன்னே செல்லும்படி தூண்ட அந்தக் காதலனுடன் என் கண்ணுஞ் சேர்ந்துகொண்டு அழகிய தோள்களை உடைய கிள்ளியென்னுஞ் சோழனைப் பார்க்குப்பொருட்டு என் மனத்திற் கவலையை உண்டாக்க, இந்த இரவுப் பொழுதிலே, இருதலையிலும் நெருப்புப்பற்றப்பட்ட மூங்கிற் குழாயினுள்ளே அகப்பட்ட எறும்பு எவ்வாறு அங்குமிங்குமாக அலைந்துகொண்டிருக்குமோ அதுபோல என் மனமும் முன்னும் பின்னுமாக ஊசலாடி அலைந்துகொண்டிருக்கின்றதே, என்செய்வேன்? என்கின்றாள்.

(வி - ம்.) கிள்ளி யென்னுஞ் சோழன் உலா வரும்போது கண்ட சிலர் அவனுடைய தோள்களின் அழகைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள்; அதை ஒரு பெண் கேள்வியுற்றாள்; அதுமுதல் அவனுடன் காதலுங் கொண்டாள்; அவளுடைய கண் அந்தக் கிள்ளியின் தோள்களைப் பார்க்க வேண்டுமென்று அவளுடைய மனத்திற் கவலையை உண்டாக்கிக்கொண்டே யிருக்கும்பொழுது ஒருநாட் சோழன் உலாவரத் தொடங்கினன்; ஒவ்வொரு தெருவுக்கும் போய்ப் பின் அரண்மனைக்குப் போவதற்கு நடு இரவுப் பொழுதுவரை ஆகிவிடும்; இந்தத் தலைவி யிருக்கின்ற வீட்டுக்குப் பக்கத்தில் வருகின்றான்; பொழுதும் யாமம் ஆகப் போகின்றது; உடனே தலைவி வெளியே வந்து பார்க்க வேண்டுமென்று நினைக்கின்றாள். மனந் தெருவாசற் கதவினடிக்கு வந்தது; உடனே நாணம் வந்து மனத்தைப் பிடித்துக்கொண்டு பின்னாலேயே இழுக்கத் தொடங்கி வீட்டுக்குள் இழுத்துக்கொண்டு வரும்பொழுது, கிள்ளியின்மேல் வைத்த காதல் நலன்வந்து மனத்தை நெகிழ்வித்து முன்னே செல்லும்படி தூண்டியது; அதனுடன் அவள் கண்களும் எப்படியாவது "காமருதோட் கிள்ளியைக் காட்டு" என்று மனத்தைக் கவற்றத் தொடங்கிற்று; இந்த நிலையில் அவளுடைய மனம் முன்னும் பின்னுமாகப் போவதும் வருவது

மாக ஒருதலைப்படாமல் அலைகின்றது; அது, "இருதலைக் கொள்ளியின் உள்ளே அகப்பட்ட எறும்புபோல அலைகின்றது" என்று தலைவி நினைக்கின்றாள்.

ஒரு பக்கத்தில் நாணம் வந்து மனத்தைச் சுட்டு வைத்து வீட்டுசகுள் இழுக்கின்றது; மற்றொரு பக்கங் காதலநலன் சுட்டுவைத்து மனத்தை நெகிழ்வித்து முன்னே தூண்டுகின்றது. இதற்கிடையில் கண் எப்படியாவது கோழனைப் பார்த்துவிடவேண்டுமென்று மனத்திற் கவலையை உண்டாக்குகின்றது; இந்த நிலையில் சோழன் வீதியைக் கடந்துபோய்விட்டபின்பும அஃதாவது நடுயாமத்திலுங்கூட அவள்மனம் அவ்வாறு அலைந்துகொண்டிருக்கிறது; மன உணர்ச்சியை நெளிவு, குழைவு, சுழற்சி, வளைவு எல்லாம் அமையும்படி அழகாகச் செய்யுளில் அமைத்து ஆசிரியர் இயற்றியிருக்கின்றனர்.

நாணொருபால் வாங்க—நாணம் ஒருபக்கத்திற்கு இழுக்க;

வாங்க—இழுக்க; நலன் - காதல் நலன்; காதலை நலன் என்று குறிப்பிடுகின்றாள் தலைவி.

கண்கவற்ற—கண்மனத்தில் கவலையை உண்டாக்க: கவல் – பகுதி. "என் கண்காட்டென்று என்மனம் கவற்ற வந்தேன்;" என்று சிலப்பதிகாரத்தில் வருதல் காண்க.

> "இருதலைக் கொள்ளியி னுள்ளெறும் பொத்து நினைப் பிரிந்த
> விரிதலையேனை விடுதி கண்டாய்"
>
> என்பது திருவாசகம்.

> "இருபாடெரிகொள்ளியினுள் எறும்பே போல்
> உருகா நிற்கும் என்னுள்ளம் ஊழி முதல்வா"
>
> திருமங்கையாழ்வார் பாடற் பகுதி.

இதனைடு ஒத்த கருத்துள்ள அகநானூற்றுப் பாட்டொன்று படித்து உரைவேண்டுந் தகுதியுடையது; ஆதலால் அதன் கருத்தையும் பாடலையும் இங்கே தருகின்றனம்:

பனிக்காலம்; பனி நிலையாய்ப் பெய்துகொண்டேயிருக்கின்றது; அந்தக் காலத்தில்தான் பயற்றஞ் செடிகள்

காட்டில் காய்க்கத் தொடங்கும்; பயற்றம் பிஞ்சுகள் கொத்துக் கொத்தாக விரிகின்றன; ஒரு பொருளைப்பற்றியிருக்கின்ற விரல்கள் அதனை விடுத்துப் பின்பு பிரிகின்றபொழுது எவ்வாறு இருக்குமோ அதுபோலப் பயற்றம் பிஞ்சுகளெல்லாம் கொத்திலிருந்து சிறிது கூன் நிமிர்ந்து விளங்குகின்றன. இத்தன்மை வாய்ந்த காலத்தில் பொருள் தேடும் முயற்சிக்காகத் தலைவன் தலைவியைப் பிரிந்து தேரேறிப் போகின்றான். தேர்ப்பாகன் தேரை மிக விரைவாக நடாத்துகின்றான். அவன் பணித்தபடி குதிரைகள் தாவிப் பாய்கின்றன; தேர் விரைந்து ஓடுகின்றது. நறுமணங் கமழ்கின்ற காடு தேர் செல்லுகின்ற விரைவினாலே விறுவிறு என்று பின்னிட்டு ஓடுகின்றது; தேரோ முன்னே ஓடுகின்றது; வலிய ஆரக்கால் பொருந்திய தேர் உருளைகள் பதிந்த தடத்திற் பாய்ந்து ஓடுகின்ற தண்ணீர் விரைவாக ஓடுகின்ற பாம்பைப்போல் முடுக்கிக்கொண்டு தேரின் பின்னாலே தொடர்ந்து ஓடுகின்றது; இங்ஙனம் போகின்றபொழுது, தேரிலிருக்கின்ற தலைவன் பல எண்ணங்கள் எண்ணுகின்றான்; பொருள் தேடும் முயற்சிக்காக அவனைத் தூண்டி எழுந்த தளர்ச்சியில்லாத மனத்திலுள்ள ஆண்மை அவன் நெஞ்சைப்பற்றிப் "பொருள்தேடப் போவோம் வா" என்று முன்னே இழுக்கின்றது; ஆனால் தலைவியினிடம் வைத்திருக்கின்ற காதல் வந்து "போகாதே வா வீட்டுக்கு" என்று தடுக்கின்றது; இந்த நிலையில் அவன் மனம் பிளவுபட்டு, அவ்விடத்திற்கும் இவ்விடத்திற்குமாக ஊசலாடத் தொடங்கிற்று; ஆதலால் இருதலைக் கொள்ளியினிடை யகப்பட்ட எறும்புபோல அங்குமிங்கும், மனமும் ஆண்மையும் காதலால் போவதும் வருவதுமாக அலைகின்றன. இந்த நிலையில் நினைக்கின்றான், கூறிக்கொள்கின்றான் தலைவன்; நெஞ்சமே! நம் தலைவி எவ்வளவு விருப்பம் நம்மிடத்தில் வைத்திருக்கின்றாள்? உடம்புக்கு உயிர் எவ்வளவு பொருத்தமாக இசைந்திருக்கின்றதோ அவ்வளவு நட்பு உடையவள் அல்லவா? அவ்வுயிர் வாழ்தலைப்போன்ற காதல் உடையவளல்லவா? சாதலைப்போலப் பிரிதற்கு அரியவளல்லவா? அவளைப் பிரிந்துபோகின்றோமே! எவ்வாறு தாங்குவாள்? ஐயோ! மிகவும் வருத்தப்படுவாளே! மிகவும் இரங்கத்தகுந்தவளாக அல்லவா இருக்கின்றாள்? என்று நினைக்கின்றான். அவனுடைய

உணர்ச்சியைப் பாட்டில் நல்லிசைப் புலவர் நவின்ற முறை யாவது,

" வீங்குவிசைப் பணித்த வீரைபரி நெடுந்தேர்
நோன்கழிச் சுமந்த ஆழியாழ் மருங்கிற்
பாம்பென படுகுநீர் ஓடக் கூம்பிப்
பற்றுவிடு விரவிற் பயறுகாய் ஊற்ப
அற்சிரம் நின்றன்ரும் பொழுதே முற்பட
ஆள்வீங்கக் கெழுந்த அசைவி னுள்ளத்து
ஆண்மை வாங்கக் காமந் தட்பக்
கவைபடு நெஞ்சங் கட்க ணைகய
இருதலைக் கொள்ளி யிடைநின்று வருந்தி
ஒருதலைப் படாஅ உறவி போன்றன
தோங்கோல் அளியள் தானே யாக்கைக்கு
உயிரியைந் தன்ன நட்பின் அவ்வயிர்
வாழ்ந லன்ன காதல்
சாத லன்ன பிரிவரி யோளே."

என்பதாகும்.

இதனை " நரைமுடி நெட்டையார் " என்ற புலவர் பாடியிருக்கின்றார். தலைவனுடைய மனம் படுகின்ற தடு மாற்றத்தை இப்பாட்டிலேயே பார்க்கலாம். இதில் " ஆண் மைவாங்க " என்பதையும் " நாணெருபால் வாங்க " என்ப தையும் ஒப்பிட்டு உணர்க; 'காமந்தட்ப' என்பதையும் " நல னெருபால் உள் நெகிழ்ப்ப " என்பதையும் ஒப்பிடுக; " காமந்தட்ப " என்பதைத்தான் தலைவி வாயிலாகக்கூறும் போது மாற்றி " நலனெருபால் உண்ணெகிழ்ப்ப " என்று அமைத்ததுபோல் தோன்றுகின்றது; உவமையின் ஒப்புமை யும் நோக்குக. " பாடலைப் பலமுறை படித்து அதன் இனி மையையும் உணர்ச்சியையும் உணர்க ". (நகை)

மரக்கண்ணே ?

கoக. வரக்கண்டு நாணுதே வல்லையா னெஞ்சே
மரக்கண்ணே மண்ணுள்வார் கண்ணென்—நீரக்
கண்டாய்
வானுழுவை வெல்கொடியான் வண்புனல்நீர்
நாளுழுவந் தோன்றத் தொழுது. [நாடற்கென்

(கு - பு.) சோழன்பாற் காதல்கொண்ட நங்கை தன் மனத்தை அவனிடந் தூதாக விடுதல்.

(இ - ள்.) நெஞ்சமே! நீ மிகவும் வலியை; அதனை நான் நன்கு அறிவேன்; ஆயினும், அந்தச் சோழன் உன்னிடத்தில் நெருங்கி வரும்போது கண்டு நாணுதே; ஒளி பொருந்திய புலிவடிவு எழுதப்பட்ட வெற்றிக்கொடியையுடையவனும், வளப்பமான காவிரிப்புனல் பாய்கின்ற நீர் நாட்டு மன்னனுமாகிய சோழனுக்கு என்னுடைய தோட் பரப்பின் நிலைமை முழுவதும் நன்றாக விளங்கும்படியாகச் சொல்லி, அவனை வணங்கி, இத்தன்மையான பெண்ணுக்கு இரங்கி யருள்புரிய வேண்டாமா? இந்த மண்ணை ஆளுகின்ற மன்னருடைய கண்கள் என்ன மரக்கண்ணை? கண் ணோட்டம் சிறிதும் இல்லையா? என்று சொல்லி இரந்து கேட்டுக்கொள்ளவேண்டும்; என்கின்றாள்.

(வி - ம்.) சோழன் உலாவருங்கால், அவனை ஒரு பெண் பார்க்கின்றாள்; அவனுடைய கொடியையும் நோக்குகின்றாள்; அழகாகப புலி வரையப்பட்டிருக்கின்றது; அந்த ஓவியக்கூடச் சிறிதுங் குறையவில்லை; அப்படியே பார்த்துத் தன் மனத்திலும் அமைத்துக்கொண்டாள்; அந்தக்கொடி வெற்றிக்கொடி; இனிமேலும் பகைவரை வெல்லுங் கொடிதான்; என்றெல்லாம் நினைக்கின்றாள்; இப்படியாகச் சோழன்பால் வைத்த காதலால் அவனையே நினைத்துக் கொண்டிருந்து மெலிந்தனள்; அவளுடைய தோட்பரப்பு மார்பின் பரப்பு, இங்கெல்லாம் மெலிவும் பசலையும் மிக்கன; பார்க்கின்றாள்: ஆ! நம் தோட்பரப்பு முன்பு எவ்வளவு அழகாக இருந்தது! இப்பொழுது எப்படியாயிற்று! என்று மெலிவு குறித்து வருந்துகின்றாள்; பின்பு தன் மனத்தைத் தூதாக வளவனிடம் விடுக்கவேண்டுமென்று நினைக்கின்றாள்; மனமே! என்று விளித்து அதைச் சிறிது புகழத் தொடங்கி: "வல்லை" என்கின்றாள்; அவ்வாறு புகழ்ந்து கூறிப் பின்பு அவ்வளவு வல்லமை யுடையையாக இருந்தாலும் வளவன் வந்தவுடனே நாணும்படியாக வந்தாலும் வந்துவிடும்; அவ்வாறு நாணிவிடாதே; நாணினால், ஒன்றுமே சொல்ல முடியாது; நன்றாகக் கலங்காமல் நின்று கொண்டு "என்ன செய்தி? அரசர்களுக்குக் கண் மரக் கண்ணை? இரக்கம் என்பது வேண்டாமா? என்று

சொல்லி இரந்து கேள்; தொழுது கேள்; என்தோள், மார்பு, இவையெலலாம் முன்பு இருந்த நிலையையும் இப்பொழு திருக்கும் நிலையையும் சொல்; அவனுக்கு நன்ருக விளங்கும்படி சொல்; என்கின்ருள்.

'வல்லே' 'நாணுதே' 'மரக்கண்ணே மண்ணுள்வார் கண் என்று இர' என்பவற்றில் பெருமிதச் சுவை கலந்து விளங்கு கின்றது; "தோள் அழுவந் தோன்றத் தொழுது இர" என்பதில் தலைவியின் காதல் மெலிவும், பரிவும், இரக்கமும் விளங்குகின்றது; 'வல்லேயால்' என்பதில் ஆல் அசை. "நெஞ்சே! வல்லே; நாணுதே; தொழுது இர" என்று கூட்டிக்கொள்க.

'இரக்கண்டாய்' என்பதில் 'கண்டாய்' என்பது முன் னிலே அசை. வாள் - ஒளி. உழுவை - புலி. வெல்கொடி - வீரத் தொகை.

'மண்ணே டியைந்த மரத்தனேயர், கண்ணே டியைந்து கண் ணேடா தவர்' என்னும் திருக்குறளின் உரையில் "மரக் கண்ணே மண்ணுள்வார் கண்ணென்றிரக் கண்டாய்" என்ற பகுதியைப் பரிமேலழகர் எடுத்துக் காட்டியிருக்கின் றனர். (சு0)

அளியிடை அற்றம்

கo2. பேயோ பெருந்தண் பனிவாடாய்! பெண்பிறந்தா
ரேயோ உனக்கிங் கிறைக்குடிகள்-நீயோ
களிபடுமால் யானைக் கடுமான்றேர்க் கிள்ளி
அளியிடை அற்றம்பார்ப் பாய்.

(கு - பு.) சோழனிடங் காதல் கொண்டு நைந்துருகிய தங்கை வாடைக் காற்றினிடஞ் சொல்லியது.

(இ - ள்.) படீரென்று பின்வாயிற் கதவைத் திறந்து கொண்டு வந்து பனிவாடை மோதுகின்றது; வேறு உலகில் இயங்கிக்கொண்டு இருந்த தலைவியின் மனம் திடுக்கிட்டுக் கலங்கி, "இது என்ன? கதவு படீரென்று திறக்கப்படுகின் றதே! பேய்தான் வந்துற்றதோ? என்று நினைக்கின்ருள்; பின்பு வாடைக்காற்று வந்து மோதுகின்றது என்று தெரிந்து

கொண்டாள்; அதற்கு அப்பால் நினைக்கின்றாள்: "இந்த வாடைக்கு இவ்வளவு வலிமை ஏது?" அரசன் ஆணைபடி வந்து இறைப் பொருள் கேட்பவரைப் போல முழக்கஞ் செய்கின்றதே" என்று நினைக்கின்றாள்; "ஆமாம்; இப் பொழுது புரிகின்றது. செய்தி. கிள்ளியை நாம் பார்த்தோ மல்லவா? அதற்கு நம் உயிரையே திறைப்பொருளாக வாங் கிக்கொண்டு வரும்படி இந்த வாடையை ஏவினன் போலும்;" என்று நினைத்து உடனே வாடையை நட்பாக் கிக்கொண்டு சொல்லுகின்றாள்; "பெருந்தண் பனி வாடாய்! பெண்ணைக் பிறந்தவர்கள்தாமா உனக்கு இறை யிறுக்க வேண்டிய குடிகள்? ஆனாலும் கொல்கின்றேன் கேள்; கிள்ளி வருவான்; எனக்கு அருள் செய்வான்; அவனிடம் பேசிக்கொள்கின்றேன்; என்னை நலியாதே! போ;" என்கின்றாள்; வாடை அதனைப் பொருட்படுத்தாது பின்னும் வந்து மோதுகின்றது; சொல்கின்றாள் தலைவி;" "செருக்கு வளர்கின்ற மதயானைப் படைகளையும், விரைந்து தாவிப் பாயும் குதிரை பூட்டப்பெற்ற தேர்ப் படைகளையும் உடைய சோழன் வந்து எனக்கு அருள் செய்வதற்கு இடையிலே நீயே என்னைக் கொல்ல வேண்டுமென்று சோர்வு பார்க்கின் றாயா? இது தகாது பனி வாடாய்! என்கின்றாள்.

(வி-ம்.) விரைந்து செல்லும் தன்மையுள்ள குதிரைகள் பூட்டப பெற்ற தேரில் ஏறிச் சோழன் வீதி வழி உலாவரு கின்றான்; யானைகளும் சூழ்ந்து வருகின்றன; பார்க்கின் றாள் ஒரு பெண்; அது முதல் அவனிடங் காதல் கொண்டு மயங்குவாளாயினள்; தூக்கமும் வர வில்லை; வீட்டின் பின் பக்கத்துக் கட்டுக்குள்ளே யிருந்து பற்பல எண்ணங்களை எண்ணுகின்றாள்; அவள் மனம் வேறு உலகில் இயங்கிக் கொண்டு இருக்கின்றது; பின் வாயிற் கதவு நன்றாகப் பொருத்தி அடைக்கப்படவில்லை; வாடைக் காற்று வந்து மோதிப் படீரென்று கதவைத் திறந்தது; திடீரென்று தலைவி கலக்கமுற்றுப் பேயோ வேறெதுவோ வந்து கத வைத் தள்ளுகிறது என்று நினைத்துப் பின்பு தெளிந்து வாடை என்று அறிகின்றாள்; "பெருந்தண் பனிவாடாய்! நீயா! வா; என்னை ஏன் இவ்வாறு துன்புறுத்துகின்றாய்? அரசன் ஏவினனோ? ஏவினாலுந்தானென்ன? வரிப்பொருள் கொடுக்க வேண்டிய குடிகள் பெண்கள்தாமா? நீ போ;

எல்லாம் அரசனிடம் சொல்லிக்கொள்கின்றேன் ;'' என்கின்றாள் ; பழைய நிலையிலிருந்து காற்று ஓயவில்லை ; பின்னருங் கூறுகின்றாள் ; சோழன் வந்து எனக்கு அருள் புரிவதற்கு முன்பு என்னை இந்தச் சோர்வு நேரத்தில் நீயே கொன்றுவிடலாமென்று பார்க்கின்றாயா ? என்கின்றாள். வாடையினிடமும் பேசும்படியாகத் தலைவி மயங்கியிருக்கின்றாள்.

அளி - அருள். அளியிடை - (அவன் வந்து கூடி) அருள் புரிவதற்கு இடையில். அற்றம் - சோர்ந்திருக்குங் காலம். களிபடுமால் யானை - செருக்கு வளர்கின்ற மதயானை. கடுமான் தேர் - விரைந்து செல்லுங் குதிரைகள் பூட்டப்பட்ட தேர். கிள்ளி - சோழன். (சக)

தாமரையும் நீலமும்

கo௩. நாம நெடுவேல் நலங்கிள்ளி சோணாட்டுத்
தாமரையும் நீலமுந் தைவந்—தியாமத்து
வண்டொன்று வந்தது வாரல் பனிவாடாய்
பண்டன்று பட்டினங் காப்பு.

(கு - பு.) சோழனிடம் காதல் கொண்ட நங்கை பனிவாடையை அச்சுறுத்தி வராதே ஓடிப்போ என்று கூறுதல்.

(இ - ள்.) ஏ பனி வாடாய்! முன்பு இந்தப் பட்டினம் காவலின்றி யிருந்தது ; இப்பொழுது காவலுடையதாக இருக்கின்றது ; ஆதலால் நீ இங்கே வராதே ; ஓடிப்போ ; வந்தால் நலங்கிள்ளி உன்னை அழித்திடுவன் ; கையில் அஞ்சத்தக்க நீண்ட வேல் வைத்திருக்கின்றான் ; தெரியுமா ? இந்த யாமப் பொழுதிலேதான் அவன் தூதாக விட்ட வண்டு வந்தது ; பகலிலேயே தூது விட்டிருப்பான். ஆனால் அந்த வண்டு அவன் நாட்டிலுள்ள தாமரை, குவளை இப்பூக்களைத் தைவருதலிலேயே பொழுதைப் போக்கிவிட்டது ; அதனாலேதான் இப்பொழுது வந்திருக்கின்றது ; அந்த வண்டு வந்தது நலங்கிள்ளி வருவதற்கு அறிகுறி என்பதைத் தெரிந்து கொள் ; ஓடு ; நில்லாதே ; என்கின்றாள்.

(வி-ம்.) நலங்கிள்ளி அரசாளுகின்றான் ; அப்பொழுது கடற்கரைப் பட்டினத்திலிருந்து ஒரு நங்கை சோழன்

இருந்து அரசாளும் தலைநகரத்துக்குப் போகின்றாள்; போகின்ற வழியில் தாமரை மலர்கள் அழகாக மலர்ந்திருக்கின்றன; வண்டுகள், அந்த மலரில் தேன் பருகிக்கொண்டிருக்கின்றன; அவற்றையெல்லாம் பார்த்துவிட்டுப் பின்பு சோழனுடைய தலைநகருக்குப் போகின்றாள்; அங்கே சோழன் வீதிவழி உலா வருகின்றான்; கையில் அச்சந்தரும் நீண்ட வேல் வைத்திருக்கின்றான்; பார்க்கின்றாள்; உடனே காதலுங் கைப் பொருளாகக் கிடைத்தது; அது வளரவுந் தொடங்கிற்று; பட்டினத்துக்குத் திரும்பிப் போகின்றாள்; மாலைக் காலம்; எல்லா நீர்த் தடாகத்திலும் குவளை மலர்கள் மலர்ந்திருக்கின்றன; வண்டுகள் மொய்க்கின்றன; இவற்றையெல்லாம் பார்த்துவிட்டு வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தாள்: இந்த மூவகைக் காட்சியும் மனத்திலிருந்து நீங்கவேயில்லை; இப்படிச் சில நாட்கள் கழிகின்றன: அரசனும் ஏதோ ஒரு செயலின்பொருட்டு அந்தப் பட்டினத்துக்கு வந்துவிட்டுப் போகின்றான்; அதையுங் கேள்விப்படுகின்றாள், தலைவி; ஓ; நம் பட்டினத்தையும் இவன்தானு ஆள்கின்றான்? நல்லது; இனிமேல் நமக்கு அச்சமில்லை; நேற்று வந்து துன்புறுத்தின வாடை இன்றைக்கு வராது; சோழனுடைய காவலுக்கு அஞ்சத்தானே செய்யும் என்று நினைக்கின்றாள்; பொழுதும் இருட்டிற்று; நடு யாமமும் வந்தது; தூக்கமும் இன்றியிருக்கும்போது, ஒரு வண்டு வந்து வீட்டுக்குள் நுழைந்து பறக்கின்றது; நோக்குகின்றாள்: ஓ! 'இப்பொழுதுதான் சோழன் தூது விட்ட வண்டு வந்திருக்கின்றது என்று நினைத்து, 'ஏ வண்டே! என்ன செய்தி' என்கின்றாள்; அதுவும் 'பூம் பூம்' என்று இரைகின்றது; இப்பொழுது வருவான் என்றுதான் சொல்கின்றாயா? நல்லது' என்று பாராட்டிக்கொண்டிருக்கின்றாள்; வண்டும் போயிற்று; வந்தது பனிவாடை; மோதி மோதி எலும்பைத் துளைக்கின்றது; பனியாகிய நஞ்சை உடம்புக்கு உள்ளே ஏற்றுகின்றது; தாங்க முடிய வில்லை தலைவிக்கு; பார்க்கின்றாள்: "இப்பொழுது சோழன் வருவான்; அஞ்சும்படியான நீண்ட, நல்ல வேல் வைத்திருப்பான்; ஏ பனிவாடாய்! வராதே, முன்போல் நினையாதே; இப்பொழுது இப்பட்டினம் அவன் காவலில் அடங்கியிருக்கின்றது; அவன் வருவதற்கு அறிகுறியாக இப்பொழுதுதான் அவனால் விடுக்கப்பட்ட வண்டும் வந்துவிட்டுப் போகின்றது" என்று சொல்கின்றாள்; பகலே

விடுக்கப்பட்ட வண்டு தாமரையையும், நீலத்தையும் தை வந்து நடு யாமப் பொழுதிலேதான் இங்கே வந்து சேர்ந்தது; அதுபோலப் பகலே புறப்பட்ட கிள்ளி தாமரை போன்ற தன் உரிமை மகளிரையும், குவளை போன்ற பிறரையும் தை வந்து ஏமாற்றிவிட்டு யாமத்திற்குப் பின்பு இங்கே வருவான் என்பது தலைவியின் உட் குறிப்பு.

தலைவியின் மயக்கமுங் காதல் உணர்ச்சியும், அவள் கண்ட காட்சியும் பாட்டில் அமைந்திருக்கின்றன.

"நெய்க் குடத்தைப்பற்றி ஏறும் எறும்புகள்போல் நிரந்தெங்கும்
கைக் கொண்டு நிற்கின்ற நோய்காள்! காலம் பெற உய்யப் போமின்
மெய்க் கொண்டு வந்து புகுந்து வேதப் பிரானுர் கிடந்தார்
பைக் கொண்ட பாம்பணை யோடும் பண்டன்று பட்டினங் காப்பே."

என்பது பெரியாழ்வார் திருமொழி

'பண்டன்று பட்டினங் காப்பு' என்பதைப் பிறிது மொழித லணியாகக் கொண்டு, தலைவனுடைய அருள் பெற்றதை நாணத்துடன் மறைத்து உரைத்ததாகவுங் கொள்க. இது ஒரு பழமொழித் தொடர்.

நாமம்-அச்சம்; தை வந்து-மெல்ல மெல்லத் தடவி. (சுஉ)

புனல் நாடன் பேரே வரும்

கoச. * பொன்னுர மார்பிற் புனைகழற்காற் கிள்ளிபேர்
உன்னேனென் றூழுலக்கை பற்றினேற்—கென்னே
மனனெடு வாயெல்லாம் மல்குநீர்க் கோழிப்
புனனுடன் பேரே வரும்.

(கு - பு.) கிள்ளியின்பால் வேட்கை கொண்ட நங்கை உலக்கை ஓச்சும்போது தன் உள்ளமும் உரையுந் தன்வயமில்லாமையை நினைந்து நெஞ்சொடு கூறியது.

(இ - ள்.) பொன்னுற் செய்த ஆரத்தை அணிந்திருக்கின்ற மார்பினையும், வீரக்கழல் அணிந்திருக்கின்ற கால்களையும் உடைய கிள்ளி என்னுஞ் சோழ மன்னனது பெயரை (தனியே உலக்கை ஓச்சும்போது பாடிப் புகழ் வேன்; ஆனல்) மற்றொரு பெண்ணெடு எதிர்த்து நின்று

* மு. தொ. என்று கருதத்தக்கது.

மாற்றுலக்கை ஒச்சும்போது நீங்கக்கவும் மாட்டேன் என்று கருதிக்கொண்டு மாற்றுலக்கையைப் பற்றின எனக்கு, என்ன மாயமாக இருக்கின்றது? மனமும் நீங்கத்துவிட்டது; அதனுடன் கூடிக்கொண்டு வாயும் சொல்லத் தொடங்குகின்றது; நீர்வளம் பொருந்திய உறையூரில் வாழ்பவனும், நீர் நாடனுமாகிய அவனுடைய பெயரே வாயில் வருகின்றது; எவ்வாறு அடக்குவது? என்கின்றாள்.

(வி-ம்.) உறையூரில் கிள்ளியிருந்து அரசாளுகின்றான்; புனல் நாடு முழுதும் அவனது ஆட்சிக்குள்ளே அடங்கியிருக்கின்றது; அக்காலத்தில் ஒரு நங்கை நீராடச் செல்கின்றாள்; காவிரியாற்றில் நீர்மல்கிக் கரைபுரண்டு ஓடுகின்றது; நீராடிவிட்டு வருகின்றாள்; சோழன் ஊர்தியின்மேல் இருக்கின்றான்; அவன் மார்பில் பொன்னரங் கிடந்து மின்னுகின்றது; காலில் வீரக் கழல் அணிந்திருக்கின்றான்; பார்த்துக் கலங்கி உள்ளத்தையும் பறிகொடுத்தாள்; வீட்டுக்கு வருகின்றாள்; அது முதல் அவன் வயப்பட்ட மனம் உடையவளாயினள்; பின்பு அவள் வாயும் அவனைப்பற்றிப் பாட வேண்டுமென்று தொடங்கியது; அன்று முதல் தனியே உலக்கை ஒச்சும்போது சோழனைப்பற்றிப் பாடுவாளாயினள்; சில நாட்கள் கழிந்தன; மற்றொரு பெண்ணொடு மாற்றுலக்கை பிடிக்க நேர்ந்தது; அவள் ஒரு குற்றுக் குற்றின், உடனே இவள் குற்ற வேண்டும்; பின் அவள் குற்றுவாள்; இது முறை; இதுதான் ஊழுலக்கை எனப்படும்; இவ்வாறு குற்றும்போது சோழனைப்பற்றிப் பாடினால் நம் மனச் சிறையிற் கரந்து நிற்குங் காதல் அவளுக்குத் தெரிந்துவிடும்; ஆதலால் நீங்கக்கவும் மாட்டேன் என்று உறுதி செய்துகொண்டுபோய் உலக்கையைப் பிடிக்கின்றாள்; உள்ளமும் உரையும் அவள் வசத்தில் இல்லை; மனம் நீங்கின்றது; வாய் சொல்லப்போகின்றது; வாய்க்குள் வந்து வெளியே சொல் புறப்படப்போகின்ற நேரத்தில் பளீரென்று உணர்ந்துகொண்டாள்; இது என்னே! அவன் பெயரே வருகின்றது வாயில்; மனமும் வாயும் சேர்ந்து கொண்டன; "மனமொடு வாயெல்லாம் மல்குநீர்க் கோழிப் புனலுடன் பேரே வரும்." என்று ஏங்குகின்றாள்.

உள்ளம், உரை, செயல் என்ற மூன்றனுள் உள்ளமும் உரையுந் தன் வயமில்லை; செயலுக்கு வாய்ப்பில்லை; இந்

நிலையிற் கலங்குகின்றாள்; அவளுடைய மனநிலையைப் பாடல் நன்கு உணர்த்துகின்றது.

"பொன்னார மார்பிற் புனைகழற் காற் கிள்ளி" என்பது தலைமகள் கண்டு உள்ளத்தில் எழுதிக்கொண்ட ஓவியம்.

கோழி - உறையூர். கோழி தான் தோன்றிய நிலத்து மண்வாய்ப்பினாற் பெற்ற வலிமையால் யானையை எதிர்த்துத் தாக்கித் தோல்வியுறச் செய்ததனாற் பெற்ற பெயரென்பர். "மல்கு நீர்க்கோழி" என்பது தலைவி நீராடச் சென்று கண்ட வளன். (சஙூ)

தேர்வளவனாதல் தெளிந்தேன்

கo௫. * அடிநோக்கின் ஆழ்கடல் வண்ணன் அவன்றன்
படிநோக்கிற் பைங்கொன்றைத் தாரான்—
முடிநோக்கித்
தேர்வளவ னாகத் தெளிந்தேன்றன்
சென்னியின்மேல்
ஆரலங்கல் தோன்றியது கண்டு.

(கு - பு.) சோழன் உலாக்காட்சி கண்ட களிப்புடைய தலைவி அவனைத் தான் தெளிந்தமை தோழியினிடங் கூறல்.

(இ - ள்.) தோழி ! வளவன் பெரிய யானையின் மேல் ஏறி உலாவந்தான்; முதலில் அவனுடைய அடியைத் தான் பார்த்தேன்; செந்தாமரை மலர்போல இலங்கிற்று; உடனே அவனை ஆழ்ந்த கடல்வண்ணனாகிய திருமால் என்றே நினைத்தேன்; பின்பு அரிதில் முயன்று, காலையே நோக்கிக்கொண்டிருந்த கண்ணை விடுவித்து அவனுடைய மேனியை நோக்கினேன்; நோக்கும்பொழுது பசிய கொன்றை மலர் சூடிய பொன்னார் மேனியனாகிய இறைவனைப் போல - ஏன், இறைவனாகவே காணப்பட்டான்; பின்பு முடியை நோக்கினேன்; அதில் ஆத்திமாலை தோன்றிற்று; அதனைப் பார்த்த பின்பு தேர்ப்படையை யுடைய சோழன் என்று தெரிந்துகொண்டேன் என்று, தலைவி தான் தலைநாளிற் கண்ட காட்சியின் மருட்கையை உயிர்த் தோழியினிடம் கூறுகின்றாள்.

---

* மு. தொ. என்று கருதத்தக்கது.

(வி - ம்.) சோழன் வீதி வழி உலாவருகின்றான்; பார்க்கின்றாள் நங்கை. 'தோள் கண்டார் தோளே கண்டார்' என்பதுபோல இவள் அவனுடைய தாள் கண்டாள்; அதனையே கண்ணைடு தொடுத்து நோக்கினாள்; மேனியைப் பார்க்கவில்லை; அப்பொழுது செந்தாமரை யடியுடைய திருமால் என்று நினைத்தாள்; பின்பு ஒருவகையில் கண்ணைத் தன் வயப்படுத்தி மேனியைக் காண விடுகின்றாள்; பொன்னிறமாகத் தோன்றுகிறது; கொன்றைத் தாரணிந்த சிவபெருமானை நினைப்பாளாயினள்; பின்பு திருமுடியின்மேல் கொன்றை நறுங் கண்ணி இருக்கின்றதா? என்று பார்த்தாள்; அங்கே ஆத்திப் பூமாலை காணப்பட்டது; உடனே, ஆ! சோழனல்லவா? என்று தெளிந்துகொண்டாள். முதலில் மருண்டு பின்பு தெளிந்த முறையை இனிமையாக மொழிகின்றாள்.

தலைவி கண்ட காட்சியினுண்டாகிய வியப்புப் பாடலில் அமைந்து இலங்குகின்றது.

ஆரலங்கல் - (ஆர் - ஆத்தி, அலங்கல் - மாலை.) ஆத்திப் பூமாலை. 'வண்ணன்றன் மேனிப்படி நோக்கின்' 'தேர்வள வனுதல்' என்ற பாட வேற்றுமைகளும் உள.

யானையின்மேல் உலா வருங்கால் அடி முதலியன நோக்குதற்கு வாய்ப்புடையன ஆம்; "தேர் வளவனுதல்" என்றமையால் நேரில் உலா வந்தான் எனலும் ஆம். (சசி)

கோழி உடையான்

கூசு. *சுற்றுவிற் காமனுஞ் சோழர் பெருமானுங்
கொற்றப்போர்க் கிள்ளியுங் கேழொவ்வார் -
பொற்றொடியே
ஆழி யுடையான் மகன்மாயன் செய்யனே
கோழி உடையான் மகன்.

(கு - பு.) தலைவி தோழியினிடம், 'நம் இளவரசனை மலர்வேள் போன்ற அழகன் என்கின்றனர்.' ஆனால், மலர்வேள் கரியன்; நம் மன்னன் மகன் செய்யன்காண் என்கின்றாள்.

---

* மு. தொ. என்று கருதத்தக்கது.

(இ-ள்.) பொன் வகையல்கள் அணிந்த தோழியே! கட்டமைந்த கரும்பு வில்லையுடைய காமனுஞ் சோழர் குலத்துப் பெருமானுகிய வெற்றி பொருந்திய போர்த் தொழில் வல்ல கிள்ளியும் அழகால் ஒத்தவர் என்பார் உளராயினும், நிறத்தால் ஒவ்வார்காண்; சக்கரப் படையுடைய திருமால் மகன் கரியன்; நம் உறையூருடைய மன்னன் மகன் சிவப்பு நிறமுடையவன்காண்; என்கின்றுள்.

(வி-ம்.) இளவரசன் வீதிவழியாகப் பெரிய முழக்கத்துடனே செல்கின்றுன்; பார்க்கின்றூர்கள்; மலர்வேள் போன்று அழகாக இருக்கின்றுன் என்று பேசுகின்றூர்கள்; இதைக் கேட்ட ஒரு நங்கை தன் தோழியைப் பார்த்துக் கூறுகின்றுள்; எவ்வளவு அழகாக இருந்தாலும் திருமால் மகன் கரியன்தானே; நம் மன்னன் மகன் சிவப்பு நிறம் உடையவன்காண்; ஆதலால் அவ்வாறு சொல்வது எவ்வாறு பொருந்தும். நிறத்தால் ஒவ்வார் காண், என்கின்றுள்.

சுற்றுவில் - கட்டமைந்த கரும்புவில், ஆழியுடையான் - சக்கரப் படையுடைய திருமால். கோழியுடையான் - உறையூருடையானுகிய சோழன்; மாயன் - கரியன். (சு)

மீதெழுந்த பூந்துகள்

கoஎ. *கல்லுயர்தோட் கிள்ளி பரிதொழுது கண்பனிசோர்
மெல்லியலார் தோழியர்மூன் வேருென்று —
சொல்லுவரால்
பொங்கும் படைபரப்ப மீதெழுந்த பூந்துகள்சேர்ந்
தெங்கண் கலுழ்ந்தனவால் என்று.

(கு - பு.) சோழன் குதிரைமேல் ஏறி உலாவருங்கால் கண்டு காதல் கொண்டு கண்பனி சோரும் நங்கையர் அதனைத் தோழியரிடம் மறைத்து மொழியும் இயல்பை அறிந்தோர் கூறுதல்.

(இ - ள்.) "நங்காய்! இது கேட்டியோ! மலைபோன்ற உயர்ந்த தோள்களுடைய சோழன் உலாவருங்கால், அவனுடைய பரியைக் கண்டு தொழுது, காதலாற் கண்ணீர் சோரும் மெல்லியல் நங்கையர், தம் தோழியரிடம், சினங் கொண்டு பொங்குகின்ற சேனை பரந்து வருதலால் மேலே பரவி

* மு. தொ. என்று கருதத்தக்கது.

எழுந்த பொலிவினையுடைய துகள் (தூசி) கண்ணினுள்ளே புகுதலால் எம் கண்கள் நீர் சொரிந்தன என்று, நிகழ்ந்ததை மறைத்து வேறு ஒன்றை இயம்புகின்றனர்;" என்று அதனை உணர்ந்த நங்கை மற்றொரு நங்கையினிடம் கூறுகின்றாள்.

(வி - ம்.) கிள்ளி குதிரையின்மேல் ஏறி உலாவருகின்றான்; பார்க்கின்றனர், மெல்லியல் நங்கையர்; குதிரையும் மெல்ல மெல்லச் செல்கின்றது; இத்தகைய பேரழகனைத் தாங்க ஏ குதிரையே! என்ன தவம் செய்தனை? என்று தொழுகின்றார்கள்; கிள்ளியின்மேல் உள்ள காதலால் அவன் குதிரையுங்கூட வணக்கத்திற்கு உரித்தாகின்றது; அந்தக் குதிரை காலால் மிதித்து உழக்கிய புழுதிகூட அவளுக்கு நறுமண முள்ள வாசனைச் சுண்ணத்திற்கு மேலான இன்பத்தை விளைவிக்கும் இயல்புடையதாக இருக்கின்றது. அந்தக் காதல் முதிர்ச்சியால் கண்ணில் நீர்த்துளிகள் துளிக்கின்றன; தோழி பார்த்துவிட்டால் என் செய்வது? நாணம் வந்து தாக்குகின்றது; ஏடி! தோழி! இந்தப் படைகள் பரவி வருவதால் எழுந்த புழுதி கண்ணினுள் படிந்துவிட்டது; ஆதலால் கண நீர்த்துளிகளைச் சொரிகின்றன; என்று மறைத்துக் கூறுகின்றாள்.

கல்லுயர் தோள் - மலை போல உயர்ந்த தோள்கள். இப்பாடல் இலேச அணி. (சசு)

சேரன்

புகழ்

வையகம் வென்றது

கo அ. வானிற்கு வையகம் வென்றது வானத்து
மீனிற் கனையார் மறமன்னர் — வானத்து
மீன்சேர் மதியனையான் விண்ணுயர் கொல்லியர்
கோன்சேரன் கோதையென் பான்.

(கு - பு.) சேரன் பண்பும், படைப் பெருக்கமும், நாட்டின் அகற்சியும் செப்பல்.

(இ - ள்.) விண்ணுலகத்திற்கு மண்ணுலகம் ஒப்பாகியது ; சேரனைச் சேர்ந்த மறமன்னர் விண்மீன்களுக்கு ஒப்பாயினர் ; விண்ணினை நோக்கி உயர்ந்த கொல்லிமலையில் வாழ்பவருக்கு மன்னனும் கோதை யென்னும் பெயரினையுடையவனுமாகிய சேரன் என்பான் விண்மீன்களாற் சூழப்பட்ட மதியினை ஒத்தனன் எ - று.

(வி - ம்.) ' கோதை அரசாளுங் காலத்தில், அவன் ஆளும் நிலப்பரப்பின் அகற்சி, அவனுக்கு அடங்கிய சிற்றரசர் தொகை, அவனுடைய இயல்பு இவற்றிற்கு ஓர் அளவு தருகின்றார் புலவர் ; ஒருவன், " புலவர் பெருமானே ! கோதையினுடைய ஆட்சியின் நிலப் பரப்பு எவ்வளவு ?" என்கின்றான். புலவர் கூறுகின்றார் :—நண்ப ! இதோ பார் வானத்தை. இந்த வானப் பரப்பின் அளவு அகற்சியுடையது அவன் நிலப் பரப்பு. நல்லது பெரியீர் ! அவனுக்கு அடங்கிய சிற்றரசர் எத்தனையர் ? எளிதாக விளக்குகின்றார் புலவர் ;

அதோ வான வெளியில் மின்னுகின்ற விண்மீன்களைப் பார்த்தனையா ? அத்தனையர் இருக்கின்றனர் சிற்றரசர்.

மிக நன்று வள்ளால் ! அவன் எத்தகையன் ? புலவர் :—வேறு கூறுவானேன் ? அவன் வண்மதியை ஒத்தவன் என்று சொல்லிவிட்டார். நன்று ; பெரியீர் ! எல்லாம் வானத்தைக் காட்டியே விளக்கினீர்களே ! இஃது என்னே !

ஆமாம் நண்ப ! அதோ பார் ; அவன் ஆளுங் கொல்லிமலைகூட விண்ணைக் குத்திக்கொண்டுதானே இருக்கின்றது ; அவனும் வானவன் தானே ; வானவனை நினைக்கும்போது வானிலுள்ள பொருள்கள்தாமே உவமையாக ஓடிவரும் என்கின்றார் ;

கோதையின் சிறப்பு நன்றாக விளங்கும்படி இயற்றியிருக்கின்ற இப்பாடல் உவமை நயத்தால் சிறப்பெய்தி இலங்குகின்றது ;

வென்றது - ஒத்தது ; இஃது உவமை உருபு ; அனையார் - ஒப்பாயினர். (க)

பெரும் புலவுஞ் செஞ்சாந்தும்

கoகூ. அருப்பவிழ்தார்க் கோதை யரசெறிந்த வெள்வேல்
பெரும்புலவுஞ் செஞ்சாந்தும் நாறிச்—சுரும்பொடு
வண்டாடும் பக்கமு முண்டு குறுநரி
கொண்டாடும் பக்கமு முண்டு.

(கு - பு.) கோதையின் வேல்விழாக் கூறல்

(இ - ள்.) அரும்பு விரிந்த பூமாலை யணிந்த கோதை யென்னும் சேரமன்னன், பகை யரசர்மேல் வீசி எறிந்த ஒளியுடைய வேலில், மிக்க புலால் நாற்றமும் செவ்விய சந்தன நறுமணமும் கமழ்தலால், குறுநரி, புலால் உண்டு கொண்டாடும் பக்கமும் உண்டு; சுரும்பினமும் வண்டினமும் நறுமணம் நுகர்ந்து உலாவும் பக்கமும் உண்டு எ - று.

(வி - ம்.) போரில் மாற்றுரை வேலால் வீசி யழித்த சேரன், பின்பு அந்த வேலுக்குப் பாராட்டு விழா நடத்துவானாயினன்; மாற்றுருடைய மார்பிலிருந்து பறித்துக் கொண்டு வந்து பூமாலை சூட்டிச் செஞ்சந்தனம் பூசி விழாக் கொண்டாடுகின்றார்கள்; அப்பொழுது வேலின் பக்கத்தில் வண்டினங்கள் வந்து மொய்க்கின்றன; பின்பு வேல், அழகாக அந்த இடத்திலிருக்கின்றது. வீரர்கள் வேறு வினை செய்யச் சென்று திரும்பி வந்து பார்க்கின்றார்கள்; குறுநரிகள் அந்த வேலின் பக்கத்தில் வந்து அந்த வேலைக் கொண்டாடுவது போலச் சூழ்ந்து கொண்டன; படைஞன் வந்து பார்க்கின்றான்; "ஓ! நாம் தானை! இந்த வேலைக் கொண்டாடுகின்றோம்: குறுநரியும் வண்டினமுங்கூடக் கொண்டாடுகின்றன;" என்று கூறி மகிழ்கின்றான்;

வெள்வேலால் கோதை அரசெறிந்த பக்கத்தில் (போர்க்களத்தில்) வண்டாடும் பக்கமும், குறுநரி கொண்டாடும் பக்கமும் உண்டு என்று கொண்டு களத்திற்கு ஏற்றி உரைத்தலுமாம்,

அரசன்மேல் பாய்ந்திருக்கின்ற வேலில் இவ்விரண்டு தன்மையும் உண்டு எனலுமாம்;

நிரனிறைப் பொருள்கோள். புலால் நாறலால் குறுநரியும், செஞ்சாந்து நாறுதலால் வண்டினமும் கொண்டாடின என்க.

புலவு - ஊன். செஞ்சாந்து - செஞ்சந்தனம். சுரும்பு - வண்டு. கோதை என்பது சேர மன்னன் பெயர்! (உ)

சேரன்

நாடு

கவ்வை யுடைத்தரோ

ககo. அள்ளற் பழனத் தரக்காம்பல் வாய் அவிழ
வெள்ளந்தீப் பட்ட தெனவெரீஇப்—புள்ளினந்தங்
கைச்சிறகாற் பார்ப்பொடுக்குங் கவ்வை
நச்சிலைவேற் கோக்கோதை நாடு. [யுடைத்தரோ

(கு - பு.) தலைவி, தோழியினிடஞ் சேரனுடைய நாட்டிற் கவ்வையாகிய நடுக்கத்தோடு கூடிய ஆரவாரமில்லை என்று கூற அதனை ஒப்புக் கொண்ட தோழி, ஆனால் ஒரு வகையில் உண்டு என்று கூறல்.

(இ - ள்.) தோழி! சேரனுடைய நாட்டில் ஒரு கவ்வையும் இல்லை; அவன் நஞ்சு ஊட்டிய வேலால் பகைவர் களை யெல்லாம் ஓடுக்குகின்றான். ஆனாலும் சேறுள்ள நீர்ப் பொய்கைகளில் செவ்வாம்பற் பூக்கள் இதழ் விரிய அவற்றைக் கண்ட பறவையினங்கள் வெள்ளத்திலே தீப்பிடித்து விட்டதென்று அஞ்சித் தம் கையாகிய சிறகுகளாலே தம் இளம் பார்ப்புகளை ஒடுக்கிக்கொள்ளுகின்ற ஆரவாரம் இருக்கின்றது என்று சொல்லுகின்றாள்.

(வி - ம்.) கருகருவென்று மயங்குகின்ற மாலைக் காலத்தில் தலைவியுந் தோழியுமாக வயல் வழி வருகின்றார்கள்; இருளும் மிகுகின்றது; தோழி அஞ்சுகின்றாள்; நாம் வீட்டிற்குப் போகுமுன் இருள் மூடிவிடுமோ? என்கின்றாள்; உடனே தலைவி கூறுகின்றாள்; நம் மன்னன் கோதையினுடைய அரசாட்சியில் ஒரு ஆரவாரமும் கிடையாது; அஞ்ச வேண்டியதே இல்லை; அவன் நஞ்சு ஊட்டிய வேல் வைத்திருக்கின்றான்; பகைவர் அதற்கு மிகவும் அஞ்சுவார்கள்; மற்ற நாட்டில் போர் நிகழ்வதாகவும், பகைவர் வந்து தீக்கொளுத்தி அழிப்பதாகவும் எல்லோரும் கலங்கி ஆரவாரிப்பதாகவும் சொல்லுகிறார்களே; நம் நாட்டில் அந்த

ஆரவாரமே கிடையாது; நீதான் ஆராய்ந்து பார்த்து ஒரு குற்றம் நம் நாட்டில் கண்டுபிடி பார்ப்போம்; முடியவே முடியாது என்கின்றாள். தோழி நினைத்துப் பார்க்கின்றாள்; ஒன்றும் புலப்படவில்லை; அதற்குள் ஒரு நீர்ப் பொய்கைக் கருகில் வந்தனர்; அங்கே நீரில் வாழும் பறவையினங்கள் கூட்டங் கூட்டமாக ஆரவாரிக்கின்றன; பார்க்கின்றாள் தோழி; நீர்த் தடாகத்தில் தண்ணீர் நிறைந்திருக்கின்றது; செவ்வாம்பல் மலர்கள் விரிகின்றன. அந்த மாலைப் பொழுதில் வெள்ளத்தில் நீப்பிடித்தது போலத் தோன்றுகின்றது; தடாகத்தில் பகல் முழுவதும் நீந்திக் களித்து உலாவித் திரிந்த பறவையினங்களெல்லாம் ஓரத்தில் உள்ள புதரிலே போய் அடைகின்றன; தம் குஞ்சுகளையெல்லாம் அருகில் அழைத்துச் சிறகினுள் ஒடுக்குகின்றன; இந்த ஆரவாரம் மிகவும் அதிகமாக இருக்கின்றது; அதனை நோக்கிக்கொண்டு வெள்ளம் நீப்பட்டுவிட்டதென்று அஞ்சியன்றே பறவையினங்கள் சுற்றுப் புறத்திலுள்ள புதர்களிலே போய் மறைகின்றன? இவள் ஏதோ ஆரவாரமே இல்லை என்கிறாளே; என்று நினைத்துக்கொண்டு தலைவியைப் பார்த்துக் கூறுகின்றாள். இதோ பார்; இந்தத் தடாகத்தை; "கௌவை இல்லை, இல்லை" என்றாயே; "கவ்வை யுடைத்தரோ" என்கின்றாள்; பெரிதாக ஒன்றைக் கண்டுவிட்டதாகப் பெருமிதம் பேசிக்கொண்டு தலைவியின் கருத்தொடு இணங்கிச் சேரனுடைய நாட்டைப் புகழ்கின்றாள்.

பெருமிதமும், நகையும் அமைந்து விளங்குகின்றது பாடல்.

அரசன் செவ்வியனாகாவழி, மாற்றார் ஊரை எரி கொளுத்திச் சூறையாடத் தொடங்கிவிடுவார்கள்; அப் பொழுது மகளிர் தம் குழந்தைகளை அணைத்துக்கொண்டு ஆரவாரத்துடன் நடுங்கி ஓடுவார்கள்; ஆனால் இத்தகைய செயல் சேரனுடைய நாட்டில் என்றுமே நிகழவில்லை; இதைத்தான் கூறிப் புகழவேண்டும் என்று கருதுகின்றார். ஏன் பறவைகள் ஆரவாரிக்கின்றன? வெள்ளத்தில் அரக்காம்பலாகிய நீப்பிடித்திருக்கின்றது என்று கூறி நாட்டு வளத்தையும், வேலின் கொற்றத்தையும் புகழ்கின்றார். இப்பாட்டுத் தற்குறிப் பேற்றவணி.

அள்ளல் - சேறு ; பழனம் - நீர்ப் பொய்கை ; அரக்காம்பல் - செவ்வாம்பற் பூ ; வாய் நெகிழ - இதழ் விரிய. புள் இனம் - பறவைக் கூட்டம். பார்ப்பு - பறவையின் இளங் குஞ்சுகள்.

"பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிளமை" (தொல்)

"சோறு படுக்குந் தீயொடு
செஞ்ஞாயிற்றுத் தெறலல்லது
பிறிதுதெற லறியார்நின் னிழல்வாழ் வோரே
திருவில் அல்லது கொலைவில் லறியார்"

என்ற பகுதிகளையும் உணர்க. (புறநானூறு ௨0)

"பழனத்து அரக்காம்பல் வாய்அவிழ,
வெள்ளந் தீப்பட்டதென வெரீஇப்"

புள்ளினம் ஆரவாரிக்கும் ஆரவாரமன்றி வேறு தீப்படுதலும் ஆரவாரமும் இல்லை என்பது குறிப்பிட்டவாறு காண்க.

"கரையில் கம்பலை புள்ளொலி கறங்கிட மருங்கு
பிரசமென்சுரும் பறைந்திடக் கருவரால் பிறழு
திரைநெ டுங்கய நீரிடை நெருப்பெழுந் தனைய
விரைநெ கிழ்ந்தசெங் கமலமென் பொய்கையின் மேவி"

என்ற சேக்கிழாரடிகள் திருப்பாடலும் உணர்க. (கு)

பூம்பொழில் வஞ்சி

ககக. களிகள் களிகட்கு நீட்டத்தங் கையாற்
களிகள் விதிர்த்நிட்ட வெங்கட்—டுளிகலந்
தோங்கெழில் யாணை மிதிப்பச்சே ருகுமே
பூம்பொழில் வஞ்சி யகம்

(கு - பு.) வஞ்சி நாட்டின் வளம் இயம்பல்

(இ - ள்.) பூஞ்சோலைகள் சூழ்ந்து விளங்கும் வஞ்சி நாட்டில், கள் விற்பவர், களிப்பினைச் செய்யுங் கள்ளைக் கள்ளுண்ணுங் களியர்களுக்குக் கொடுக்க, அவர்கள் வாங்கி அதிற் படிந்திருக்கும் வண்டு நுரை முதலியவற்றைக் கையினால் வழித்து எறிபவராய்ச் சிதறிவிட்ட விருப்பந்தருங் கள்ளின் துளிகளெல்லாஞ் சேர்ந்து வெள்ளமாய்ப் பரவிப் பாய, அதனால் வீதி முதலிய இடமெல்லாம் ஈரம்

உடையனவாக, அங்கே போக்குவரவு புரிகின்ற ஓங்கிய அழகுள்ள யானைகள் மிதித்தலினுலே அந்த இடங்களெல்லாம் சேருகிவிடும் (எ - று.)

(வி - ம்.) போர் வீரர்கள், நறுமணமுள்ள அரும்பு, நெல், தென்னை, பனை, ஈந்து முதலியவற்றிலிருந்து வடிக்கப்பட்ட கள்ளைப் பருகுதல் மரபு. வஞ்சி நாடு சேரனுக்கு உரியது; அங்கே நல்ல பொழில் வளம் நிறைந்திருக்கின்றது. போர்ப் படை மறவரும் மிகப் பலர் இருக்கின்றனர். அவர்களுக்கு வேண்டிய அளவுக்கு அங்கே கள் இறக்கி வைத்திருக்கின்றார்கள்; கள்ளைக் குடிப்பவர்கள் அங்கங்கே போய்க் குடிக்கும்போது நுரை முதலியவற்றை வழித்து எறியும்போது சிதறிவிட்ட கள்ளின் துளியெல்லாஞ் சேர்ந்து வஞ்சி நாட்டையே ஈரமாக்க அங்கே யானைக் கூட்டங்கள் மிதித்தலினுலே சேருகவும் ஆயிற்று என்கின்றார்; இதனுல் ஆடவர் தொகுதியும், கள்ளின் மிகுதியும், வஞ்சியின் வளனும் வாய்ப்பாக விளங்கும்.

களிகள் - களிப்பினைச் செய்யுங்கள். விற்பவர் என்று ஒரு சொல் வருவிக்கப்பட்டது.

களிகட்கு - கள்ளைப் பருகுபவர்க்கு.

"களிகள் களிகட்கு" என்பதற்குக் கட்குடிப்பவா, கட்குடிப்பவருக்குக் கொடுக்க என்றும் உரைக்கலாம்.

வெங்கள் - விருப்பந் தருங் கள்.
"வெம்மை வேண்டல்" (தொல்.)

"தன்மரங் குழீஇய நனைமுதிர் சாடி
பன்னெளரித்த கோஒய் உடைப்பின்
மயங்குமழைத் துவலையின் மறுகுடன் பனிக்கும்
பழம்பன் னெல்லின் வேளூர்"

என்பது அகநானூற்றுப் பாடற்பகுதி.

விதிர்த்த - தொட்டுத் தெறித்துச் சிதறிய. நிலத்திற்கு உவந்து அளித்தலாகச் சிதறிய என்றுமாம்; எண்ணெய் தேய்க்கும்போது நிலத்தில் தொட்டு வைத்தல் போலச் சிதறிய கள் என்றவாறு.

பெருமிதம் அமைந்து விளங்குகின்றது இப்பாடல்.

வில்லெழுதி வாழ்வர்

ககஉ. பல்யானை மன்னர் படுதிறை தந்துய்ம்மின்
மல்லல் நெடுமதில் வாங்குவிற் பூட்டுமின்
வள்ளிதழ் வாடாத வானேரும் வானவன்
வில்லெழுதி வாழ்வர் விசும்பு.

(கு - பு.) வானவன் படைத்தலைவன் மாற்றூர் முன்னின்று நெடுமொழி கூறுதல்.

(இ - ள்.) பல யானைப் படையை யுடைய அரசர்காள்! வளப்பமான இதழ்கள் வாடாத மலர்மாலை யணிந்த விண்ணோருங் கூட, எம்மன்னனுடைய ஆட்சிக்குத் தாம் அடங்கினமை தோன்ற; அவனது கொடியில் எழுதப்பட்ட வில்லைத் தாமும் விண்ணில் எழுதி வாழ்வர்: நீவிரும் நும் நாட்டில் உண்டாகிய விலை பொருள்களில் தரவேண்டிய திறைப் பொருளை எம்மன்னனுக்குத் தந்து உயிர் வாழ்மின்: நுமது வளப்பம் பொருந்திய நெடிய மதில்களில் எம் சேர மன்னனுடைய கொடியாக உள்ள வலிந்த வில்லைப் பூணுகப் பூட்டுமின் என்கின்றன்.

(வி - ம்.) அமைதியாக அரசாட்சி நடந்துகொண்டிருந்தது; அப்பொழுது சிற்றரசர் பலர் கூடித் திறை கொடாமல் இருந்துவிட்டனர்; உடனே சேரன் சீற்றங்கொண்டு பெரும் படைகளை விடுத்தான்; படைத்தலைவன் சென்று பார்க்கின்றன்; பகைவர்கள் பல யானைப் படையைத் திரட்டிவிட்டிருக்கின்றார்கள்; பகைவருடைய மதில்கள் மிக்க வளப்பமாக உறுதியாகக் கட்டப்பட்டிருக்கின்றன;

"இவ்வளவு யானைப் படைகளுந் தொலைந்துதானே போகும்; இந்த மதிலும் பொடியாகத்தானே ஆகும்; சொல்லிப் பார்ப்போம் என்று நினைத்துக்கொண்டு பகை யரசர் பக்கத்திலே போய்ப் பேசுகின்றன்.

மன்னர்காள்! உங்கள் யானைப் படைகள் எல்லாம் போன இடங்கூடத் தெரியாமற் போய்விடும்; வளப்பமான கோட்டைகளும் நுமக்குத் துணை செய்யா; அதோ காண்மின் வானவில்லை; தேவர்களுங்கூட எம் மன்னனுக்கு அடங்காமல் வாழ முடியாது. போய்த் தாக்கி எங்களுடைய வில்லை அங்கே எழுதிவிட்டு வந்துவிடுவோம்; அதற்கு அஞ்சி

யன்றே அவர்கள் வானத்தில் வில்லெழுதி வாழ்கின்றார்கள்; அதனை நோக்கியேனும் உய்வதற்கு வழி தெரிந்துகொள்ளக் கூடாதா? எவையேனும் நாட்டில் விளைந்த பொருள்களைத் திறையாகத் தந்து உய்ம்மின்; உங்களுடைய கோட்டைச் சுவரிலே எங்களுடைய வில்லை எழுதுமின்; மிக விரைவில் நடக்க வேண்டியது இதுதான் என்கின்றான்.

தேவருங்கூட அஞ்சிப்போய் வில் லெழுதி யிருக்கின்றனர். நீவிர் என்ன நிலையினர்? என்பதில் பெருமிதம் விளங்குகின்றது; நன்றாகச் சுவை யமைந்த பாடல்.

தற்குறிப் பேற்ற அணி.

படுதிறை - நாட்டில் உண்டாகும் பொருள்களிலிருந்து கொடுக்குந் திறை. படுதல்-உண்டாதல். வாங்குவில்-வளைந்த வில். "நீவிர் எழுதும் வில் நும் மதிலுக்குப் பூண்போல அழகு செய்யும்" என்பான். "எழுதுமின்", என்னாது, "பூட்டுமின்" என்றான்.

வானவன் - சேரன்; அவனுடைய கொடி வில். விண்ணை ரணியுங் கண்ணி வாடா இயல்பிற்றாதலின் "வள்ளிதழ் வாடாத" என்றார். (இ)

பாற எறிந்த பரிசயம்

ககக. வீறுசால் மன்னர் விரிதாம வெண்குடையைப்
பாற வெறிந்த பரிசயத்தால்—தேறாது
செங்கண்மாக் கோதை சினவெங் களியானை
திங்கள்மேல் நீட்டுந்தன் கை.

(கு - பு.) சேரனுக்குரிய சினக்களிற்றின் சிர்த்தி செப்பல்.

(இ - ள்.) தோழனே! செம்மையான கண்களை உடைய பெருமை பொருந்திய கோதையாகிய எம்மன்னனுக்கு உரித்தாகிய சிற்றமுங் கொதிப்பும் மதமயக்கமும் உள்ள யானை, சிறப்புமிக்க மன்னர்களுடைய விரிந்த முத்து மாலைகள் கட்டித் தொங்கவிட்ட வெண்கொற்றக் குடைகளைச் சிதறும்படியாகப் பிடுங்கி வீசியெறிந்த பழக்கத்தினாலே, விண்ணில் உலாவுந் திங்களுக்குங் குடைக்கும் வேற்றுமை தெளியாது, வான் திங்கள் மேலுந் தன் கையை கின்றதுகாண் என்கின்றான்.

(வி – ம்.) கடற்கரை ஓரமாகிய பரந்த மணல் வெளியுள்ள இடத்திலே போர் நிகழுகின்றது; வேழமுடைய மலை நாட்டுச் சேரன் படையிற் பெரும்பகுதி யானைப் படைகள்; மத யானைகளு மிருக்கின்றன; மதக் கொதிப்பும் வெம்மை உடையதாக ஆயிற்று; அதனுடன் சிற்றமும் கொண்டன; பகைவருடைய படையைத் தாக்கித் தேய்த்து மன்னனுடைய வெண்கொற்றக் குடைகளைப் பிடுங்கி வீசுகின்றன; பகல் முழுவதும் இவ்வாறு போர் நிகழ்ந்தது; மாலைப் பொழுதும் மெல்ல வருகின்றது; வான வெளியில் முழுமதி ஒளிர்கின்றது; போர் நின்று அமைந்த பின்பு நங் கூடச் சினவெங் களியானையின் செயல் அடங்கவில்லை; வான் திங்களைப் பார்க்கின்றது; அதனையுங் குடையாகவே கருதிப் பற்றிச் சிதற வீசிவிடுவோம் என்று நினைத்து அதனை நோக்கிக் கையை நீட்டுகின்றது.

வீறுசால் - சிறப்பு மிக்க; சிறப்பு மிக்க மன்னரை வென்றுண் என்றல் அதனால் கோதையின் புகழ் வெளியாம்.

தாமம்-மாலை; முத்து மாலையால் அணி செய்த வெண் கொற்றக் குடை. தேறுது - தெளியாமல்.

சினவெங் களியானை – சிற்றமுங் கொடுமையும், மதமும் உள்ள யானைகள்.

களிப்பு மிக்கவர் பண்டு செய்த பழக்கத்தால் அச் செயலை மீண்டுஞ் செய்தல் இயல்பு. இதனால் யானையின் மலையனைய தோற்றமும் மேல் நோக்கிய கை திங்களைத் தொடுவதுபோல் இருக்கின்ற பெருமையும் இனிய காட்சியாக விளங்குதல் உணர்க. (சு)

வயிரக் கடகக்கை வாங்கல்

ககச. மரகதப்பூண் மன்னவர் தோள்வலீ கிழா
வயிரக் கடகக்கை வாங்கித் — துயருழந்து
புண்ணுற் றழைக்குங் குறுநரித்தே பூழியனைக்
கண்ணுற்று வீழ்ந்தார் களம்.

(கு - ப.) சேரன் பொருத சேருக்களத்தின் இயல்பு செப்பல்.

(இ - ள்.) நண்ப ! சேரனுக்குப் 'பகையாய் வந்து எதிர்த்து அவனைக் கண்ணுற்றுப் பொருது வீழ்ந்தவர் மலிந்த போர்க் களத்தில் பெரிய மரகதப் பூண்கள் அணிந்த மன்னர்கள் கையில் வயிரக் கடகங் கிடந்து விளங்குகின்றன ; தோள் வளைகளும் மிக அழகாக அணிந்திருக்கின்றார்கள் ; அவர்களுடைய ஊனை உண்பதற்குச் சிறு நரிக் கூட்டங்கள் வருகின்றன; போய் வயிரக் கடகக் கையை யிழுக்கின்றன ; இழுக்கின்ற விரைவில் தோள்வளையுங் கூடக் கீழே நழுவி வருகின்றன ; இதற்குமுன் ஊன் தின்றறியாத குறுநரிகள் தோள்வளை வயிரக் கடகம் இவற்றுடனே தசையைக் கடித்து இழுக்கும்போது வயிரந் தோள்வளை இவைகள் வாயைக் கிழித்துக் குருதி ஒழுகச் செய்தமையால் உடனே தாய் நரியை நினைத்துத் துணைக்கு வரும்படி கூவுகின்றன ; இத்தன்மையான குறுநரிகளை யுடையதாக இருக்கின்றது அபபோர்க்களம் ; என்று கூறுகின்றான்.

(வி - ம்.) மரகதப் பூண் மன்னருடைய வயிரக் கடகக் கையைத் தோள்வளை கீழாக வரும்படி இழுத்து என்று கொள்க.

கீழா - கீழாக. வாங்கி - இழுத்து. களத்தில் ஊன் தின்றறியாத குறுநரியாதலால் மிக விரைவோடு கையோடு கையணியையுஞ் சேர்த்து ஈர்ப்ப அவைகளால் புண்ணுறுத்தப்பட்டன ; அறுத்தற் றொழிலில் வயிரம் சிறந்தது.

பூழியன் - பூழி நாட்டையுடைய சேரன். "பூழியர் கோக்கோதை" என்று வருதலுங் காண்க. "தோள்வளை கீழா வயிரக் கடகக்கை வாங்கித் துயருழந்து" என்பதற்கு வளையணிந்த தோள்மேல் இருந்துகொண்டு கடகமணிந்த முன் கையை இழுத்து, அக்கை நிமிர்ந்து மோதுதலாலே துன்புற்றுத் துயருழப்ப எனலுமாம். (எ)

செங்கண் சிவப்பித்தார்

ககரு. கரிபரந் தெங்குங் கடுமுள்ளி பம்பி
நரிபரந்து நாற்றிசையுங் கூடி—எரிபரந்த
பைங்கண்மால் யானைப் பகையடுதோட்
செங்கண் சிவப்பித்தார் நாடு. [கோதையைச்

(கு - பு.) கோதையின் செங்கண்ணைச் சிவப்பித்தவருடைய நாட்டின் நிலை கூறுதல்.

(இ - ள்.) பகிய கண்களை உடைய மதயானைப் படைகளையும், பகையைக கொல்லும் பருத்த தோள்களையும் உடைய கோதை யென்னும் பெயருள்ள, சேர மன்னனைச் சிற்றத்தாற் செங்கண் சிவக்கும்படி செய்த திறைகொடா மன்னருடைய நாடுகள், பூமிபொழில் மூதலியன எல்லாம் நீர்ப் பாயச்சிப் புரப்பார் இன்மையினாலே, வெயிலால் கரிதல் பரவிப் பின் கூர்மையான முட்களையுடைய செடிகள் நெருங்கி உண்டாகிப் பின்பு நரிகள் பரவி நாலாபக்கமும் கூடி உலாவும்படியாக ஆகிப் பின் அவையும் கரிந்து தீயாகப் பரவின எ - று.

(வி - ம்.) கோதைக்குத் திறைகொடாப் பகைவர் நாடு அவனால் அழிக்கப்பட்டுப் பின்பு வளமுள்ளன கருகித் தீய்ந்து முள்ளிச் செடிகள் பரவப்பெற்று நாளடைவில் அவையுந் தீய்ந்தே போய்விட்டன.

இனி இதை, உழுபுல வஞ்சியாகக்கொண்டு கோதைக்குப் பகைவராய் உள்ளார்தம் நாட்டில் அவன்றன் படைஞர் கடிது சென்று தீக்கொளுத்தி அழித்ததாகக்கொண்டு, கரிபரவுமபடியாகவும் பின்னர் முட்செடி வளர்ந்து செறியுமபடியாகவும் நரிக் கூட்டங்கள் பரவுமபடியாகவும் தீப்பரவின என்றுங் கொள்ளலாம்.

உழுபுல வஞ்சியாவது ஊரைத் தீக்கொளுத்துதல்.

கரி பரத்தல் தீக்கொளுத்தின உடனே நிகழும்; கடு முள்ளி பம்புதல் எதிர்காலத்தில் நிகழும். நரி கூடுதல் இறந்தவர்தம் ஊனை உண்டற்கு உடனே நிகழும்.

கடுமுள்ளி - கூர்மையான முள்ளை உடைய செடிகள். கடி என்னும் உரிசசொல் "கடு" எனத் திரிந்தது. கடு என்பதற்கு நஞ்சு என்று பொருள்கொண்டு நச்சு முட்செடி என்று கூறலுமாம்.

பைங்கண் மால்யானை என்பதனைப் பகைக்குக் கூட்டியும் உரைக்கலாம்.

செய்து என்னும் வாய்பாட்டு வினை எச்சங்கள் செய்வென் எச்சமாகத் திரித்துக்கொள்ளப்பட்டன. (அ)

சேரன்

பகைப்புலம் பழித்தல்

ஊரறியலாகா

கூகூ. வேரறுகை பம்பிச் சுரைபடர்ந்து வேளூபூத்
தூரறிய லாகா கிடந்தனவே—போரின்
முகையவிழ்தார்க் கோதை முசிறியார் கோமான்
நகையிலைவேல் காய்த்தினூர் நாடு.

(கு - பு.) சேரனுக்குச் சீற்றம் விளைவித்தவருடைய நாட்டின் இயல்பு கூறுதல்.

(இ - ள்.) போர் தொடங்கினால் தும்பைமாலை சூடுதலும், போர் வெனறு வாகைமாலை சூடுதலும் அரசர்க்கு இயல்பு. போர் இலலாமையினாலே அரும்பு அவிழ்ந்த பூக்களாற் கட்டப்பட்ட மாலை அணிந்திருக்கின்றவனும், கோதை யென்னும் பெயருடையவனும், முசிறியில் வாழ்பவருக்கு மன்னனுமாகிய சேரனுடைய ஒளியுடையதும், இலைவடிவுள்ளதுமாகிய வேற்படைக்குச் சீற்றத்தை உண்டாக்கினவருடைய நாடுகள், அவனால் அழிக்கப்பட்டுப் பின்பு, கோடைக் காலத்திலும் தீயாத வேரினையுடைய அறுகம்புல் செருக்கி வளர்தலாலும், சுரைபடர்ந்து மறைத்தலாலும், தைவேளைச் செடிகள் நெருக்கமாக மூளைத்து வளர்ந்து பூத்துக் கிடக்கின்றமையாலும், ஊர்கள் அறியலாகாதனவாகக் கிடந்தன எ - று.

(வி - ம்.) தும்பைமாலை போர்க்காலத்திற் சூடுவது வழக்கம்; பின்பு போர் வென்று வாகைமாலை சூடுவான்; போரில்லாமையினாலே பூமாலை சூடிக்கொண்டு அமைதியாக இருந்தான்; அவ்வாறு இருக்கும்போது சிலர் அவனுக்குச் சீற்றம் விளைவித்தனர். உடனே படையெடுத்துச் சென்று மாற்றாருடைய நாடுகளை அழித்துத் தரையோடு தரையாய் ஆக்கிவிட்டு வந்தனன். பினனர் அங்கே வேர்ப்படர்ச்சியுள்ள அறுகம்புல்லும், கைப்பருக்காய் காய்க்கும் பேய்ச் சுரையும் படர்ந்தன. தைத்திங்களில் மிகுதியாக உண்டாகுந் தைவேளைச் செடியும் இடைவிடாமல் மூளைத்துப்

பூத்துக் கிடந்தன. இவற்றின் மிகுதியினாலே அங்கே ஊர் கள் இருந்தன என்றுகூட அறிய முடியவில்லை. இந்நிலை யைக் கண்ணுற்றவர் மற்றையோரிடம் இங்ஙனங் கூறுவா ராயினர்.

பல நாடுகள் இங்ஙனம் அழிந்துகிடந்தமையான், "ஊரறிய லாகா கிடந்தனவே" என்கின்றார்.

பம்பி - மரவி. வேளா - தைவேளா. சுரை - பேய்ச் சுரை; நல்ல சுரை எனினுமாம். முகை - அரும்பு.

முசிறி ஏன்பது, சேரனுடைய துறைமுகப்பட்டினம். இது சுள்ளியம் பேரியாறு கடலுடன் கலக்கும் இடத்தில் உளது. மேனாட்டாருடன் தமிழ் நாட்டார், கிறிதுவின் காலத்திற்கு முன்பே இத்துறையில் வணிகப் போக்குவரவு புரிந்துகொண்டிருந்தனர் என்பது, பெரிபுளூசு, தாலமி, பிளினி முதலியவர் எழுதியவற்றால் நன்கு தெரிய வருகின் றது.

இப்பட்டினத்தை ஒருகால் பாண்டியன் வளைத்துப் போர் செய்து அவண் இருந்த ஓர் அழகிய உருவச் சிலையைக் கவர்ந்துகொண்டு வந்தனன் என்னும் செய்தி, அகநானூற் றில், கசசூ-வது பாடலில்,

"சேரலர், சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க
யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி ஆர்ப்பெழ வளைஇ
அருஞ்சமங் கடந்து படிமம் வவ்விய
நெடுநல் யானை அடுபோர்ச் செழியன்"

என்றபகுதியால் அறியப்படும்.

நம் நாட்டு மிளகிற்கு மேனாட்டார் பொன்னைக் கொண்டுவந்து இறக்கினர் என்பது, உணரத்தகுந்தது.

அவனது சிற்றத்தை வேலின்மேல் ஏற்றி "நகையில வேல் காய்த்தினர்" என்றார்.

"நகையில வேற்கோதையைக் காய்த்தினர்" என்று கூட்டினும் அமையும். (கூ)

கைக்கிளை

திரிந்த குடுமி

களவு. தாயர் அடைப்ப மகளிர் திறந்திடத்
தேயத் திரிந்த குடுமியவே—ஆய்மலர்
வண்டுலாம் கண்ணி வயமான் றேர்க் கோதை
கண்டுலாம் வீதிக் கதவு.

(கு - பு.) கோதை உலாவருங்கால், காணவிடாத செவிலியர்க்கும், காண விரும்பிய காரிகையார்க்கும், கதவுகள் அடைத்தலுந் திறத்தலுமாகிய பூசல் நிகழ்ந்தமை கூறல்.

(இ - ள்.) வீதிக் கதவுகள், ஆராய்ந்த பூக்களாற் கட்டப்பட்ட, வண்டுலாவுங் கண்ணியை அணிந்த, வலிய குதிரைகள் பூட்டப்பெற்ற தேரின்மேல் ஏறி உலாவருகின்ற கோதை எனப் பெயரிய சேரனைக் கண்டு, தாயர் அடைத்தலாலும், மகளிர் திறத்தலாலும் தேயும்படி சுழன்ற குடுமிகளை உடையனவாயின. (எ - று.)

(வி - ம்.) சேரன் உலாவருகின்றான்; மகளிர் காணின் என்ன நிலைமையடைவர்? வேட்கை, ஒருதலை உள்ளுதல், மெலிதல், ஆக்கம் செப்பல், நாணுவரையிறத்தல், நோக்குவெல்லாம் அவையே போலுதல், மறத்தல், மயக்கம் என்னும் இவையேயன்றிச் சாக்காடு என்னும் நிலைமையை அடையினும் அடைவர்; ஆதலால், தாயர் விரைந்து சென்று கதவினை அடைத்தனர்.

அவன் நல்கான் நயவான் ஆயினும் அவனைப் பல்காற் காண்டலும் உள்ளத்திற்கு இனிது ஆகலின், மகளிர் திறப்பாராயினர்.

குடுமி - கதவின் நிலைப்பொருத்துவாயின் மேற்பகுதியில் வளைதுளையுட் பொருந்தி மேலே இருக்கும் உச்சிக் குமிழ். மேற்பகுதியாகிய உச்சிக் குமிழ்க்குடுமி தேயும் எனவே, அடிப்பகுதிக் குமிழ் தேய்தல் சொல்லாமலே பெறப்படும்.

"வருவார் கொழுநர் எனத்திறந்தும் வாரார்
கொழுநர் எனவடைத்துந்

திருகுங் குடுமி விடிவளவுந் தேயுங்
கபாடந் திறமினே''

என்ற கலிங்கத்துப்பரணிப்பாடலும், உணரத்தக்கது.

குடுமி தேய திறப்பும் அடைப்பும் நிகழ்ந்தன என்று அழகாகக் கூறியிருத்தல் உணர்க. (கஅ)

வட்கார் வணக்கும்

கஉஅ. வரைபொரு நீண்மார்பின் வட்கார் வணக்கும்
நிரைபொரு வேன்மாந்தைக் கோவே—நிரைவளை
தங்கோலம் வவ்வுதல் ஆமோ அவர்தாய்மார் [யார்
செங்கோலன் அல்லன் என.

(கு - பு.) 'மாந்தை மன்னனிடம் ஒரு மங்கையின் தோழி சென்று, மன்னு! நீ நிரைவளையார் தங்கோலம் வவ்வுதலாமோ? என்று கூறுதல்.

(இ - ள்.) பகைவரைப் பணியச் செய்யும் இயல்பினையும், வரிசையாகப் போர் செய்யவல்ல வேற்படையினையும் உடைய, மாந்தை நகரத்திற்கு மன்னவனே! வரிசையாக வளையல்கள் அணிந்த பெண்டிருடைய தாய்மார், நின்னைச் செங்கோல் வேந்தன் அல்லன் என்று சொல்லும்படியாக, அவர்தம் மகளிருடைய அழகினைக் கவர்ந்து கொள்ளுதல் நினக்கு அறனுகுமா? என்கின்றாள்.

(வி - ம்.) மாந்தை மன்னன் மறுகில் உலாவருங்கால் அவனைக் கண்ட காரிகையார் தழிஇபெருங் காதல்கொண்டனர்; அதனால் அவனையே நினைந்து நினைந்து நெகிழ்ந்து உணவும், உறக்கமும் இன்றி உருகி அழகினை இழந்தனர். இவையெல்லாம் மாந்தை மன்னனது பேரெழிலாலன்றே விளைந்தன? ஆதலால் அவனே நங்கையருடைய எழில் நலத்தைக் கவர்ந்தா னென்றும், அதனாற் செங்கோலன் அல்லன் என்றும் செவிலித் தாயர் பழி தூற்றலாயினர். அதனை மன்னனுக்கு அறிவிக்கு முகமாகத் தோழி மாந்தைக் கோவே! நீ செவிலியர் செங்கோலன் அல்லன் என்று சொல்லும்படி நிரைவளையார்தங் கோலம் வவ்வுதல் ஆமோ என்று கூறினாள்; பகைவரை வணங்கச் செய்யும் வரைமார்பும், நிரை வேற்படையும் உடையனாக அவர்தம் நிலம் வவ்வும் நினது பேராண்மைத் தகுதிக்குக் காதலித்தார்தங் கோலம் வவ்வு

தல் எங்ஙனம் பொருந்துவதாகும்? பகைவரையும் நண்பரையும ஒருபடியாக நினைப்பது குற்றந்தானே என்கின்றாள்.

வரைபொரு நீண்மார்பு-மலையை யொத்த பெரிய மார்பு. வட்கார் - பகைவர். கோலம் - அழகு. மாந்தை - சேரனுடைய நாட்டிலுள்ள ஒரு நகரம். வணக்கும - வணங்கச் செய்யும். (கக)

வாமான்றேர்—மான்றேர்

கஙகூ. வாமான்றேர்க் கோதையை மான்றேர்மேற் கண்ட
மாமையே யன்றே இழப்பது—மாமையிற் [வர்
பன்னூறு கோடி பழுதோஎன் மேனியிற்
பொன்னூறி யன்ன பசப்பு.

(சு - பு.) பசலை பூத்த நங்கை அழகிழந்தால் என்கொல்? அதிற் பன்மடங்கு மேற்பட்டதன்றே கோதையால் வந்த பசலை? என்று கூறுதல்.

(இ - ள்.) போர்க்களத்தில் தாவிப்பாயுங் குதிரை பூட்டப் பெற்ற தேர்ப்படையையுடைய கோதை என்னுஞ் சேரமன்னனை, உலாவருங்கால் அதற்கு ஏற்ற குதிரைகள் பூட்டப்பெற்ற தேரின்மேற் கண்ட நங்கையர் இழப்பது மாமை நிறன் ஒன்றே யன்றே? அதனுற் கேடொன்று மில்லை; பெறுவதுதான் இழப்பதற்கு மேலாக இருக்கின்றதே; யான் இழந்த மாந்தளிர் போன்ற மாமை நிறத்தைக் காட்டிலும் என் உடல் முழுதும் பரவியிருக்கின்ற பொன்னூறினுற் போன்ற பசப்பு, பல நூறுகோடிப் பங்கு பயனுடையதாக இருக்கின்றதேயன்றிப் பயனற்றதாகுமோ? ஒருக்காலும் ஆகாது; ஆதலால் நெஞ்சமே! நீ வருந்தாதே; என்கின்றாள்.

(வி - ம்.) சேரன்பாற் காதல் கொண்ட சேயிழை மாந்தளிர் போன்ற மாமை நிறத்தை இழந்தனள்; அதுவுமன்றிப் பொன்னூறினுற்போன்ற பசலை நிறத்தையும் பெற்றாள்; பசலை வந்த போழ்தே அழகும் அழிந்து விடுமல்லவா? அவ்வாறு இருக்கவும், மாமை நிறத்திற்குத் தாழ்ந்ததா பொன்னிறம்? இல்லை; இல்லை; ஒருநாளுந் தாழ்ந்ததாகாது; அதிலிருந்து பலநூறு கோடி உயர்ந்ததாகும்; என்கின்றாள்.

இழப்பது மிகுதியும் பெறுவது குறைவாகவும் இருந்தாலன்றே வருந்த வேண்டும்? நீ மாமையை இழந்தாலும் அதனினும் உயர்ந்த பொன்னிறம் பெற்றனை; ஆதலால் ஆறுதல் அடை; என்கின்றாள்.

உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்றபடி சேரனைக் காதலித்துப் பெற்ற பசலை ஆதலால், தலைவி அதற்கு அவ்வளவு உயர்வு கொடுத்து மாமையை இழந்ததையும் பொருட்படுத்தாமல் விடுகின்றாள்.

வாமான் - வாவுகின்ற குதிரை. வாவுதல் - தாவுதல், பழுதோ - பயனில்லையோ? உண்டு.

"பழுது பயமின்றே" என்பது தொல்காப்பிய உரியியல் நூற்பா. (கஉ)

நீண்ட அருள்

கஉ0. நீரும் நிழலும்போல் நீண்ட அருளுடைய
ஊரீரே யென்னை யுயக்கொண்மின்—போரிற்
புகலுங் களியானைப் பூழியர்கோக் கோதைக்
கழலுமென் னெஞ்சங் கிடந்து.

(கு - பு,) தலைவி ஊரினர் கேட்பச் சொல்லியது.

(இ - ள்.) நீரையும் நிழலையும்போல மிக்க அருளுள்ள ஊர்ப் பெரியோர்களே! போரிற் பெருவிருப்பம் உள்ள மதத்த யானைப் படையினை யுடையவனும், பூழிநாட்டாருக்கு மன்னனுமாகிய கோதையென்ற பெயருள்ள சேர அரசன் பொருட்டு என்னெஞ்சங் கிடந்து கனலுகின்றது; அந்த வெப்பத்தை என்னால் தாங்க முடியாது; அது என்னைக் கொன்றுவிடும்போலிருக்கின்றதே! ஐயோ! என் செய்கேன்? (ஊரீரே) என்னை உயக் கொண்மின்; என்கின்றாள்.

(வி - ம்.) காட்சி, வேட்கை, மெலிதல், ஒருதலையுள்ளல், ஆக்கஞ் செப்பல், நாணுவரை யிறத்தல், நோக்குவ வெல்லாம் அவையே போறல், மறத்தல், மயக்கம், சாக்காடு என்ற இப்பத்து நிலைமையும் காதற்காட்சி யுற்றோரிடத்து முறையே படிப்படியாக வளரும்; இவற்றுள் காட்சி, வேட்கை, மெலிதல், ஒருதலையுள்ளல் ஆகிய இந்நான்கு

நிலையையும் அடைந்த தலைவி தன் காதலனை இடைவிடாது நினைத்தலால் மிகவும் வெதும்பி, அழன்று கொதிக்கின்றாள்; அதனைத் தாங்க முடியாமல் ஆக்களும் செப்பும் நிலைமைக்கு வந்து, ஊரினரைப் பார்த்துத் தனக்கு உறுவது உரைக்கத் தொடங்கி, "ஊரிரே! எனக்குச் சாக்காட்டு நிலையும் வந்து விடும்போ லிருக்கின்றது; நீரும் நிழலும்போல் நீண்ட அருளுள்ள நீங்கள்தாம் என்னைக் காக்கவேண்டும்" என் கின்றாள்.

உயக்கொண்மின் - யான் உய்யும்படியாகக் காத்துக் கொள்ளுங்கள். போரிற் புகலுங்களையானை - போரிற் பெரு விருப்பங்கொண்ட மதக்களிபபுள்ளையானை. அழலும் - கொதிப்படைகிறது. (கூ)

வாயும் அடைக்குமோ

கூஉக. கடற்றானைக் கோதையைக் காண்கொடாள் வீணி
லடைத்தா டனிக்கதவம் அன்னை—யடைக்குமேல்
ஆயிழையாய்! என்னை யவன்மேலெடுத்துரைப்பார்
வாயு மடைக்குமோ தான்.

(கு - பு.) இற்செறிக்கப்பட்ட தலைவி தோழியினிடஞ் சொல்லியது.

(இ - ள்.) ஆராய்ந்து செய்த அணிகலன் அணிந்த தோழியே! கடலிற்போன்ற மிகுந்த சேனைகளையுடையவனும், கோதை யென்னும் பெயருடையவனுமாகிய சேரன், நம் வீதி வழியாக உலாவரும்பொழுது, நம் அன்னை அவனைப் பார்க்கவிடாதவளாய், நம் தெரு வாசலில் இருக்கின்ற ஒரே ஒரு கதவையும் ஓட்டமாக ஓடிப்போய் வீணாக அடைத்து விட்டாள்; ஏடி! தோழி! அன்னை இந்தக் கதவை அடைத்து விட்டாளென்றால், என்னை அந்தச் சேர மன்னன்பால் இயைபுபடுத்தி எடுத்துரைக்கும் பெண்களின் வாயும் அடை பட்டுவிடுமோ? அல்லது இவளை அலர்தூற்றும் பெண் களின் வாய்களையும் மூடிவிடுவாளோ? என்ன அறியாமை? என்கின்றாள்.

(வி - ம்.) கோதைபால் காதல் கொண்டிருந்தாள் ஒரு குழல்மொழி நங்கை; அதனால் அவளுக்கு உண்ணுமுதும் நஞ்சாயிற்று; உறக்கமும் வரவில்லை; நினைந்து நினைந்து

உருகி நெகிழ்ந்தாள்; கைவளைகளுங் கழன்றொழிந்தன; இவற்றை யெல்லாம் எவ்வாறே ஊர்ப் பெண்கள அறிந்து கொண்டனர்; உடனே அலர்மொழியைப் பலர் மொழியத் தொடங்கினர்; தெருவிலே அங்கங்கே சிலரும்பலருங் கூடிக் கடைக்கண்ணால் அங்குமிங்கும் நோக்கிக்கொண்டு மூக்கின் உச்சியில் சுட்டுவிரலியும் வைத்துக்கொண்டு, அம்பல் அரும் பச் செய்து, அலருந் தூற்றுகிறார்கள்; இச்செய்திகளெல் லாம் அப்பெண்ணினுடைய தாயக்கும் எட்டின; இவ்வாறு இருக்கும்போது, சேர மன்னன் வீதி வழியாக உலா வருகின் றான்; தலைவிகதை ஊரார் பழிதூற்றுதலைப் பற்றியும், அன்னை அலைத்தலைப்பற்றியுஞ் சிறிதுங் கவலையில்லை; "ஊரவர் கௌவை எருவாக அன்னை சொல் நீராக" அவ ளுடைய வேட்கை நோயாகிய பயிருஞ் செழித்து வளரத் தொடங்கியது; அவள் வீட்டுக்குத் தெருப்பக்கத்துக் கதவு ஒன்றே ஒன்றுதான் இருந்தது; அதில் பூட்டு வாய்த் துளை யுங்கூட இல்லை; தலைவி விரைந்து சென்று கதவைத திறந்து கொண்டு சேரனைக் காணபோகின்றாள்; அப்பொழுது அவளுடைய தாய் ஓடோடியும் வந்து அவளைப் பிடித்து வீட்டுக்குள்ளே தள்ளிக் கதவையும அடைத்துத் தாழிட்டு விட்டாள்; அவளுக்கோ மனக்கொதிப்புப் பொறுக்க முடிய வில்லை; வீட்டினுள்ளே தோழி யிருந்தாள்; அவள் பககத் திற்குப் போனாள்; அவளும் இவளை நோக்கி நீ கோதை யைப் பார்த்தனையோ என்றாள்; உடனே, இவளும் இல்லை தோழி; அன்னை ஓடிவந்து சிறிது நேரங்கூடப பாக்கக் கொடாமல் வீணாகக் கதவை அடைத்துக்கொண்டாள்; தோழி! ஆமாம்; இந்தக் கதவை அடைத்தாளே! இந்தக் கதவை அடைத்துவிட்டால் என்னை அந்த மன்னனுடன் சேர்த்துப் பேசுகின்ற பெண்களின் வாயும் அடைபட்டு விடுமோ? அல்லது அவர்களின் வாயை இவளே போய் அடைத்துவிடுவாளோ? என்ன அறியாமை? ஊரார் வாயை மூட நினைக்கின்ற தன்மைபோல அவ்வளவு தாழ்ந்த செய லல்லவா இவ்வாறு கதவடைத்தலும்? என்று நொந்து நொந்து தலைவி நுவல்கின்றாள்.

கோதை என்பது சேர மன்னனுடைய பெயர். "நிறைந் தவன் பழி நங்குடிக்கு இவள் என்று அன்னை காண்கொண் டாள்" என்பது திருவாய் மொழி. (க-)

என்கோல் ?

கூஉ. புன்னைகச் சோலை புனற்றெங்கு சூழ்மாந்தை
நன்னக நின்றலரு நன்னுடன்—என்னகங்
கங்கு லொருநாட் கனவினுட் டைவந்தான்
என்கொல் இவரறிந்த வாறு.

(கு - பு.) தலைவி தன்னெஞ்சொடு சொல்லியது.

(இ - ள்.) நெஞ்சமே! புன்னை மரச்சோலையும் புனல் வளமும் தென்னஞ்சோலையும் மிகுதியாகச் சூழ்ந்திருக்கின்ற மாந்தை நகரத்தைத் தனக்கு உரிமையாக உடையவனும், நல்ல சுரபுன்னை மரங்கள் நின்று பூக்கள் மலர்ந்து நறுமணம் வீசுகின்ற நல்ல சேர நாட்டை யுடையவனுமாகிய சேரன், ஒரு நாள் இரவு கனவில் வந்து என்னுடைய உடம்பைக் கையால் தடவினன்; இதனை, இந்தத் தோழியர்கள் அறிந்து கொண்ட வழி யாதோ? தெரியவில்லையே; என் செய்கோம் என்கின்றாள்.

(வி - ம்.) மாந்தை என்னும் நகரம் மிக்க இயற்கை வளம் நிரம்பியது; ஊரைச் சுற்றி எங்கே பார்த்தாலும் புன்னை மரங்கள் வானளாவி வளர்ந்து நிற்கின்றன; நீர்வளமும் நிறைந்திருக்கின்றது; தென்னைகளும் நாற்புறமும் சூழ்ந்து அழகு செய்கின்றன; இவ்வளவு சிறந்த நகரம் சேரனுக்கு உரியதாக இருந்தது; இங்கே ஒரு நங்கை தோழியருடன் நீராடச் சென்றாள்; பார்த்தாள் இயற்கை வளத்தை; தோழியரிடங் கூறுகின்றாள்; என்ன? இவ்வளவு அழகான புன்னைச்சோலை, தென்னஞ்சோலை, தடாகம் முதலியனவெல்லாம மனதைக் கவர்கின்றனவே? இவையாருடையன? என்று கேட்கின்றாள்; தோழி சொல்கின்றாள்; எல்லாம் நஞ் சேர மன்னனுக்கு உரிமையானவைகள் தாம்; இவை மட்டுமா? அவனுடைய சேர நாட்டில் சுரபுன்னை மலாகளும் மிகுதியாக நின்று மலர்கின்றனவாம்; எங்கே சென்றாலும் அவனுடைய நாட்டில் அந்த மணம் நிறைந்து இருக்குமாம்; நான் கேள்வியுற்றேன் என்றாள்; இவ்வாறெல்லாம் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, மாந்தை நகரத்தைப் பார்வையிட வந்த சேரன் அங்கே உள்ள புனற் நாடகத்தில் நீராட வந்தான்; தலைவி கண்டாள்; தோழியர்கள்

உடனே வீட்டிற்கு அழைத்துக்கொண்டு வந்தார்கள்; ஆனால் அவளுக்கு அந்தப் புன்னையுஞ் சோலையின் அழகு, புனல் வளம், தென்னஞ் சோலையின் செழிப்பு, இவற்றுடன் சேர மன்னனுடைய அழகு இவற்றைப்பற்றிய நினைப்பு மாறவே யில்லை; அதனுடன் அவன் நாட்டில் மலர்ந்திருக்கின்ற சுரபுன்னையின் நினைவும் வருகின்றது; இவற்றையே நினைத்துக்கொண்டு உணவும் ஒழுங்காக உண்ணுமல் உருகினாள்; இரவுப் பொழுதில் நெடுநேரந் தூக்கமின்றி யிருந்து கவலும்போது சிறிது தூக்கம் வரத் தொடங்கிற்று; கனவும் உடன் வந்துற்றது; அக்கனவுட் சேரனும் வந்துற்றான்; வந்து மெதுவாகத் தலைவியின் உடம்பைத் தடவினான்; அவளும் விழித்துப் பார்த்தாள்; சேரனைக் காணவில்லை; ஆ! கனவல்லவா கண்டிருக்கின்றோம் என்று ஏங்கிக்கொண்டிருக்கின்றாள்; இவள் மெலிவு, சோர்வு, உணவு உண்ணுமை முதலிய செயல்களை யெல்லாந் தோழியர்கள் குறிப்பாக உணர்ந்துகொண்டார்கள்; அதனோடு இரவில் ஏங்கிக்கொண்டு இருந்ததையும் அறிந்துகொண்டார்கள்; மறுநாள் அதைப்பற்றி ஒன்றுங் கேட்கவில்லை; சில நாட்கள் கழிந்தபின்; தோழி தலைவியைப் பார்த்து அன்றைக்கு இரவு என்ன செய்தாய்? என்று கேட்டாள்; என்றைக்கு? எப்பொழுது? என்றெல்லாம் கேட்டுக்கொண்டு மறைக்கத் தொடங்கினாள்; தோழியரும் நீ சொல்லாவிட்டாலென்ன எங்களுக்குத் தெரியாதா? என்று சொல்லிச் சென்றனர்; பின்னர் தலைவி யிருந்து நினைக்கின்றாள்; ஒரு நாள்தானே, கனவில் வந்து சேரன் என்னைத் தடவினான்; இவர்கள் இதை எவ்வாறு அறிந்துகொண்டார்கள்? என்று நினைத்துக்கொண்டு இருக்கின்றாள்.

தலைவியினுடைய நினைவு ஓவியமாக இப்பாடலில் அமைந்துளது.

சுரபுன்னை நின்றலரும் நாடன் புன்னைசூழ் சோலை சூழ்ந்திருக்கின்ற மாந்தை நகரத்தையுந் தனக்கு உரிமையாக வைத்திருத்தல் போல, சிறந்த மன்னர் குலமங்கையை மணந்த சேரன் என்னிடத்திலுஞ் சிறிது உரிமை காட்டிக் கங்குலிற் கனவில் வந்து என் ஆகத்தைத் தைவந்தான் என்று தலைவி நினைக்கின்றாள்:

புன்னாகம் - புன்னைமரம். நன்னாகம - சுரபுன்னை, மணத்திற் சிறந்தது. இதன் பூவை மாலையாகக் கட்டியணிவது அரசர்கட்கு வழக்கம். மாந்தை - சேரனுக்கு உரியது.

"குரங்குகளைப் புரவிக் குட்டுவன்
மாந்தை யன்னவென் னலந்தந்து சென்மே"

என்ற அடிகளால் மாந்தை குட்டுவஞ் சேரனுக்கு உரிய தென்பது விளங்கும். (*கு)

வருஞ் செல்லும் பேரும்

கஉங. ஆய்மணிப் பைம்பூண் அலங்குதார்க் கோதையைக்
காணிய சென்று கதவடைத்தேன்—நாணிப்
பெருஞ்செல்வர் இல்லத்து நல்கூர்ந்தார் போல
வருஞ்செல்லும் பேருமென் னெஞ்சு ,

(கு - பு) சேரன் உலாவரும் பொழுது பார்த்துவிட்டு வந்த தோழி 'நீ சேரனைப் பார்த்தாயா? என்று தலைவியினிடங் கேட்க: அதற்குத் தலைவி சொல்லியது.

(இ - ள்.) தோழி! மணி ஆராய்ச்சியாளரால் ஆராய்ந்து பார்த்துத் தேர்ந்தெடுக்கப்பட்ட மணிகள் அழுத்திப் பசும் பொன்னாற் செய்த ஆபரணங்களையும், அங்குமிங்குமாக வசைகின்ற மாலையினையும் அணிந்திருக்கின்ற கோதை யென்னுஞ் சேரமன்னனைக் காணும பொருட்டுச் சென்று கதவுப் பக்கத்திற்குப் போன யான், பளிரென்று நாணமுற்றுக் கதவை யடைத்தேன்; ஆனால் பெருஞ் செல்வர் வீட்டுக்குப் பொருள் கேட்க விரும்பிச் சென்ற நாணமுள்ள வறிஞர் எவ்வாறு போவதும் வருவதுமே தொழிலாய் அலைவார்களோ அதுபோல, என் நெஞ்சும் கதவைத் திறந்து பார்த்துவிட வேண்டுமென்று நினைத்துக்கொண்டு அங்கே போவதும் நாணித் திரும்பி வருவதும், பின்னல் மறுபடியுந் திரும்பிப் போவதும் அதற்குப் பின்பு திரும்பி வருவதுமாக அலைந்துகொண்டே யிருக்கின்றது; என்கின்றாள்.

(வி - ம்.) கோதை யென்னும் பெயரையுடைய சேரமன்னன் வீதிவழியே உலாவருகின்றான்; நன்றாக ஆராய்ந்தெடுக்கப்பட்ட மணிகள் அழுத்திய தங்கப் பூண் மார்பிற் கிடந்து ஒளி வீசுகின்றது; பசும் பூ மாலையும் வேறு சில பூ

மாலைகளும் அணிந்திருக்கின்றன ; குதிரையின்மேல் இருக்கின்ற அவன் மார்பிற் பூமாலைகள் அங்குமிங்குமாகப் புரளுகின்றன ; இந்தக் காட்சியைச் சிலர் போய்க் கண்டு பலரிடமும் பாரித்து உரைப்பாராயினர் ; அவன் மார்பில் எவ்வளவு அழகான மணிப் பூண் விளங்குகின்றது ; அந்த மணி எவ்வளவு நாளோ ஆராய்ந்து பார்த்து எடுத்துச் செய்யப்பட்டதாம், அதனாலேதான் அவ்வாறு ஒளி வீசுகின்றது ; பூமாலையும் என்றுகப் புரளும்போது எவ்வளவு அழகாக விளங்குகின்றன ; என்றிவரா றெல்லாம் பேசுகிறார்கள் ; இதை ஒரு நங்கை கேட்டு வியப்புற்றாள் ; அது முதல் " ஆய் மணிப் பைம்பூண் அலங்குதார்க் கோதை " என்ற உருவம் அவள் மனத்திலேயே நிலைபெறுவதாயிற்று ; ஆனால் முகக் கண்களாலும் பார்த்துவிட வேண்டுமே. அதற்கு எப்பொழுது செவ்வி வாய்க்கும் என்று நினைத்துக்கொண்டேயிருக்கிறாள் ; அவ்வாறு இருக்கும்பொழுது ஒருநாள் சேரன் உலாவரத் தொடங்கினன், குதிரையும் இவள் வீட்டுக்குப் பக்கத்திலேயே வருகிறது ; இவளும் விரைந்து தெருவாசற் கதவுப் பக்கத்திற்கு வருகின்றாள் ; அவள் கூடவே வந்த நாணம் பளீரென்று குறுக்கிட்டுத் தடுத்தது. பார்க்கப் போனவள் உடனே தெருவாயிற் கதவை அடைத்துவிட்டு வீட்டிற்குள்ளேபோய் இருக்கின்றாள் ; மனம் ஊசலாடத் தொடங்கிற்று ; பெரும் பணக்காரராக இருப்பவர் காலவேற்றுமையாற் பளீரென்று வறுமை யடைதலும் உண்டு ; அவ்வாறு வறுமை யடைந்தவர் ஒரு செல்வரிடத்திற் கடனாகவோ அல்லது உதவியாகவோ பொருள் கேட்க வேண்டுமென்று நினைத்துப்போகத் தொடங்கினால் சிறிது தொலை செல்வார்கள் ; அதற்குள் நாணம் வந்து தடுத்து விடும் ; உடனே திரும்பி வீட்டை நோக்கி வருவார்கள் ; வறுமை பழையபடி போ என்று தூண்டிவிடும் ; பழையபடி போவார்கள் ; அப்பொழுதும் நாணம் வந்து தடுக்கும் ; இவ்வாறாக அவர்கள் அலைவார்கள் ; அதுபோல, என் நெஞ்சும் ஆசை தூண்டுதலாற் கதவண்டைப் போவதும், நாணித் திரும்புவதும், பழையபடி சேர்ந்தைப் பார்க்க வேண்டுமென்ற நினைவு தூண்டுதலால் போவதும் பின்பு வெட்கமுற்று வருவதுமாக அலைகின்றது என்கின்றாள்.

பொன்னைச் செய்தமைத்தமையாற் ' பைம்பூண் ' என்றார் ; வெவ்வேறிடத்திற் பிறந்த மணியும் பொன்னும் ஒன்று

சேர்ந்து பூணுக விளங்கிய தன்மையைப்போல, வேந்தர் குலத்திற் பிறந்த கோதையும், மற்றோரிடத்திற் பிறந்த யானும் ஒன்று சேர்ந்து விளக்கம் அடைவோம் என்று தலைவி கருதுகின்றாள்; இவ்வாறு குறிப்புப் பொருள் கொள்ளுவதற்குப், "பொன்னுந் துகிரு முத்து மன்னிய, மாமலை பயந்த காமரு மணியும், இடைபடச் செயவாயினுந் தொடைபுணர்ந் தருவிலை நன்கலம் அமைக்குங் காலை, ஒருவழித் தேரன்றி யாங்கென்றுஞ் சான்றோர், சான்றோர் பாலரீப, சாலார் சாலார் பால ராகுபவே" என்ற புறப்பாட்டுத் துணை செய்தல் காண்க. 'பெருஞ் செல்வரில்லத்து நல்கூர்ந்தார் போல, வருஞ் செல்லும் பேரு மென் னெஞ்சு' என்பது தலைவியின் உணர்ச்சியை நன்றாக விளக்குதல் காண்க.

காணிய - பார்க்கும் பொருட்டு; இது செய்யிய என்னும் வாய் பாட்டு வினை யெச்சம். நல்கூர்ந்தார் - வறுமை யடைந்தவர்; வினையாலணையும் பெயர். பெருஞ் செல்வராக இருந்து வறுமை யடைந்தவர் என்பது குறிப்பு. (கக)

நெடுங்கடை நின்றதுகொல்?

கஉச. கடும்பனித் திங்கட்டன் கைபோர்வை யாக
நெடுங்கடை நின்றதுகொல் தோழி—நெடுஞ்சினை
வேல்
ஆய்மணிப் பைம்பூண் அலங்குதார்க் கோதையைக்
காணிய சென்றவென் னெஞ்சு.

(கு-பு) கோதையினிடம் மனத்தைத் தூதாக விடுத்த மங்கை அதன் நிலைமையை நினைத்துத் தோழியிடஞ் சொல்லியது.

(இ-ள்) தோழி! பகைவரிடத்தில் மிக்க சீற்றங் கொண்டதுபோல ஒளிவிட்டு விளங்குகின்ற வேலைப் பிடித்திருக்கின்றவனும், மணிகள் ஆராய்பவராலே நன்றாக ஆராய்ந்து பார்த்துத் தேர்ந்தெடுக்கப்பட்ட மணிகள் பதித்த பசும்பொற்பூண் பூண்டிருக்கின்றவனும், அங்கு மிங்கும் அசைகின்ற பூ மாலைகள் அணிந்திருக்கின்றவனுமாகிய கோதை என்னும் சேர மன்னனைப் பார்க்கும்பொருட்டு அவனைத் தொடர்ந்து சென்ற என் மனம், இந்தக் கொடும் பனி பெய்கின்ற மார்கழி மாதத்திலே, பனிவாடை தாங்க

முடியாமல், வலக்கையை இடத்தோளிலும், இடக்கையை வலத்தோளிலுமாக வைத்துப் பொத்திக்கொண்டு அந்தக் கைகளே போர்வையாக உதவ நடுநடுங்கிக், கூனி, வளைந்து, பல்லோடுபல் பறைகொட்ட மெலிந்து அந்தச் சேரனுடைய செவ்வியை எதிர்பார்த்துக்கொண்டு அவனுடைய நீண்ட வாசலிலேயே நின்றுவிட்டது கொல்லோ? என்கின்றாள்.

(வி - ம்.) சேரமன்னன் ஒருநாள் வீதிவழி உலாவருகின்றான்; பார்க்கின்றாள் தலைவி; தோய்ந்தெடுத்த மணி பதித்த பொற்பூண் மார்பிலே கிடந்து கவ்விக்கொண்டு ஒளிவீசுகின்றது; பூமாலைகள் அங்கு மிங்குமாக அசைகின்ற அழகு இவ்வளவென்று சொல்லிவிடமுடியாது; பகைவரைச் சீறுவதுபோல ஒளிர்கின்ற நீண்ட வேலும் ஒன்று வைத்திருக்கின்றான்; பார்த்து ஏங்குகின்றாள்; ஆ! இத்தப் பொற்பூண்களும் பூமாலைகளும் என்ன தவம் செய்தனவோ? என்று நினைக்கின்றாள்; அவனுடைய மார்பின் அழகு மாலைகளுடன் கண் வழியாக நுழைந்து அவளுடைய நெஞ்சிலே தங்கிற்று; உடனே தன் மனத்தைச் சேரனிடந் தூதாகப் போக்கினாள்; மனமும் அவனைத் தொடர்ந்து போயிற்று; பின்பு அவள் வீட்டிலேபோய் இருக்கின்றாள்; காலமோ மார்கழி மாதம்; மிகுந்த பனி; குளிர்வாடையுந் தாங்க முடியவில்லை; எலும்பைத் துளைத்து நூலைக் கோப்பது போல வந்து துளைக்கின்றது வாடை. நெடுநேரம்வரைப் பார்த்தாள்; மனந் திரும்பி வரவில்லை; தூக்கமும் வரவில்லை; தோழியைக் கூவினாள்; அவளும் வந்து என்ன செய்தி என்றாள்; வாடை பொறுக்க முடியவில்லை ஒரு போர்வை எடுத்துக்கொண்டுவா என்றாள்; அவளும் ஒரு போர்வையை எடுத்துக்கொண்டுவந்து கொடுத்துவிட்டுப் பக்கத்தில் இருந்தாள்; போர்வையை விரித்து மூடிக் கொண்டாள்; தோழியைப் பார்த்துச் சொல்லுகின்றாள்; சேரன் பின்னாலே போயிற்றே என்மனம்; அதற்கு ஒரு போர்வைகூடக் கொடுத்துவிட மறந்துவிட்டேனே; என்ன செய்யும்? தன் கைகளையே போர்வையாகக் கொண்டு, உடம்பைப் பொத்திக் கொண்டு அவனிடம் பேசுஞ் செவ்வியை எதிர்பார்த்துக் கொண்டு கூனிக், குறுகி, நடுநடுங்கிக்கொண்டு அவனுடைய பெரிய வாசலிலேயே நின்றுவிட்டதோ? திரும்பி வரவில்லையே! என்னை செய்வேன்? என்று கூறுகின்றாள்;

தலைவி கண்ட காட்சி, ஏக்கம், இரக்கம், பனியின் கொடுமை, தான் பனியினால் துன்பம் அடைகின்றதுபோல மனமும் அடையும் என்று கருதும் மயக்கம் முதலிய உணர்ச்சிகளெல்லாம் புலனுக்குகிற தன்மை இப்பாடலில் நன்கு அமைந்துளது. 'கடும்பனித் திங்கட்டன் கை போர்வையாக நெடுங்கடை நின்றது கொல்' 'என்னெஞ்சு' என்பதில் உருவமில்லாத மனத்துக்கு உருவங் கொடுத்து ஓர் அருமையான ஓவியம் வரைந்து காட்டியிருக்கின்றார் ஆசிரியர்; இஃது அருவ ஓவியம்; இதன் மாட்சி சொல்லுந் தகுதி உடையதன்று; மனத்தாலேதான் உணர வேண்டும்; இஃது ஒரு தலைமை சான்ற செய்யுள்.

கடும்பனித் திங்கள் - மிக்க பனியினால் நடுங்கக் கூடிய மார்கழி மாதம். திங்கள் - மாதம். கைபோர்வையாக - மனம் கையையே போர்வையாகப் போர்த்துக்கொண்டு நிறகும் என்று தலைவி நினைக்கின்றாள்; மனத்தினிடத்தில் அவ்வளவு இரக்கம் வைக்கின்றாள்.

'கையது கொண்டு மெய்யது பொத்தி' என்ற சத்தி முற்றப் புலவர் பாடலையும் உணர்க. வலக்கையை இடத் தோளிலும், இடக்கையை வலத் தோளிலும் வைத்துப் பொத்திக்கொண்டால் உடனே வாடையினால் வந்த நடுக்கம் ஒய்ந்துவிடும். நெடுங்கடை நின்றதுகொல் - நீண்ட வாயில்; அதில் பலர்வந்து காத்திருப்பார்கள்; அவனும் அரசியற் செய்திகளை நோக்கிக் கொண்டே இருப்பான்; செவ்வி எளிதிற் கிடைக்கவா செய்யும்? செவ்வி பார்த்துக் கொண்டே மனம் அங்கே நின்று விட்டதோ? என்று நினைக்கின்றாள்: கொல் - ஐயங் குறித்தது: 'நெடுஞ் சினவேல் ஆய் மணிப் பைம்பூண் அலங்குதார்க் கோதை' என்பது, தலைவிகண்டு மனத்தில் எழுதிக்கொண்ட ஓவியத்தை அப்படியே காட்டுகின்றது.

காணிய - பார்க்கும் பொருட்டு; பார்த்துக் குறைகளையெல்லாம் கூறும் பொருட்டு என்க. சென்ற என்னெஞ்சு என் மனமே எனக்குத் துணை செய்யும் இயல்பு உடையது தான்; நான் போவென்று விடுத்துப் போகவில்லை; தானே சென்ற என் நெஞ்சு, ஐயோ! வாடையில் வருந்துமே! என்று நினைக்கின்றாள். தான் தூதாக விடுத்ததாகக் கூறு

மல், அந்த மனத்தின் இயல்பிலேதான் நட்க்கும் இயல்பு தோன்ற சென்ற என் நெஞ்சு, என்கின்றாள். 'தூதாக விடப்பட்டுச் சென்ற' எனினும் அமையும். ஆய்மணிப் பைம்பூண் :—'மணியும் பொன்னும் சேர்ந்து அழகிய அணி கலமானதுபோல நானுஞ் சேரனுஞ் சேர்ந்து விளங்குவோ' மென்பது தலைவியின் குறிப்பு.

ஒண்தொடியாள்

கஉடு. வருக குடநாடன் வஞ்சிக்கோ மானென்
றருகூல ரெல்லாம் அறிய—ஒரு கலாம் [நீக்
உண்டா யிருக்கவவ் வொண்டொடியாள் மற்றவ
கண்டா ளொழிந்தாள் கலாம்.

(கு - பு.) சேரன்பாற் காதலுற்ற மங்கையின் நிலைகண்ட தோழி தன்னெஞ்சொடு சொல்லிக்கொண்டது.

(இ - ள்.) நெஞ்சமே! ஒளி பொருந்திய வளையல்களை யணிந்திருக்கின்றாளே அவள், சேரனைக் காண்பதற்கு முன்பு, "வருவானல்லவா அந்தக் குடநாட்டு மன்னன்? என் நெஞ்சம் நிறையழித்த கள்வன்; அவன் வந்த உடனே கேட்கின்றேன்; என் நலன் கவர்ந்த அவன் வருவானல்லவா? அந்த வஞ்சி நாட்டு மன்னன்; அவன் வந்தபின் என்ன செய்கின்றேன் பார்"! என்று இவ்வாறெல்லாம் சொன்னாளே! பக்கத்திலுள்ள தோழியர்களெல்லோரும் அறியும்படி இத்தன்மையான கலகம் அவள் நெஞ்சில் உண்டாகியிருந்ததே! அங்ஙனமிருக்குங்கால் அவன் வரக் கண்டாள். உடனே அக்கலகமும் நீங்குதலுற்றாளே! எங்ஙனமெல்லாமோ கூறினவள் இங்ஙனமல்லவா அடங்கிவிட்டாள். இவ்வளவு விரைவிலா மனம் மாறுபடும்; என்கின்றாள்.

(வி - ம்.) சேரன்பாற் காதலுற்றிருந்தாள் ஒரு நங்கை; அதனால் மெலிவடைந்தாள்; தோழியரும் இதனை அறிந்தனர். அங்ஙனமிருக்கும்போது, பலவாறுகப் பேசும் நிலை அவளுக்கு உளதாயிற்று; 'குடநாட்டு மன்னன் வருவானல்லவா பார்த்துக்கொள்கின்றேன்' 'வஞ்சி மன்னன் வருவானல்லவா? என்ன செய்கின்றேனென்று பார்' என்று பேசிக்கொண்டிருக்கின்றாள்; இவ்வாறிருக்கும்போது அந்த

வீதி வழி அரசனும் ஏதோ ஒரு விசையின்பொருட்டு வருகின்றான் ; பார்க்கின்றாள் ; உடனே அந்தக் கலகத்தை விடுத்து மிக அமைதியாய் ஒன்றும் பேசாதவள்போல, அடங்குகின்றாள் ; இதைப் பார்த்துக்கொண்ட தோழி இவ்வாறு இவ்வளவு விரைவில் இவள் மனம் மாறிற்றே! என்று தன்னெஞ்சொடு சொல்லிக்கொள்கிறாள். "மகளிர் மனம் போல மாறுபடும்" என்பதும் "ஊடற்கட் சென்றேன் மற்றோழி, அது மறந்து கூடற்கட் சென்ற தென்னெஞ்சு" என்பதூஉங் காண்க.

குடநாடன் - குடநாட்டு மன்னன். வஞ்சிக்கோமான் - வஞ்சி நகரத்து மன்னன். அருகலர் - பக்கத்திலுள்ள தோழியர், ஆயத்தார் முதலியோர் ; கலாம் - கலகம். (கஅ)

கள்வன்

கஉசு. இவனென் னலங்கவர்ந்த கள்வ னிவனெனது
நெஞ்சம் நிறையழித்த கள்வனென்—றஞ்சொலாய்
செல்லு நெறியெலாஞ் சேரலர்கோக் கோதைக்குச்
சொல்லும் பழியோ பெரிது.

(கு - பு.) சேரன் உலாவரும் பொழுது பார்த்த தோழி அங்கே பிறர் அவனைப்பற்றித் தூற்றும் பழிச்சொல்லைத் தலைவியினிடங் கூறுதல்.

(இ - ள்.) அழகான சொல்லையே பேசுந் தன்மையுடையாய்! சேரர் குலத்தில் தோன்றிய கோக்கோதையாகிய நம் மன்னனுக்குப் போகின்ற வழிகளிலெல்லாம், 'இவன் தான் என்னுடைய பெண்மை நலத்தையெல்லாங் கவர்ந்து கொண்ட கள்வன்' என்றும், 'இதற்கு முன்பு என் மனத்தை எவ்வளவு எளிதில் நிறுத்திவைத்துக்கொண்டிருந்தேன் ; இவன்தான் அந்த ஆற்றலைக் கெடுத்துத் தன் வயப்படுத்திக் கொண்ட திருடன்' என்றுந் தூற்றப்படுகின்ற பழி மிகுதியாக இருக்கின்றது ; என்கின்றாள்.

(வி - ம்.) ஒரு நங்கை சேரன்பாற் பெருவேட்கையுற்றுத் தன் மனத்தைப் பறிகொடுத்தனள் ; ஆனாலும் அவனைப் பற்றிப் பழி தூற்றுமல் அழகான முறையிலேயே பேசிக் கொண்டிருக்கின்றாள் ; எங்ஙனமேனும் நமக்கு அவன் உறவு

கிடைக்கும் என்ற துணிவினாலேயே அங்ஙனமிருக்கின்றாள்; ஆனால் மற்ற இடங்களிலுள்ள பெண்கள், மனம், நிறை இவற்றைக் கெடுத்துத் தொலைத்துமல்லாமல் அவனைப் பற்றிப் பழிதூற்றிக்கொண்டிருக்கின்றனர். இந்தத் தலைவியினுடைய உயிர்த்தோழி அங்கங்கே சென்றிருந்தவள் அவ்வாறு பழிதூற்றுவதை எல்லாங் கேள்வியுற்று வந்து தலைவியைப் பார்த்து, அஞ்சொலாய்! என்று விளித்து, உன்னைப் போல அழகாகப் பேச யாருக்காவது முடியுமா? என்று சொல்லிப் பின்னர், அங்கங்கே நம் மன்னன் போகின்ற இடத்திலெல்லாம் பெரும் பழியையே தூற்றிக்கொண்டிருக்கின்றார்கள்; நாம் என்ன செய்வோம்? என்னாள்; மன்னன் வந்தால் வாழ்த்துவார்களா? அதனை விடுத்துப் பழி தூற்றுகின்றார்களே! இஃது என்ன செயல்? என்று கருதுகின்றாள். மன்னன் இவ்வாறு பெரும்பழி தூற்றப்படுகின்றானே யென்று வருந்துகின்றாள்.

நிறை - மனத்தை நிறுத்திவைக்கும் ஆற்றல். அஞ்சொலாய் - அழகான சொற்கள் பேசுந் தகையுடையவளே. நெறி - வழி. பழி - பழிச்சொல். (கசு)

நீராட்டி நீங்கென்றால் நீங்குமோ

கூஎ. காராட்டுதிரந்தூஉ யன்னை களனிழைத்து
நீராட்டி நீங்கென்றால் நீங்குமோ—போராட்டு
வென்று களங்கொண்ட வெஞ்சினவேற் கோதைக்
னெஞ்சங் களங் கொண்டநோய். [கென்

(கு - பு.) வெறியாட்டு நிகழ்த்துகின்ற தாயின் செயல் கண்டு கவலையுற்ற தலைவி தோழியினிடஞ் சொல்லியது.

(இ - ள்.) தோழி! பகைவருடன் செய்த போராட்டத்தில் அவர்களை வென்று போர்க்களத்திலுள்ள செல்வத்தைத் தனதாக்கிக்கொண்ட கொடுஞ் சீற்றமுள்ள வேற்படையையுடைய கோதை யென்னும் மன்னன் பொருட்டு, என் நெஞ்சினை நிலைக்களமாகக் கொண்டு நிற்கின்ற காம நோய், நீங்கவேண்டுமானால் அவனாலே நீங்குமேயன்றி நம் அன்னை வெறிக்களம் அமைத்துக் காரிய ஆட்டின் இரத்தத்தைத் தூவி (நெற்பொரி முதலியன வெல்லாஞ் சிதறி)

என்னை நீராட்டி 'நீங்கு' என்று சொன்னால் நீங்கிவிடுமோ? என்கின்றாள்.

(வி - ம்.) ஒரு நங்கை சேரனுடைய ஆண்மைச் செயல்களை யெல்லாங் கேள்வியுற்றுப் பின், அவனையும் பார்க்கின்றாள்; அவள் நெஞ்சில் காதல் நோய் நிலைக்களமாக நின்று கொண்டே யிருக்கின்றது; அதனை யுணராத அவளுடைய தாய் முதுவாய்ப் பெண்டிர் சிலர் கூறியபடி பேய்தான் பிடித்துவிட்டதென்று கருதி, உடனே முருக பூசை செய்கின்றவனை அழைத்துக்கொண்டு வந்து வெறியாடத் தொடங்கினாள்; ஒரு மரத்தின் அடியில் நன்றாக இடம் அமைத்து, உருவம் வைத்துப் பூமாலையுஞ் சூட்டிப் பலி கொடுத்துச், செந்தினையுங் கரிய ஆட்டின் உதிரமுந் தூவி ஆடல் பாடல்களெல்லாம் ஊர் முழுதுங் கேட்கும்படி செய்வித்துத் தலைவியை நீராட்டி, ஏ நோயே! நீங்கிவிடு என்று சொன்னாள்; ஆனால் அது நீங்கியபாடில்லை. இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த தலைவிக்குக் கவலை வளர்ந்தது; நம்முடைய நிலையை அறியாமல் நம் தாய் நம்மைப் பேயாக்கி விட்டாளே என்று ஏங்கிக்கொண்டிருக்கின்றாள்; அப்பொழுது அவளுடைய ஆருயிர்த்தோழி அவளை அணுகி ஏன் இவ்வாறு இருக்கின்றாய்? என்று கேட்ப உடனே சொல்கின்றாள்; "போராட்டு வென்று களங்கொண்ட வெஞ்சின வேற் கோதைக்கு என், நெஞ்சங் களங்கொண்ட நோயை' அன்னை, காராட்டு உதிரந்தூஉய்க் களனிழைத்து நீராட்டி நீங்கென்றால் நீங்குமோ?" என்று தன் கருத்தை வெளியிடுகின்றாள்.

வென்று களங்கொண்ட கோதைக்கு என் நெஞ்சங் களங்கொண்ட நோய்க்கு அன்னை களனிழைத்து நீங்கென்றால் நீங்குமா? என்ற முறை நயம்பட அமைந்து இலங்குகின்றது; பகைவரது களங்கவர்ந்த மன்னன் அன்புற்ற என் னெஞ்சக் களத்தினையுங் கவர்ந்தானிது என்னே! என்று கருதுகின்றாள்.

> 'படியோர்த் தேய்த்த பல்புகழ்த் தடக்கை
> நெடுவேட் பேணத் தணிகுவ ளிவளென
> முதுவாய்ப் பெண்டிரதுவாய்க் கூறக்
> களனன் கிழைத்துக் கண்ணி சூட்டி

வளதகர் சிலம்பப் பாடிப் பலி கொடுத்து
உருவச் செந்தினை குருதியொடு தூஉய்
முருகாற்றுப் படுத்த உருகெழு நடுநாள்'

என்ற அகநானூற்றுப் பாடல் அடிகளால் வெறியாட்டின் முறைமை உணரப்படும். (உ0)

மல்லல் நீர் மாந்தையார்

கூஉ. மல்லனீர் மாந்தையார் மாக்கடுங்கோக் காயினுஞ்
சொல்லவே வேண்டும் நமகுறை—நல்ல
திலகநீ கிடந்த திருநுதலா யஃதால்
உலகங் கிடந்த இயல்பு.

(கு - பு.) மன்னன் மாக்கடுங்கோவினிடங் காதல்கொண்ட மங்கை தோழியினிடம் கூறுந் தூதுரை ;

(இ - ள்.) தோழி! நீர்வளன் நிறைந்த மாந்தைநகர் மன்னனுகிய மாக்கடுங்கோவுக்கு, அவன்தானே அறியும் இயல்பினனுக இருந்தாலும் நங்குறையை நாம் சொல்லவே வேண்டும்; நல்ல திலகம் பொருந்திய திருநுதலியுடைய தோழியே! உயர்ந்தோரிடத்திற் பொருந்தியிருக்கின்ற இயல்பு அவ்வாறு இருக்கின்றது. என்கின்றுள்.

மாந்தை நகரத்திலுள்ள ஒரு மங்கை நீராடச் செல்கின்றுள்; தோழியுந் துணையாகப் போகின்றுள்; வளம் நிறைந்த தடாகத்தைக் கண்ணுறுகின்றுள். துதைந்து துதைந்து நீராடுகின்றுள்; நிமிர்ந்து பார்க்கின்றுள்; கரை வழியாக மன்னன் செல்கின்றுன்; பார்த்து, அவனுடைய பொது நோக்கத்தையும் சிறப்பு நோக்கமாக நினைக்கின்றுள்; ஆம்; மன்னன் நம்மை மணப்பான்; என்று பகற் கனவு காண்கின்றுள்; பின்பு தோழியும் அவளும் நீராடி விட்டு வீட்டுக்கு வந்தனர்; கூந்தலை உலர்த்தித் திலகம் வைத்துக்கொண்டு இருக்கின்றனர்; தலைவிக்கு நினைவெல்லாம் மன்னனிடத்தி லிருக்கின்றது; தோழியினிடத்திற் சொல்லவேண்டுமென்று நினைக்கின்றுள்; ஆனல் நாணந் தடுக்கின்றது; ஒருவகையாகத் தொடங்குகின்றுள்; தோழி! நம்முடைய மாந்தை நாடு மிக்க நீர்வளமுடையதாக இருக்கின்றதல்லவா? என்று கூற அவள், ஆமாம்; மிகவும் நல்ல

நாடுதான் ; மகிழ்ச்சியில் வாழ்பவ ரெல்லோரும் நல்ல வாழ்வினர்தாம் என்கின்றாள் : பின்பு தலைவி, எல்லாம் மன்னனுடைய சிறப்பினாலேதான் நன்மை பெறுகின்றார்கள் ; நாம் நீராடும்போது கரை வழி சென்றனல்லவா மன்னன் ? அவன் எல்லோருடைய எண்ணத்தையுந் தானே அறிந்து கொள்வானும் ; ஆனாலும் என்கிறாள் : உடனே நாணம் வந்து சொற்களை வேறு வழியாகத் திருப்புகின்றது ; பின்பு தோழியைப் பார்த்து, தோழி நல்ல நிலைக்ப் வைத்திருக்கின்றாயே ! உன்னுடைய திருவுதல் இன்று நன்றாக இருக்கின்றது ; என்கின்றாள் ; உடனே தோழி, கேட்கின்றாள் ; " மன்னன் தானே அறிந்து கொள்வான் ; ஆனாலும் " என்று நிறுத்திவிட்டாயே ; என்ன செய்தி ? என்கின்றாள் ; தலைவி, " ஆனாலும் நம்முடைய குறைகளை நாம் சொல்லத்தான் வேண்டும் ; உயர்ந்தோர்களிடத்திற் பயன் பெறவேண்டுமானால் நாம் சொல்லியே ஆகவேண்டும் ; அவரிடத்திற் பொருந்தியிருக்கின்ற இயல்பே அவ்வாறு இருக்கின்றது ; ஆதலால் நங்குறையைச் (காதல் நோயாகிய குறையைச்) சொல்லிவிடவேண்டியதுதான் " ; என்கின்றாள்.

மல்லல் - வளம். நிலைக்ம் - நெற்றிப் பொட்டு. நுதல் - நெற்றி. ஆல் - அசை. மாந்தை - சேரநாட்டிலுள்ள சிறந்த நகரம். (உக)

ஒன்றின் ஒவ்வாரே

கூஉகூ. *ஏற்றார்தி யானும் இகல்வெம்போர் வானவனும்
ஆற்றலும் ஆள்வினையும் ஒத்தொன்றின் ஒவ்வாரே
கூற்றக் கணிச்சியோன் கண்மூன் றிரண்டேயாம்
ஆற்றல்சால் வானவன் கண்.

(கு - பு.) சேரன் ஆற்றலிலும் ஆள்வினையிலுஞ் சிவபெருமானை ஒத்திருப்பினும் ஒரு வகையில் வேறுபாடு உடையன் காண் என்று தலைவி தோழியினிடங் கூறுதல்.

(இ - ள்.) தோழி ! காலையூர்தியாகிய சிவபெருமானும், பகையைத் தொலைக்குங் கொடிய போர்த் தொழிலில் வல்ல சேரனும் வலிமையினாலும், ஆள்கின்ற செயலாலும்

*மூ - தொ - என்று கருதத்தக்கது.

ஒத்த நிலைமையுடையரா யிருப்பினும் வேறு ஒன்றின் ஒவ் வார்காண், கூற்றுவனைப்போல மாற்றூர் உயிரைத் தொலைக் கும் மழுப்படையுடைய சிவபெருமானுக்குக் கண்கள் மூன்று உள ; ஆனல் நம்முடைய ஆற்றல் சான்ற சேர மன்னனுக் குக் கண்கள் இரண்டே யாகும் ; என்கின்றுள்.

(வி - ம்.) மூற்றுஞ் சிவனைப் போல என்று கூறி விடாதே இரண்டு கண்கள் உடையனக இருந்தும் நம் மன் னன் முக்கட் சிவபெருமானைப்போல ஆற்றலிலும் ஆள் வினையிலும் சிறந்தனனக இருத்தல் சிறப்புத்தானே? என் கின்றுள்.

வானவனைக் கண்ட மங்கை அவனைப்பற்றிப் புகழத் தொடங்கி, அப்பொழுது தோழி அவனை நோக்கி நம் மன் னன் ஆற்றலிலும் ஆள்வினையிலுஞ் சிவபெருமானை ஒத் திருக்கின்றுன் என்று கூற அதைக்கேட்ட தலைவி ஆனல் வேறுபாடும் உண்டு ; இறைவனுக்குக் கண் மூன்று ; இவ னுக்குக் கண் இரண்டு ; இந்த வேற்றுமையால் உண்டாகுஞ் சிறப்பினையும் தெரிந்துகொள் என்கின்றுள்.

ஏற்றூர்தியான் - காளை ஊர்தியுடைய சிவபெருமான். வானவன் - சேரன். ஆற்றல் - வலிமை. ஆள்வினை - ஆள் கின்ற செயல். கூற்றக் கணிச்சியோன் - காலனைப் போலக் கொலை செய்யும் மழுப்படையுடைய சிவபெருமான். (உஉ)

பிறையில்லை—முகம் ஒன்றே

கஉ0. இந்திரன் என்னின் இரண்டேகண் ஏறூர்ந்த
அந்தரத்தான் என்னிற் பிறையில்லை—அந்தரத்துக்
கோழியான் என்னின் முகன்ஒன்றே கோதையை
கோழியான் என்றுணரற் பாற்று.

(கு - பு.) சேரன் உலாவருங்கால் முதற்காட்சி கண்ட நங்கை 'யாவன் கொல்லோ இவன்' என்று மருட்கையுற்றுப் பின்பு தெளிந் தமை கூறல்.

(இ - ள்.) நெஞ்சமே! இங்கே உலாவருகின்ற இவன் யாரா யிருக்கலாம்? இந்திரத் திருவிற்கு மேம்பட்ட திருவும் உருவும் உடையனகத் திகழ்கின்றுனே ; இந்திரன் எனின்

கண்கள் ஆயிரம் இருக்கவேண்டுமே; இரண்டு கண்கள் தானே இருக்கின்றன; சிவபெருமானெனின் முடியிற் பிறை நிலவினை அணிந்திருப்பானே; அதுவும் இல்லையே; பின்னை செவ்வேட் பெருமான் எனின் அவற்கு உரிய ஆறுமுகங்கள் இல்லையே; ஆம்; இவன் நம் மன்னனுகிய கோதைதான்; இவனை ஆணை செலுத்தும் ஆழியான் என்று உணர்தல்தான் முறைமையுடையதாக இருக்கின்றது; என்று கருதுகின்றாள்.

(வி - ம்.) சேரன் உலாவருகின்றான்; பார்க்கின்றாள் நங்கை; இவ்வளவு சிறப்புடனே வருகின்றானே; இந்திரன் தானோ? என்று நினைத்தாள்; ஆனால் அவனுக்கு ஆயிரங் கண்கள் உள என்பார்களே. இவனுக்கு இரண்டு கண்கள் தானே இருக்கின்றன; ஆதலால் இந்திரனல்லன் என்று நினைக்கின்றாள்; சிவபெருமானுக இருக்கலாமோ என்று நினைக்கின்றாள்; ஆனால் முடியிற் பிறையில்லையே; முருகனெனில் முகம் ஒன்றுதானே யிருக்கின்றது; ஆதலால் மன்னன்தான் என்று தெளிகின்றாள்; இந்திரச் செல்வமும், இறைவனைப் போன்ற வலிமையும், முருகனைப் போன்ற அழகும் உடையான் மன்னன் என்பதை இவ்வாறு அழகாகக் கூறுகின்றார்.

தலைநாளைக் காட்சியின் மருட்கையும் தெளிவும் பாடலில் அமைந்திருக்கின்றன.

ஏறு ஊர்ந்த அந்தரத்தான் - காளையை ஊர்தியாகக் கொண்டு ஊர்ந்த சிவபெருமான். 'அந்தரத்தான்' என்றார். ஐம்பெரும்பூதங்களையும் தன்னகத்தே அடக்கிக்கொண்டிருக்கின்ற ஆகாயவடிவினன் இறைவன் என்பதை விளக்குதற் பொருட்டு.

> 'நிலவுக் கதிர் முடித்த நீளிருஞ் சென்னி
> உலகு பொதி உருவத் தொருவன்'

(சிலப்) என்பது காண்க.

அந்தரத்துக் கோழியான் - விண்ணிலுயர்ந்து விளங்குங் கோழிக் கொடியுடைய முருகக்கடவுள். ஆழியான் - ஆணையுடைய மன்னன். கோதை - சேரனுக்கு ஒரு பெயர். (உரை)

முத்தொள்ளாயிரம்

பாட்டு முதற்குறிப்பு அகராதி

பாட்டு	பக்கம்	பாட்டு	பக்கம்
அடிநோக்கின் ஆழ்	164	கடற்றானைக்	183
அடுமதில் பாய	25	கடும்பனித்	191
அந்தணர் ஆ	127	கண்ணூர் கதவங்	11
அயிற்கதவம் பாய்ந்	115	கண்டனவுண்கண்	134
அருமணியைந்தலை	10	கரிபரந்தெங்	177
அரும்பவிழ்தார்	169	கல்லுயர்தோட்	166
அலங்கு தார்ச்	148	களியானைத்தென்	36
அள்ளற் பழனத்	170	களியானைத்தென்	57
அறிவாரார் யாமொ	39	களிகள் களிகட்	172
அறைபறையாணை	139	கனவினுள்காண்	136
அன்னையுங் கோல்	141	கனவை நனவென்	59
ஆடுகோ சூடுகோ	90	கன்றும் வய	128
ஆய்மணிப்	189	காப்படங்கென்	85
இந்திரன் என்	200	காராட்டுதி	196
இப்பி யின்றிட்ட	80	கார் நறு நீலங்	37
இரியல் மகளி	122	காவல் உழுவர்	106
இவனென்னலங்	195	கானிமிர்த்தால்	113
உகுவாய் நிலத்த	65	குடத்து விளக்கே	91
உடைதலையும்	120	குதலைப் பருவத்தே	146
உருவத்தார்த்	23	குருந்தம் ஒசித்த	104
உழுத உழுத்தஞ்	99	கூடற் பெருமா	46
ஊடலெனவொன்	150	கூந்தன்மா கொன்று	7
எலாஅமடப்	88	கையதவன்	41
என்னே உரையல்	48	கொடித்தலைத்	33
என்னெஞ்சு நாணு	135	கொடிபாடித் தேர்	51
ஏங்கா முகில்	125	கொடிமதில் பாய்ந்	116
ஏற்பக் குறைந்	45	கோட்டெங்கு சூழ்	55
ஏற்றார்தி	199	சாலியரி சூட்டால்	111
ஏனையபெண்டி	28	சுடரிலைவேற்	132
ஓராற்றுன் என்கண்	63	சுற்றுவிற் காம	165
கச்சி யொருகால்	117	செங்கணெடியான்	5

பாட்டு	பக்கம்
செங்கான்மட	143
செய்யார் எனினும்	84
செருவெங்கதிற்	18
செருமானவேற்	126
சென்றது கொல் நேர்	101
சேர்ந்த புறவின்	129
தலையவிழும் பூங்	61
தாயர் அடைப்ப	180
தானேற் றனிக்	95
தாணெகொண்டோடு	137
திறந்திடுமின் தீய	130
துடியடித் தோற்	86
தெண்ணீர் நறுமலர்	138
தொழில் தேற்றுப்	34
தோற்றமலிகட	24
நந்தினிளஞ்சி	12
நறவேந்து கோதை	98
நாணுக்கால்பெண்	42
நாணெருபால்	152
நாம நெடுவேல்	160
நிறைமதிபோல்	16
நிறைகதிர்வேல்	20
நின் றீமின் மன்னீர்	109
நீணிலத்தார்	131
நீரும் நிழலும்	184
நேமி நிமிர்தோள்	15
பல்யாணை மன்னர்	174
பறை நிறை	31
பாற்றின மார்ப்பப்	118
பன்மாடக்கூடல்	96
பார்படுப செம்பொன்	9
பிணிகிடந்தார்க்குப்	75
புகுவார்க் கிடங்	71
புல்லாதார் வல்லே	79
புலவிபுறக் கொடுப்	142
புலல் நாடார் கோமா	105
புன்னைச்	187
பேயோ பெருந்தண்	158
பொன்னி வள	123
பொன்னுரை மார்பிற்	162
போரகத்துப் பாயுமா	89
போர் வேலின்	124
மடங்கா மயி லூர்தி	3
மண்படு தோட்கிள்ளி	112
மந்தரங் காம்பா	103
மரகதப்பூண்	176
மருப்பூசியாக	22
மல்லனீர்	198
மன்னுயிர் காவல்	94
மன்னிய நாண்மீன்	1
மாணுர்க் கடந்த	77
மாலிலவிலி பகர்	108
மாறடுபோர் மன்னர்	68
முடித்தலை வெள்	120
மைந்தரோடீடி	14
யானூடத் தானுணர்	81
வரக்கண்டு நாணுதே	156
வருக குடநாடன்	194
வரைபொரு	182
வழுவிலெம் வீதி	92
வளையவாய் நீண்ட	50
வாகை வனமாலை	30
வாமான்றேர்	183
வாருயர் பெண்ணை	43
வானிற்கு வையக	167
வீறுசால் மன்னர்	175
வெருவரு வெஞ்	27
வேரறுகை	179